MANGAYAR MALAR

பிப்ரவரி '93 விலை ரூ. 6.00

மங்கையர் மலர்



நட்சத்திரம் விரும்பும் நட்சத்திர ஷாம்பூ.



புதிய சிக் ! விசேஷ ஃபார்முலாவுடன்

வந்து விட்டது புதிய சிக் ! மேம்படுத்தப்பட்ட உயர்தர விசேஷ ஃபார்முலாவுடன். இதன் இயற்கை வளம் கொண்ட சூப்பர் சாஃப்ட் கண்டிஷனர் உங்கள் கூந்தலில் உண்டாக்கும் இதமானதோர் புதிய தோற்றம்.

'புதிய சிக்' கின் புதிய ஃபார்முலா அளித்திடும் செறிந்த நுரைவளம் மிருதுவாக. ஆனால் முழுமையாகக் கூந்தலின் வேர்வரை சென்று சுத்தம் செய்யும் இதன் பாங்கு. அலை அலையாய் அழகழகாய் அடர்த்தியாகக் கூந்தலைத் திகழச் செய்யும் இதன் நேர்த்தி. நிறைவான ஊட்டம் – ஆரோக்கியமான வழியில் தரும் அருமை. பார்ப்போர் மயங்கும் பளபளப்பு. உள்ளம் கொள்ளை கொள்ளும் அழகுப் பூரிப்பு. கமழும் மலர்களின் நறுமணம்.

இவையனைத்தையும் அளிக்கும் 'புதிய சிக்' வருகிறது இப்போது கவர்ச்சியான தோற்றத்துடன். வசதியான புதிய பாட்டில்களிலே. சிக்கனமான பாக்கெட்டுகளிலே.

உங்கள் இரசனைக்கேற்பத் தேர்ந்தெடுக்கவோ 6 வகைகளில்.

குஷ்புவின் கூந்தல் எழிலின் தோகை. அவரது ஷாம்பூ? அந்த இரகசியம் உங்களுக்கே தெரியும்.

குஷ்பு சிக். இரு இணையற்ற நட்சத்திரங்கள்.

CHIK

கண்டிஷனர் ஷாம்பூ



முன்னெச்சரிக்கை தேவை!

இப்போது எங்கே பார்த்தாலும் எய்ட்ஸ் பற்றித்தான் பேச்சு. முன்னெச்சரிக்கையாக நாம் இருக்கலாமே!

● டாக்டரிடம் இஞ்செக்ஷன் போட்டுக் கொள்ள வேண்டுமென்றால் டிஸ்போஸபின் சிரிஞ்சையே உபயோகித்துக் கொள்ளுங்கள். சாதாரண சிரிஞ்சையும் இருபது நிமிடத்துக்கு மேல் கொதிக்க வைத்தால்தான் 'எய்ட்ஸ்' கிருமி அழியும். அதனால் 'பாய்ல்' பண்ணின சிரிஞ்சுகள் கூட அபாயமானவையே.

● சலூன்களில் 'ஷேவிங்', 'ஹேர்-கட்டிங்' செய்து கொள்பவராக இருந்தால் கூடியவரை உங்களுடைய 'பிளேடு', மற்ற உபகரணங்களை எடுத்துக் கொண்டு செல்லுங்கள். தலையிலோ, முகத்திலோ காயம் படாமல் எச்சரிக்கையாக இருக்கும் பட்சத்தில் சலூன் கத்தியினை உபயோகித்துக் கொள்ளலாம்.

● முடிந்தவரை இரத்தம் (மற்றவருடையது) ஏற்றிக் கொள்ளாமல் இருப்பது நல்லது. சமீபத்தில் ஃபிரான்ஸில் எங்கள் நண்பர் ஒருவருக்கு 'பை-பாஸ் சர்ஜரி' நடைபெற்றது. அவருக்கு ஆபரேஷன் சமயத்தில் தேவைப்படும் இரத்தத்தை மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே அவரிடமிருந்தே சிறுக சிறுக எடுத்து சேமித்து வைத்துக் கொண்டு, அவருக்கும் அயர்ன் மாத்திரைகள் கொடுத்து இரத்தம் ஊறச் செய்து பின்னர் ஆபரேஷன் செய்யும் போது அவருடைய இரத்தத்தையே செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டிலுள்ள நர்சிங்-ஹோம் முதலியன இம் முறையை பின்பற்றினால் பாதுகாப்பாக இருக்கும். அநாவசிய டென்ஷன் குறையும்.

● மனிதன், குரங்கு இந்த இரண்டு உயிரினங்களைத் தவிர வேறு எந்த உயிரினத்திலும் 'எய்ட்ஸ்' கிருமிகள் உயிர் வாழாது. அதனால் கொசுக்கள் மூலம் எய்ட்ஸ் பரவும் அபாயம் நமக்கில்லை.

● விபத்து போன்ற சமயங்களில் நம் உடலில் ஏதாவது சின்ன காயம் (Open wound) இருக்கும் பட்சத்தில் யாருக்காவது காயம் பட்டு ரத்தம் வெளியாகும் பொழுது அவரைக் காப்பாற்றும் முயற்சியில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். 'எய்ட்ஸ்' உள்ள நபராக இருந்தால் நமக்குக் காயத்தின் மூலம் எய்ட்ஸ் பரவும் நிலை 90% நிச்சயம். விபத்தில் உயிர் போய்க் கொண்டிருக்கும் நபர்களைக் காப்பாற்றுவது மனிதாபிமானம்தான். அவருக்கு எய்ட்ஸ் உள்ளதா இல்லையா என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க முடியாதுதான்.

● இவையெல்லாவற்றையும் விட மனதை உலுக்கும் ஒரு செய்தி என்ன வெனில் சமீபத்தில் சென்னையில் உள்ள பள்ளிக் குழந்தைகள் (சிறுவர் சிறுமிகள்) இருநூறு பேருக்கு எய்ட்ஸ் சோதனை நடத்தியதில் ஆறு பேருக்கு 'எய்ட்ஸ் பாசிட்டிவ்' என்று தெரிந்திருக்கிறது. அதுவும் நல்ல புகழ்வாய்ந்த கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவ மாணவியர் என்று தெரியவந்தது. 'தகாத உறவே' இதற்குக் காரணம் என்பது இன்னும் அதிர்ச்சி அடைய வேண்டிய விஷயம்.

இன்னும் பத்து வருடத்துக்குள் இந்தியாவில் பத்து மில்லியன் மக்களுக்கு மேல் எய்ட்ஸ் பரவி மனித இனத்தையே அழிக்க ஆரம்பித்து விடும் என்று தெரிய வரும் போது மக்கள் மிகுந்த விழிப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும், ஒழுக்கத்துடனும் செயல்பட வேண்டும் என்று உள்ளங்கை நெல்லிக் கனியாய்த் தெரிகிறது.

– சந்திரலேகா



மங்கையர் மலர்

&

வரதராம்ஸ் இணைந்து வழங்கும் பட்டான போட்டி!

அப்பா! போட்டிக்கான கட்டுரைகள் வந்து குவிந்துவிட்டன! சென்ற இதழில் அறிவித்திருந்த பட்டான போட்டியினைப் பற்றித் தான் குறிப்பிடுகிறோம். ஆயிரக்கணக்கில் வாசகிகள் உற்சாகமாகப் போட்டியில் பங்கேற்றுள்ளனர். படித்துப் படித்துத் திணறிக் கொண்டு இருக்கிறோம்...

போட்டிக்கான நடுவர் குழு : -

1. திருமதி அனிதா ரத்தினம்

(நடனமணி, மேல்நாடு மற்றும் இந்திய டீ. வி. நிகழ்ச்சிகள் தயாரிப்பாளர்)

2. திருமதி ரேகா ஷெட்டி

(துணைத் தலைவர், அப்போலோ மருத் துவமனை)

3. திருமதி மஞ்களா ரமேஷ்

(ஆசிரியர், மங்கையர் மலர்)

ஏராளமான கட்டுரைகள் அற்புதமாக இருக்கின்றன. தாங்கள் அணியும் பட்டு சம்பந்தமாகத்தான் எத்தனை கனவுகள், நினைவுகள், கண்ணீர்க் கதைகள். போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருக்கின்றது.


அநேகமாக அடுத்த இதழில் முடிவினை அறிவித்து விடுவோம் என நினைக்கிறோம்...



* அனிதா



* ரேகா ஷெட்டி



வாழும் மகான்கள்

-மஞ்சுளா ரமேஷ்

**"எத்தனையோ மஹான்கள் ;
அத்தனை பேருக்கும் வந்தனங்கள்!"**

ஆன்மிகத் தொடர்

'துர்லபம் த்ரயமேவைதத்
தேவானுக்ரஹ ஹேதுகம்!
மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம்
மஹாபுருஷஸம்ச்ரய!!'

(மனிதப் பிறவி, முக்தியில் ஆசை, மகான்களை நாடி அடைதல் ஆகிய மூன்றும் அடைவதற்கரியது. தெய்வத்தின் காரணமாகத்தான் அவற்றை அடைய இயலும்.)

என்கிறார் ஆதிசங்கரர்.

யார் ஒருவர் மகானாகக் கருதப்படுகிறார் என்ற கேள்வி இந்தக் சின்னஞ் சிறியதான மனதில் எழுகிறது. அதற்கும் வித்வத் கடலே பதில் சொல்கிறது :-

'வேதத்தை நன்குணர்ந்தவரும், பாவமற்றவரும், ஆசை வாய்ப்பட்டு நலியாதவரும், பிரம்ம ஞானியும், காரணமேதுமின்றி ஜீவராசிகளிடம் கடல் போன்ற கருணை உடையவரும், தன்னை வணங்கும் நல்லவர்களுக்கு உளங்கலந்த உறவினரும் எவரோ அவரே சிறந்த குரு. அப்படிப்பட்டவர்கள் மன அமைதி உள்ளவர்களாகவும், வஸந்த காலத்தைப் போல உலகிற்கு நன்மை செய்பவர்களாகவும், பயங்கரமான பிறவிக் கடலைத் தாங்கள் தாண்டியவர்களாயும் பிறரைத் தாண்டுவிப்பவர்களாயும் உலகில் இருக்கிறார்கள். இவர்களே மகான்கள்.'

அந்த மகாஞானியின் வாக்குப் பொய்க்குமோ? அவர் சொல்வது போல இந்த உலகில் மகான்கள் தோன்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்தக் காலத்தில் யார் அப்படி இருக்கிறார்கள் என்று கேள்வி எழும். இந்த விஞ்ஞான அவசர யுகத்தில்தான், தன் குடும்பம், தன் வேலை இதுதான் உலகம். உலகத்தையே தன் சொந்தமாக யார் நினைக்கிறார்கள்? அப்படிப்பட்ட மகான்கள் இன்று உளரோ? நெஞ்சு குமைகிறது.

இருக்கிறார்கள். வாழும் மகான்களின் திசை நோக்கி நமஸ்கரிப்போம். இவ்வுலகம் அந்த மாமேரு மனிதர்களின் கண்மலர் காட்டும் கருணையினால் நல்வழி நடக்க யாசிப்போம். இம் மகான்கள் எங்கு வாழ்கிறார்கள்? அவர்களைக் கண்டறிவது எப்படி?

ஆதிசங்கரரே உரைக்கிறாரே,



பெரிய உருளைக் கிழங்கு இரண்டை குக்கரில் வேக வைத்து வெந்தபின் மேல் தோலை நீக்கிவிட்டுக் கிழங்கை ஒரு பாத்திரத்தில் போட்டு மசித்துக் கொள்ள வேண்டும். பின்பு பச்சை மிளகாய், தேங்காய், இஞ்சி இவற்றை நன்றாக அரைத்துக் கிழங்கில் போட்டு நல்ல கெட்டித் தயிர் ஒன்றரை கப், உப்பு சேர்த்துக் கலந்தபின் கடுகு, பெருங்காயம் தாளித்துக் கறிவேப்பிலை, கொத்துமல்லி போட்டால் சாம்பாருக்குச் சரியான சவால் இந்தப் பச்சடி.

- எஸ். ஜெயஸ்ரீ



நமக்கு அறிவும் அவாவும் இருக்குமேயானால் அவர்களைத் தேடிக் கண்டடையலாம் என்று. வாருங்கள், அனைவருமாகச் சேர்ந்து கையில் மலர் கொண்டு தேடுவோம்.

வாழும் மகான்கள் என இத் தொடரை எழுத முடியுமோ எனும் பயம். கம்ப நாட்டாழ்வானே பூனை பாற்கடலை நக்கிக் குடிக்க முற்பட்டது போல ராமகாதை சொல்ல வந்தேன் எனும் போது நாமெல்லாம் எம்மாத்திரம்?

ஆனால் இன்றைய உலகில் வழிகாட்டும் குருவின் பார்வை நமக்கு மிகவும் தேவையாக இருக்கிறது. கலாசார மாற்றங்கள், பண்பாட்டுச் சிக்கல்கள், குடும்பப் பின்னல்கள், வாழ்வின் கட்டாயங்கள் இவற்றால் நாடு மாறி, திசை மாறி மனம் வருந்தி அன்பிலா நெஞ்சராய், அமைதியிலா வாழ்வினராய் நாட்களைக் கடத்திக் கொண்டு இருக்கிறோம். நம் குழந்தைகளோ இன்னும் வேகமும், வன்முறையும் நிறைந்த உலகிலே வாழ வேண்டி வருமோ எனப் பயமாக உள்ளது.

இன்று நமக்குத் தேவை அமைதி, மனிதநேயம். கண்கண்ட தெய்வங்களாக வாழுகின்ற மகான்களால்தான் இவற்றினைத் தர முடியும். அவர்களை நோக்கி இறைஞ்சி அவர்கள் அருள் தேடிச் செல்லுகின்ற பயணமே இந்தத் தொடர். துன்பத்திலே நாளும் உழலும் இந்தச் சின்னஞ்சிறு உயிர்கள் சொல்லித்தானா நமது துன்பம் அவர்களுக்குத் தெரிய வேண்டும். இல்லைதான். ஆனாலும் தடுக்கிக் கீழே விழுந்து காயம் பட்டால் அம்மா என அழுவதில்லையா? அவள் ஓடி வந்து வாரியணைத்து நம்மைத் தேற்றுவதில்லையா? அதைப் போலத்தான் இந்த மானிட உயிர்கள் கருணை தேடி அழைத்தால் கண்திறக்கும், அந்தக் கண்கள் தரும் கருணைப் பார்வை இந்த உலகை மாற்றும்.

மோனத்திலே தான் ஒடுங்கி, மௌனத்திலே குறையுணர்ந்து, கண்களாலே கருணை புரியும் ஞான தவ ச்ரேஷ்டராக வாழ்ந்து கொண்டு இருப்பவர் காஞ்சி மாமுனிவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். இந்த மகான் வாழும் நாட்களிலே நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதே பெரும் பாக்கியம் அல்லவா?

1894 மே 20-ஆம் நாளில் விழுப்புரத்தில் அவதரித்தார் ஸ்ரீ சுவாமிகள். இவருடைய பாலபெயர் சுவாமிநாதன். பள்ளி நாட்களிலே முதல் மாணவனாக வகுப்பிலே திகழ்ந்தது மட்டுமல்லாமல், விளையாட்டுப் போட்டிகளிலும் பரிசு பெற்றார். தன்னுடைய பன்னிரண்டாவது வயதில் காஞ்சி காமகோடி பீடத்தின் 68-வது பீடாதிபதியாக பட்டமேற்றார். 67-வது பீடாதிபதி ஸ்ரீ மஹேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளிடமிருந்து பட்டத்தினையேற்ற சுவாமிநாதன் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் எனும் திவ்யநாமத்தைப் பெற்றார்.

மகான்களின் வரிசையிலே மாமேருவாக உயர்ந்தார் ஸ்ரீ சுவாமிகள். ஆதிசங்கரரே போல இந்தப் பாரதப் புண்ய பூமி முழுவதும் தன் திருப்பாதங்களால் பாத யாத்திரை செய்தார். எத்தனையோ சிறு சிறு கிராமங்களில் உள்ள கோயில்களுக்கு எல்லாம் சென்று முகாமிட்டு அக் கோயில்களுக்கே சானித்யம் வரச் செய்தார். அவர் புரிந்த திருச்செயல்கள்தான் எத்தனை?

''பொது வாழ்க்கையிலே எளிமையும், ஒழுக்கமும் இருக்கணும்னு இரண்டு பேர் தான் சொல்லிண்டிருந்தோம். ஒண்ணு காந்தியடிகள். அவர் போய்ட்டார். இன்னொண்ணு நான். இப்பவும் சொல்லிண்டு இருக்கேன்.''

என்றாராம் ஒருமுறை. எளிமை, ஒழுக்கம், கட்டுப்பாடு, தன் தேகத்தையே ஒடுக்கிக் கொள்ளல், அன்பு, தயை, அருள் என மகாபெரியவாளைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். விவரித்தால் அவர் வீற்றிருக்கும் அந்தக் குடிலுக்குள் அகஸ்மாத்தாக நுழைந்து விட்ட ஒரு எறும்பு 'ஆஹா இவர் பெருமைதான் என்ன' எனப் பேசுவதைப் போலத்தான் இருக்கும்.

''பெரியவா பிறந்த ஊரின் பெயரே எத்தனைப் பொருத்தம்'' என வியக்கிறார்கள் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள். ''விழுப்புரம். விழிப்புரம். அதாவது, விழிப்பை ஏற்படுத்தக்கூடிய புரம். ஜனங்களுக்கு எல்லாம் விழிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு மகான் இந்த ஊரிலே அவதரிக்கிறார் என்ற வகையிலே அமைந்து விட்டது. அதே போல பெரியவா பீடாதிபதியா ஆனது கலவையிலே. ஜீவாத்மா, பரமாத்மா இரண்டும் கலந்தது போல இதுக்கு முன்னால இருந்த பெரியவாளும் இவாளும் அங்கே கலவையானா. எத்தனை பொருத்தம்!

பெரியவா, மதுரையிலே மகாராஷ்டிர மன்னரின் பரம்பரை புகழோடு உயர காரணமா இருந்த கோவிந்த தீட்சிதர் பரம்பரை. திண்டிவனத்துல பள்ளிப் படிப்பு படிக்கும்போதே ஷேக்ஸ்பியர் டிராமா எல்லாம் ஆக்ட் பண்ணியிருக்கா. இந்தப் பையனுக்கு நிறைய படிப்புச் சொல்லிக் கொடுத்து பெரிய ஆளா கொண்டு வரணும்னு எல்லாரும் நினைச்சிண்டிருந்தா. ஆனா அப்போ பீடாதிபதியா இருந்த ஜகத்குருவோட எண்ணத்தைத் தெரிஞ்சவுடனே அத்தனையையும் உதறிட்டு பதிமூணு வயசிலே காவி வஸ்திரம் ஏத்துண்டா. எத்தனை நெஞ்சுரம் இருக்கணும்.

பெரியவாள பத்தி எத்தனையோ சொல்லுவா. அவர் விபூதி குடுத்தா காரியம் ஆறது. சொன்ன வாக்கு பலிக்கிறது... இப்படி. ஆனா எல்லாத்துக்கும் மேலே அவரைத் தரிசித்தவாளுக்கும், நினைத்தவாளுக்கும் மன அமைதியையும், ஞானத்தையும் அவர் கொடுத்தார். அதுதான் 'மிராக்கள்'னு சொல்லணும்.

இன்னும் பெரியவாளப் பத்திச் சொல்லிண்டே இருக்கலாம். நான்தான் பத்தாது'' என்று மொழிந்தார்கள் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

மகாபெரியவாள் 1954-ல் தனக்கு அடுத்த பீடாதிபதியாக ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளை பட்டமேற்கச் செய்தார். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மடத்தின் நிர்வாகத்திலிருந்து விலகிக் கொண்ட ஸ்ரீ சுவாமிகள் 91-ம் ஆண்டு வரை பல்வேறு ஊர்களுக்கும் திக்விஜயம் செய்தார். 1991 அக்டோபர் இறுதி வாரம் முதல் சாய்வு நாற்காலியிலே அமர்ந்து மௌன மூர்த்தியாய் தரிசனம் தந்து வருகிறார்கள்.

பால பெரியவர் எனும் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சுவாமிகள் மகாபெரியவாளின் பெருமையைக் கூறினார்கள்.

''பெரியவா ஒரு புதிய கொள்கையையே சமுதாயத்திலே உருவாக்கினான்னு தான் சொல்லணும். தன்னுடைய தர்மத்திலே தீர்மானமா இருந்தார். அதே மாதிரி அனுஷ்டானத்திலேயும் இருந்தார். இரண்டு கான்ஸ்ட்டிடியூஷனையும் மதிச்சார். நாட்டு சட்டதிட்டங்களையும் மதிக்கணும், நம்ம சமூக சட்டங்களையும் மதிக்கணும்பார். அவர்ட்டே கருணை, கண்டிப்பு ரெண்டும் இருந்தது.''

முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் இப்போது இருக்கும் அளவு பக்தி வெள்ளம் இல்லை. இந்த மார்க்கத்தைத் தொடங்கி வைத்தவர் ஸ்ரீ சுவாமிகள்தான். கோயில்களிலே திருப்பாவை, திருவெம்பாவை போட்டிகளை ஏற்படுத்தியது, கோயில் குளங்களை வெட்டியது, பிடியரிசித் திட்டம், இராமநாமம் எழுதி அனுப்பச் செய்தது என பக்திமார்க்கம் பரவ ஒவ்வொன்றாகக் கொண்டு வந்தார்கள்.

நாட்டுப் பற்றும், சுதந்திர வேட்கையும் அவருள்ளே அருள் வடிவாக இருந்ததால் சுதந்திரப் போராட்டம் நடந்த நேரத்தில் கன்னியாகுமரி சென்ற போது காவி வஸ்திரத்தைக் களைந்து கதர் வஸ்திரம் அணிய ஆரம்பித்தார்கள். அன்று முதல் இன்று வரை அவர் திருமேனியை அலங்கரித்து வருவது கதர் வஸ்திரமே'' என்கிறார்கள் பால பெரியவர். பிறகு சுதந்திர தினச் செய்தியையும் படித்துக் காண்பித்தார்கள்.







நாடு சுதந்திரம் அடைந்த அன்று அவர் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தி அற்புதமானது!

''வெகு காலமாக நாடு சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுள்ளது. கடவுள் அருளாலும், மகான்களின் ஆசியினாலும், மக்களின் ஒப்பற்ற தியாகத்தினாலும் கிடைத்த இந்தச் சுதந்திரத்தினால் நமது நாடு செழித்தோங்கி, பஞ்சம் விலகி, தேச மக்கள் சமூகச் சச்சரவுகள் எதுவுமின்றி, ஒற்றுமையுடன் அன்பு கொண்டு வாழ அருள் பொழிய வேண்டுமென எங்கும் நிறைந்த கடவுளைப் பிரார்த்திப்போமாக!''

எத்தனை அற்புதமாக அருளியுள்ளார்கள். சமூகத்தின் எந்தப் பிரிவினரையும் விடாமல் கடவுளின் அருள், மகான்களின் ஆசி, மக்களின் தியாகம் என அனைவராலும் இன்று சுதந்திரம் கிடைத்தது என்றார்கள்.

நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்தது. ஆனால் உண்மையான சுதந்திரம் நமக்கு எப்போது வரும்? அந்த மகானே பதில் கூறுகிறார் :

'நம் நாடு சுதந்திரம் அடைந்ததை ஒட்டி நாமும் சுதந்திரம் அடைய முற்பட வேண்டும். நம்மை நாம் முற்றிலும் அறிந்து கொண்டால்தான் நாம் சுதந்திரம் அடைந்தவர்களாவோம்.''

''எந்தப் பொருளை எவ்வளவு அடைந்த போதும், போதும் என்னும் மன நிம்மதி நமக்கு ஏற்படுவதில்லை.''

''சமூகச் சச்சரவுகள் செய்வதை அறவே ஒழிக்க வேண்டும்''

இன்றும் நாம் சுதந்திரம் அடைந்தோமா என்றால் இல்லை. அந்த மகான் கூறிய அதர்மங்களைச் செய்து கொண்டு வாழ்க்கையை மேலும் மேலும் சிக்கலாக்கிக் கொண்டே வாழுகிறோம்.

பனாரஸ் பல்கலைக் கழகத்தில் 1935-ஆம் ஆண்டு ஸ்ரீ சுவாமிகள் ஆற்றிய உரை இன்றும் கல்வி நிலையங்கள் கடைப்பிடிக்கத் தவறியதாலேதான் நம் கலாசாரமும், பண்பாடும் மலிந்து குழந்தைகள் திசை தடுமாறிக் கொண்டு இருக்கிறார்கள்.

''நம் பாரத நாட்டின் முற்காலக் கல்வியின் முதல் நோக்கம் மன அமைதியை அடைவதேயாகும். புதிது, புதிதாகத் தோன்றும் பௌதிக விஞ்ஞான ஆராய்ச்சித் துறைகளில் மேன்மேலும் கல்வியைப் பெருக்கி, அதன் பயனைத் தர்ம மார்க்கத்தில் உதவுமாறு செய்தால், நாமும் மக்களும் உயர்வான அமைதி நிலையை அடைய முடியும்''

என்கிறார்கள் ஸ்ரீ சுவாமிகள். எத்தனை உண்மை. நம்முடைய கலாசார வழி குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க மறந்தோம். மன அமைதி கெட்டு பணத்தின் பின்னே ஓடும் வாழ்க்கையை வாழவே அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தோம்.

பெரியவாளுக்கு எத்தனை தீர்க்க தரிசனம். இப்படி நம் கலாசாரம், பண்பாடு, வேதங்கள் என உயர்ந்த கருத்துக்களைச் சொன்னவர், எளியாருக்கும் எளியராய் இருந்த நிகழ்ச்சிகளும் உண்டு.

செங்கற்பட்டில் ஒரு கூட்டம். சுவாமிகள் அருளமுதம் வழங்கிக் கொண்டு இருக்கிறார். பார்த்த பால் ப்ரண்டன் எனும் வெளிநாட்டவர் வியந்து போகிறார். காரணம் கூட்டத்திலே குழந்தைகள், நடுத்தர வயதினர், வயதானவர்கள் என அனைவரும் அமர்ந்திருக்கிறார்கள். சாதாரணமாக குழந்தைகள் அளவு இறங்கி வந்து பேசினால் பெரியவர்களுக்குச் சுவாரஸ்யம் தட்டுவதில்லை. வேகமான வாழ்க்கையிலுள்ள நடுத்தர வயதினருக்கோ குழந்தைகள், வயதானவர்களுக்குப் பிடித்த விஷயங்கள் பிடிப்பதில்லை. வயதானவர்களுக்கோ உயர்ந்த கருத்துக்கள் இருந்தாலொழிய பிடிப்பு இருப்பதில்லை. ஆனால் இந்த மூன்று வகையினரும் அமர்ந்து கண் கொட்டாமல் மேடையில் அமர்ந்து அருள் மழை பொழியும் அந்தத் துறவியின் ஒவ்வொரு சொல்லையும் பருகிக் கொண்டு இருக்கிறார்களே என ஆச்சர்யப்படுகிறார் அவர்.

பால் பிரெண்டன் உண்மையைத் தேடி, சத்யத்தை நாடி இந்தியா வந்த தத்துவப் பேராசிரியர். பெரியவாளை முதன் முதலாக பேட்டி காண அனுமதி பெற்ற வெளிநாட்டவர். 'A search in sercret India' எனும் தன்னுடைய நூலிலே இந்தச் சந்திப்பை மெய்சிலிர்த்துப் போய் எழுது கிறார் அவர். அவருடைய கட்டுரையிலே சில வரிகள் :

''நான் மகான்களைச் சந்திக்க வேண்டி இந்தியா வந்துள்ளேன். இதுவரையில் பல ரையும் பார்த்து விட்டேன். ஆனால் மனம் சாந்தியடையவில்லை. எனக்கு நீங்கள் அவர்களை அடையாளம் காட்ட முடி யுமா?'' எனப் பெரியவாளைக் கேட்கி றார்.

''உன் மனதிலே மகான்களைப் பார்க்க வேண்டும் என்ற தீவிர தாகமும், அவாவும் எழுமேயானால் தானாக வழி பிறக்கும்'' என்கிறார் பெரியவர் புன்சிரிப்புடன்.

எத்தனையோ மாபெரும் அறிஞர் களும், தத்துவ வித்தகர்களும் ஸ்ரீ மகா பெரியவர்களோடு பேசும் பாக்யத்தை அடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு சந்திப் பிலும் குழந்தையைப் போல அவரவர் நாடு, மொழிகள் பற்றியும் விசாரித்துத் தெரிந்து கொள்வார்களாம். நம்மவர்களாக இருந்தால் அவர்களைப் பற்றியும் ஆர்வத் தோடு விசாரிப்பார்களாம்.

தரிசன நேரமாகி விட்டபோதும், தவித்து வருகின்ற பக்தர்களுக்கு வாஞ்சை யோடு வெளியே வந்து கருணை மலர் பொழிந்திருக்கிறார்கள். ஒருமுறை வட நாட்டில் இருந்து வந்த பக்தர்கள் இரவு பதி னோரு மணிக்கு வந்தார்களாம். ''இப்போ பெரியவா படுத்துண்டாச்சு. நீங்களும் தூங் குங்கோ. நாளை காலை தரிசிக்கலாம்'' என்று சொன்னார்களாம் மடத்தில் இருந்த வர்கள். பேச்சு சப்தம் கேட்டு கூப்பிட்டு விசாரித்தாராம் சுவாமி. இவர்களும் விவ ரங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

''அவா என்னைப் பாக்கனும்னு ஊர் லேர்ந்து நேரா வந்திருக்காங்களே. சாப்ட் டாளான்னு கேட்டியோ'' என்றாராம்.

இவர்களுக்கு மண்டையில் அடித்தது போலிருந்தது. ஓடிப் போய் களைத்துப் படுத்திருந்த அவர்களை விசாரித்திருக்கி றார்கள். பசி மயக்கத்தில் சுருண்டு கிடந்த அவர்கள் பெரியவாள் அன்புக் கட்டளை யிட்ட உணவினை உண்டு மறுநாள் திவ்ய மாகத் தரிசித்து விட்டுப் போனார்களாம்.

எளியோர்க்கும் எளியனாக அமைந்தவ ரல்லவோ இவர்.

பெரியவாளுக்குப் பல்லாண்டுகள் தொண்டு செய்யும் பாக்கியம் பெற்ற குப்பு சாமி அவரைப் பற்றி சொல்லிக் கொண்டே இருந்தார்.

''பெரியவா மகா ஞானி. அதே சமயம் மகா அபிமானி. தஞ்சாவூர் சமஸ்தானத்தை யெல்லாம் அரசாங்கம் எடுத்துண்டாச்சு. பிலிப்ஸ் என்ற நீதிபதி தீர்ப்பு எழுதும் போது என்றைக்கேனும் சமஸ்தானங் களுக்கு அரசாங்கத்தால் ஏதேனும் சலுகை கள் தரப்படுமேயானால் முதல் உரிமை தஞ்சாவூருக்குத் தர வேண்டும் எனக் குறித் திருந்தார். பல்லாண்டுகள் கழித்து அந்த மன்னருக்கு நிறைய இழப்புகள் ஏற்பட்டு அரசாங்கத்திற்கு மனு செய்து கொண்டார். மனுவினை நானும் ஒரு புகழ்வாய்ந்த வக்கீ லும், சேர்ந்துதான் தயாரித்தோம். அநேக மாக எல்லா பாயிண்டுகளையும் வழக்கறி ஞர் தந்திருந்தார். பெரியவா அத்தனையை யும் படித்தார்.

''எல்லாம் ரொம்ப நல்லா தயார் பண்ணியிருக்கேள். அந்த பிலிப்ஸ் ஜட்ஜ் மெண்ட்டையும் சேர்த்துண்டுடுங்கோ. அவனுக்குப் பக்கபலமா இருக்கும்'' என் றார். நான் நடால்னு கால்லே விழுந் துட்டேன். அந்தத் துறையிலே மூழ்கியிருக் கறவாளும் விட்டு விட்ட முக்கியமான பாயிண்ட்.

அதே போல சந்திரகிரிகிட்டே முகாம். தண்ணீர்ப் பஞ்சமான தண்ணீர்ப் பஞ்சம். பூஜை பண்ண ஒரு பாத்திரத்தில தண்ணீர் வச்சிருந்தோம். பெரியவா ரொம்ப எளிமையானவா. வெளியிலதான் எல்லா ஏற்பாடும். ஒரு நாய் தாகம் பொறுக்காம தண்ணியைப் பார்த்தவுடனே வந்துடுத்து. எல்லாருமா சேர்ந்து அதை விரட்டினோம். வந்துண்டே இருந்த பெரியவா, ''நில்லு நில்லு அதையேன் விரட்டறே. அந்தத் தண்ணியை ஒரு தட்டுல கொட்டி அதுக்கு மொதல்ல வை. அப்புறமா எனக்கு பூஜைக்கு ஏற்பாடு பண்ணு''ன்னார்.

அதே மாதிரி தன் தேகத்தை லட்சியமே பண்ண மாட்டார். இளையாத்தாங்குடி யிலே பூஜை பண்றப்போ கையிலே நெருப் புக் கங்கு பட்டு தீப்புண் பெரிசாயிடுத்து. அதை அவர் லட்சியமே பண்ணலை. நாங்களா பார்த்துப் பதறினப்புறம்தான் சொன்னார்...

அவரைப் பத்திச் சொல்லிண்டே போக லாம். பெரும் பெரும் அறிவாளிகளும் அவர்கிட்டே வந்து தரிசனம் பண்ணி ஆத்ம ஞானம் வாங்கிண்டு போனா. குழந்தை போல வந்து நின்ன சாதாரண ஜனங்களுக் கும் உத்தரிணி தீர்த்தத்துலே தன்னோட கருணையையும் சேர்த்துக் குடுத்தார்.''

என்று கண்கலங்குகிறார் அவர்.

அவருடைய நினைவாற்றலைப் பற்றிச் சொல்லாதவர்களே இல்லை. மகாபெரிய வாளை ஒருவர் ஒருமுறை தரிசித்தாலே போதும். அவர் எத்தனை வருடம் கழித்து வந்தாலும் அவர் பெயர் ஊர் சொல்லி அழைத்து அன்போடு விசாரிப்பாராம்.

மகாபெரியவாளைத் தரிசித்தால் அற்பு தங்கள் நடந்ததாக நிறைய பேர் எழுதி யிருக்கிறார்கள். சொல்லியிருக்கிறார்கள். அவர் தந்த பிரசாதம் தங்களை ரட்சையாக எப்படியெல்லாம் காப்பாற்றியது என்று விவரித்திருக்கிறார்கள். ஆனால் தனக்கு அப்படி ஒரு சக்தி இருப்பதாக மகா பெரி யவா ஒத்துக் கொண்டதே இல்லை. இவற் றையெல்லாம் புன்சிரிப்பாலேயே புறம் போகச் செய்திருக்கிறார்கள்.

'அவரைப் பார்த்து விட்டு வந்தாலே போதும். மெட்றாஸ் வந்தவுடன் எனக்கு ஏதாவது ஒரு நல்ல நியூஸ் காத்திருக்கும்' என்கிறார் ஒருவர்.

இன்றும் சாந்தமூர்த்தியாக காஞ்சியில் அமர்ந்து தன்னை நாடி வருகின்ற அன்பர் களுக்கு எல்லாம் மௌனமாக தரிசனம் அளித்துக் கொண்டு இருக்கிறார் அந்தத் தட்சிணாமூர்த்தி. வருகின்ற மே மாதம் நூற் றாண்டைக் காணவிருக்கும் அந்த மகான் வாழும் நாளிலே நாமும் வாழும் பேறு பெற்றிருக்கிறோம். அவர் இன்னும் பல் லாண்டுகள் வாழ தவம் புரிந்து நமக்கெல் லாம் அருள் மழை பொழிய வேண்டும் என அந்தக் கருணை மூர்த்தியிடமே பிரார்த் திப்போமே!



சில குழந்தைகள் மற்றவர்களை விடத் துறுதுறுவென இருப்பது ஏன்?

துறுதுறுவென இருப்பதற்குத் தேவையான சக்தியைப் பெறுவதற்கு, உங்கள் குழந்தைக்குச் 'சரியான' கலோரிகள் தேவை. புரோட்டீன்களும், கார்போஹைடிரேட்ஸும், கொழுப்புச் சத்தும் சரியான சமச்சீர் விகிதத்தில் கலந்திருந்தால் தான் இந்தக் கலோரிகள் கிடைக்கும்.

இந்தச் 'சரியான' கலோரிகள் கிடைக்க வேண்டுமானால் அதற்குச் சிறந்த வழி ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த உணவைக் கொடுக்க வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனபிறகு பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு வேளையும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவை உங்கள் குழந்தைக்குத் தர வேண்டும்.

பெரும்பாலான தாய்மார்களுக்கு இது முடிவதில்லை. வழக்கமான உணவு வகைகள் சரிப்பட்டு வருவதில்லை.

பிறகு என்னதான் வழி?

செரிலாக். ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த, உங்கள் குழந்தைக்கு மிகவும் பழக்கமான பாலின் எல்லா நற்பயன்களும் அடங்கிய திட உணவு. வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த பால் புரோட்டீன்கள் இதில் உள்ளன. மேலும், கொழுப்புச் சத்துக்கள், கார்போஹைடிரேட்ஸ், இரும்புச்சத்து, கால்சியம் ஆகிய சத்துக்கள் சரியான அளவில் கலந்த உணவு செரிலாக். வைட்டமின்கள் A, D, E, B- காம்ப்ளெக்ஸ், மற்றும் C இதற்குப் பலம் சேர்க்கின்றன.

இன்னுமொரு சிறப்பு, செரிலாக் இப்போது நெஸ்லேயின் புரட்சிகரமான புதிய Z-லேன் என்ஸைமேட்டிக் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன்கூட்டியே பக்குவப்படுத்தப்படுகின்றன. செரிலாக் மிக எளிதில் ஜீரணமாகிவிடுகிறது, மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது.

எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் செரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு கலோரிகள் உள்ளன. ஏனென்றால், இதில் பாலின் நற்பயன்கள் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை துறுதுறுவென இருப்பதற்குத் தேவைப்படும் ஊட்டச்சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த திட உணவு செரிலாக்.





இலவசம். செரிலாக் பேபி கேர் புத்தகம். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கான கையேடு. உங்களுக்கு விருப்பமான மொழி ஆகிய விவரங்களுடன் எழுதுங்கள்: செரிலாக், தபால் பை எண். 33, புதுதில்லி-110 001.

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடிய தானிய உணவு வகைகளைக் கொடுங்கள்.

Mudra/NES/0318 Tam


சும்மாயிருக்கும் போது... 3

பேப்பர் வெயிட்டை உருட்டுங்கள்

அழைப்பு மணியை அழுத்திய ரமா "கம் இன்" என்ற சொர்ணாவின் குரலையும் கேட்டு விட்டு வீட்டுக்குள் நுழைந்த அடுத்த நிமிடம் எக்கச்சக்கமான குழப்பத்துக்கு ஆளானாள்.

"வாங்க ரமா வாங்க... இப்போ வர வேண்டாம். நான் கொஞ்சம் பிஸி.. அந்த நாற்காலியிலே உட்காருங்க... ஆமாம். முதல்லே மாங்காடு கோயிலுக்குப் போயிட்டு வாங்க. என்ன ரமா ஏன் தயங்கி நின்னுக்கிட்டே இருக்கீங்க?"

சொர்ணா தன்னை உள்ளே வரச் சொல்கிறாளா அல்லது



வெளியே போகச் சொல்கிறாளா? ரமாவின் திகைப்பைப் புரிந்து கொண்ட சொர்ணா விளக்கினாள்.

"இப்பத்தான் ஒரு தோழிக்கு போன் பண்ணி முடிச்சேன். வரச் சொன்னது உங்களை. இ ன் னி க் கு வேணாம், நாளைக்குச் சந்திக்கலாம்னு சொன்னது தொலைபேசியில் பேசிக்கிட்டிருந்த என் தோழியிடம். அவளிடமும் உங்களிடமும் மாறி மாறிப் பேசியதிலே அர்த்தம் விபரீதமாயிடுச்சு."

"சோளக்கொல்லை விவசாயி, போஜராஜன் கதை, மாதிரி இருக்கேன்னு நினைச்சேன்" என்று சிரித்தாள் ரமா.

"ரமா, உங்களுக்கும் உங்க அக்கா ரமாவுக்கும் நான் ரொம்ப தாங்க்ஸ் சொல்லணும். நீங்க சொன்ன பயிற்சியைச் செய்யத் தொடங்கியதிலிருந்து என் முதுகுவலி மாயமாய் மறைஞ்சிடுச்சு. இப்பவெல்லாம் நான் ஒரு நிமிஷம் கூட சும்மாயிருப்பதில்லை. ஏதாவது எளிய பயிற்சிகளைச் செய்துக்கிட்டே இருக்கிறேன்."

"இல்லையே, போன் செய்தப்போ நீங்க சும்மா தானே இருந்தீங்க?"

"தொலைபேசியில்



பேசும் போது என்ன பயிற்சி செய்ய முடியும்கிறீங்க?" என்று ஆச்சரியத்துடன் கேட்ட சொர்ணாவுக்கு ரமா விளக்கினாள்.

"பேப்பர் வெயிட் போன்ற ஏதாவது சற்று கனமான பொருளைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள். அதாவது போனில் பேசும் போது ஒரு கை சும்மாதானே இருக்கும், அந்தக் கையில் எடுத்துக்குங்க. பிறகு அந்தப் பொருளை உயரத் தூக்குங்கள். அதை தலைக்குப் பின்புறம் கொண்டு வாருங்கள். அடுத்து பக்கவாட்டிற்கு எடுத்துப்

போங்கள். பிறகு கையை வட்ட வடிவில் சுற்றுங்கள். கடைசியில் அந்தக் கையால் தரையைத் தொடுங்கள். இதைப் பலமுறை செய்யலாம்.''

''ஒருவேளை இந்தப் பயிற்சியை அதிக நேரம் செய்தால் கை வலிக்குமோ?''

''கை வலிக்குமளவிற்கு பயிற்சி நீடிச்சா நீங்க ரொம்ப அதிகமாக போனில் பேசறீங்கன்னு அர்த்தம். பேச்சைக் குறைச்சுக்கணும்னு வச்சுக்கலாமே. அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம். ரிசீவரை இரண்டு கைகளிலும் மாறி மாறி வைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் இரண்டு கைகளுக்கும் உடற்பயிற்சி கொடுக்க முடியும்.''

புரிந்து கொண்டு தலையசைத்த சொர்ணா வேறொரு வேண்டுகோளை ரமாவின் முன் வைத்தாள். ''காலை வேளை டென்ஷன் குறைய ஏதாவது பயிற்சி சொல்லுங்களேன். ஆனால் ஒன்று அப்போது இரண்டு கைகள் போதாது என்று தோன்றும் வேளை. எந்தவிதப் பயிற்சியையும் செய்ய முடியுமான்னு சந்தேகமாகவும் இருக்கு.''

''அது சரி. காத்யாயினி மாதர் சங்க ஆண்டு விழாவிலே உங்க கூட வந்தது உங்க தங்கைதானே? சின்ன வயசிலே அவ கூட சண்டை போட்டிருக்கீங்களா?''

இடையே சம்பந்தமேயில்லாமல் ரமா பேச்சை மாற்றியது பற்றி சொர்ணா ஒருகணம் திகைத்தாலும், பதிலளிக்கத் தவறவில்லை.

''அதையேன் கேட்கறீங்க? எந்த ரிப்பனை யார் கட்டிக்கிறதுன்றதிலேயிருந்து, சாப்பிட்ட பிறகு எச்சில் இடுவது யார் என்பது வரை தினமும் ஏதாவது தகராறு தான். இப்ப நினைக்கப் பார்த்தால் சிரிப்பாக இருக்கு, இதுக்கெல்லாம் இப்படி அடிச்சுக்கிட்டோமேன்னு.''

ரமாவின் முகத்தில் புன்னகை ஒன்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. ''இப்படித்தான் நம்முடைய பெரும்பாலான பிரச்னைகளும், டென்ஷன்களும். நீங்க ஒண்ணு செய்து பார்க்கலாமே? காலை வேளையில் ஏதாவது டென்ஷன் வரும் போது உடனே உங்க மனசுக்குள்ளே பதினைந்து வருடம் கழித்து இதே சூழ்நிலையை யோசித்துப் பார்த்தால் எப்படியிருக்கும்னு கற்பனை செய்துக்குங்க. சிரிப்பு வரும். டென்ஷன் குறையும்.''

சொர்ணா யோசித்துப் பார்த்தாள். தன்னுடைய எட்டு வயது மகள் வித்யாவுக்கு டாக்டராக வேண்டும் என்று ஆசை. அப்படி அவள் பின்னாளில் டாக்டராகும் போது, இன்று காலை வாசலில் ச

ஸ்ரீ

ஸ்தாபிதம் : 1989

திரு.வி.க. நகர் பெனி:பிட் :பண்டு லிமிடெட்

தலைமை அலுவலகம் : 10, 2வது தெரு, ஆண்டாள் அவின்யு, (திரு.வி.க. நகர் அருகில்),
சென்னை - 600 082. போன் : 610390
பாரீஸ் கிளை : 49, வெங்கடாசல முதலி தெரு, முதல் மாடி, (கந்தசாமி கோயில் அருகில்),
சென்னை - 600 003. போன் : 565760

டெபாசிட் திட்டங்கள்

பென்ஷனர் டெபாசிட்

குறைந்த பட்ச டெபாசிட்	காலம்	வட்டி விகிதம்
ரூ.10,000	1 வருடம் 2 வருடங்கள் 3 வருடங்கள்	21%

★ இத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றோர், 50 வயது அடைந்தோர், விதவைகள், உடல் ஊன முற்றோர் மற்றும் கல்வி, சமய அறக்கட்டளைகளும் பயன் பெறலாம்

★ பிரதி மாதம் வட்டி வழங்கப்படும்

★ வட்டிக்குரிய காசோலைகள் முன்னதாகவே அளிக்கப்படும்.

வைப்பு நிதி

காலம்	வட்டி விகிதம்	
	ரூ.10,000க்கு கீழ்	ரூ.10,000 மும் அதற்கு மேலும்
1 வருடம்	17%	18%
2 வருடங்கள்	18%	19%
3 வருடங்கள்	19%	20%

★ குறைந்த பட்ச டெபாசிட் ரூ.1,000

★ பிரதி மாதம் வட்டி வழங்கப்படும்

★ குறைந்த பட்சம் ரூ.10,000 டெபாசிட் செய்தால் வட்டிக்குரிய காசோலைகள் முன்னதாகவே அளிக்கப்படும்.

மறுமுதலீட்டுத் திட்டம்

டெபாசிட் தொகை	காலம்	கால இறுதியில் பெறும் தொகை
ரூ.1,000	12 மாதங்கள்	1,185
	24 மாதங்கள்	1,438
	36 மாதங்கள்	1,760
	44 மாதங்கள்	2,000

ஐஸ்வர்யா டெபாசிட்

டெபாசிட் தொகை	காலம்	கால இறுதியில் பெறும் தொகை
ரூ.1,000	10 வருடங்கள்	6,919
	15 வருடங்கள்	18,885
	20 வருடங்கள்	52,827
	23 வருடங்கள்	95,760

★ மாதாந்திர சேமிப்புத் திட்டத்தில் பிரதி மாதம் ரூ.25 செலுத்தி 12 மாதங்கள் கழித்து ரூ.330 பெறுங்கள்.

★ சேமிப்புக் கணக்கில் உள்ள நிலுவை தொகைக்கு நாள் தோறும் 12% P.A. வட்டி வழங்கப்படும்.

★ நகையின் பேரில் ஒரு சவரனுக்கு ரூ.2,500 வரை கடன் வழங்கப்படும்.

★ வீட்டின் பேரிலும் கடன் வழங்கப்படும்.

★ பங்குதாரர்களுக்கு மட்டும் ★ ரூ.1 செலுத்தி ஒரு பங்கு பெற்றுக் கொள்ளுங்கள்.

★ இது சீட்டு நிறுவனம் அல்ல

Ideal/93

வேலை நேரம் :

தலைமை அலுவலகம் : காலை 9 முதல் 5 வரை. ஞாயிறுகளில் 9 முதல் 12.30 வரை. செவ்வாய் விடுமுறை.

பாரீஸ் கிளை : காலை 10 முதல் 5 வரை. ஞாயிறு விடுமுறை.

✤ பாதுகாப்பான முறையில் சேமித்து வளருங்கள் ✤

மொய்க்க விற்கப்பட்ட மாங்காய் பத்தை யை வாங்கித் தந்தே ஆக வேண்டும் என்று அவள் அடம்பிடித்ததைச் சொன்னால் எப்படி இருக்கும்? சொர்ணாவுக்கும் சிரிப்பு வந்தது.

ரமா தொடர்ந்து கொண்டிருந்தாள். ''இன்னொரு வழியும் இருக்கு. ஒரு நிமிடம் உங்களைச் சுற்றியும் நீலநிறம் பரவியிருப்பது போல் கற்பனை செய்து கொள்ளுங்கள். முதலில் கண்களை மூடிக் கொண்டு இதைச் செய்யலாம். பிறகு பழகப் பழக கண்களை மூடாமலே இந்த அனுபவம் உங்களுக்கு வரும். ஆகாய வண்ண நீலத்திற்கு மனதை அமைதிப் படுத்தும் தன்மை உண்டு.''

தலையை ஆட்டிய சொர்ணா திடீ ரென்று பதறினாள். ''அடடா பேசிக் கிட்டே இருக்கேனே. காப்பி சாப்பிடறீங் களா?''

ரமா மறுக்க, ''மோராவது சாப்பிட்டு விட்டுத்தான் நீங்க போகணும்'' என்றாள் சொர்ணா.

''உமா இப்போ வந்துடுவா. அவ ளோடு சேர்ந்தே மோர் சாப்பிடுகிறேனே.''

சொர்ணாவுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. ''உமாவும் வராங்களா? உங்க கூடவே வந்திருக்கலாமே?''

''அடுத்த தெருவிலே இருக்கிற சரோ ஜாவின் வீட்டுக்குப் போயிருக்கா'' என்று ரமா சொல்லிக் கொண்டிருந்தபோதே, உமா வந்து சேர்ந்தாள். கூடவே சரோஜா வும்.

தான் அன்று கற்றுக் கொண்ட தொலை பேசிப் பயிற்சியை சொர்ணா சொல்ல, சரோஜாவின் முகத்தில் அத்தனை உற்சா கத்தைக் காணோம்.

''சொர்ணா மாதிரி வீட்டிலே தொலை பேசி இருக்கிறவங்க இந்தப் பயிற்சியைச் செய்யலாம். மத்தவங்க?'' என்றாள்.

உமா குறுக்கிட்டாள். ''நாங்க ஏற்கெ னவே சொல்லியிருக்கிறோம். ஒரு உதார ணத்துக்காக ஒரு சூழ்நிலையை எடுத்துச் சொன்னால் அது பொருந்தும் எந்த நிலையிலும் அந்தப் பயிற்சியைச் செய்ய லாம்னு. தொலைபேசி பேசும் போது மட்டுமில்லை. உட்கார்ந்தபடி ஒரு கையை மட்டும் பயன்படுத்தினால் போதும் என்ற எந்தவித சூழ்நிலையிலும் நீங்க இந்தப் பயிற்சியைச் செய்யலாம்'' என்றாள்.

''ஆபீசிலே செய்யற மாதிரி ஏதாவது பயிற்சி இருக்குதா? என்னோட அலு வலகத் தோழிகள் சிலர் கூட உங்களை இது பற்றி விசாரிச்சுட்டு வரச் சொன்னாங்க'' என்று சரோஜா கேட்டுக் கொள்ள, உமா தொடங்கினாள்.

''ஏற்கெனவே ஓரிரண்டு பயிற்சிகள் அப்படிச் சொல்லியிருக்கோமே. சரி இன் னொண்ணையும் சொல்றேன். ஆபீசிலே மட்டுமில்லே. எங்கெல்லாம் முடியுதோ அங்கெல்லாம் இதைச் செய்யலாம். உட் காருமிடத்திலுள்ள தசைகளை இறுக்கிக் கொள்ளுங்கள். இரண்டு கால் முட்டிகளை யும் ஒன்றோடொன்று நன்றாக அழுத் துங்கள். உங்கள் வயிற்று சதையை நன்றாக உள்ளுக்குள் இழுத்துக் கொள்ளுங்கள். அப்படி ஒரு நிமிடம் இருங்கள். பிறகு நீங்கள் இறுக்கிக் கொண்ட தசைகளை ஒவ் வொன்றாக ரிலாக்ஸ் செய்யுங்கள்'' என்ற உமா தொடர்ந்து வேறு ஒரு பயிற்சியையும் சொன்னாள்.

''ஒரு கையால் மேஜை மீது எதை யாவது எழுதிக் கொண்டிருக்கும்போதே மறு கையால் மேஜையைத் தூக்குவது போல் நன்றாக மேலே அழுத்துங்கள். பிறகு கையைத் தளர்த்துங்கள். இப்படிப் பல தடவைகள் செய்யலாம். இப்போது நான் சொன்ன இரண்டு பயிற்சிகளையும் செய்தால் மொத்த உடம்பும் புத்துணர்ச்சி பெறும்.''

''தாராளமாகச் செய்யலாமே? காசா, பணமா? தனியான நேரமா? ப்ரைவஸியா? எதுவுமே இவற்றைச் செய்வதற்கு வேண் டாமே'' என்று உற்சாகக் கூக்குரலிட்டனர் சரோஜாவும் சொர்ணாவும்.

(தொடரும்)

ஷூ கண்ணாடி போல் பளபளக்க!...

பாலீஷ் போட்டு பிரஷ்ஷால் தேய்த்த பிறகு 'ஃபைனல் டச்'சாக ரப்பர் ஃபோம் என்ற ஸ்பாஞ்ஜால் தேய்த்தால் ஷூ மற்றும் பாத அணிகள் கண்ணாடி போல் பளபளப்பாக இருக்கும். ஒரு பக்கத்தில் கறுப்பு, மறு பக்கத்தில் பிரௌன் இப்படியாக ஸ்பாஞ்ஜை உபயோ கிக்கவும்.



- கீத்தா சிகிசா



உலகத்தரம் கொண்ட மிக்ஸிக்கு எந்த வேலையும் எளிது.
BONZUN
MIXIDIZER
வளரும் தேவைக்கு முதன்மையான மிக்ஸி
600 w சக்தி
"Design No. 163890 regd., by the Patent office, Govt. of India."
உலகத் தரம் வாய்ந்த மிக்ஸி,
கடினமானதை கூட நிமிஷத்தில்
தயார் செய்யும்
பொடிக்க, அரைக்க
• முழுமையான உலக தரம் செயலிலும், தோற்றத்திலும் • திறமை கொண்ட - 600 வாட் மோட்டார் - 60 நிமிட ரேட்டிங்குடன் • லிக்விடைசர் - இறக்குமதியான பாலிகார்பனேட்டால் - தயாரிக்கப்பட்டது. • இரண்டு எவர்சில்வர் ஜார் (பெரியது, சிறியது). • கலவைக் கரண்டி • வொர்க்பௌல் - இறக்குமதியான ஸானுல் தயாரிக்கப்பட்டது.
குழந்தைகள் வளருகின்றன
ஒரு விதத்தில் சமுதாயத்தில்
நாமும் வளர்கிறோம்
அதற்கு ஏற்றது
போன்சன் மிக்ஸியே
போன்சன் - விலை மதிப்புள்ள பொருள். இவ்வளவு உலகத்தரம் கொண்ட போன்சன், சாதாரண மிக்ஸியின் விலையையே கொண்டுள்ளது.
Manufactured by :
BONZUN EQUIPMENTS (PVT) LTD.,
Veerappa Goundanur Road, Kinathukadavu,
Coimbatore. Phone : 042597-2166

1

புதிய தொடர்கதை

உச்சித்தனை முகர்ந்தால்...

வித்யா சுப்ரமணியம்

ஆர்ப்பரிக்கும் அலைவாயிலிருந்து விடுபட்டு செங்கோளமாய் ஜொலிக்க ஆரம்பித்தான் சூரியன். கீழ்வானம் முழுவதும் அக்னியைப் பூசிக் கொண்டதால் கடல் அலைகள் தகதகவென்று ஒளிர்ந்தன.

ஜன்னலில் இருந்து பார்வையைத் திருப்ப முடியாமல் அக் காட்சிகளைப் பருகிக் கொண்டிருந்தாள் சரண்யா. பால் குக்கர் சப்தமிடத் தொடங்கியது. ஓடிப் போய் அணைத்து விட்டு பெட்ரூமுக்குள் எட்டிப் பார்த்தாள்.

ஒருக்களித்து, ஒரு தலையணையை அணைத்துப் பிடித்தபடி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் பத்மா. சரண்யா அம்மாவையே பரிவுடன் பார்த்தாள். இரவு முழுக்க ரெக்கார்டு நோட்டுப் புத்தகங்களை திருத்திய களைப்பு அவள் முகத்தில் தெரிந்தது. பெட்ரூம் கதவை சாத்திக் கொண்டு கிச்சனுக்குள் நுழைந்தாள். சூடாகக் காப்பி கலந்து குடித்து விட்டு ப்ரிட்ஜிலிருந்து தோசை மாவை எடுத்து வெளியில் வைத்தாள். மாவு அறை வெப்பத்திற்கு வருவதற்குள் தேங்காயைத் துருவி மிக்ஸியில் போட்டு விட்டு, தேவையான தோசைகளை வார்த்து விட்டு மேடையைச் சுத்தம் செய்து விட்டு தோசை இருந்த பாத்திரத்தை டைனிங் டேபிளில் கொண்டு வந்து வைத்தாள். பூச் சாடியின் மலர்களைச் சரிபண்ணினாள். திரும்பவும் வந்து ஜன்னலருகில் நின்றபடி கடலை வேடிக்கை பார்த்தாள்.

திடுதிப்பென்று தூக்கம் கலைந்து எழுந்த பத்மா சுரீரென்று அடிக்கும் வெளிச்சத்தைக் கண்டு பதறிப் போய் எழுந்து வெளியில் வந்தாள். ஜன்னலருகில் நின்ற சரண்யாவைக் கண்டதும்,

''குட்மார்னிங் சரண்! அம்மாவை எழுப்பக் கூடாது?'' என்றாள். சரண்யா திரும்பினாள்.

''ராத்திரி நீ தூங்கும் போது மணி ரெண்டிருக்குமா? அதான் எழுப்பலை. பல் தேச்சுட்டு வா. காப்பி ரெடி.''

''தேங்க் யூ'' என்றபடி பாத்ரூமுக்குள் நுழைந்தாள் பத்மா.

அவள் பல் தேய்த்துக் குளித்து விட்டு வரும் போது மிக்ஸி சப்தம் கேட்டது.

''உன்னை எழுப்ப வேண்டாம்னு அப்ப மிக்ஸி போடலை'' சரண்யா சிரித்தாள்.

''ஓ! டிபன் கூட ரெடியா? ப்ளூ! நீ என்னை எழுப்பியிருக்கலாம்.''

''ஒரு நாளைக்குத்தான் நல்லா சாப்டுவோமே!''

''ச்சீ நாட்டி!''

சட்னியைப் பாத்திரத்தில் மாற்றி டேபிளில் கொண்டு வந்து வைத்து விட்டு ப்ளேட்டுகளை வைத்தாள்.

''எட்டரை மணிக்கு மிஸஸ் மாத்யூஸை மீட் பண்றதா சொல்லியிருக்கேன். மணி இப்பவே ஏழே முக்கால். எட்டரைக்குள்ளே மாத்யூஸ் வீட்டுக்குப் போக முடியுமா சரண்?'' ஈரத் தலையை அவசரமாக துடைத்தபடி கேட்டாள் பத்மா.

''நீ ரெடியாய்ட்டா கால் மணி நேரத்துல போய்டலாம்'' ப்ரிட்ஜிலிருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து வைத்து விட்டு ட்ரெஸ் பண்ணிக் கொள்ளச் சென்றாள்.

அடுத்த பத்து நிமிடத்தில் இருவரும் தயாராக வெளியில் வந்தனர். சரண்யா இரண்டு பேருக்கும் டிபன் பாக்ஸில் தோசையை வைத்து மூடினாள். பத்மா மகளையே பார்த்தாள்.

வெளிர் நீலநிற ஆர்கண்டியில் தேவதையாய் தோன்றிய பெண்ணை பெருமை பொங்கப் பார்த்தாள். சாயலில் அம்மாவைக் கொண்டிருந்தாலும் மூக்கும் அந்த அழுத்தமான உதடுகளும் மட்டும் அப்பாவிடமிருந்து பெற்றிருந்தாள் சரண்யா. அழகான மூக்கும் அடர்ந்த மீசைக்கடியில் புன்சிரிப்பு நெளிய அமைந்திருக்கும் உதடுகளும்தான் நந்தகோபாலின் கவர்ச்சியை மேலும் கூட்டிக் காட்டும்.

அப்பா அவளுக்கு ரொம்ப சீக்கிரம் தான் கல்யாணம் பண்ணி விட்டார். பதின்மூன்று வயதில் பெரியவளானதும் வரன் பார்க்கத் தொடங்கி, பதினைந்தில் அவள் கால் வைத்த போது இருபத்தி ஐந்து வயது நந்தகோபாலை அவளுக்குப் புருஷனாக்கி விட்டார். பதினாறாம் வயதில் சரண்யாவைப் பெற்றெடுத்தாள். வாழ்வின் நெளிவு சுளிவுகள், இன்ப துன்பங்கள் எதையும் உணரும் பக்குவம் வருவதற்குள் ஒரு குழந்தையைச் சுமப்பது மிகவும் கொடூரம் என்றால் அதைத்தான் அனுபவித்தாள் அவள். நந்தகோபாலுக்கோ அவள் கர்ப்பமானதே பிடிக்கவில்லை. அதுவுமின்றி சடங்கு சம்பிரதாயம் என்ற போர்வையால் இருவருக்கும் இடையில் பெரியவர்கள் போட்ட






இன்லண்ட் லெட்டர் எழுதுவதற்கு முன்பாக நன்றாக மடித்துவிட்டு எழுதினால் கிழிக்கும் போது எழுத்துக்கள் மறைவதையும் தவிர்க்கலாம். நன்றாகக் கிழிக்கவும் முடியும்.

- பானு சுரேஷ்



திரை அவன் எரிச்சலைக் கிளறி விட்டது. வாழ்வின் சுகங்களை முழுவதும் அனுபவிப்பதற்குள் சம்சார சாகரத்தில் முழுவதும் அமிழ்ந்து தோளுக்கு மேல் பொறுப்புக்களைச் சுமந்திக் கொள்வதில் அவனுக்கு உடன்பாடில்லை.

திருமணமான ஒரு ஆண்டுக்குள் ஆடி பிறந்து விட்டதும் ஒரு மாசம், மசக்கை பிறந்தகம் என்று ஒரு மாதம் அதன் பிறகு அவ்வப்போது உடம்பு சரியில்லை என்றால் அழைத்துப் போய் விடுவார்கள். பிறகு எட்டாம் மாதம் சீமந்தம் முடிந்ததும் பிறந்தகம் சென்றவளை குழந்தை பிறந்த ஐந்தாம் மாதம்தான் அவனிடத்தில் கொண்டு விட ஏற்பாடு செய்தனர். வருடத்தில் முக்கால்வாசி நாட்களை பிறந்தகத்திலேயே அவள் கழித்து விட்ட எரிச்சலில் இருந்தவன் திடுதிப்பென்று ஒருநாள் வேட்டகம் வந்தான். வந்த இடத்தில் கொஞ்சமும் தயங்காமல் பத்மாவின் தாயிடம், ''குழந்தை இங்கேயே இருக்கட்டும். பத்மா ரொம்ப சின்னவ. ஒரு குழந்தையை வளர்க்கற அளவுக்கு அவளுக்குப் பக்குவம் போறாது. ரெண்டு மூணு வயசு வரை கொழந்தை இங்கேயே இருக்கட்டும். அப்பப்போ வந்து பார்த்துக்கறோம்'' என்ற போது திகைத்துப் போனாள் பத்மா. பெற்றவர்கள் பதறினார்கள்.

''எவ்ளோ சின்ன வயசானா என்ன? தாய்ங்கற ஸ்தானம் வந்துட்டா, அவகிட்ட தானா பால் சுரக்கலையா? அது மாதிரி பக்குவமும் தன்னால வந்துடும். தாயையும் கொழந்தையையும் பிரிக்கறது ரொம்பப் பாவம். பத்மா வேலைக்குப் போற பொண்ணுன்னாலும் பரவால்லை. வீட்டுல இருக்கப் போறவதானே. கொழந்தையை கண்ணுங் கருத்துமா பார்த்துப்பா'' பணிவோடு நயமாக சொல்லிப் பார்த்தாள் பத்மாவின் தாய்.

நந்தகோபால் எதற்கும் மசியவில்லை. தன் எண்ணத்திலேயே பிடிவாதமாய் இருந்தான். பத்மாவோ குழந்தையை விட்டுச் செல்ல மறுத்து 'ஓ'வென்று அழுதாள்.

''உனக்கு நான் வேணுமா கொழந்தை வேணுமான்னு யோசி! அதுதான் வேணும்னா தாராளமா அதோட நீயும் இருக்கலாம்... இங்கேயே!'' என்றான் அழுத்தந்திருத்தமாய்.

பத்மா ஒருகணம் அதிர்ந்தாள். குழந்தையையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தவள், மறுநிமிடம் குழந்தையை வாரி எடுத்துக் கொண்டு அழுதபடியே உள்ளே ஓடினாள்.

நந்தகோபால் ஆத்திரத்துடன் வெளியேறினான்.

''சாப்பிடும் போது என்னம்மா யோசனை? சட்னி நல்லால்லையா?''

''நோ நோ! நல்லாருக்கே. மிஸஸ் மாத்யூஸைப் பத்தி நெனைச்சேன்.''

''என்ன விஷயமா மாத்யூஸை பார்க்கப் போறே?''

''காலேஜ்ல ஒரு அழகுப் போட்டிக்கு ஏற்பாடு பண்ணியிருக்கோம். அதுல சீஃப் கெஸ்ட்டா மாத்யூஸை கூப்பிடணும்ங்கறது ப்ரின்ஸிபாலோட எண்ணம். அது சம்பந்தமா பேசத்தான் போன் பண்ணிக் கேட்டேன். எட்டரைக்கு வரச் சொன்னா.''

''ஏம்மா பேசாம நாம்ப நம்ம ப்ரொஃபஷனை மாத்திக்கலாமா? பாங்க் ஜாப் எனக்கு அலுத்துப் போச்சு. காலேஜ் லெக்சரர்னா ஜாலியான வேலை இல்ல?''

''போடி அசடு! இக்கரைக்கு அக்கரை எப்பவும் பச்சைதான். நாழியாறது சரண் ப்ளீஸ்!''

''ஓகே ஓகே'' சரண்யா எழுந்து கையை அலம்பி துடைத்துக் கொண்டு ஹாண்ட் பாக் சகிதம் வெளியில் வந்து இரண்டு மாடி இறங்கி தனது சில்வர் ப்ளஸ்ஸை தள்ளிக் கொண்டு கேட்டுக்கு வெளியில் வந்து ஸ்டார்ட் செய்ய பத்மா பின் இருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

''ஒரு விஷயம் தெரியுமா உனக்கு?'' காற்றில் பறந்த கேசத்தைத் தள்ளியபடியே கேட்டாள் சரண்யா.

''என்ன?''

''மிஸஸ் மாத்யூஸ் ஒரு டிவோர்ஸின்னு தெரியும் இல்ல?''

"அதான் ஊருக்கே தெரியுமே."

"இப்ப அவ வேற ஒருத்தரை திருப்பி கல்யாணம் பண்ணிண்ட விஷயம் தெரியுமா?"

"அப்படியா? எப்போ?"

"நேத்திக்குத்தான்! நேத்து சாயங்காலம் சாந்தோம் சர்ச்ல ஷீ காட் மேரிட் அகேய்ன்"

"இஸ் இட்! சொல்லவேல்லியே ஒரு இன்விடேஷன் கூட..."

"குடுக்க மாட்டாம்மா. குடுக்க பயம்! என்னாந்தாலும் மனசு உறுத்தத்தானே செய்யும்."

"என்ன சொல்றே நீ?"

"அவ திரும்பவும் கல்யாணம் பண்ணிண்டிருக்கறது வேற யாரையும் இல்லை. மிஸ்டர் நந்தகோபாலைத்தான். அதாவது உன்னோட மாஜி புருஷனை!"

பின்னாலிருந்து எந்தச் சத்தமும் வராமல் போகவே லேசாய் கழுத்தைத் திருப்பிப் பார்த்தாள் சரண்யா. பத்மா உதட்டைக் கடித்தபடி எங்கோ வெறித்துக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா அப்செட் ஆயிட்ட? மாத்யூஸ் வீட்டுக்குப் போறதா வேண்டான்னா?"

"இல்ல! போகத்தான் வேணும். இது என் உத்யோக விஷயம். இதுக்கும் அதுக்கும் சம்பந்தமேயில்லை."

சரண்யா அம்மாவை நினைத்துப் பெருமைப்பட்டாள். எப்படியிருந்த அம்மா! தொட்டதற்கெல்லாம் நடுங்கிச் சாகும் பிள்ளைப்பூச்சி போன்றவளுக்கு இந்த அளவுக்கு உறுதியும் தெளிவும் வந்திருக்கிறது என்றால் காரணம் வாழ்வில் அவள் பட்ட துன்பங்கள்தான். துன்பம் பயம் போக்கியிருக்கிறது. வலி என்று வந்து விட்டால் தாங்கித்தானே தீர வேண்டும். தாங்கத் தாங்க வலி பழகி விட்டதால் ச்சே போ! என்ற மனப்பான்மை வந்திருக்கிறது. புத்தி தெரிகிற வயதில் ஒருநாள் தன் வாழ்க்கை முழுவதையும் பெண்ணிடம் சொல்லி விட்டாள் பத்மா.

கோபமாகச் சென்ற நந்தகோபாலன் பிறகு வரவேயில்லை. பத்மாவும் குழந்தையை விட்டு விட்டுச் செல்ல மனம் வராமல், அதை எடுத்துச் செல்லவும் பயந்து கொண்டு போகவேயில்லை. அப்போதுதான் நந்தகோபாலுக்கு வேறொரு பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டது. பத்மா மீது இருந்த எரிச்சல், அவன் பிடிவாதம், அவன் தனிமை எல்லாமாய் ஒன்றுசேர அந்தப் பெண்ணையே இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொள்ள முனைந்தான்.

மூன்றாம் மனிதர் மூலம் இதைக் கேள்விப்பட்ட பத்மா பதறியபடி ஓடினாள் அவனைத் தேடி.

"வராதே! உள்ளே வராதே!" கர்ஜித்தான் அவன்.


"இல்ல...! எனக்கு நீங்க.... என்னை கை விட்டுடாதீங்க!" பெரிசாய் கதறிக் கொண்டு அவன் காலடியில் விழுந்தாள்.

"ச்சீ நாயே! எழுந்திருடி! இனிமே என் மனைவி நீயில்லை! எத்தனை திமிர் இருந்தா என்னை விட கொழந்தைதான் முக்கியம்னு தூக்கிண்டு உள்ள ஓடிருப்ப! இப்ப எதுக்குடி இங்க வந்தே? இனி நீ என்ன கதறினாலும் எங்கிட்ட நெருங்கற உரிமை உனக்கில்லை. வெளில போடி... போடி வெளிலன்னா..."

பத்மா துடித்துத் துவண்டு போய்த் திரும்பினாள்.

சொன்னபடியே நந்தகோபால் கல்யாணம் பண்ணிக் கொண்டதும் மிச்சமிருந்த நம்பிக்கையும் கரைந்து விட பெரிசாய் அழுதாள். சூனியம்! எங்கும் சூனியம்! இனி என்ன செய்யப் போகிறாள் அவள்? இரவு பூராவும் தூங்காமல் தவித்தாள். என்ன பாவம் செய்து விட்டாள் என்று இப்படி தண்டித்து விட்டான் ஆண்டவன்!

"போனாப் போறான் விடும்மா! மடையன்! கையில் இருக்கற மாணிக்கத் தோட அருமை பெருமை தெரியாத குருடன். அதுக்காக நீ உடைஞ்சு போயிடாதே. பெண்ணுக்குப் புருஷன் தேவைதான். ஆனா அவன்தான் வாழ்க்கை, இல்லாட்டா எதுவுமே இல்லைங்கற மனப்பான்மை வந்துடக் கூடாது. பெண்ணை மதிக்கறவனாந்தா பரவால்லை. நந்தகோபால் மாதிரி ஆளுக்கெல்லாம் அனாவ



செலவில்லாத பேப்பர் ரோஸ்ட்

ஒரு கைப்பிடி பழைய சாதத்தை மிக்சியில் அரைத்து இட்லி மாவுடன் கலந்து தோசையாக வார்க்கவும். கல்லில் ஒட்டாமல், எண்ணெய் குடிக்காமல் அருமையான பேப்பர் ரோஸ்ட் சுலபமாக வார்க்க வரும்.

– உஷா

உலகம் முழுதும் சந்திரிகாவில் நீராடுகிறது. நீங்கள் ?



அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்சு, ஐக்கிய அரபு எமிரேட்டுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் போன்ற தரம் வலியுறுத்தும் மார்க்கெட்டுகளில் ஒரு அபிமான ஆயுர்வேதிக் சோப்பாக சந்தேகத்துக்கு இடமின்றி சந்திரிகா தன் இடத்தை நிலைநாட்டியுள்ளது.

தொடர்ந்து 11 வருடங்களாக ஏற்றுமதிக்கான பெருமைக்குரிய 'கெமக்ஸில் அவார்டு' வென்று வருவதன் மூலம் சந்திரிகா அரசு அங்கீகாரம் பெற்றுள்ளது.



சந்திரிகாவின் ஸ்தாபகர் ஸ்ரீ கேசவன் வைத்தியர் ஏற்றுமதிக்கான 'கெமக்ஸில் அவார்டைப்' பெறுகிறார்.

அயல்நாடுகளில் அனைவரும் விரும்பும் சந்திரிகாவில் நிறைந்துள்ள இயற்கை வளங்களான தேங்காய், ஹைறட்னோ கார்ப்பஸ், எலுமிச்சை தோல், ஆரஞ்சு, சந்தனம் இவற்றின் எண்ணெயே உங்கள் சோப்பிலும் உள்ளது.

CHANDRIKA
AYURVEDIC SOAP

MAA COMMUNICATIONS 2209-92 TAM

காப்பர் பாட்டம் பாத்திரம் மங்கி விட்டதா? சிறிது உப்பையும் வினிகரையும் பாத்திரத்தின் மேல் பூசி துணியால் அழுத்தத் தேய்த்தால் நன்றாகப் பாலிஷ் ஏறி புதுப் பாத்திரம் போல் மின்னும்.

- உஷா



சிய மரியாதை யாரும் குடுக்கக் கூடாது பெண்டாட்டி உள்பட! எப்பேர்ப்பட்ட துன்பங்கள் வந்தாலும் எதிர்நோக்கி அதை ஜெயிக்க முன்னாடி போறவதான் புதுமைப் பெண்! இனியும் நீ பயந்தாங்கொள்ளியா இடிஞ்சு போய் உக்கார்ந்திருந்தா எப்படி? உன் பொண்ணை நல்லபடியா வளர்க்க வேண்டாமா? நா பாவி! நல்லா படிச்சுட்டிருந்த உன்னை படிப்பை நிறுத்தி அவசர அவசரமா கல்யாணம் பண்ணி வைச்சேன். என் தப்புதான் எல்லாம். இப்பவும் குடி முழுகிடலை. நீ மறுபடியும் படி பத்மா. நிறைய படி. உன் இஷ்டம் போல் படி. அவனுக்கு முன்னால தலை நிமிர்ந்து வாழ்ந்து காட்டு''- அப்பா ஆவேசமாய் அறிவுரை சொல்லச் சொல்ல பத்மா கொஞ்சம் கொஞ்சமாய் தெளிந்தாள்.

விட்டுப் போயிருந்த படிப்பைத் தொடர்ந்தாள். சரண்யாவுக்கு ஒன்பது வயசு பூர்த்தியான போது பத்மா இரசாயனத்தில் டாக்டர் பட்டம் வாங்கியிருந்தாள். அவள் படித்த அதே கல்லூரியிலேயே லெக்சரராக சேர்ந்து இன்று புரொஃபசராக பதவி உயர்வு பெற்றிருக்கிறாள். வேலையில் சேர்ந்ததும் அப்பா படத்திற்கு முன் உட்கார்ந்து அழுதாள். அவர் மட்டும் சாதாரண அப்பாவாக இருந்திருந்தால் இன்று அவள் நிலைமை எப்படியிருந்திருக்குமோ? நல்ல காலம் அப்பா அவள் பாதையை திசை மாற்றி விட்டார். நந்தகோபால்தான் எல்லாம் என்ற உணர்வு போயே போய் விட்டது. கொஞ்ச காலம் அவள் வாழ்வில் வந்து போன ஒரு நாடக பாத்திரமாக மட்டுமே இப்போது நினைக்கிறாள்.

தன்னைப் போலவே அதைரியசாலியாய், கோழையாய் பெண்ணையும் வளர்த்து விடக் கூடாது என்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தாள் பத்மா.

எட்டு வயதில் அழகாய் சைக்கிள் ஓட்டினாள் சரண்யா. ஆண் பெண் வித்யாசமின்றி அனைவரிடமும் கலகலப்பாய், கட்டுப்பாட்டோடு பேசி அனைவரையும் கவர்ந்தாள். தகப்பனைப் பற்றி அவள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று சமயம் கிடைத்தபோதெல்லாம் நந்தகோபாலை பற்றிக் கூறினாள்.

சரண்யாவுக்குப் பதினேழு வயது நடக்கும் போது ஒருநாள் எதேச்சையாக நந்தகோபாலை கடற்கரையில் சந்தித்தார்கள். நந்தகோபால் முதலில் வெறுப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டாலும் பத்மாவின் அருகில் துருதுருவென்று கொள்ளை அழகோடு நிற்கும் சரண்யாவைக் கண்டு தானாய் அவன் கால்கள் அவர்கள் அருகில் நிற்க சரண்யாவையே உற்றுப் பார்த்தான்.

முதலில் அவனைக் கண்டு திகைத்துப் போனாலும் பின் சுதாரித்துக் கொண்ட பத்மா சிநேகமாய் சிரித்தாள். விருப்பு வெறுப்பு எதுவுமற்ற கண்களால் அவனை நேருக்கு நேர் நோக்கினாள். முன்பை விட கருத்து இளைத்திருந்தான் நந்தகோபால். பார்வையில் கூட ஏதோ விரக்தியும் வெறுப்பும் படர்ந்திருந்தன.

''இவள் சரண்யா! என் பொண்ணு'' என்று அவனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

அவன் துணுக்குற்றுப் போய் பத்மாவை ஏறிட்டான். ''என் பொண்ணு'' என்ன பெருமையோடு எனக்கே அறிமுகப் படுத்தி வைக்கிறாய் என்பது போல் பார்த்தான்.

பத்மா நாக்கைக் கடித்துக் கொண்டாள். பதினேழு வருஷமாக எல்லாரிடமும் அவளை அப்படியே அறிமுகப் படுத்திப் பழக்கப்பட்ட நாக்கு தன் வேலையை ஒழுங்காகத்தான் செய்தது. அறிமுகப் படுத்தப்பட்ட நபர்தான் வித்யாசமானவர் என்றால் என்ன செய்ய முடியும்?

''சரண் இதான் உங்கப்.... சாரி! மிஸ்டர் நந்தகோபால்'' என்று சரண்யாவிடம் கூறினாள்.

சரண்யாவின் விழிகளில் ஆச்சர்யம். கல்யாண போட்டோவில் அவள் பார்த்திருந்த நந்தகோபால் சுத்தமாக மாறியிருந்தான். அவளுக்கு அம்மா சொல்லும் வரை புரியத்தான் இல்லை.

''ஓ! க்ளாட் டு மீட் யூ மிஸ்டர் நந்தகோபால்!'' என்று சகஜமாய் அவன் கையைப் பிடித்து அவள் குலுக்கிய போது அதிர்ந்து போனான் அவன்.


''நீங்க ஒருநாள் எங்க வீட்டுக்கு வரணும். ஒரு ஸ்பெஷல் கெஸ்ட்டா! ஓகே?'' என்ற பெண்ணைப் பார்த்து மேலும் நந்தகோபால் பிரமித்துப் போனான்.

(தொடரும்)

தனி வாழ்க்கை வாழும்

குறைபட்ட வாழ்க்கை முன்னேற்ற மில்லை. 'விவாகரத்து' என்பது முன் னேற்றமில்லை. ஆனால் தவிர்க்க முடியாத படி நேர்ந்து விட்ட தனி வாழ்க்கையின் வெற்றி நிச்சயமாக பெண்ணினத்தின் முன் னேற்றம்தான். பெண்ணுக்குத் தனி வாழ்க்கை இல்லவே இல்லை என்ற நிலை யிலிருந்து வளர்ந்து பெண்ணும் ஒரு கௌ ரவமான தொழில் நடத்தி தன் பெற்றோ ரையோ தன் குழந்தையையோ காப்பாற்றத் தனி வாழ்க்கை வாழ்வது நிச்சயமான முன் னேற்றம்தான்.

எல்லாவற்றையும் விட்டு இந்தப் பிரச் னையை விவரித்து எழுத முற்பட்டதற்குக்



காரணம் இருக்கிறது. தன் காலில் தான் நின்று வாழும் பெண்ணைக் குன்ற வைக்க வும், அதைரியப்படுத்தவும் ஒரு முயற்சி

நடக்கிறது சமுதாயத்தில். 'விவாகரத்து' பெற்ற பெண்கள் சலித்து தம் தவறான முடி வுக்கு வருந்துவதாகக் கடிதங்கள் வருகின் றன பத்திரிகைகளில்.

நியாயமான காரணங்களுக்காகக் கண வனைப் பிரிந்த நாயகிகள் பெண், பைய னின் கல்யாண நேரத்தில் 'தகப்பன் வேண் டும்' என்று மாறிக் கணவனைத் தேடிப் போவதாக சினிமாக் காட்சிகள் வருகின் றன.

பெற்ற குழந்தைகள் தாயாரை விமர் சிப்பதாக சீரியல்கள் வருகின்றன.

இவையெல்லாம் மீண்டும் சிறைக் குள் அடைபட வைத்துப் பெண்ணைத் துன் புறுத்தும் முயற்சிகள்.

திருமணமில்லாத முதிர்கன்னி வாழ் வையோ, விவாகரத்தையோ சரி, தப்பு என்று சொல்ல நாம் யார்? அவரவர் வலி அவரவர்க்குத்தான் தெரியும். தவிர்க்க முடியாமல் வந்து சேர்ந்து விட்ட பிறகு ஏன் அவர் களைக் குதறுகிறீர்கள்?

''உனக்கே தெரிகிறதா நீ செய்தது தப்பென்று?''

''உன் பிள்ளை ஒத்துக் கொண்டானா நீ செய்ததை?''

''இப்ப யார் வருவான் உன்னை ஏனென்று கேட்க?'' என்று குத்தி வதைக் காதீர்கள். அவர்களை வாக்குமூலம் கொடுக்க வைத்துப் படிக்கிற இளம் தலை முறையினர் மனதிலும் 'எப்படிக் கஷ்டம் வந்தாலும் புருஷனானவனுடன் அனுப வித்தே தீர வேண்டும்' என்ற பாடத்தைப் புகட்டி வைக்காதீர்கள்.

முதலில் 'விவாகரத்து' கேஸ்களைப் பார்ப்போம். விவாகரத்து இன்றோ நேற்றோ வந்த புதிய விவகாரம் இல்லை.

பல நூற்றாண்டுகளாக நடந்து வருவதுதான். அப்போது 'தள்ளி வைப்பது' என்பார்கள்.

உடம்பில் எங்கேயோ வெள்ளைப் புள்ளி இருந்தது என்று தள்ளி வைத்திருக்கிறார்கள். சாதுவான பெண்ணை அசடு, பைத்தியம் என்று முத்திரை குத்தி தள்ளி வைத்தார்கள். எட்டாம் மாதத்தில் முழுக் குழந்தை பிறந்தது என்பதற்காக அநியாயமாக விடுத்திருக்கிறார்கள். சீர் கொண்டு வரவில்லை, சம்பந்தி மதிக்கவில்லை, மருமகள் ராசியில்லை இப்படி எத்தனையோ காரணங்கள். ராஜாஜி எழுதிய கதையில் அடிக்கடி ஜுரம் வந்து கை வீங்குகிறது என்று பெண்



பெண்கள்

ணைத் தள்ளி வைப்பார்கள். அப்படி விலக்கப்பட்ட பெண்கள் பெரிய கூட்டுக் குடும்பங்களில் ஒட்டிக் கொண்டு குழந்தை குட்டி, சமையல், பெரும்படி வேலைகளில் ஈடுபட்டுக் காலம் தள்ளினார்கள். அவர்களிலும் சில பெண்கள், தாம் இப்படி அண்ணன் தம்பி வீடுகளில் உரிமையின்றி இருக்கிறோமே என்ற பாதுகாப்பற்ற உணர்ச்சி காரணமாகக் கொடுமைக்கார நாத்தனார்களாகவும் வன்மமுள்ள அத்தைகளாகவும் மாறித் தம் வக்கிரத்தையே கேடயமாக்கி வாழ்க்கையைத் தள்ளினார்கள்.





வாயில் புண் இருப்பவர்கள் கொய்யா இலையை மென்று துப்பினால் போதும். சட்டென்று குணமாகும்.

– கௌரி

இன்றோ நிலைமை வேறு! குறைப்பட்ட பெண்கள் ஒண்டி வாழ எந்த 'நார்மல்' குடும்பமும் இடம்கொடுப்பதில்லை. இருதரப்பிலும் சகிப்புத் தன்மை இல்லை. பாதிக்கப்பட்ட பெண்களும் 'ஏன் அண்ணன் தம்பி வீட்டில் இடிசோறு தின்று வாழ வேண்டும்' என்று நினைக்கிறார்கள். நார்மலான நிறைந்த வாழ்க்கை வாழும் அந்த அண்ணன் தம்பிகளும் 'அதிகப்படி' நபரை வீட்டில் சேர்த்துக் கொண்டு வீட்டு அங்கத்தினர் என்ற சம அந்தஸ்து கொடுத்து அதனால் வரக்கூடிய எமோஷனல் பிரச்னைகளுக்கு வழிவைக்க விரும்புவதில்லை. 'ஏதோ நம்மால் ஆனதைக் கொடுத்து தூரத்தில் வைக்கலாம்' என்றே நினைக்கிறார்கள்.

விளைவு... கோழிக் குடும்பங்கள். அதாவது பெண்களே நடத்தும் குடும்பங்கள். தாயும், மகளும், தாயும் மகளும், சகோதரிகள் சேர்ந்து, சிநேகிதிகள் சேர்ந்து இப்படி. இதில் சிக்கிக் கொள்ளும் பச்சை மண் எப்படி வளரும்? எப்படிச் சிந்திக்கும்? இதை முன்கூட்டிச் சொல்ல முடியாது.

பெண்கள் யாரையும் அண்டி வாழாமல் தனித்து கௌரவமாக வாழ்வது உயர்த்திதான். குழந்தைகளையும் மனசளவில் படிப்படியாக மேலேற்ற வேண்டும்.

அடி அடியாக நிஜம் பேசி அன்பின் பாஷையிலே பெண் பிள்ளைகளுக்கு நடந்ததை தெரிவிக்க வேண்டும். அதில் நியாயம் இருப்பதான முடிவை அவர்கள் மேல் திணிக்கக் கூடாது. அவர்கள் எப்படி எடுத்துக் கொண்டாலும் துவண்டு போகக் கூடாது.

இதில் சுயபச்சாத்தாபம் ஏன்? விவாகரத்துக்காக இப்படி வருத்தப்படுகிறேன் அப்படி வருத்தப்படுகிறேன் என்று பத்திரிகையில் எழுதும் இளம்பெண்களை 'விவாகரத்து' என்கிற நிலைக்குப் பயப்படும் அளவுக்குக் கொண்டு வர வேண்டுமா?

விவாகரத்துக்குப் பயப்படும் நிலை பெண்ணுக்கு இருப்பது புரிந்து விட்டால் ஆணாதிக்கமும் அவனுடைய கொடுமைகளும் இன்னும் அதிகமாகி விடாதா? பெண்ணடிமைத் துயரங்கள் வளராதா?

'விவாகரத்து' என்பதை ரொம்பவும் யோசித்துச் செய்ய வேண்டும் பெண்கள் என்பதில் இரண்டாவது அபிப்ராயம் யாருக்கும் இருக்க முடியாது. 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று பெண்கள் முடிவு செய்யக் கூடாது.

இந்தச் சொந்த விஷயத்தில், தன்னுடைய வாழ்க்கை மட்டுமில்லாமல் (ஒரு தாய்க்குத்) தன் தலைமுறையின் வருங்காலமே சம்பந்தப்பட்டிருப்பதால் மூன்றாவது நபர் தலையீட்டை அனுமதிக்கக் கூடாது.

சம்பந்தப்பட்ட பெண்ணின் பெற்றோர் வயிற்றெரிச்சல் காரணமாக வேகமான 'விவாகரத்து' முடிவுக்குப் பெண்ணைத் தூண்டலாம். சில பெற்றோர் 'பிரஸ்டீஜ்' காரணமாகவும் பெண்ணின் வாழ்வைக் காவு கொடுப்பதுண்டு.

அண்ணன் தம்பி அக்காமார் சுயலாபத்துக்காகச் சகோதரியை இந்தப் பள்ளத்தில் தள்ளி விடக்கூடும்.

எனவே சம்பந்தப்பட்ட பெண் சொந்த முடிவு எடுக்க வேண்டும். மனம் பலவாறாகக் குழம்பியிருக்கும் என்பதால் ஒரு நல்ல மனோதத்துவ நிபுணர் உதவியை நாட வேண்டும். சம்பவம் சம்பவமாக விவாகரத்து நாடுவதற்கான காரணங்களைக் கொடுமைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். ஒரு வருட காலம் 10, 12 'ஸிட்டிங்'குகளில் பிரச்னையை விவாதிக்கும் போதே 'விவாகரத்து' தவிர்ந்து போகும் மனநிலையோ சூழ்நிலையோ ஏற்படலாம். அல்லது உறுதியான எதிர்மறை முடிவும் நேரலாம்.

எல்லாம் மீறி நேர்ந்து விட்ட விவாகரத்துக்கோ பின் நீண்ட தனி வாழ்க்கைக்கோ - வரும் நாளில் வருந்துவதோ சுயபச்சாத்தாபம் கொள்வதோ அபத்தம்.

தான் எப்போதோ செய்த முடிவுக்கு மற்றவர் அங்கீகாரம் தேடுவதும் பிள்ளை பெண்ணிடம் அனுதாபம் பெற முயற்சிப்பதும் வீண். பெண்ணும் பிள்ளையும் பாதிக்கப்பட்ட பெண்ணைப் பொறுத்த வரை அக்கம் பக்கத்தினர் போலவே சமூகத்தின் இரு பிரஜைகள். பாதிக்கப்படாத அவர்களுக்குக் காலம் கடந்த ஒரு துயரை

தாயின் சோகத்தைப் புரிந்து கொள்ள வாய்ப்பு கிடையாது.

அதே சமயம் தந்தை என்பவரைத் தனக்குக் கிடைக்காமல் செய்தவள் இவள் தானே என்ற கோபம் இருப்பது நியாயம். முற்றிலும் இயற்கை. இவள் இறந்தது இவள் விதியால் நான் இழந்தது. இவளால் அல்லவா?' என்ற சீற்றம் வந்தால் அது தவறில்லை. அத்தகைய நிலையில் ஒற்றை யாய்ப் பொறுப்புக்களைத் தாங்கும் அன்னை 'எவ்வளவு பாடுபட்டு உனக்குச் செய்கிறேன்' என்று சொல்லிக் காட்டினால் பையன் பெண்ணுக்குப் பரிதாபம் வராது. 'அம்மா பாவம்' என்ற பக்குவம் வராது.

'யார் இப்படிக் கஷ்டப்படச் சொன்னது, நானா?' என்ற எதிர்ப் பேச்சுதான் வரும்.

குறிப்பிடத்தக்க இன்னொரு அம்சம் சம்பந்தப்பட்ட பெண்களைப் பெற்றோரும் உற்றோரும் கைவிட்டு விடுவது. (அதனால் பெண் பிள்ளைகள் தீவிலேயே வளர வேண்டி வரும்) 'ஏதோ ஊரில் இல்லாதது நடந்ததைப் போல் புருஷனை விரட்டி விட்டாள்' என்று ஊர் பேசும்.

இங்கு இன்னொன்றும் சொல்ல வேண்டியிருக்கிறது. எது அதிகபட்சக் கொடுமை என்றோ எந்தப் பெரிய கொடுமைக்காக 'விவாகரத்து' பெறுவது நியாயம் என்றோ வரையறுத்துச் சொல்ல யாருக்கும் அதிகாரமில்லை. சட்டம் ஏதோ சில கட்டுதிட்டங்கள் வைத்திருக்கலாம். மனிதத் துயரங்களும் வாழ்வின் வக்கிரங்களும் அவற்றுக்குள் அடங்கித் தீர வேண்டிய கட்டாயம் எதுவுமில்லை.

சிகரெட்டால் சுட்டான், பலதாரம் வைத்துக் கொண்டான், கொல்ல முயற்சித்தான், அவளறியாமல் கர்ப்பம் கலைத்தான், கர்ப்பப் பையை எடுக்க வைத்தான் (சினிமாவில் வந்தது) குழந்தைகளை துர் உபயோகம் செய்தான் இப்படியெல்லாம் புருஷன் கொடுமைகள் பற்றிய செய்திகள் உண்டு.

கொடுமையில் 'இதுதான் கொடுமை மீதியெல்லாம் சாதா' என்றெல்லாம் சொல்ல ஒன்றுமில்லை.

பாதிக்கப்பட்டவருக்குத்தான் தெரியும் எது கொடுமை எது கொடுமையில்லை என்று. அந்தந்த சூழ்நிலையில் தெளிவாக சிந்தித்து, தேர்ந்த மனோதத்துவ நிபுணரின் ஆலோசனைகளையும் கேட்டுப் பொறுத்து விவாகரத்து பெற வேண்டும்.

அந்த நேரத்தில் நாலு வயதான பையன் 24 வயதில் என்ன சொல்வான்? அதைத் தாங்கும் சக்தி தனக்கிருக்குமா, என்ன சொன்னாலும் அதை விட்டுத் தள்ளும் திறமை தனக்குண்டா என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் தாயானபின் ஒரு பெண்ணின் வாழ்க்கை சொந்த வாழ்க்கையாய் இல்லாமல் ஒரு தலைமுறையின் வாழ்க்கை ஆகி விடுகிறது.

பின்நிகழ்வுகளைத் தாங்க முடியாத பெண் உணர்ச்சிவசப்பட்டு புரட்சிகரமான முடிவுக்கு வரக் கூடாது. ஒரு வெஜிடபிள் போல உயிரில்லாத வாழ்க்கையை வாழ்ந்து மீள்வது மேல்.

தன் தனித்துவத்தை மீட்டுக் கொண்டு அநியாயத்துக்கு இடம் கொடாமல் 'விவாகரத்து' முடிவெடுத்தவள் பின்னால் துவண்டு 'நான் செய்தது தப்பு' என்று பின்னால் போவது தவறு. முடக்கப்பட்ட நிலைக்குத் தாவுவது முழுத் தோல்வி.

இதே வார்த்தைதான் கல்யாணம் செய்து கொள்ளாத பெண்களுக்கும்.


'வேண்டாம்' என்று முதலில் எடுத்த முடிவுக்கோ அல்லது வேறு வழியின்றி 'வேண்டாம்' என்ற முடிவுக்குத் தள்ளப் பட்டதற்காகவோ ஒரு நாளும் வருத்தப் படக்கூடாது. சுயமாய் வாழும் வாழ்க்கை முன்னேற்றத்தின் சிகரம். அதற்கான சுய பச்சாத்தாபம் சுத்தமான 'பல்டி'. கன்னிப் பெண்கள் குழந்தைகளைச் சுவீகாரமெடுத்து வளர்ப்பது அதிகரித்திருக்கிறது. அந்தக் குழந்தைகள் கன்னித் தாய்களின் பழைய முடிவுக்காக வருத்தப்பட்டாலோ கோபப்பட்டாலோ கண்டுகொள்ள வேண்டாம். துவண்டு போக வேண்டாம்.

இப்படி ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட தனி வாழ்க்கைக்குப் பின் சுயபச்சாத்தாபம் தேவை இல்லாதது.

– மாலதி

ஐஸ் டிரேயில் தண்ணீருக்குப் பதிலாக ஜூஸை ஃப்ரீஸ் செய்து இந்த ஃப்ரூட் ஐஸ்களை ஜூஸில் போட்டுப் பரிமாறவும். அட்டகாசமாக இருக்கும். லைம் ஜூஸை அழகான ஆரஞ்சு ஜூஸுடன் பரிமாறினால் அது நாவுக்கும் கண்ணுக்கும் விருந்தாக இருக்கும்.

- உஷா



ராயல் எமரால்டு



இன்றைய பெண்மணிகளுக்காக

இந்தியாவின் நெ. 1 தையல் மெஷின் உஷா வழங்கிடும் மாசமருவற்ற ஓர் ஆபரணம். கவர்ச்சியும் செயல்திறனும் கலந்தோர் அழகுப்பெட்டகம். இக்காலப் பெண்களின் புதுப்புது ரசனைக்கு ஏற்றதாய், அவர்களின் பல்வகைத் திறமைகளை வெளிப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டது. • தங்கு தடையற்ற சுலபமான இயக்கம் • கவர்ச்சியான வடிவமைப்பு • நீடித்துழைக்கும் செயல்திறன் • 5 ஆண்டு உத்தரவாதம். • விற்பனைக்குப் பின் சர்வீஸ் செய்ய பரவலான அமைப்பு. உஷா வழங்கிடும் 'ராயல் எமரால்டு' உஷா, இந்தியாவின் பரவலாக ஏற்றுமதியாகும் சர்வதேசத் தரமுடைய தையல் மெஷின். இந்தியாவில் திருப்தியுற்ற 52 லட்சம்* வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்றது. அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பெல்ஜியம் போன்ற 60க்கும் அதிகமான நாடுகளில் மேலும் பலரால் பாராட்டப்படுவது.

குறிப்பிட்ட சில உஷா மாடல்களில் மட்டுமே உள்ள சில சிறப்பு அம்சங்கள்: • விசேஷ ஸ்பிரிங் பிரெஸ் பிரெஷர் அட்ஜஸ்ட்டர் • 3 பொஸிஷன் ஃபேப்ரிக் ஸெலக்டர். • ஓப்பன் டைப் ஷட்டில் ரேஸ். • உறுதியான ஸ்டீலினால் தயாரிக்கப்பட்ட முக்கிய பாகங்கள்.

ROYAL EMERALD

The Gem Collection

உஷா

ULKA 20319 TAM

* நேஷனல் கவுன்சில் ஆஃப் அப்ளைடு எகனாமிக் ரிசர்ச் அங்கீகரித்ததன் அடிப்படையில்.

இந்தியாவின் நெ.1 தையல் மெஷின்

கிடைக்கும் இதர மாடல்கள் • கோல்டன் பேர்ள் (கிரீம் கலரில்) • ஸ்டார் சபையர் (நீல வண்ணத்தில்)


அந்த நாட்களின்
தொல்லை
அறவே உங்களுக்கு
இல்லை
பட்டிலும் மெல்லிய முதன்மைரக
விஸ்கோஸ் இழைகள் முழுமையான சுகம்
உயர்ரகப் பருத்தியை அடுக்காக,
அமைத்த நிலை அதிகமாக உறிஞ்சும்
உறிஞ்சும் தன்மையற்ற நீலநிற
பருத்தி இழைகளினால் மூடிய
அடிப்பாகம் உள்ளாடைகள்
கறைபடாமல் பாதுகாக்கும்
நமது சீதோஷ்ண நிலைக்குத்
தகுந்தாற்போல் அமைத்திருப்பதால்
100% திருப்தியை
அளிக்கிறது.
NEW
helena
ஹெலனா உங்களின் துணை!
இல்லை இதற்கு இணை!
இந்தியாவிலேயே
முதன்முதலாக
ISI
பெற்றது.
helena
சர்காட் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்
மில்: சூரியநாராயணபுரம், ரேணிகுண்டா (A.P.)
தலைமை அலுவலகம்: 23, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 007. போன்: 6421982/6422004
Carrying a helena is
carrying confidence
ADSERVE

மகள் பருவமடையும் நேரம்

"மங்கையராகப் பிறந்திடவே மாதவம் செய்திடல் வேண்டும்!" உண்மை தான். பெண்ணாய் பிறப்பதே நாம் செய்த தவம்தான் என்ற உண்மை எல்லாத் தாய் மார்களுக்கும் விளங்கினால் இன்று லதா வின் மகள் இந்த மனஸ்நிதியில் இருந் திருக்க மாட்டாள். ஆம்! லதாவின் பதின் மூன்று வயது மகள் இன்று பள்ளியிலிருந்து வெகு சீக்கிரம் வீடு வந்து சேர்ந்தாள். வந்ததிலிருந்து அழுது அழுது கண்ணும் முகமும் வீங்கி முகத்தில் ஏகப்பட்ட குற்ற வுணர்வை சுமந்து கொண்டு ஒரு மூலை யில் முடங்கியிருக்கிறாள். விவரம் அறிந்த அக்கம் பக்கத்துப் பெண்கள் எல்லோரும் கவலையுடன் விரைந்தோம்.

"நான் பயந்துண்டே இருந்தா மாதிரி ஆயிடுத்து. போறுமே! பன்னிரெண்டு வயசுலேயே பெரியவளாகி நான் பட்ட அவஸ்தையெல்லாம் நினைக்க நினைக்க, 'இந்தப் பொண்ணாவது கொஞ்ச நாளைக்கு உபத்திரவம் இல்லாம இருக் கட்டும் பகவானே'ன்னு வேண்டிண்டே இருந்தேன். இப்ப, பதிமூணு முடியறத் துக்குள்ள 'டக்'குனு உக்காந்துடுத்து. தலை யெழுத்து!" என்று ஏகப்பட்ட வருத்தத் துடன் முறையிட்டாள் லதா.

லதாவிற்கு முன்பே ஒரு வழக்கம் உண்டு. பெரியவளாவதிலிருந்து பெண்கள் படிப்படியாகப் படும் உடல் உபாதை களைப் பற்றிக் குழந்தைகளின் முன்னேயே விலாவாரியாக வர்ணித்து, "போறுமே, இந்தப் பெண் ஜன்மம்," என்று என்றென் றும் அங்கலாய்த்தவாறே இருப்பாள். இத னால் பெண் குழந்தைகளின் மனதிலும் இதே எண்ணம் வேரூன்றத் தொடங்கும் என்பதும், 'மாபாவம் பண்ணியே நாம் பெண்ணாய் பிறந்திருக்கிறோம்', என்றும் எண்ணத் தோன்றும் என்பதும் ஏனோ லதாவிற்குத் தோன்றியதே இல்லை.

இறைவன் பெண்ணை உத்தமமான காரியங்களுக்காகப் படைத்திருக்கிறான்.





ஒவ்வொரு தாயும் தன் மகளுக்கு இந்த ரீதி யில் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினால் பெண் குழந்தைகள் மெல்ல மெல்ல தான்



புளித்த தோசை மாவில் சுக்குப் பொடி கலந்து ஊத்தப்பம் செய்தால் எளிதில் ஜீரணமாகும். - பார்வதி

எந்த விஷயத்திலும் ஆணுக்குத் தாழ்ந்தவள் அல்ல என்ற மனப்பான்மையை அடைவார்கள். பெண் குழந்தைகள் பத்து அல்லது பதினொரு வயதுக்கு வரும் சமயத்திலேயே மெல்ல மெல்ல உடற்கூறு பற்றிய விவரங்களை விளையாட்டாகச் சொல்லிக் கொடுக்கத் தொடங்க வேண்டும்.

கனிதாவின் மகள் விஜி ஒருநாள் அவளிடம் வந்து, ''அம்மா, அம்மா... நான் எப்ப 'ப்ரா' போட ஆரம்பிப்பேன்?'' என்று கேட்டாள்.

பத்து வயதே நிரம்பிய மகளின் கேள்வியில் ஒரு நிமிடம் திகைத்தாலும் உடனே சமாளித்தவாறு அன்புடன் மகளை இழுத்து அணைத்து, ''விஜிக் கண்ணா, இப்ப உனக்கு பத்து வயசுதான் ஆகுது. அதோட, நீ இன்னும் 'பெரிய பெண்ணா' வேற ஆகலை. பெரியவளான அப்புறம் நீயும் அம்மா மாதிரி 'ப்ரா' போட்டுக்கத் தொடங்கலாம்,'' என்றாள்.

'' 'பெரிய பெண்'ன்னா? எப்படித் தெரியும்... நான் பெரிய பெண்ணாயிட்டேன்னு?'' என்ற மகளிடம், பெண்களின் உடற்கூற்றைப் பற்றியும் மாதவிடாய் பற்றியும் விவரமாகக் கூறி நிதானமாகப் புரிய வைத்தாள் கனிதா. மேலும் அப்படி ஏதாவது பள்ளியில் ஆக நேர்ந்தால் ஆசிரியையிடம் சொல்லி விட்டுப் பதறாமல் வீடு வந்து சேர வேண்டும் என்றும் சொல்லிக் கொடுத்தாள். மேலும் இந்த மாதிரி மாற்றங்கள் உலகில் உள்ள அத்தனை பெண்களுக்கும் நேரும் என்பதையும், இப்படிப் பட்ட விவரங்களைப் பள்ளித் தோழிகளுடன் கலந்துரையாடுவது அவ்வளவு சரியில்லை என்பதையும் இதமாக எடுத்துரைத்தாள்.

''ஏம்மா? ஸ்கூல்ல ஏன் பேசக் கூடாது?'' என்ற மகளிடம் ஒரு சின்னச் சிரிப்புடன்,

''சில அம்மாக்கள் தன் பெண்களுக்கு இதையெல்லாம் சொல்லிக் கொடுக்க மறந்திருப்பா. அல்லது அவசியமில்லைன்னு சொல்லாம இருந்திருப்பா. அப்ப நீ இதையெல்லாம் சொன்னா ஒண்ணு, அவா நீ சொல்றதையெல்லாம் சும்மா கட்டுக்கதைன்னு நினைப்பா அல்லது இவ அம்மா இவள்கிட்டே என்னல்லாமோ வேண்டாததையெல்லாம் சொல்லியிருக்கான்னு, உன்னைக் கேலி பண்ணுவா. அதனால அவங்க அவங்களே தெரிஞ்சுக்கட்டும். நீ போய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. புரிஞ்சுதா?'' என்று இதமாகச் சொல்லிக் கொடுத்தாள். இதே போல் லதாவும் முன்னேற்பாடாகத் தன் பெண்ணிடம் சொல்லி வைத்திருந்தால் இன்று ஸீதா இப்படி அழுது கொண்டிருக்க மாட்டாள். ஸீதாவின் மனதில் தனக்கு ஏதோ சரி பண்ண முடியாத பெரிய வியாதி வந்து விட்டதாகவும், இனி தன் வாழ்வே நாசமாகி விட்டதாகவும், தன் தோழிகள் யாருக்கும் நேராத 'அசிங்கம்' தனக்கு நேர்ந்து விட்டதாகவும் எண்ணங்கள் மாறி மாறி கொந்தளிக்க, குமுறிக் குமுறி அழுது கொண்டேயிருந்தாள்.

மேலும் பெண்கள் பருவம் எய்தும் சமயத்தில் உடலில் 'ஹார்மோன்'களின் வளர்ச்சியினால் உடல் மற்றுமல்ல, மனநிலையிலும் மாற்றம் உண்டாகும். அந்தச் சமயத்தில் தாய்மார்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயங்கள் பல :

1. 'அடோலஸன்ஸி'ல் இருக்கும் மகளை இருபத்தி நாலு மணி நேரமும் 'இங்கே நிக்காதே, அங்கே போகாதே, இதைப் பண்ணு, அதைப் பண்ணாதே' என்று விரட்டிக் கொண்டே இருப்பது மகளின் மனதில் எரிச்சலைக் கிளப்பும்.

2. சில சமயங்களில், 'வயசுக்கு மீறி நடந்துக்காதே, குழந்தையா லட்சணமா இரு' என்றும், சில நேரங்களில், 'எருமை மாடு மாதிரி வயசாச்சு, இன்னும் பச்சைக் குழந்தை மாதிரி வழிஞ்சுண்டு இருக்கு', என்றும் திட்டக் கூடாது. இதனால் 'நான் குழந்தையா? பெரியவளா?' என்ற குழப்பம் தோன்றி மகளை தாயிடமிருந்து தூர தூர விரட்டும்.

3. எந்தவிதமான சந்தேகம் மகளின் மனதில் தலையெடுத்தாலும் தர்க்க ரீதியில் அர்த்தமும் பின்விளைவுகளையும் அழகாக எடுத்துச் சொல்லவும்.

4. மாதவிடாயின் போது வயிற்று வலியும் உடல் வலியுமாக மகள் சிரமப்பட


L.K.S.GOLDHOUSE
L.K.S.GOLDHOUSE



நேரிட்டால் கர்ப்பப் பையின் வேலைகளையும் அதில் ஏற்படும் மாற்றங்களினால் அதில் நேரும் 'காண்ட்ராக்ஷன்'கள் பற்றியும் விஞ்ஞான ரீதியில் சொல்லிக் கொடுக்க வேண்டும். இதனால் பெண் குழந்தைகள் வயிற்று வலியை ஓரளவு தாங்கும் சக்தியையும் அடைகின்றனர் என்பது 'கைனகாலஜி'யில் தேர்ச்சியடைந்த டாக்டர்களின் அபிப்பிராயம். ஏனெனில் வலியிருந்தாலும், தான் 'பெரிய மனுஷி' ஆகியிருக்கிறோம் என்ற பெருமையும், இது தன்னைத் தாயாக்கத் தயாராக்கும் முதல் படி என்ற எண்ணமுமே பெண் குழந்தைகளுக்கு இந்த வலியைத் தாங்கும் சக்தியை ஊட்டுகின்றனவாம். மிக அதிகக் கஷ்டமிருந்தால், மருந்து, மாத்திரைகள் தான் இருக்கவே இருக்கின்றனவே!

மேலும், வயதிற்கு வந்த பெண்ணுக்கு பதின்மூன்று/பதினான்கு வயது நிரம்பியிருந்தால் விஞ்ஞானரீதியாக எதிர்'பால்' ஈர்ப்பு பற்றியும் எடுத்துச் சொல்லி இறைவனே உலகம் வளர்ச்சியடைய, மனித இனம் பெருக, இப்படி ஒரு சிருஷ்டி - வழி செய்திருப்பதாகவும் சொல்லிக் கொடுக்க வேண்டும். இதனால் பெண் குழந்தைகள் தவறான வழிக்குப் போகாமலும், கயவர்களின் கைகளில் சிக்காமல் தற்காப்பு செய்து கொள்ளவும் வசதியாக இருக்கும். மேலும் எந்த ஆணுடனும் அதிக நெருக்கமாகப் பழகாமல் ஓரடி தள்ளியே இருக்கச் செய்யும். இப்படிப்பட்ட தவறுகளின் பின் விளைவுகளைப் பெண்களே சுமக்க நேரிடும் அவலமும் புரிந்து விட்டால் பெண் குழந்தைகள் தவறான வழிக்குப் போவதும், ஏமாற்றப்படுவதும் ஓரளவு தடுக்கப்படலாம். மேலும், முறையாகத் தாய் ஆவது மிக மிக உன்னதமாகவும் குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான ஒரு நிகழ்ச்சியாகவும் கருதப்படும் என்பதும், வேறு தினுசாக மாறுகையில் அதே தாய்மை பாரமாக மாறும் என்பதையும் மெல்ல மெல்ல விளக்கினால் புரிந்து கொள்ளாத பெண் குழந்தையும் உண்டோ?

இப்படிச் சொல்லிக் கொடுக்காமல், ''எருமை மாடு மாதிரி வயசாயிடுத்து. சும்மா மொட்டை மாடியில நின்னுக்கிட்டு அங்கேயும் இங்கேயும் பாத்துண்டு நிக்காதே,'' என்றும் ''அந்த சுரேஷோட இவ்வளவு நாள் விளையாடினது எல்லாம் சரி. இனிமே அவனோட 'கெக்கே பிக்கே'ன்னு நிக்கறதைப் பாத்தேன்... காலை உடைச்சுடுவேன்,'' என்றும் ''நோட்ஸ் வாங்க விவேக்தான் கிடைச்சானா, வேற பெண் குழந்தைகளே உன் க்ளாஸ்லே கிடையாதா?'' என்றும் ''இதோ பாரு, நாளைக்கு உன் அத்தை பிள்ளை குமார் வர்றான். 'கெக்கே பிக்கே'ன்னு முன்ன மாதிரி மேல விழுந்து கொதறாதே,'' என்றும் நாள் முழுவதும் 'தொணதொணத்'ததின் பலன்... தேவகியின் மகள் சுதா பதினாறு வயதிலேயே சுரேஷுடன் ஓடிப் போனாள். அதன் பின்பும் தேவகி தன் தவறை உணரவில்லை. ''இவ்வளவு கவனமா, பாத்துப் பாத்துக் கண்டிப்பா வளர்த்து கூட இந்தப் பொண்ணு இப்படி ஒரு காரியத்தைப் பண்ணியிருக்கே! இன்னும் 'ஃப்ரீயா' விட்டிருந்தா எப்படியெல்லாம் மானத்தை வாங்கியிருக்குமோ? இவரோட பெரியப்பா பொண்ணு ஒண்ணு இப்படித்தான் பண்ணிடுத்து. எங்க குடும்பத்திலே இப்படிப்பட்ட குணமே கிடையாது! அந்தப் பக்கத்தைக் கொண்டுடுத்து சனியன்!'' என்று இன்றும் புலம்பிக் கொண்டு கணவன் மனதையும் கிழித்துக் குதறிக் கொண்டு இருக்கிறாள் தேவகி.

கடைசியாக, 'அடோலஸன்ஸ்'ஸில் இருக்கும் பெண் குழந்தைகளை 'இதைச் செய்யாதே', 'அதைச் செய்யாதே' என்பதை விட 'இதைச் செய்', 'அதைச் செய்' என்று அவர்களுக்குப் பிடித்த வேலைகளாகக் கொடுத்து 'பிஸி'யாக வைத்திருந்தாலே போதும்! பாதிக் குழப்பங்கள் குறையும். அதே போல் அவர்களுக்கு சங்கீதம், நாட்டியம், பெயிண்டிங் போன்ற கலைகளில் ஆர்வம் இருந்தால் அந்த ஆர்வத்தை வளர்த்து ஊக்கமளிப்பதும் மிக மிக ஆரோக்கியமான ஒரு வழியாகும்!

- பவதாரிணி

பச்சரிசியைவிட, புழுங்கலரிசியை ரவை உடைத்து, உப்புமா செய்தால் அதிக ருசியுடன் வைட்டமின் 'பி'யும் கிடைக்கும்.

- பார்வதி



சலங்கை ஒலி கேட்டேன்!

பெண் குழந்தையே வேண்டாம் என எருக்கம் பாலை விடவா, குப்புறப் போட்டு கோணி போட்டு மூடவா என யோசிக்கிறார்கள் ஒரு சமுதாயத்தினர். ஆனால் இன்னொரு சமுதாயத்திலோ ஆண் குழந்தை பிறந்தால் வீதியில் விட்டு விடுவார்களாம். பெண் குழந்தையை வளர்த்து ஆளாக்கி... வியாபாரப் பொருளாக்கினார்கள்! ஆட்டைக் கொழுக்க வைப்பது பலி விடுவதற்காகத்தானே. அப்படியாகத்தான் தேவதாசிகள் எனப்பட்ட சமூகத்தினரிடம் இத்தகைய கொடுமையான பழக்கம் இருந்திருக்கிறது. இப்போது



அந்த முறை' ஒழிக்கப்பட்டு பல்லாண்டுகள் ஆகி விட்டன. ஆனால் அவர்களிலே மிச்சமாகிப் போனவர்களின் கண்ணீர் இன்னும் உலரவேயில்லை...

''நாங்கள் நாற்பத்தியோரு பேர் கோயிலில் முத்திரை குத்தி, பொட்டு கட்டிக் கொண்டு அந்த மன்னார் கிருஷ்ணனுக்கே அடிமைகளானோம். சராய், ரவிக்கைக் கட்டி உடல் நிறைய நகைகளும், முகம்

நிறைய சிரிப்புமாக சாயங்கால மானால் கோயிலுக்குக் கிளம்பி விடுவோம். ஊர் முழுக்க எங்களை 'ஆ'வென்று வாயைத் திறந்து கொண்டு பார்ப்பார் கள்..."




மனோரஞ்சனம்மா

என அந்தக் கால கனவுகள் கண்களில் தேங்க மங்கிய பார் வையில் தட்டுத் தடுமாறுகிறார் மனோரஞ்சனம்மா. இவர் இருப்பது எட்டுக்கு எட்டு கொண்ட ஒரு குடிசை. அலு மினியப் பாத்திரங்கள் இருக் கும் ஒரே ஜன்னல் வழியாக வரும் மெல்லிய வெளிச்சம் 'அந்தக் கால அழகி'யை வருடு கிறது.

'மன்னார் போளூர்' கூஊர்ப்பேட்டை அருகே யுள்ள கிராமம். அந்தக் காலத்தில் அரசரின் ஆளுவ ருக்குக் கீழ் இருந்தது. ஊரின் நடுவில் அழகு மன் னார் கிருஷ்ணசாமி வேய்ங் குழல் ஊத சங்கு சக்கர தாரியாக அழகோ அழகு டன் நிற்கிறான். 'வேய்ங் குழல் மற்றும் சங்கு சக்கர தாரியாகக் காட்சியளிப்பது என்பது இந்த ஒரு கோயி லில்தான் என்கிறார் அர்ச்ச கர். இன்று கோயிலே இடிந்து சிதலமாகக் கிடக் கிறது. தளிகையே, கடன் வாங்கிச் செய்ய வேண்டிய நிலை.

அரங்கன் மண்டப கோலாகலங்கள்



அப்போது தாசிகள் நடனமாடிய நடன மண்ட பம் பல்வேறு கனவு களுடன் இப்போது மங்கி உறங்கிக் கிடக்கிறது. பெரிய இக் கோயிலுக்கு இவ்வூரி லுள்ள பரம்பரையாக 'பொட் டுக் கட்டும் பெண்கள்' பன் னிரண்டு வயதில் முத்திரை பதிக்கப்பட்டார்கள். இதைப் பெரிய விழாவாகக் கொண் டாடுவார்களாம். பெண்களை அலங்கரித்து ஊர்வலமாக அழைத்துப் போய் அங்கு சக்கர முத்திரையினை இரு கைகளி லும் குத்துவார்களாம். கோயி லுக்குச் சேவை செய்வதும், விழாக் காலங்களில் நடனமாடு வதும் அன்றிலிருந்து இவர் களின் வேலையாகிப் போனது.



* ராமசுப்புத்தினம்மா

ஆனால் சமூகக் கொடுமையால் இவர்கள் கேவலப்பட்டதுதான் மிச்சம். கடவுளுக்கே தாசியானவர்கள் ஆண்களுக்கு அடிமைப் பட்டார்கள்.

அப்படி வாழ்ந்தவர்களில் இன்னும் சிலர் இங்கே இருக்கிறார்கள். இவர்களால் இன்று நடக்கக் கூட முடியாத நிலை. உடல்நலம் குன்றிப் போய் விட்டது. யௌவனத்தில் இனித்தவர்கள் இன்று ஒதுக்கப்பட்ட மாங்கொட்டையாகி விட்டார்கள். ஒரு டம்ளர் நீர் கொடுக்கக் கூட நாதியில்லாத நிலை. எண்பது வயதான மனோரஞ்சனம்மா தட்டுத் தடுமாறி அலுமினிய பாத்திரத்தில் சோறு வடித்த போது எங்கே கடுகஞ்சி அவர் மேல் விழுந்து விடுமோ என்று பயமாக இருந்தது.

''ஏம்மா, உங்களுக்கு இந்தச் சமூகத்தின் மீது கோபம் வரவில்லையா? நாம வலுவா இருந்தப்ப நம்பளை எல்லோரும் பயன்படுத்தினாங்க. இப்போ தண்ணி கொடுக்கக் கூட நாதியில்லையேன்னு கோபம் வரலையா?''

நலிந்த குரலில் அமைதியாகப் பதில் வந்தது. ''யார் மேல கோபப்பட்டு என்னம்மா பிரயோஜனம்? எல்லாம் நம்ப கர்மாதான்...''

''அது சரி. ஆனா கடவுளுக்கு உங்களை அர்ப்பணித்தார்களே...''

விரக்தியாகச் சிரிக்கிறார். ''அந்தக் கடவுளுக்கே ஒரு வாய் சோறு இன்னிக்கு இல்லை. அவர்கிட்டே போய் நாங்க என்னத்தைச் சொல்றது...''

''ஆண்கள் சமூகம்...''

''எனக்கு யார் மேலும் கோபம் வரல்லை. என் பாவம் இந்தக் குலத்தில் பிறந்தேன். ஒரு பொண்ணு எனக்குப் பொறந்தது. அது கூட வளர்ந்து செத்துப் போச்சு. அது இருந்திருந்தா இன்னிக்குப் படிக்க ஒரு வாய் கஞ்சி ஊத்துவாளோ என்னவோ...'' அந்த இடுங்கிய கண்களில் கண்ணீர் வழிவதைப் பார்க்க மனம் நொந்து போகிறது.

வாழ்வின் மிக அதிகமான செல்வத்தையும், கேளிக்கைகளையும் அனுபவித்தவர்கள். அவருடைய 'அந்தக் கால நினைவுகளை ஞாபகப்படுத்திய போது முகம் மலருகிறது. கையும் காலும் நாட்டிய பாவத்தில் அசைகிறது.

''நாங்க கண்ணுக்கு மை போட்டு, மாவு பூசி, நீளமாக திருமண் இடுவோம். எங்க நடனத்தைப் பார்க்க பதினாறு கிராமங்கள்ளேர்ந்து வருவாங்க. ஒரு தடவை வெங்கடகிரிக்குப் போய் ராஜா முன்னாடி ஆடினோம். நிறைய சன்மானம் கொடுத்தார்...''

ராமகப்பரத்தினம்மா இவருக்கு நேரெதிர். ''அந்தக் காலத்தில என்ன கொடுத்தாங்க? இரண்டு உருண்டை சோறு. சம்பளம் கிடையாது. ஒரு வசதியும் செய்து தரலை. எங்களுக்குக் கொடுத்த நிலத்தையெல்லாம் யார் யாரோ எடுத்துக் கிட்டாங்க?''

''இந்தக் குலத்தில பிறந்தோமேன்னு வருத்தப்பட்டீங்களா?''

''ஏன் இல்லாம? ஏன், எங்கள்ளேயே பல பேரு கல்யாணம் பண்ணிக்கிட்டும் போனாங்க. என்னை இந்தக் கதியில விடவும்தான் இன்னிக்கு ஒரு வாய் சோறு கூட இல்லாம தவிக்கிறேன்.'' ஒரு காலத்தில் இந்தப் பெண் மிகப் பெரிய அழகியாக இருந்திருக்க வேண்டும். கூரிய மூக்கும், நீண்ட கண்களும்... சிரிப்பு இப்போதும் கவர்ச்சியாக இருக்கிறது.

எட்டுக் கட்டு வீடு இன்று சுருங்கி ஒரு அறையாக மாறியிருக்கிறது. அதிலே அலுமினியப் பாத்திரச் சமையல். மண்ணெண்ணெய் ஸ்டவ். உடுத்திக் கொள்ள இரண்டு புடைவைகள்.

''இன்னிக்கும் விட்டா ஐம்பது பேருக்குச் சமைச்சுப் போட்டுவாங்க. காசுதான் இல்லை...'' என்கிறார் இவருடைய சகோதரி மகள்.

இவருடைய சகோதரி இதே தொழில் செய்தவர். வயதான பிறகு இலை தைத்து விற்றிருக்கிறார். கண் பார்வை மங்கி விட்டதால் இலை நடுவில் இருந்த பாம்பைக் கவனிக்கவில்லை. பாம்பு கொத்தி சென்ற வருடம் இறந்து விட்டாராம்.

''அவ போன பிறகு எனக்கு இன்னும் என்ன வாழ்க்கையிலேன்னுதான் இருக்கு. வளர்ந்த பிள்ளை போனப்பவே போகாத உசுரு இப்பவா போகப் போகுது...'' என்கிறார் ஆத்திரமாக.

பாயசம், பிரியாணி போன்றவற்றில் பயன்படுத்தப்படும் ஏலம், கிராம்பு, பட்டை போன்றவற்றைச் சாப்பிடும் போது தூர எறிந்து விடாமல் பத்திரப் படுத்தினால் வேறு ஏதாவது சமையலுக்கு அரைத்துப் பயன்படுத்தலாம்.

– ஜெசித்ரா



எங்களுடன் வந்திருந்த ஆந்திரப் பத்திரிகை நிருபர் பிரகாஷ், "இவங்க வாழ்க்கையே ரொம்ப வேடிக்கையா இருந்திடுச்சு. நிறைய பணம். குழந்தைங்களை கவனிக்க மாட்டாங்க. அதுவும் ஆண் பிள்ளைன்னா அப்படியே விட்டுடுவாங்க. தர்மத்துக்கு வளரும் அது. எக்கச்சக்கமா ஆடம்பரச் செலவு. திடீர்னு ஒருநாள் 'தேவதாசிகள் தடைச் சட்டம்' வந்தது. இவங்க வாழ்க்கை ஸ்தம்பிக்கப் போச்சு. கோயில் மூலமாகவும் வருமானம் இல்லை. அதுவும் வயசாயிடிச்சா. இவங்கள்ள சில பேருடைய குழந்தைகள் படிக்க வெளியூர் போயிட்டாங்க. தாங்கள் இன்னார் குழந்தை, இந்த ஜாதி என்று சொல்லிக் கொள்ளக் கூட வெட்கப்படுகிறார்கள். எனவே இவர்கள் அரசாங்க உதவி கூட கோருவதில்லை. கோரினால் தாங்கள் இன்னார் எனச் சொல்ல வேண்டுமே. ஆக எனக்குத் தெரிந்தும் மாட மாளிகையாக இருந்த வீடுகளின் குட்டிச் சுவர்கள்தான் இன்று நிற்கின்றன."

என்று இடிந்து போன அந்த வீதி வழியே அழைத்துச் சென்றார். இந்த வீட்டில் இப்படி நாட்டியம் நடக்கும், அங்கு பாட்டு கேட்கும், மூன்றாவது மாடி இருந்த வீடு என்றெல்லாம் சொல்லிக் கொண்டே போனார். கற்றாழைகளும், முட்புதர்களும்தான் இப்போது அங்கே நிற்கின்றன. வறுமை, பட்டினியால் இறந்து போனவர்கள் தவிர எஞ்சி நிற்கும் சில மூதாட்டிகள் கண்ணீரோடு வாழ்கிறார்கள்.

ஆந்திர நாட்டில் இவர்களின் நிலையைக் கேள்விப்பட்ட தமிழ்நாட்டைச் சார்ந்த கமலா பரசுராமன் என்ற பெண்மணி 'கப்பா சாரிடியின் டிரஸ்ட்' மூலமாக இவர்களுக்கு ஓராண்டாக உதவிகள் செய்து வருகிறார். முதலில் இரண்டு செட் புடைவைகள், கொஞ்சம் பாத்திரம் பண்டங்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறார். பிறகு ஆளுக்கு ஐயாயிரம் கொடுத்து இலை தைத்து விற்கவோ, சிறிய கடை வைத்துக் கொள்ளவோ உதவி செய்திருக்கிறார்.

"பெண்களை இந்தச் சமுதாயம் எப்படியெல்லாம் கசக்கிப் பிழிந்து உபயோகம் இல்லாத போது துப்பி விடுகிறது என்பதற்கு இந்தப் பெண்கள் சிறந்த சாட்சி. அவங்களுக்கு நிறைய செய்யலாம். ஆனால் சொந்தக்காரர்கள் இவர்களை ஏமாற்றிப் பிடுங்கிக் கொண்டு விடுவார்கள். அதனால்தான் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்தேன்..." என்கிறார் கமலா.


அங்கே வேலை நிமித்தம் போன ராஜேந்திர பிரசாத் இவர்களின் அவல நிலையைப் பார்த்து பல பெரிய மனிதர்களுக்கும் கடிதங்கள் எழுதி உதவி கேட்டிருக்கிறார். யாரும் உதவாத நிலையில் சென்னையிலிருந்த கமலா பரசுராமன்தான் உதவிக்கரம் நீட்டியிருக்கிறார். அதிலிருந்து சமூக சேவகராகவே மாறி விட்ட ராஜேந்திர பிரசாத் நிறைய பேரை அடையாளம் கண்டுகொண்டிருக்கிறார். தாழ்த்தப்பட்டு காலிழந்த பையன் படிக்க வேண்டும் என்று ஆர்வத்தோடு தவழ்ந்து தவழ்ந்து வந்த கன்றாவியைப் பார்த்து விட்டு கமலாவிடம் சொல்லியிருக்கிறார். இப்போது அந்தப் பையன் மூன்று சக்கர வண்டியில் பள்ளி செல்கிறான்.

"இந்தக் கிராமத்தில மிஸஸ் கமலாவிடம் கேட்டு எத்தனை பேருக்கு உதவி வாங்கிக் கொடுத்திருக்கேன்னு எனக்கே தெரியாது."

ஒரு காலத்தில் ஊரெங்கும் கோலாகலம், தெருவெங்கும் பாட்டுக்களின் இன்னிசை, வீடெங்கும் சலங்கைகளின் ஓசை என முழங்கி எத்தனையோ மக்களை ஈர்த்த மன்னார் போலூர் இன்று அமைதியாக இருக்கிறது. இடிபாடுகளின் நடுவே கண்ணிடுங்கிய சில மூதாட்டிகள் தங்கள் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள்.


– 'ஜ்வாலா முகி'

புகைப்படங்கள் : யோகா



பல்லே பிரதானம்!

டாக்டர் பி. பி. ராஜன்



பற்களின் அமைப்பிற்கும் பாதுகாப்பிற்கும் பொறுப்பு வகிப்ப தில் முக்கியமான பங்கு பெண்க ளிடம்தான் உள்ளது. பற்கள் நன்றாக முளைக்க வேண்டும், நன்றாக இருக்க வேண்டும் என்றால், தாய் மார்கள் கருவுற்றிருக்கும்போதே புரதச் சத்து, சுண்ணாம்புச் சத்துள்ள உணவை உண்ண வேண்டும். தாயின் வயிற்றில் கரு 4 - 5 வார வளர்ச்சியடையும் போது பற்கள் முளைப்பதற்கான ஆதாரங்கள் தென் படுகின்றன. செடி முளைப்பதற்கு நல்ல விதை அவசியம்; அதே போல பல் முளைப்பதற்குக் குழந்தை கரு வாக இருக்கும்போதே முளைகள் தோன்றி விடுகின்றன. இந்தச் சம யத்தில், கீழ்த் தாடையிலும் மேல் தாடையிலும் சேர்த்து மொத்தம் 20 பற்கள் முளைப்பதற்கு ஏதுவாக முளைகள் தோன்ற ஆரம்பித்து விடு கின்றன.



சில குழந்தைகளுக்கு பிறக் கும்போதே கீழ்த்தாடையில் இரண்டு பற்கள் இருக்கும். சிலர் இதை அரச வம்சத்தின் பரம்பரை யாகக் கருதுகிறார்கள். இதற்கான காரணம் சுவையானது. பிரிட்டிஷ் அரச வம்சத்தில் சில குழந்தை களுக்குப் பிறக்கும்போதே பற்கள் இருந்து இருக்கின்றன. நமது நாட்டி லும் அநேக குழந்தைகள் இப்படிப் பட்ட பற்களோடு பிறந்தது உண்டு. ஆனால் இதற்கும் அரச வம்சத் திற்கும் எந்தச் சம்பந்தமும் இடை யாது.

இந்தப் பற்களினால் தாய்மார் களுக்குப் பாலூட்டும் போது சில தொல்லைகள் ஏற்படும்;

மார்பகங்களில் புண்கள் வருவதற்கு வாய்ப்புண்டு. இக் குழந்தைகளை தகுந்த பல் வைத்தியரிடம் எடுத்துச் சென்று, இந்தப் பற்களை எடுத்து விடுவது நல்லது. இவைகள் பால் பற்களின் வகையைச் சேர்ந்தவையே; ஆகையினால், குழந்தை வளரும் போது இந்தப் பற்கள் இருந்த இடத்தில் வேறு பற்கள் முளைத்து விடும்.

தாய் வயிற்றில் கருவாக இருக்கும் போதே குழந்தையின் வாயில் முளைகள் தோன்றி வளர்ந்து வருவதால், பற்களின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய புரதச் சத்துள்ள உணவு வகைகளை தாய்மார்கள் உண்ணுவது நல்லது. முட்டை, பால் மற்றும் கீரை வகைகளில் சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ளது. இப்படிப்பட்ட உணவு வகைகளைக் கருவுற்றிருக்கும் தாய்மார்கள் சாப்பிட்டால், பற்களின் முளைகள் நன்றாக வளர வாய்ப்புண்டு. தாய்மார்கள் நலிவுற்றாலோ, நோய்வாய்ப்பட்டாலோ, குழந்தையின் பல் வளர்ச்சி பாதிக்கப்படும். ஆகவே, குழந்தையின் பற்கள் நன்கு அமைந்து வளரச் செய்ய வேண்டிய பொறுப்பு தாய்மார்களைச் சார்ந்ததாகும்.

தவிரவும், குழந்தை பிறந்த பின், தாய் குழந்தையின் வாயைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குழந்தைக்குப் பாலூட்டிய பின்னரும், குழந்தைக்கு வேறு ஏதாவது அருந்துவதற்குக் கொடுத்த பின்னரும், குழந்தைக்கு பற்கள் இல்லாவிட்டாலும், குழந்தையின் வாயை நன்கு சுத்தம் செய்ய வேண்டும். தாய் தன் கைவிரலில் ஒரு மெல்லிய சுத்தமான துணியைச் சுற்றிக் கொண்டு அதன் மூலம் மிருதுவாகச் சுத்தம் செய்வது நல்லது. புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு இது மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. நர்சிங் பாட்டில் சின்ட்ரோம் என்று இதைக் கூறுவார்கள். தாய்ப்பால் குழந்தைகளுக்கு மிகவும் நல்லது என்பது எல்லோரும் அறிந்த விவரம். இருப்பினும் தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்குப் புட்டிப்பால் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அப்படிக் கொடுக்கும் போது சர்க்கரை கலந்த பால் பல்லில் ஒட்டிக் கொண்டிருக்காமல் தாய்மார்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சாதாரணமாக 8 மாதம் 10 மாதம் வயதுள்ள குழந்தைகளுக்குக் கீழ் வாயில் முதலாவதாக இரண்டு பற்கள் முளைக்கும். அவைகள் முளைக்கும்போது சில குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படுவதாகவும், அதிகமாகக் காய்ச்சல் வருவதாகவும் சிலர் கருதுகிறார்கள். சில குழந்தைகள் அழுது கொண்டேயிருக்கும். இதற்கெல்லாம் தகுந்த ஆதாரங்கள் இல்லை. ஆகவே இவைகளை நம்ப வேண்டிய அவசியமில்லை. 10 மாதங்களில் முளைக்க ஆரம்பிக்கும் பற்களுக்குப் பால்பற்கள் என்று சொல்லுவதுண்டு. இந்தப் பால் பற்கள் எல்லாம் 3 வயதுக்குள் முளைத்து விடுகின்றன.

மொத்தம் 20 பால்பற்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. 3 வயதுக்குள் இவைகள் முளைத்து விடுவதால், இந்த வயதில் பற்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை தாய்மார்களுக்கு உண்டாகிறது. பற்கள் முளைக்க ஆரம்பிக்கும் போது சத்துள்ள உணவு குழந்தைக்குத் தேவைப்படுகிறது. பற்கள் நன்றாகப் பழுதின்றி முளைத்து விட்டாலும் அவைகளைப் பேணிக் காப்பாற்றாவிட்டால், சொத்தை உண்டாக வாய்ப்பு ஏற்படுகிறது. நீங்களே சில குழந்தைகளை 3 அல்லது 4 வயதில் பார்க்கும் போது பற்களின் நடுவில் கருப்பாகத் தென்படும். சில சமயங்களில் 2-3 வயதான குழந்தைகள் தூங்கி விட்டால் கூட அவர்களை எழுப்பி சர்க்கரை கலந்த பாலைக் குடித்து விட்டுத் தூங்கும்படி கட்டாயப்படுத்துவதுண்டு. இந்தச் சர்க்கரை கலந்த பால் வாயில் தங்கும் போது பற்களைத் தாக்கி சொத்தை உண்டாக்கி விடும்.

குழந்தைப் பருவத்தில் தானாகப் பற்களைச் சுத்தம் செய்யும் தேர்ச்சி இருக்காது. ஆதலால் தாய்மார்கள் ஒரு சிறு பல் துலக்கியைக் கொண்டு அவர்களாகவே குழந்தைகளின் பற்களைத் தினமும் இரு முறை சுத்தம் செய்வது நலம். குறிப்பாக இரவு படுக்கைக்குப் போகும் முன் சுத்தம் செய்வது சாலச்சிறந்தது ஆகும். பல் துலக்கியில் பற்பசையை உபயோகப்படுத்தலாம். சிறு பல் துலக்கியில் கொஞ்சமாக அதாவது ஒரு பெரிய பட்டாணி அளவில் பற்பசை எடுத்துக் கொண்டால் போது

ரசம் செய்யும் போது கொத்துமல்லி இலை கைவசம் இல்லை என்றால் சிறிது மல்லிவிதை நசுக்கிப் போட்டால் ரசம் வாசனையாக இருக்கும்.

– ஜெசிந்தா



மானது. குழந்தைகள் எப்படியும் கொஞ்சம் பற்பசையை விழுங்கி விடத்தான் செய்யும். தாய்மார்கள் வாயைச் சுத்தம் செய்து கூடுமானவரை தண்ணீர் கொண்டு கொப்பளித்து வெளியில் துப்பும்படி செய்ய வேண்டும். மிகச் சிறிய அளவில் பற்பசையை குழந்தைகள் விழுங்கி விடுவதால் பெரிய பாதிப்பு ஏற்படாது. ஆனால் குழந்தைகள் கையில் பற்பசையைக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால் கொஞ்சம் கொஞ்சமாக வாயில் போட்டு பற்பசையைத் தின்று கொண்டேயிருக்கும். ஃப்ளோரைடு கலந்த பற்பசையாக இருந்து அதை அதிக அளவில் சாப்பிட்டால், சில குழந்தைகளுக்குப் பசியின்மையை உண்டாக்கும் என்று சில குழந்தை மருத்துவ நிபுணர்கள் கருதுகிறார்கள்.

குழந்தைகளுக்குக் கொடுக்கும் ஆகாரம் சத்துள்ளதாக இருக்க வேண்டும். 3 வயதிற்கு முன்னதாக முளைத்து விடும் இந்தப் பால் பற்கள் 20 ஆகும். இவற்றில் 8 பற்கள் கடைவாய்ப் பற்களாகும். ஒரு தாடையில் ஒரு பக்கத்திற்கு இரண்டாக கடைவாய்ப் பற்கள் இருக்கும். இந்தக் கடைவாய்ப் பற்கள் ஆகாரத்தை அரைத்து மென்று விழுங்குவதற்குப் பயன்படுகிறது. இந்தப் பற்களில் ஆகாரம் தங்கி விட்டாலும் சொத்தை உண்டாக ஏதுவாகிறது. சொத்தை உண்டாகும் போது பற்களில் பள்ளங்கள் ஏற்படுகின்றன. இந்தப் பள்ளங்களில் ஆகாரம் நிரந்தரமாகத் தங்குவதால், இதில் கிருமிகள் வளர்ந்து அமிலத்தை உண்டாக்குவதால் பற்களில் ஒரு பகுதி கரைந்து விடுகிறது. இப்படிப்பட்ட கரைந்து விட்ட பகுதியில் கூச்சம் உண்டாகிறது. இதைக் கவனிக்காமல் விட்டு விட்டால், குழந்தைகள் சாப்பிடும் போது ஆகாரத்திலுள்ள நார் போன்ற பகுதிகள் பற்களின் நடுவில் சிக்கிக் கொண்டு, குழந்தை சாப்பிடுவதைத் தவிர்க்கும். பற்களின் மேலுள்ள சொத்தை அதிகமாகும் போது சில நேரங்களில் வலி உண்டாகும்; குழந்தை அழுது கொண்டே இருக்கும். இப்படிச் சொத்தை வராமல் பாதுகாக்க வேண்டியது தாய்மார்களின் இன்றியமையாக் கடமையாகும்.


தாய்மார்களின் கடமைகள் இத்துடன் நின்று விடுவதில்லை. 3 வயதில் முளைத்த இந்தப் பால்பற்கள், நிரந்தரப் பற்கள் இந்த இடத்தில் வளரும் வரை, உபயோகப்படுபவையாக இருக்க வேண்டும். இப்படிப் பட்ட பற்களை உபயோகப்படுத்தும் போது அவைகள் பொருத்தப்பட்டிருக்கிற தாடை எலும்புகள் நன்றாக வளர்கின்றன. கடைவாய்ப் பற்களுக்கு முன் வேர்களின் மத்தியில் நிரந்தரப் பற்களின் முளை தென்பட்டு அவைகள் வளர வளர வேர்கள் கரைந்து கொண்டே வரும். நிரந்தரப் பற்கள் முளைக்க ஆரம்பிக்கும் போது பால் பற்கள் அந்த இடத்திலிருந்து விழுந்து விடும். வேர்கள் எல்லாம் கரைந்து விடுவதால் இப்படி விழும் பற்களுக்கு வேர்கள் இருக்காது. சிலர் பல் ஒடிந்து விழுந்து விட்டது வேர் விழவில்லை என்று பயப்படுவார்கள். ஒழுங்காக நிரந்தரப் பற்கள் வருமானால், இவைகளின் வேர்கள் முழுமையாகக் கரைந்த பின் தான் இவைகள் விழும். ஆகையினால் விழுந்த பற்களுக்கு வேர் இல்லை என்று பயப்படத் தேவையில்லை.

விஞ்ஞானத் துறையில் பல் வைத்தியமும் விரைவில் வளர்ந்து பல துறைகளாகப் பிரிந்து விட்டன. பற்களில் சொத்தை வராமல் பாதுகாப்பதற்கும் சொத்தையான பற்களைப் பழுதுபார்க்கவும் ஒரு தனிப் பிரிவு உள்ளது. பற்கள் சீராக இல்லாமல் மேலே தூக்கியோ, ஒன்றின்மேல் ஒன்றாகவோ இருந்தால் அவைகளைச் சரிப்படுத்துவது பல் சீரமைப்புத் துறை என்ற தனிப் பகுதி. பற்கள் அதிகமாகப் பழுது அடைந்து விட்டாலும் அல்லது ஏதோ ஒரு காரணத்துக்காக அவற்றை எடுக்க நேரிட்டாலும், இதற்காக பற்களை எடுக்கும் ஒரு சிறப்புப் பகுதி இருக்கிறது. பற்களை இழந்து விட்டவர்களுக்கு செயற்கைப் பற்களைப் பொருத்துவது வேறொரு பகுதி. ஈறுகளிலிருந்து ரத்தமோ சீழோ வந்தால் அதற்குச் சிகிச்சை அளிப்பது மற்றொரு துறை. வாயில் ஏதாவது புண் ஏற்பட்டாலோ அல்லது வெண்படலம் தோன்றினாலோ அதற்குச் சிகிச்சை அளிப்பது மற்றொரு துறையாகும். குற்ற இயல் துறையிலும் பற்கள் பற்றிய பகுதி ஒரு சிறப்பான அம்சமாகும்.

தொகுப்பு : **பத்மநாபன்**

உப்புமா தாளிக்கும் போது கிராம்பும் சிறிது இலவங்கப்பட்டையும் போட்டுத் தாளித்தால் உப்புமா சாப்பிடாதவர்கள் கூட சாப்பிடுவார்கள்.

- ஜெசிந்தா



பானுவின் பார்வை யதேச்சையாய் சுவரில் பட அதிர்ந்தாள்.

அவள் நடத்தையைப் பற்றி அசிங்கமாக எழுதியிருந்தது அதில்.

அவள் அலுவலகத்தின் பின்புறம் பத்தடி தூரத்தில் உள்ள டாய்லெட்டுக்குப் போகும் வழியில் பக்கச் சுவரில் தான் கரித் துண்டால் எவனோ கிறுக்கியிருந்தான்.

காலையில் நிச்சயமாக அது சுவரில் இருந்திருக்க முடியாது. எழுதியிருந்தால் அலுவலகம் முழுதும் பரவி விஷயம் அவளை எட்டியிருக்கும்.

முகத்தில் ஜிவு, ஜிவு எனக் கோபம் தலைக்கேற பானு அந்தச் சுவரை வெறித்தாள். அந்த வார்த்தைகளில் தெறித்த அசிங்கம் அருவருப்பையும், ஆக்ரோஷத்தையும் அவளுள் விதைத்தது.

அதை அழித்து விடலாமா என்று யோசிப்பதற்குள் பின்னால் யாரோ வரும் செருப்புச் சத்தம் கேட்டது.

விருட்டென்று திரும்பி நடந்து தன் இருக்கையில் சென்று அமர்ந்தாள்.


'பொறுக்கி நாயே! யாரடா நீ?' என்று குமுறியது உள்ளம்.

அவனைக் கண்டு பிடித்துப் பழிவாங்கியே ஆக வேண்டும்.

ஒரு தம்ளர் தண்ணீரை மடக்கென்று விழுங்கிச் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

யோசித்ததில் ஓரளவு ஆள் யாரென்று புலப்பட்டது.

தங்கசாமியாகத் தான் இருக்க வேண்டும். அவன்தான் காலையில் என்னோடு சண்டை போட்டது.



மண்ணாய் குரு

கிருஷ்ணா



ஓட்டை விழுந்த வாணலியைப் பழைய பாத்திரக் கடையில் போட்டு விடாமல், அதில் மேலும் பல துளைகளை ஆணியில் போட்டு வைத்துக் கொண்டால் - காய்கறி அலசும் வடிகட்டியாய்ப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- தஞ்சை மகேஸ்ப்ரியன்



அவனுக்குத் தெரிந்தவரின் ஃபைலை அவசரமாக முடித்துக் கொடுக்கச் சொன்னதும், தான் மானேஜர் கொடுத்த வேறு ஒரு வேலையின் காரணமாக மறுத்ததும், அதனால் இருவருக்குள்ளும் லேசான காரத்துடன் வார்த்தைக் கலப்பு நடந்ததும் பானுவின் நெஞ்சில் ஆடியது.

அவன்தான் என்று எப்படி உறுதி செய்து கொள்வது...?

அதற்குள் அலுவலகத்தில் நிறையப் பேர் டாய்லெட் பக்கம் போய் வந்து சிறுசிறு கூட்டங் கூட்டமாக கிசுகிசுப்பது தெரிந்தது.

தங்கசாமியைக் கவனித்தாள். அவனும் யதேச்சையாக இவளைப் பார்த்துப் பார்வையை அவசரமாக விலக்கிக் கொண்டான்.

அவன் டேபிள் அருகில் ராமு, குமாரசாமி, சோமு மூவரும் தன்னை அடிக்கடி பார்த்தபடி மெல்லிய குரலில் பேசுவது தெரிந்தது.

''தங்கசாமி சார்'' - இவள் அழைத்ததும் திடுக்கிட்டுப் போய் பார்த்தான்.

''கொஞ்சம் வாங்க'' என்று சைகை காண்பித்தாள்.

தயக்கத்துடன் எழுந்து அவளருகில் வந்தான். ''காலையிலே ஏதோ ஃபைலைப் பற்றிச் சொன்னீங்களே... பார்த்துடலாமா?''

''ஆ... ஆங்!'' என்று இழுத்தான்.

''கையிலே என்ன சார் கறுப்பா கரியைத் தொட்ட மாதிரி...?'' என்று இவள் இழுக்கவும் பதறிப் போனான்.

''கரியா? இ... இல்லையே!'' என்று கையை விலுக்கென்று பேண்ட் பாக்கெட்டினுள் மறைத்துக் கொண்டான்.

இவன்தான்! இவனின் தடுமாற்றமும், உதறலும் கட்டியம் கூறிவிட்டன.

இவனை விடக் கூடாது! வக்கிரமான இவன் மனத்தைக் குதறியே ஆக வேண்டும்! பழிக்குப் பழி! வெற்றிவேல், வீரவேல்!

மாலை வீடு திரும்பும் போது ஒரு குரூர திருப்தி பானுவின் மனத்தில்.

தங்கசாமியை எங்கு அடிக்க வேண்டுமோ அங்கு அடித்தாகி விட்டது. நாளை காலையில் அவன் முக வேதனையை வேடிக்கை பார்க்க வேண்டும்...!

''என்னடி உனக்குள்ளேயே ஏதோ பேசிண்டு? ஆபீஸ்லேயிருந்து வந்தது முதல் பார்க்கறேன், நீ மட்டும் ஏதோ யோசிச்சுண்டு இருக்கே?'' என்று அருகில் வந்து அமர்ந்த அம்மாவை நோக்கினாள்.

அம்மாவிடம் சொன்னால் என்ன? யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் போல இருந்தது. உள்ளத் தவிப்பை அம்மாவிடம் கொட்டி விட்டால் என்ன?

அம்மா நிச்சயம் புரிந்து கொள்வாள். தன் பெண்கள் நன்கு படித்து, கட்டாயம் உத்தியோகம் பார்த்து, சொந்தக் காலில் நிற்க வேண்டும் என ஆசைப்பட்டவள்!

பானு நடந்ததை விவரித்தாள்.

''எப்படி அசிங்கமா எழுதியிருந்தான் தெரியுமாம்மா?'' என்றாள் துக்கம் ஏறிய குரலில்.

''ஆதாம், ஏவாள் காலத்திலிருந்தே நடக்கற பனிப்போர்தாண்டி இது. புருஷனுக்குத் தெரிந்ததெல்லாம் கையை நீட்டற ஆக்ரோஷமான யுத்தம். பெண்ணுக்குத் தெரிஞ்சது மௌன யுத்தம். ஆனால் யாருக்கும் யாரும் சளைச்சவங்க இல்லை.''

''கரெக்ட். ஆணுக்குப் பெண் எந்த விதத்துலயும் குறைஞ்சவ இல்லை. ஆனால் பெண்ணை அவமானப்படுத்தறதுக்கு ஆண்களுக்குத் தெரிஞ்ச ஒரே வழி அவ நடத்தைக்குக் களங்கம் கற்பிக்கிறதுதான். அதைத்தான் இந்த ராஸ்கலும் செஞ்சிருக்கான்.''

''உண்மைதான்.''

''அதனாலேதான் அவன் மனசைக் கீறிவிடற மாதிரி செஞ்சுட்டேன்.''

''என்ன செஞ்சே?''

''புருஷனுக்கு நிம்மதி வேணும்னா வீட்டுல பிரச்னை இருக்கக் கூடாது.''

''சரிதான், நீ சொல்றது.''

''அந்த நிம்மதியைக் கெடுத்துட்டோம்னா அப்புறம் அவன் தன் கவலையிலேயே உழலுவானே தவிர அடுத்தவங்களைப் சுற்றி நினைக்க மாட்டான்.''

''நீ என்ன செஞ்சே அதுக்கு?''

''அவனுக்கு ஒரு மொட்டைக் கடுதாசி எழுதிப் போட்டுட்டேன்.''

''அடிப்பாவி!''

''அவன் பொண்டாட்டிக்கு இவன் சரியில்லேன்னு எழுதிட்டேன். அதுவும் என்

இடது கையால எழுதிட்டேன் இருக்கலாம். சந்தேகப்படும் பெண்டாட்டியை வச்சுக்கிட்டு எந்த ஆம்பளையும் நிம்மதியா வாழ முடியாது. அவஸ்தைப்படட்டும் அவன் நன்றாய்'' என்று கறுவிய மகளை அதிர்ச்சியுடன் பார்த்தாள் அம்மா.

''என்னம்மா அப்படிப் பார்க்கறே?''

''ஏண்டி, ரத்தத்துக்கு ரத்தம்தான் பதிலா?''

''அம்மா, நான் ஒன்றும் தேவதை இல்லை. சாதாரண மனுஷி.''

''நீ சாதாரண மனுஷிதான். ஆனால் மண்ணுலதான் நடக்கறே. மண்ணுலதான் படுக்கறே. மண்ணுல விளையறதைத்தான் திங்கறே.''

''ம்மா, என்ன சொல்றே?''

''யாரோட பழகி வாழறோமோ அவங்க குணம் நம்மிடமும் பிரதிபலிக்கும்னு சொல்லுவாங்க. ஆனால் அதை பொய்யாக்கறியேடி!''

''அம்மா...!''

''மண்ணோட குணம் என்னன்னு யோசிக்கப் பாரு. தன்னிடம் சேரும் கழிவுகளை வாங்கிக்கிட்டு உரமாக்கித் தருது. மரங்களை வைரமாக்கித் தருது. செழிப்பான பயிர்களைத் தருது. அதுலேயே புரளும் நாமும் அதைத்தானே பிரதிபலிக்கணும்!''

''அப்ப நான் கோபப்படறது தவறா?''

''கோபப்படறது நியாயம்தான் பானு. ஆனால் அந்தக் கோபங்கறது மண்ணில் சேரும் கழிவு மாதிரி நம்ம மனசை அசுத்தப்படுத்துது. ஆனால் நாம அதைப் பயனுள்ள வகையிலேதான் வெளிப்படுத்தணும்.''

''நீ என்ன செய்யச் சொல்றே?''

''இந்த மாதிரி அசிங்கங்களை முடிந்தால் உதாசீனப்படுத்து. முடியலையா, அதை உள்வாங்கிக்கிட்டு நல்ல முறையிலே வெளிப்படுத்து. பூமித்தாய் நமக்குக் கற்றுக் கொடுக்கற பாடம் இதுதான்'' என்ற அம்மாவைப் பார்த்தபடி இருந்தாள் பானு.

அடுத்த நாள் காலை அலுவலகம் சென்றதும் தங்கசாமியைத் தேடினாள்.

அவன் முகம் இருளடைந்திருக்க, சுரத்து இழந்து இருக்கையில் அமர்ந்திருந்தான்.

அவள் இடத்தைத் தேடிச் சென்றாள்.

''தங்கசாமி சார், என்னை மன்னிச்சுடுங்க'' என்று ஆரம்பித்தாள்.

அவர்களிடையே உள்ள பழிவாங்கும் எண்ணம் மறைந்து நட்பு பூப்பூக்க ஆரம்பித்தது.

ஃபிக்சட் டெபாசிட்டுகள் ஏற்கப்படுகின்றன.

[illegible]

திட்டம்	தொகை	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]
	ரு.	%	%	%	%	
அ. [illegible]*	1000/-	15.19	15.19	15.19	15.19	[illegible]
ஆ. [illegible]	5000/-	15	15	15	15	[illegible]
இ. [illegible]*	1000/-					
[illegible] ரு.		1,364	1,584	1,815	2,107	
[illegible] (%)		17.48	18.80	20.38	22.14	

* [illegible]

[illegible]

அ. [illegible] : [illegible]

ஆ. [illegible] : 4 அக்டோபர், 1962

இ. [illegible] : [illegible]

ஈ. [illegible] : [illegible]

உ. [illegible]

பெயர்	முகவரி	தொழில்
திரு. [illegible]	[illegible] 13, [illegible] 603 001	[illegible]
திரு. [illegible]	38, [illegible] 600 028	[illegible]
திரு. [illegible]	33, [illegible] 600 028	[illegible]
திரு. [illegible]	[illegible] 155, [illegible] 400 070	[illegible]
திரு. [illegible]	[illegible] & Co., 38, [illegible] 700 013	[illegible]
திரு. [illegible]	[illegible] 1148, [illegible] 411 016	[illegible]
திரு. [illegible]	39, [illegible] 600 004	[illegible]
திரு. [illegible]	47-F, [illegible] 400 026	[illegible]
திரு. [illegible]	[illegible] 103B [illegible] 600 004.	[illegible]
திரு. [illegible]	32/K [illegible] 700 027	[illegible]
திரு. [illegible]	32A [illegible] 600 004	[illegible]
திரு. [illegible]	[illegible] "UTI [illegible]", 29, [illegible] 600 001	UTI [illegible]

[illegible] (ரு. [illegible])

[illegible]	[illegible] ரு.	[illegible] ரு.	[illegible]	தொகை ரு.	[illegible]
1990	447.52	403.42	[illegible]	75.00	30%
			COPS*	3.03	10%
1991	718.69	718.69	[illegible]	87.50	35%
			COPS*	25.00	10%
1992	990.14	919.14	[illegible]	100.00	40%
			COPS*	25.00	10%

* [illegible]

ஏ) [illegible] (ரு. [illegible])

[illegible]	30.6.92 அன்று	30.6.91 அன்று	[illegible]	30.6.92 அன்று	30.6.91 அன்று
[illegible]	300.00	300.00	[illegible]	3206.81	1932.53
[illegible]	1940.64	1146.30	[illegible]	358.02	130.28
[illegible]	9897.30	5522.50	[illegible]	21364.63	15213.82
[illegible]	4717.38	3043.32	[illegible]	397.65	417.36
[illegible]	729.74	—			
[illegible]	7530.00	7060.63			
மொத்தம்	25329.74	17673.03	மொத்தம்	25329.74	17673.03

[illegible] (ரு. [illegible])

அ. [illegible] 9.03 26.87

ஆ. [illegible] 1686.31 1010.31

இ. அ. [illegible] ரு. 244.06 [illegible]

ஆ. [illegible] 30 [illegible] 1992 [illegible] ரு. 115.38 [illegible]

ஒ. [illegible]

ஓ. [illegible]

(i) 1977-ம் [illegible] (RBI) [illegible]

(ii) [illegible]

(iii) [illegible]

ஔ. [illegible]

ஃ. [illegible] 28.10.1992 [illegible]

[illegible]

இடம்: சென்னை
தேதி: 28.10.1992

[illegible]

[illegible] சென்னை 600 018. போன்: 456676/1958/1934

மங்கையர் மலரும்
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும்
இணைந்து நடத்தும்

மங்கையர் மலரும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து மகளிர் மேளா நடத்தவுள்ளது. தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளான 24.2.1993 அன்று காலை 11 மணி முதல் இரவு 9 மணி வரை சென்னையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 19 வது சுற்றுலா வர்த்தகப் பொருட் காட்சியில் இவ்விழா நடைபெறும்.

1. பெண்களில் சிறு தொழில் செய்வோர், கைவினை தொழில் நுட்பக் கலைஞர்கள், அப்பளம், ஊறுகாய் போன்ற உணவுப் பொருள் தயாரிப்பவர்கள், எம்பிராய்டரி வேலைப்பாடுகள் செய்வோர் அனைவரும் அன்றைய தினம் பொருட்களை விற்பனை செய்யலாம். அவர்களுக்கு இலவசமாக இடவசதி செய்து தரப்படும்.

ஸ்டால்கள் அமைக்க விரும்புவோர் 17.2.'93க்குள் மங்கையர் மலருக்கு விண்ணப்ப மனுவினை அனுப்பவும். முதலில் வருபவர்களுக்கு முதல் உரிமை தரப்படும். வியாபார நிறுவனங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

2. பெண்களுக்குத் தேவையான இலவச ஆலோசனை மையம் அமைக்கப்படுகிறது.

சட்டம், தொழில், கடனுதவி, குடும்பப் பிரச்னைகள், மருத்துவம் என அனைத்துத் துறையைச் சேர்ந்த வல்லுநர்களும் வந்து ஆலோசனை தர இருக்கிறார்கள். பிரச்னைகள் உள்ள பெண்கள் நேரில் வந்து இலவசமாக ஆலோசனை பெறலாம்.

3. பொழுது போக்கு அம்சங்கள் நிறைய உண்டு.

கராத்தே, கரகம் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறும். அத்தகைய திறமை பெற்றவர்களும் விழாவில் பங்கேற்றுத் தங்களுடைய திறமையை வெளிப்படுத்த விரும்பினால் உடனடியாக மங்கையர் மலரை அணுகலாம்.

4. பெண்கள் சங்கங்களுக்கான நாடகப் போட்டி

அ) நேரமின்மை காரணமாகப் பத்து சங்கங்கள் நாடகப் போட்டிக்கு அனுமதிக்கப்படுவர்.

ஆ) விண்ணப்பங்கள் அனுப்பக் கடைசித் தேதி : 15.2.'93. நிறைய சங்கங்கள் விண்ணப்பித்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அச்சங்கங்கள் போட்டிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களுக்குத்தகவல் அனுப்பப்படும். தகவல் பெற விரும்புபவர்கள் 16.2.93 அன்று மங்கையர் மலர் அலுவலகத்தில் இருந்து தகவல் பெறலாம்

மகளிர் மேளா

இ) நாடகம் பெண்களின் பிரச்சனையை அடிப்படையாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும். நாடகத்திற்கான கால அவ காசம் பத்து நிமிடங்கள்.

ஈ) இப்போட்டி பொருட்காட்சியில் மாலை 3 மணிக்கு நடை பெறும்.

5. பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கான போஸ்டர் போட்டி -

விண்ணப்பத்தினை மங்கையர் மலருக்கு பள்ளி/கல்லூரி முதல்வரின் அத்தாட்சியுடன் அனுப்ப வேண்டும்.

கல்லூரி மாணவியர் அனைவரும் கலந்து கொள்ளலாம். பள்ளி மாணவிகளில் +1, +2 படிக்கும் மாணவிகள் கலந்து கொள் ளலாம். போட்டி 23-2-1993 அன்று பொருட்காட்சித் திடலில் மகளிர் மேளா அரங்கத்தில் மதியம் 11 மணிக்கு நடைபெறும். பரிசு பெற்ற போஸ்டர்கள் மற்றும் குறிப்பிடத்தக்க போஸ்டர்கள் மறு நாள் நடைபெறும் மகளிர் மேளாவில் பார்வைக்கு வைக்கப்படும்.

அ) போட்டிக்கான கால அவகாசம் 1 மணிநேரம்

ஆ) பெண்களின் பிரச்னை ஏதேனும் ஒன்று தலைப்பாக போட்டி நடப்பதற்கு 15 நிமிடங்களுக்கு முன்பு தரப்படும். எனவே போட்டியில் கலந்து கொள்வோர் 10.30 மணிக்கு வந்து விட வேண்டும்.

இ) போஸ்டர் செய்வதற்கான அனைத்துப் பொருட்களும், போக்குவரத்துச் செலவுகளும் அவரவருடையதே.

ஈ) பள்ளி மாணவியருக்கு மூன்று பரிசுகளும், கல்லூரி மாணவி களுக்கு மூன்று பரிசுகளும் அளிக்கப்படும்.

6. பட்டிமன்றம் :

மகளிர் மேளாவில் மாலையில் பட்டி மன்றம் நடைபெறும்.

7. விழா நடைபெறும் திடலிலேயே சிறந்த திரைப்படங்களும் திரையிட திட்டமிட்டுள்ளோம்.

இவ்விழா அனைத்துத் தரப்புப் பெண்களும் ஓரிடத்தில் ஒன்று கூடி தங்கள் பிரச்னைகளை, அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற் காகவே நடைபெறுகிறது. எனவே அனைவரும் வந்திருந்து இப் பெண்கள் திருவிழாவை மிகச் சிறப்பான முறையில் வெற்றிகரமாக ஆக்குவதற்கு உறுதுணை செய்ய வேண்டுகிறோம்.

8. பள்ளி, கல்லூரி மாணவிகளில் வேறு ஏதேனும் சிறப்பான கலை களிலே திறமை பெற்றவர்கள் தங்கள் திறமைகளை இந்த அரங்கில் வெளிப்படுத்த விரும்பினாலும் மங்கையர் மலருக்குத் தொடர்பு கொள்ளலாம். அவர்களுடைய விண்ணப்பங்களும் பரிசீலிக்கப் படும்.

ஒரு நல்ல மனைவி கடவுள் மனித னுக்குள் கொடுக்கக் கூடியவற்றுள் சிறந்த பொருளாவாள். கணவன் அடை யக் கூடியவற்றில் முதன்மையானவள் நல்ல மனைவி, நவரத்தினங்கள் நிறைந்த பெட்டி போன்றவள். அவள் குரல் ஒலி இசையினும் நிறைந்த அவள் புன்சிரிப்பு அன்றைய தினத்தை ஒளிப் பெறச் செய் யும். அவளுடைய முயற்சி அவனுக்கு உண்மையான செல்வம் ஆகின்றது. அவ ளுடைய சிக்கனம் அவனுக்கு பாதுகாப் புள்ள மேற்பார்வையாளனாக இருக் கின்றது. அவள் சொற்கள் அவனுக்கு ஆலோசனை செய்வதற்கு அமை கின்றன.

– ஜெர்மி டெய்லர்.

பூந்தோட்டத்தில்....

''இன்னும் கொஞ்ச நேரம்தான் ஆகும். மழையோ, இடியோ, தன்னை நம்பி வருபவர்களை இந்த பத்மாவதி அம்மன் கை விடமாட்டா. நாம என்ன கஷ்டப்பட்டோம்.

எல்லாம் அந்த அம்மனின் சக்தி.''

கார் ஆலயத்தின் எல்லையை அடைந் தது. திடீரென மின்சார விளக்குள் பளிச் சிடவும் ''கரண்ட் பந்தாயித்து'' என பல குரல்கள் மகிழ்ச்சியில் கூவ 'உண்மையி லேயே சக்திதான்' என்ச் செல்வி முணு முணுத்தாள்.

பத்மாவதி சன்னிதானத்தை விரைந்து அடைந்தோம். அதிக மழையினால் சிறி தும் கும்பல் இல்லை. மிகப் பெரிய ஆலயம். சுத்தமான பராமரிப்பு. அம்மனின் புன்முறுவல் அன்பாய் வரவேற்றது. அவ்வ ளவுதான். பிரயாணக் களைப்பு பறந்தது. கண்கள் மூடின. உடல் இலவம் பஞ்சாய் லேசுப்பட்டது. உடலில் ஏதோ ஓர் அமைதி ஆட் கொண்டது. அம்மனின் சக்தியினை ஆன்மா உணர்ந்தது.



கொட்டும் மழை மாலை ஆறு மணிக்கெல்லாம் கும்மிருட்டாய் காட்டி யது. ஈரப் பசை மிகுந்த காற்று சாரலின் ஊடே முகத்தில் வீச, மழையினூடே ஒளி உமிழ்ந்து கார் செல்ல, காற்றின் வேகத்தில் ஆடும் மரக்கிளைகளைப் பார்த்துக் கொண்டே பிரயாணம் செய்த என்னை அருகிலிருந்த செல்வியின் பேச்சு திருப்பி யது.

''ரொம்ப மழையா இருக்கே. ரோடெல்லாம் வெள்ளம். எவ்வளவு வண் டிங்க வழியில நின்னு போயிருக்கு. இவ் வளவு மழை கர்நாடகாவில் இருக்கும்னு தெரிஞ்சிருந்தா நாம அடுத்த வாரம் வந்தி ருக்கலாம். இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?''

இவ்வாலயம் எங்கே உள்ளது என ஆர்வம் தோன்றுகின்றதல்லவா? கர்நாடக மாநிலத்தில் ஷிமோகா மாவட்டத்தி லிருந்து 36 மைல் தொலைவில் அமைந் துள்ள ஹும்சா கிராமத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் ஜைன 23 வது தீர்த்தங்கரர் பார்சுவநாதரின் யக்ஷி பத்மாவதியின் ஆலயம். இந்த அம்மனை அனைத்து இந்திய மக்களும் தாங்கள் விரும்பிய ரூபத்தில் கருமாரியாகவும், துர்க்கையாக வும் வணங்குகின்றனர். ஜைன மதப்படி இப்பூவுலகில் தோன்றிய 24 தீர்த்தங்கரர் களும் மோட்சம் அடைய கடும் தவம் புரிந்த போது தேவர், தேவதைகள் அவர் களை யக்ஷன், யக்ஷியாய் தாமே முன் வந்து காத்தனர்.



தங்க மழையின் தங்க குவியல் திட்டத்தில் சேர்ந்து நீங்களும் அதிர்ஷ்டசாலியாகலாம்!



எங்களின் மாதாந்திர ரூ.500/-, ரூ.250/-, ரூ.100/- நகை சேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து முதல் பரிசாக மாருதி கார், 25 சவரன் தங்கம், கைனடிக் ஹோண்டா மற்றும் 152 விலைமதிப்பற்ற பரிசுகளைத் தட்டிச் செல்லுங்கள்!!

திட்டம்	மாத தவணை தொகை	மாத தவணைகள்	மொத்தம் ரூ.	கொடுக்கப்படும் நகை மதிப்பு ரூ.	மதிப்பு போனஸ் ரூ.	சிறப்பு மாதாந்திர பரிசுகள்
தனவர்ஷா	ரூ.500/-	22	11,000/-	12,000/-	250/-	ரூ. 5,000/-
தனரத்னா	ரூ.250/-	22	5,500/-	6,000/-	125/-	ரூ. 2,500/-
தனரேகா	ரூ.100/-	22	2,200/-	2,400/-	50/-	ரூ. 1,000/-



நகை சேமிப்பு திட்டங்கள்



தனவர்ஷா
சேமியுங்கள் மாதம் ரூ.500/-

பரிசுகள்	அதிர்ஷ்ட சாலிகள்	பரிசுகள்
முதல்	1 நபர்க்கு	மாருதி கார் (800cc ஸ்டாண்டர்ட் மாடல்)
இரண்டாம்	2 நபர்க்கு	கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டர்
மூன்றாம்	3 நபர்க்கு	21" கலர் டி.வி.
நான்காம்	4 நபர்க்கு	டி.வி.எஸ் 50 மோபெட்
ஐந்தாம்	5 நபர்க்கு	ரெஃப்ரிஜிரேட்டர்
ஆறாவது	6 நபர்க்கு	வாஷிங் மெஷின்
ஏழாவது	7 நபர்க்கு	தங்க சவரன் (8 கிராம்)
எட்டாவது	8 நபர்க்கு	2-இன்-1 போர்ட்டபிள்
ஒன்பதாவது	9 நபர்க்கு	மிக்ஸி
பத்தாவது	10 நபர்க்கு	ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் [illegible]



தனரத்னா
சேமியுங்கள் மாதம் ரூ.250/-

பரிசுகள்	அதிர்ஷ்ட சாலிகள்	பரிசுகள்
முதல்	1 நபர்க்கு	25 சவரன் தங்கம் (200 கிராம்)
இரண்டாம்	2 நபர்க்கு	21" கலர் டி.வி.
மூன்றாம்	3 நபர்க்கு	டி.வி.எஸ் 50 மோபெட்
நான்காம்	4 நபர்க்கு	ரெஃப்ரிஜிரேட்டர்
ஐந்தாம்	5 நபர்க்கு	வாஷிங் மெஷின்
ஆறாவது	6 நபர்க்கு	தங்க சவரன் (8 கிராம்)
ஏழாவது	7 நபர்க்கு	2-இன்-1 போர்ட்டபிள்
எட்டாவது	8 நபர்க்கு	மிக்ஸி
ஒன்பதாவது	9 நபர்க்கு	ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் [illegible]
பத்தாவது	10 நபர்க்கு	பிரஷர் குக்கர்



தனரேகா
சேமியுங்கள் மாதம் ரூ.100/-

பரிசுகள்	அதிர்ஷ்ட சாலிகள்	பரிசுகள்
முதல்	1 நபர்க்கு	கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டர்
இரண்டாம்	2 நபர்க்கு	ரெஃப்ரிஜிரேட்டர்
மூன்றாம்	3 நபர்க்கு	வாஷிங் மெஷின்
நான்காம்	4 நபர்க்கு	[illegible]
ஐந்தாம்	5 நபர்க்கு	[illegible]
ஆறாவது	6 நபர்க்கு	மிக்ஸி
ஏழாவது	7 நபர்க்கு	ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் [illegible]
எட்டாவது	8 நபர்க்கு	பிரஷர் குக்கர்
ஒன்பதாவது	9 நபர்க்கு	[illegible]
பத்தாவது	10 நபர்க்கு	1 கிராம் தங்க நாணயம்

தனலக்ஷ்மி ஜீவல்லர்ஸ்

59, உஸ்மான் சாலை, (பனகல் பார்க் அருகில்), தி.நகர்,
சென்னை-600 017. தொ.பே.: 443697, 445293, 445242
[illegible]: 14/33-A, [illegible] தெரு, [illegible] - 524 001.

visit our Stall கண்காட்சி மற்றும் தொழிற்பொருட்காட்சி, தீவுத்திடல்.

அத்தீர்த்தங்கரர்களின் பாதையைப் பின்பற்றும் மக்களையும் காத்து வருகின்றனர். குறிப்பிட்ட சில காலத்திற்குப் பிறகு இத் தேவர், தேவதைகளும் மானிடப் பிறவி எடுத்துப் பிறவாமை எய்துவர் என்பது ஜைன ஐதீகம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அமையப் பெற்ற இவ்வாலயத்திற்கு வரலாறு உண்டு. இளவரசன் ஜினதத்தராயன் என்பவன் தன் சிற்றன்னையால் அதிக துன்பம் அடைந்தான். அவனின் தந்தையே அவனைக் கொல்ல முற்பட்டார். அப்பொழுது ஒரு முனிவர் இவ்விளவரசனுக்கு பத்மாவதி விக்ரகத்தையும், ஓர் குதிரையையும் கொடுத்துத் தப்பிக்கச் செய்தார். மன்னரின் வீரர்கள் இளவரசனை எவ்வளவோ கொல்ல முயன்றும் முடியாமல் தடுத்தாள் பத்மாவதி. இறுதியில் நீண்ட பயணத்தினால் களைப்படைந்த இளவரசன் ஜின தத்தராயன் ஒரு மரத்தடியினில் விக்ரகத்தை வைத்து விட்டுத் தானும் அருகிலேயே உறங்கினான். தேவதை அவனது கனவில் தோன்றி தனக்கு அவ்விடத்திலேயே ஆலயம் அமைக்குமாறு பணித்தாள். மேலும் அவ்விடத்திலேயே அவனது அரசினை அமைக்குமாறும் கூறினாள். அதற்குத் தேவையான பணத்தினைப் பெற இரும்பினைக் கொண்டு தன் பாதங்களைத் தொட்டாலும் அது தங்கமாகும் எனக் கூறினாள்.

தூங்கி விழித்த இளவரசன் தான் கண்டது கனவுதானே என எண்ணி விக்கிரகத்தைத் தூக்கிக் கொண்டு பயணத்தைத் தொடர முனைந்தான். ஆனால் அவனால் விக்கிரகத்தைத் தூக்க இயலவில்லை. கனவில் சொன்னது உண்மை என உணர்ந்த இளவரசன் அதன்படியே இரும்பினைத் தங்கமாக்கி பணம் சேர்த்து ஆலயம் கட்டி மணம் புரிந்து அரசனாய் வாழ்ந்தான். அன்று முதல் இவ்விடம் ஹீம்சா - தங்கத்தின் பிறப்பிடம் என வழங்கப் பெறலாயிற்று. ஒரு நாள் அரசன் குளத்தில் இரண்டு நல் முத்து கிடைக்கப் பெற்றான். மனித மனம்தானே! எனவே உயர்ந்த முத்தினை தன் மனைவிக்கும் சற்று தரம் குறைந்த முத்தினை பத்மாவதி அம்மனுக்கும் அளித்தான். மறுநாள் வியக்கத்தக்க வகையில் உயர் முத்து அம்மனிடமும், சற்று தரம் தாழ்ந்த முத்து அரசியிடமும் இடம் மாறியிருந்தது. தன் தவறினை உணர்ந்த அரசன் தெய்வத்திடம் மன்னிப்புக் கோரினான். அப்பொழுது அம்மன் ''இப்பொழுது கலியுகம் தோன்றி விட்டது. எனவேதான் இவ்வாறு நிகழ்கின்றது. நான் இக்கிணற்றுக்குள் இறங்கி விடுவேன். நான் இருந்த இவ்விடத்தில் வைக்கப்படும் எனது மற்றொரு விக்ரகத்தின் மூலமாகத்தான் என்னைப் பார்க்க வரும் அன்பர்களுக்கு அவர்களின் பிரச்னைகளுக்கு பூ சொரிந்து பதில் கூறி வழி நடத்துவேன். இங்குள்ள குளத்தின் நீர் வற்றாத வரை இவ்வாக்கு சத்தியம் தவறாது நடக்கும்'' எனக் கூறினாள்.


எத்தனையோ நீர் தட்டுப்பாடு தோன்றிய காலத்திலும் இக்குளத்தின் நீர் வற்றியதில்லை. அன்பர்கள் மனத்தில் கேட்கும்



கைக்குழந்தைக்குத் தாய்ப்பாலையே பூரண உணவாகக் கொடுக்கும் வரை சில மாதங்கள் வரையிலாவது மீண்டும் கருத் தரிக்காது'' என்று பாரம்பரியமாக நிலவி வரும் கருத்தைச் சமீப காலம் வரை விஞ்ஞானிகள் ஏற்கவில்லை. ஆனால் சமீப ஆய்வுகளின்படி இது உண்மையென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்கிறது நியூ யார்க்கிலிருந்து வெளிவரும் 'தெட்'வொசக்' என்ற மருத்துவ சஞ்சிகை. மீண்டும் மீண்டும் பால் சுரக்கும் போது ஒரு குறிப்பிட்ட ஹார்மோன் பாதிக்கப்பட்டு, அது சினை முட்டைகள் உருவாவதைத் தடுப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆதிவாசிகளுக்கு அதிகமாகக் குழந்தைகள் பிறக்காமலிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

ஆனால் குழந்தைக்குத் தாய்ப்பாலைக் குறைத்துப் பிற உணவுகளை அதிகமாகக் கொடுக்கத் துவங்கினாலோ, மாதவிலக்குத் துவங்கினாலோ, அல்லது குழந்தை பிறந்து ஆறு மாதங்கள் ஆனாலோ (இவற்றில் எது முதலில் நிகழ்ந்தாலும்) இந்தப் பாதுகாப்பு நீங்கிவிடுகிறது.

- அ. ஷண்முகசுந்தரம்



பெரிய குடும்பம் இருந்தா....
பெரிய பிரஷர் குக்கர் தேவை.
ஆனால், என் குடும்பமோ...
அதுக்காக பிரஷர் பேன் போதுமா?
எனக்கு தேவை இந்த அளவில
அறிமுகம் Anantha
* Extra deep
* 2-in-1
Pan cooker
இதுதான் குக்கர் இதுதான் பேன்
KCP
KASIYANANTHA COOKING RANGES PVT. LTD.
No. 5, SIDCO INDUSTRIAL ESTATE,
PETTAI TIRUNELVELI 627 010.
Distributors:-
KASYANANTHA TRADERS
38, Vengu Chetty Street
Park Town, Madras-600 003
Ph: 568885
அளவான குடும்பத்திற்கு சரியான தேர்வு
TWC

பிரச்னைகளுக்குத் தன் மீதிருந்து பூ விழுந்து பதில் சொல்வதன் மூலம் தேவி அனைவருக்கும் அருள் புரிகின்றாள். இது இவ்விடத்தின் மகிமை. இதனை இவ்வாலயத்தினர் பிரகடனப்படுத்தாமல் இருப்பதன் நோக்கம் சத்தியங்கள் சந்தைப் பொருளாக ஆக்கப்பட்டுவிடக் கூடாதே என்ற பயம்தான்.

இச் செய்தியினை இத்தனை விரிவாக நான் கூறும் காரணம், எந்த விதப் பாகுபாடும் இன்றி அனைத்து மக்களும் இங்கு வரும் காரணம், இங்கு இயங்கும் சக்தியை நம்புவதால்தானே. கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தி இப்பிரபஞ்சம் முழுவதுமே கொட்டித்தான் கிடக்கின்றது.

நல்லெண்ணங்கள் சக்தியை வளர்க்கும். தீய எண்ணங்கள் சக்தியைக் குறைக்கும். ஆக உலகில் துன்பம் நீங்கி இன்பம் பெருக சக்தி வேண்டும். இச் சக்திதான் பராசக்தியின் துளியாக, இறை அம்சமாக ஒவ்வொரு பெண்ணினுள்ளும் கலந்து உள்ளது. எனவேதான் உலகில் உயரிய அன்புக்கு இலக்கணமாகிய தாயன்பைக் குறிக்கின்றனர். சாஸ்திரத்தில் கூட 'மாத்ரு தேவோ பவ' என்கின்றனர். உறவுகளில் நெருக்கமான உறவுக்கு எடுத்துக் காட்டாக மனைவி கணவன் மீது கொண்டிருக்கும் காதலைக் கூறுகின்றனர்.

பெண்ணிற்கு வயதிற்கேற்ப பல கதாபாத்திரங்கள். மகள், சகோதரி, மனைவி, அன்னை என. ஆனால் இவையனைத்தும் பராசக்தியின் பல பிரிவுகள்.

ஆகவே உலகின் இயங்கு சக்தியாய் விளங்கும் பெண்ணே 'நீயே உன் குடும்பத்தின் பராசக்தி. வற்றாத ஜீவநதி. எனவே உன்னின் எண்ணங்கள் உயர்வாய் இருத்தல் வேண்டும். அப்போதுதான் உலகின் தரம் உயரும்.


ஆக்க சக்தியாகிய பெண் தாயுருவில் பொதுவில் கூறப்பட்டாலும் முதலில் அவள் ஒரு நல்ல மனைவி. கணவனையே குழந்தையாய் பாவித்து அன்பு செலுத்துபவள். குணமுள்ள பெண்ணாய் கருத்தில் நின்று, புத்திசாலி பெண்ணாய் கவனத்தைக் கவர்ந்து, அழகான பெண்ணாய் கலையுணர்வு மிகுந்து, பாசமெனும் மானஸீக அழகால் அனைவரையும் ஆட்கொள்பவள். கணவனின் இதயத்தில் அரசியாய், பராசக்தியாய் வாழ்பவள்.

ஆக ஒவ்வொரு பெண்ணும் இவ்வுலகமெனும் பூந்தோட்டத்தின் வற்றாத ஜீவநதி. அவளே பூந்தோட்டம். அவளே பூவுலகம்.


(முற்றும்)

– டாக்டர் கமலி ஸ்ரீபால்





திருமதி சுப்புலட்சுமியின் சுவையான
வெங்காய சாம்பாருக்கு எங்கள் தனியா பற்றி
நாங்கள் அறிந்திருப்பது போல உங்கள் தனியா
பற்றி நீங்கள் அறிய வேண்டும்.
அறிமுகம்: தாரா. தூய இந்திய





மசாலாக்கள்.



100 கிராம் துவரம் பருப்பை $^{3}/_{4}$ லிட்டர் தண்ணீரில் வேகவிடவும். பிறகு 100 கிராம் சின்ன வெங்காயம், 1 கோப்பை புளித் தண்ணீர், இவற்றைச் சேர்க்கவும். வெங்காயம் வெந்தபின் தாரா–வின் சாம்பார்பொடி 5 டீஸ்பூன் சேர்க்கவும். மேலும் 5 நிமிடங்கள் கொதிக்க விடவும்.

தாராவின் சாம்பார் பொடி–யில் மிகச் சிறந்த இந்திய மசாலா வஸ்துக்கள் உள்ளன. இதில் உள்ள தனியா ராஜஸ்தானில் கோட்டாவிலிருந்தும், மகாராஷ்டிராவில் தேர்ந்தெடுத்த சில இடங்களிலிருந்தும் கவனத்துடன் எடுக்கப்பட்டது.

வாணலியில் 2 டீஸ்பூன் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் $1^{1}/_{2}$ டீஸ்பூன் கடுகும் சிறிது கருவேப்பிலையும் சேர்த்து கடுகு வெடித்ததும் பருப்புடன் சேர்க்கவும். தேவையான உப்பு சேர்க்கவும்.

சுடச்சுட இட்லியுடன் ரசித்து உண்ண சுவையான சாம்பார் தயார்.





THARA
PURE INDIAN SPICES

உங்கள் வாழ்வில் விறுவிறுப்பு ஊட்டும் தூய மசாலாக்கள்.

லிப்கோ மசாலாஸ் பிரைவேட் லிமிடெட்–டின் தரமான தயாரிப்பு

வித்தியாசமான வேலை செய்யும் சில

★ தீப. அருணாசலம்



வீட்டில் ஒரு மங்கலமான நிகழ்ச்சி என்றாலே அதை பெரிய சுமங்கலிப் பெண் ஒருவர் கையில் குத்து விளக்கேற்றி வைக்க நிகழ்ச்சி துவங்கும். இன்று தமிழ் நாட்டில் குறிப்பாகச் சென்னையில் எங்கு திறப்பு விழாக்கள் நடந்தாலும் அதை விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பவர் இந்தியன் வங்கியின் தலைவரான திரு. கோபாலகிருஷ்ணன் அவர்கள் தான். அவர் விழாக்களில் கலந்து கொள்ளாத நாள் என்பதே இருக்காது என்னும் நிலை. அவருடைய தேதிகளுக்காக திறப்பு விழாக்கள் தள்ளிப் போனாலும் வியப்பில்லை. இது பற்றி அவரிடம் கேட்ட போது -

திரு. கோபாலகிருஷ்ணன்

(சேர்மன், இந்தியன் வங்கி)

''இது எப்போது ஆரம்பித்ததுன்னு எனக்குச் சரியா சொல்லத் தெரியல்லே. ஆனால் திறப்பு விழாக்கள்னு சொல்லித்தான் ஆரம்பம். விழாக்களில் விளக்கேற்றுவது சுபமான ஆரம்பம் இல்லையா? இன்று திறப்பு விழாக்கள் என்றாலே விளக்கேற்றுவது முத்திரையாகி விட்டது. அது ஒரு தனியான வேலையாகவே கருதப்படுவதில்லை. எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும். நம்மால் முடிந்தவரை மற்றவர்களுக்கு உதவ வேண்டும்' என்பதே என்னுடைய எண்ணம். நல்ல எண்ணங்களும், பிரார்த்தனைகளும் அதனையுடைய மனிதனுக்கு ஒரு நல்ல ராசி கொடுக்குமென்பது உண்மையானால் - அது தான் இன்றைய திறப்பு விழாக்களுக்கு அடிகோலியாக இருக்கும். ஆண்டவன் அருள் இருந்தால் எப்படிப்பட்ட சோதனைகளில் இருந்தும் மீண்டு வந்து விடலாம் என்பது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. இன்று என் கை ரொம்பவும் ராசி, திறந்து வைக்கும் எதுவுமே மிகவும் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கை பரவி விட்டதால்தான் - இன்று நான் கலந்து கொள்ளும் விழாக்கள் பற்றி நீங்கள் என்னைத் தேடி வந்து கேட்கும் நிலை (சிரிக்கிறார்) வீட்டில் மட்டும் தானே பெண்கள் விளக்கேற்றுகின்றனர். கோவில்களில் தினம் தினம் அந்த வேலை செய்வது ஆண்கள்தானே?''

பொதுவாக 'கேட்டியா-கேட்டியா?' என (நல்ல) செய்திகளைப் பரப்புவது பெண்களுக்கே கைவந்த கலை. ஆனால் வானொலியில் தினம் 'இன்று ஒரு தகவல்' என்ற தலைப்பில் 5 நிமிடம் பல பயனுள்ள தகவல்களைத் தரும் திரு. தென்கச்சி சுவாமிநாதன் அவர்களைச் சந்தித்த போது -

திரு. தென்கச்சி சுவாமிநாதன் :

''நான் இது போல இன்று ஒரு தகவல் சொல்ல ஆரம்பித்தது 1988-ம் ஆண்டு ஜூலை 1-ந் தேதி. அப்போது எங்கள் இயக்குனராகயிருந்த திரு. கோ. செல்வம் அவர்களிடம் 'பயனுள்ள செய்தியாக தினமும் 5 நிமிடம்' கூறலாமா? என்று நான் கேட்ட போது, அவர் என்னையே அதை வழங்கச் சொன்னார். 'தினமும் செய்தி சேகரிப்பது கடினம். வாரம் ஒருமுறை தரலாமே' என்றேன் நான். ''இதை மாதம் ஒருவராக வழங்கச் செய்யலாம். முதல் மாதம் உங்களுடைய பொறுப்பு'' என்றார். 2-ம் மாதமும் நானே தொடர வேண்டிய நிலை. இதற்குள் பலரிடமிருந்தும் பாராட்டுதல்கள், போன் கால்கள். நானே மேலும் தொடர்ந்தேன். இடையில் திரு. செல்வம் ஓய்வு பெற்று விட, இந்தப் பொறுப்பை யாரும் ஏற்க முன்வராததால் இதை நானே தொடர வேண்டிய



★ தென்கச்சி சுவாமிநாதன்

கட்டாயம். ஏதோ மாட்டிக் கொண்டு விட்டது போன்று தோன்றும் உள் உணர்வு சந்திப்பவர்கள் அனைவரும் பாராட்டும் போது தானே குறைந்து போகிறது. பெரிய வி.ஐ.பிக்கள் முதல் சாதாரண தொழிலாளிகள் வரை அனைவருமே பாராட்டுகின்றனர்.

நான் சாதாரண ஜனரஞ்சகமான தமிழில் பேசுவது கண்டு ரொம்பப் பேருக்கு வியப்பு. இதிலே வியப்பே கிடையாது. நான் படித்து விட்டு கிராமத்தில் விவசாயம் செய்து கொண்டிருந்தவன். என் முன்னால் மைக்கை நீட்டினால்... என் வழக்கப்படி நான் பேசுவது மற்றவர்களுக்கு ஆச்சர்யம் அவ்வளவுதான்.

'இன்று ஒரு தகவலை' நான் வழங்க தகவல்களைச் சேகரித்துத் தருவது பெண்கள் தான். தொலைபேசியின் மூலமும், கடிதங்களின் மூலமும் பல பெண்கள் தொடர்ந்து தகவல்களைத் தருகின்றனர். ஆரம்பத்தில் என் நிகழ்ச்சியில் நான் பெண்களை ஓரளவு கேலி செய்து வந்தது உண்மைதான். ஆனால்

''பள்ளி நாட்களிலேயே இப்படிப் பல குரல்களில் பேசி மற்றவர்களை மகிழ்விப்பேன். 'பெண் குரல்களில் பேசிப் பயிற்சி செய்தால் என்ன? வித்தியாசமாக அமையுமே' என்ற எண்ணம் என்னுள் ஏற்பட 1979-ஆம் ஆண்டு நண்பர் திரு. உமாசங்கர் ஏற்பாடு செய்த கலைவிழாவில் இலங்கை நடிகை மாலினி பொன்சேகா அவர்களின் குரலிலும், திரிசூலம் படத்தில் கே. ஆர். விஜயா அவர்களும், சிவாஜி அவர்களும் பங்குபெறும் டெலிபோன் உரையாடலையும் பேசினேன். அது மிகுந்த வரவேற்பைப் பெற இது தொடர ஆரம்பித்தது. பெண் கதாபாத்திரங்களுக்கும் தொடர்ந்து குரல் கொடுக்கிறேன். கே. ஆர். விஜயா அவர்களுக்கு ஒருமுறை நேரமின்மையின் காரணமாக நான் டப்பிங் தர அவர் அதைக் கேட்டு மிகவும் பாராட்டினார். மனோரமா அவர்களுக்காகப் பேசும் வாய்ப்பு வந்த போது நான் ஊரில் இல்லாததால் அந்த வாய்ப்பு



* கோபாலகிருஷ்ணன்

சில பெண்களே என்னைத் தேடி வந்து மிரட்டியதால் கேலியைக் குறைத்து விட்டேன். 'இந்த கேலி' பற்றி என் மனைவி மிரட்டுவது கிடையாது. ஏன்னா அவள் எல்லோரும் பாராட்டற இந்த நிகழ்ச்சியைக் கேட்டதே கிடையாது (சிரிக்கிறார்). வழக்கமாக இந்த நிகழ்ச்சியை ஒருநாள் முன்னதாகத்தான் ஒலிப்பதிவு செய்வேன். சில சமயம் நான்கு நாட்களுக்கு முன்பு கூடப் பதிவு செய்வது உண்டு.

மிமிக்ரி கலைஞர்களில் சாதாரணமாக புகழ்பெற்ற ஆண்களின் குரல்களில் பேசுவோர்தான் அதிகம். ஆனால் பி. பானுமதி, எஸ். வரலட்சுமி, கே. ஆர். விஜயா, கண்ணாம்பா, மனோரமா, சௌகார் ஜானகி ஆகியோர்களின் குரலில், அதே ஏற்ற இறக்கங்களுடன் பேசுவதுடன், திரையில் பல பெண் கதாபாத்திரங்களுக்கும் 'டப்பிங்' பேசும் திரு. நீப அருணாசலம் அவர்களைச் சந்தித்த போது -

தவறி விட்டது. ஒரு முறை சிங்கப்பூரில் என் நிகழ்ச்சி நடந்த போது அந்த ஊரின் தொலைகாட்சி நிலையத்தைச் சேர்ந்த திரு. தம்பையச் செட்டியார் அவர்கள் என் குரலைப் புகைப்படத்திற்கு ஒப்பிட்டுப் பேசினார். 'எந்தக் குரலானாலும் அப்படியே பேசி அந்தக் காட்சியை கண்முன் கொண்டு வருகிறீர்கள்' என்றார். நம் முதல்வர் அவர்களின் குரலில் நான் (மேடைகளில்) பேசுவதை மக்கள் விரும்பி வரவேற்கின்றனர். எந்தக் கதாபாத்திரத்திற்கும் ஏற்ற வகையில் அவர்கள் நினைக்கும் 'எபெக்ட்' கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் என்னைத் தேடி வரும் தயாரிப்பாளர்களுக்கு மனநிறைவு தரும் வகையில் என்னால் செய்ய முடிகிறது என்ற திருப்திதான் என்னைத் தொடர்ந்து இந்தத் துறையில் நிற்க வைக்கிறது.''

சந்திப்பு : வைதேகிதேசிகன்


சமீபத்தில் மனதைக் கசக்கிப் பிழியும் விஷயம் ஒன்று பரவலாகப் பேசப்பட்டது. அப்புறம் எத்தனையோ பரபரப்பான நாட்டு நடப்புச் செய்திகள் - அடுத்தடுத்து வந்த அரசியல் அலைகளிலே இந்தச் செய்தி, மழலைகளின் ஈனக் கதறல் - மறைந்தே விட்டது. ஆனாலும் சம்பந்தப்பட்டவர்கள் ஓயவில்லை என்பதை நேரில் பார்த்துத் தெரிந்து கொண்ட போது ஆறுதலாகத்தான் இருந்தது.

மதுரைக்கருகே, உசிலம்பட்டி அடுத்து என நிறைய இடங்களில் பெண் குழந்தைகள் பிறந்தவுடனே, கொன்று விடுகிறார்கள் என்று பத்திரிகைகள் பேசி ஓய்ந்தன. சமீபத்தில் சேலம் மாவட்டம் அருகே மிகப் பெரிய அளவில் இக் கொலைகள் நிகழ்ந்ததை, நிகழ்ந்து வருவதைப் பரபரப்பாகச் செய்திப் பத்திரிகைகள் பேசின. இந்தக் கொடூரத்திற்கு முடிவு கட்டும் வகையில் நம்முடைய முதல்வர் ஜெயலலிதா அரசுத் தொட்டில்களை அமைக்கும்படி ஆணை விட்டதை நாம் அனைவரும் அறிவோம். 'உங்களுக்குப் பெண் குழந்தைகள் வேண்டாமென்றால் கொன்று விடாதீர்கள். அரசுத் தொட்டிலில் கொண்டு வந்து போடுங்கள். அரசே அக் குழந்தைகளை வளர்க்கும்' என்றார். சவக்குழிக்குப் போக வேண்டிய சில குழந்தைகள் காப்பாற்றப்பட்டன. அப்புறம் எத்தனையோ கடக் கட அரசியல் செய்திகள்... அவற்றுள் இந்தச் சிசுக்களின் முனகல் ஈனமாகக் கரைந்து விட்டது. சேலத்தில் இந்தப் பணி தொடர்கிறதா? பெண் சிசுக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டதா? பல கிராமங்களுக்குப் போய்ப் பார்த்தேன். காதில் விழுந்த செய்திகள் நெஞ்சைப் பிசைந்தது.

பச்சை மண்ணை பச்சை மண்ணுக்கே அனுப்பிய கிராதகர்களை என்னவென்று சொல்வது? அடிபட்டால் அம்மா எனத் தாவி ஓடுவோம். ஆனால் அந்த அம்மாவே தாய்ப் பாலுக்குப் பதிலாக எருக்கம்பாலை விட உடந்தையாக இருந்தால்... யாரிடம் போய் முறையிடுவது?

கொல்வதில்தான் எத்தனை விதம், எத்தனை மனோதத்துவம்? குழந்தை பிறந்து மூன்று நாட்களுக்குள் கொன்று விடுவார்களாம். ஏனென்றால் தாய் மூன்று நாட்களுக்கு மேல் தாய்ப்பால் கொடுத்து விட்டால், அவளுடைய தாய்ப்பாசம் குழந்தையைக் கொல்ல விடாதாம். எனவே பிறந்த ஓரிரு நாளில் கதையை முடித்து





பிஞ்சுகளுக்கு நஞ்சை ஊட்டி...

விடுகிறார்கள். எருக்கம்பாலைச் சர்க்கரை கலந்து (அடேங்கப்பா, என்ன கருணை) கொடுப்பது, நெல் மணியைத் தொண்டையில் போட்டு விடுவது, குழந்தையைக் குப்புறக் கவிழ்த்து ஈரக் கோணியைப் போட்டு விடுவது... இவர்களுடைய புத்திசாலித்தனம் ஆதரவற்ற அந்தச் சிசுக்களைக் கொல்வதில் வெளிப்படுகிறது! பல கிராமங்களில் 'இதிலே' கைதேர்ந்த பெண்கள் இருக்கிறார்களாம். இவர்களை அழைத்தால் காரியத்தைக் கச்சிதமாக முடித்து விடுவார்களாம்.

அம்மாவை நேசிக்காத உயிர் எது? அம்பிகையை வணங்காத கரங்கள் உண்டோ. ஓய்ந்து உட்காரும் போது அம்மா என்கிறோம். அந்த அம்மாவான பெண்ணை யாரேனும் வெறுப்பார்களோ? நதியை, கடலை, செடியை எல்லாவற்றையும் பெண்ணாகப் போற்றும் கலாசாரம் கொண்ட இந்த நாட்டில் இப்படி ஒரு கொடுமையா? ஏன், ஏன், ஏன்...?

''இந்தக் குழந்தைகளைப் பெத்தெடுத்த ஆஸ்பத்திரிக்கே எங்களால பணம் கட்ட முடியலே. என் கணவர் ரொம்பக் கஷ்டப்பட்டார். அப்படியிருக்கறப்ப எனக்குப் பொறந்த ரெட்டை பொம்பள பிள்ளைகளை நாங்க எப்படி வளக்கறது? அதனால தான் எம்புருஷனும், மாமியாருமா சேர்ந்து கொன்னுட்டாங்க'' என்கிறார் ஆத்தூர் அருகேயுள்ள மொப்பங்காடைச் சேர்ந்த சாந்தி.

மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கும் பல கிராமங்களில் பெண் குழந்தைகள் என்றாலே பயம். திருமணம் என்று வந்து விட்டால் வரதட்சணை, கல்யாணச் செலவு என இழுக்கும். அன்றாட சாப்பாட்டிற்கே அவதிப்படும் இவர்கள், திருமணத்தை வரதட்சணை கொடுத்துச் செய்யவில்லையென்றால் உறவினர்கள் கேவலமாகப் பேசுவார்கள். இருபது வருடத்திற்கப்புறம் நடக்கப் போகும் கௌரவ இழுக்கிற்குப் பயந்து தாங்கள் பெற்ற குழந்தைகளுக்குத் தாங்களே சமாதி கட்டி விடுகிறார்கள்.

கூட்டாத்துப்பட்டி என்ற கிராமத்தில் ஒரு கிராமத்து மகளிர் சங்கத்திடையே பேசிக் கொண்டிருந்தேன். ஐம்பது பெண்கள் கூடி 'கம்யூனிடி சர்வீஸ் கில்டு' மூலம் சங்கமாக அமைத்திருக்கிறார்கள். அவர்களிடம் இது பற்றி விசாரித்த போது -

''இதெல்லாம் ரொம்ப சர்வ சாதாரணமாக பண்றாங்க. எங்கள்ள யாரும் பண்ணலேன்னாலும் கேள்விப்படறோம். என்ன பண்றது? பொம்பளன்னாலே கேலியா பேசறாங்க. இப்பக் கூட இந்த மாதிரி சங்கம் அமைச்சது எங்க வீட்டு ஆம்பளைங்களுக்கு எல்லாம் பிடிக்கவே இல்லை. ஆனாலும் நாங்க ஏதாவது சாதிக்கணும்ங்கற ஆசை நெறைய இருக்கு'' என்று செல்வி என்ற பெண் பேசிக் கொண்டிருக்கும்போதே ஒரு வயதான நபர் குடித்து விட்டு வந்து வாசலில் நின்று கத்தினார். ''என்னங்கடீ? இந்த நாட்ல எத்தினி ஆறு ஓடுதுன்னு தெரியுமா? நம்ப நாட்டு தலைநகரம் எதுன்னு தெரியுமா? அதெல்லாம் தெரியாம என்னாடீ பெரிசா கிழிக்கப் போறீங்க?''

எங்களுடன் வந்திருந்த அரவிந்தன் அவரைச் சமாதானப்படுத்தி இழுத்துக் கொண்டு போனார். அந்தக் கூட்டத்தில் இருந்த மீனாட்சி மென்மையாகப் புன்னகைத்தார்.

''இந்த மாதிரி கேக்கறப்போ எங்களுக்கு ரொம்பக் கோவமா வருது. இதுங் காட்டியும் நாங்க ஏதாச்சும் பண்ணனும்!''

''வாழ்க உங்க கோபம். நீங்க தொழில் பழகுங்க. உங்க வருமானம் உயர்ந்துச்சுன்னா அப்ப தானா இதெல்லாம் அடங்கிடும். அதுவுமில்லாம உங்க ஊர், உங்களுக்குத் தெரிஞ்சவங்க யார் வீட்டிலே யாவது இப்படி பெண் சிசுக் கொலை பண்றா மாதிரி தெரிஞ்சா தடுத்துடுங்க. அதை உங்க சங்கத்தின் குறிக்கோளாவே ஏத்துக்கங்க'' என்றேன்.

''யாராச்சும் முன்னாடி சொல்லிட்டு கையிலும் கேட்கிறார்கள். என் மருமவளுக்கு ஏற்கெனவே ரெண்டு பொட்டைங்க. இதிலே இன்னும் ரெண்டு சேர்ந்தா நாங்க என்ன பண்ண?'' என்கிறார் பாட்டி கண்ணம்மா.

அதே போல ராசிபுரம் அருகே 'கொடம் பக்காட்டு காடு' என்னும் கிராமத்திலும் பூங்கொடி என்ற பெண்ணுக்குப் பிறந்த பெண் சிசுவைக் கொலை செய்ததைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். தோண்டத் தோண்ட பெண் சிசுக்களின் பிணங்கள்தான் சேலம் மாவட்ட கிராமங்களில் வருமோ என வயிற்றைக் கலக்குகிறது.

''எல்லோரும் வரதட்சணைக் கொடுமையைக் காரணம் காட்டுகிறார்கள். இது வசதியற்றவர்களுக்குத்தானே. வசதியான வீடுகளில் கூட இந்தக் கொடுமைகள் நடக்கின்றன. 'பெண்' என்றாலே வெறுப்பு.



செய்யறாங்களா என்ன. பொம்பளப் புள்ள பிறக்குது. திடீர்னு மறுநாள் பார்த்தால் செத்துப் போயிடுச்சுன்னு சொல்லிடறாங்க...'' என்கிறார்கள்.

வெளியில் தெரிந்த கொலைகள் பல. தெரியாமல் எத்தனை பிஞ்சுகள் மண்ணிலே புதைந்து போயினவோ. கொளத்தூர் அருகே அமராவதி பெற்றெடுத்த இரண்டு பெண் குழந்தைகளை பாட்டி கண்ணம்மாவும், தாத்தா முத்துசாமியும் சேர்ந்து கொன்று புதைத்து விட்டார்கள். ஆரோக்கியமாகப் பிறந்த சிசுக்கள் மறுநாள் மண்ணுக்குள் போக என்ன காரணம் என்று மேட்டூர் அரசுப் பெண் டாக்டர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அப்புறம் விசாரித்ததில் மண்ணோடு சேர்ந்து விஷயமும் வெளியே வந்திருக்கிறது.

''சாதாரண விவசாயிக்குக் கூட பதினைந்து பவுன் நகையும், பதினைந்தாயிரம் சமீபத்தில் ஒரு புகார் வந்து ஒரு வீட்டிற்குப் போனோம். பெரிய வீடு. நல்ல வசதியானவர்கள். அப்படி ஒரு சம்பவம் நடக்கவேயில்லை என்று சொல்லி விட்டார்கள். அப்புறம் விசாரணையில் அவர்கள் குடும்பத்தில் பிறந்த குழந்தையைக் கொன்று விட்டார்கள் என்று தெரிந்தது'' என்றார் சேலம் மாவட்ட எஸ். பி. சுப்பிரமணியம். தொடர்ந்து,

''நாய், பூனைகள் கூட தாங்கள் பெற்ற குட்டிகளை அப்படிப் பாதுகாக்கும். குட்டி போட்ட சில நாள் வரை யாரும் அவற்றின் அருகே கூட போய் விட முடியாது. அப்படிச் சீறும். ஆனால் விலங்கினங்களை விட மனித இனம் தாழ்ந்து விட்டோம். தங்கள் குலக்கொழுந்துகளைத் தாங்களே கொன்று, தாங்களே குழிவெட்டிப் புதைக்கிறார்கள். இதற்காகக் காவல் துறையில் நிறைய

நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம்'' என்றார்.

ஒவ்வொரு கிராமத்திலும் பெண் சிசுக் கொலை செய்வது கொலைக் குற்றம், கொலைக்கு உடந்தையானவர்கள் தண்டிக்கப்படுவார்கள், தகவல் தருபவர்களுக்குச் சன்மானம் உண்டு எனத் தண்டோரா போடப்படுகிறது. ''இதனால் இப்போதெல்லாம் பயம் வந்திருக்கிறது. முன்ன மாதிரி இல்லை. கண்டுபிடிச்சா ஜெயில்ல போட்டுடுவாங்க என்று யோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்'' என்கிறார் எஸ்.பி.

மாவட்ட ஆட்சித் தலைவர் ராமையாவும், எஸ்.பி. சுப்பிரமணியமும் இணைந்து



* அமைச்சருடன் கலெக்டர்

'பெண் சிசுக் கொலைத் தடுப்பிற்காக நிறைய பாடுபடுகிறார்கள். ஒவ்வொரு நாளும் கிராமங்களுக்குச் சென்று பெண்களுக்குப் புரியும் வகையில் அறிவுரைகளைச் சொல்கிறார்கள். இதைப் பற்றிய விழிப்புணர்ச்சியை வெகு பாடுபட்டுக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள் எனலாம்.



* கிராம மக்கள் நடுவே பேசுகிறார் எஸ். பி.

ஆட்சித் தலைவர் ராமையா சொல்லும் போது, ''வரதட்சணைக் கொடுமையால்தான் பெண் சிசுக்களைக் கொல்கிறோம் என்கிறார்கள். இதனால் இப்படிப்பட்ட மனப்பான்மையை மாற்ற அவசர காலத் திட்டங்கள், நீண்ட காலத் திட்டங்கள் எனப் பிரித்து இருக்கிறோம். அந்த வகையில்தான் அரசுத் தொட்டில்களை அமைக்க, மாண்புமிகு முதல்வர் ஆணையிட்டார்'' என்றார்.

''இது இப்போது வேறுவிதமாகப் பேசப்படுகிறதே. இப்படி அரசுத் தொட்டில்களை அமைத்து விட்டால் பலரும் தாங்கள் பெற்ற குழந்தைகளைப் பொறுப்பில்லாமல் கொண்டு வந்து போட்டு விடுவதற்கு அல்லவா வழிவகுக்கிறது.''

''அது அப்படி அல்ல. தொட்டில்கள் என்பது சிம்பாலிக்காக பெண் சிசுக் கொலையைத் தடுப்பதைக் காட்டுகிறது. ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகிறது. பரபரப்பாகப் பேசப்படும் போதுதானே அந்த விழிப்புணர்ச்சி ஏற்படுகிறது. இந்த மாவட்டத்தில் எத்தனையோ பெண் குழந்தைகள் பிறக்கவில்லையா? இதுவரை பதிமூன்று குழந்தைகள்தான் வந்துள்ளன. அவற்றை அரசாங்கம் போற்றிப் பாதுகாக்கும்தான்.

ஆனால் இந்தப் பிரச்னையின் அடிப்படை என்ன, அதைப் போக்க என்ன வழி என்றுதான் பார்க்க வேண்டும். சேலத்திலே பெரிய ஊர்வலங்கள் கூட்டங்கள் சமூகநலத் துறை அமைச்சர் திருமதி இந்திராகுமாரி தலைமையில் நடைபெற்றன. தவிர 'பெண்' என்றால் கேவலம் இல்லை. அவள் ஒரு சொத்து, அவளால் நிறைய பயன் உண்டு என்பதை உணர வைக்க நீண்ட காலத் திட்டங்கள் போட்டு இருக்கிறோம்.

பெண்களின் பெயரில்தான் இலவச மனைப் பட்டாக்கள் வழங்குகிறோம். தொழில்களில் மானிய உதவி கொடுக்கிறோம். செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் தொழில் சொல்லிக் கொடுக்கிறோம். பெண்ணால்தான் ஒரு குடும்பத்தில் விளக்கு எரியும் என்ற நிலைக்கு இந்தக் கிராமத்துப் பெண்களைக் கொண்டு வந்து விட வேண்டும். அப்போது ஆண்களும், இந்தச் சமுதாயமும் எருக்கம்பாலைக் கீழே வைத்து விடும்'' என்றார் ராமையா.

நாங்கள் கிராமங்களுக்குப் போய் பலரையும் பார்த்துப் பேச எஸ். பி. சுப்பிரமணியம் மிகவும் உதவி செய்தார். ''நகரங்களில் உள்ள பெண்கள் எல்லாம் இந்தக் கொடுமைகளை உணர வேண்டும். பெண்ணைத் தெய்வமாக வழிபடும் இந்த நாட்டிற்கு இப்படி ஒரு அவப்பெயர் ஏற்பட்டிருப்பதைத் தடுக்க வேண்டும்'' என்றார் மனமுருக.



* தமிழ்த்துப் பிறந்த குழந்தைகளுக்குப் பெயரிடுவோர் முதல்வர்.

சேலத்தில் உள்ள பெண்கள் சங்கங்கள் ஒன்று இரண்டு இந்தச் சேவைக்குத் தோள் கொடுத்தால் மிகவும் சந்தோஷப்படுவோம் என்கிறார்கள் இவர்கள். ஒவ்வொரு மகளிர் சங்கமும் ஒன்று அல்லது இரண்டு கிராமங்களைத் தத்தெடுத்துக் கொண்டு அங்கு பெண் சிசுக் கொலையே இல்லை என்னுமளவுக்குக் கொண்டு வரலாமே. பெண்கள் முன்னேற இன்று நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. இருபது வருடம் கழித்து இந்த உலகம் எவ்வளவோ மாறும். அப்போது வரதட்சணை என்பதெல்லாம் இருக்குமோ தெரியாது; எனவே அதை நினைத்து இப்போதே குழந்தைகளைக் கொன்று குழியில் போடுவானேன்... இவைகளையெல்லாம் எளிய கிராமத்துப் பெண்களுக்கு உணர்த்தலாம்.

மகளிர் சங்கங்கள் நாடகங்கள், பாட்டுக்கள் மூலமாக பெண் சிசுக் கொலைக்கு எதிரான இயக்கத்தைத் தொடங்கலாமே! பெண்கள் நினைத்தால் ஆகாத காரியம் ஏதேனும் உண்டோ!

– மஞ்சுளாரமேஷ்

தை மாதம் பிறந்து விட்டாலே நல்ல நாள், பண்டிகை என ஒவ்வொன்றாக வரும். தை வெள்ளிக்கிழமை பூக்கள் விலை ராக்கெட் மாதிரி ஏறிவிடும். ஒரு முழம் மல்லிகைப் பூவை ரூ 5க்குக் கூட விற்பார்கள். பூப் போடாமல் பூஜை செய்தால் சிலருக்கு மனத் திருப்தி இராது. நான் இப்படி ஒரு யுக்தி செய்து சமாளித்தேன். வியாழன் அன்று பூக்கள் மலிவாக இருக்கும். நிறைய பூக்கள் வாங்கி தண்ணீர் தெளித்து கர்சீப்பில் சுற்றி எவர்சில்வர் டப்பாவில் மூடி வைத்து விட்டேன். பூஜையன்று அன்றலர்ந்த பூக்கள் கிடைத்தன.



– லக்ஷ்மி துரைஸ்வாமி

இதற்கு என்ன செய்வது?

விநோதினி, சென்னை - 50.

எனக்குக் கார் ஓட்டக் கற்றுக் கொள்ள மிகவும் ஆசையாயிருக்கிறது. டிரைவிங் ஸ்கூலில் போய் விசாரித்தால் ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி சொல்கிறார்கள். வாகனங்களை முறையாக ஓட்டக் கற்றுக் கொள்வது எப்படி?

பதில் : உங்கள் வட்டத்திற்குரிய வட்டார போக்குவரத்து அலுவலர் (ஆர்.டி.ஓ.) அலுவலகத்தை அணுகி, தற்காலிக வாகன ஓட்டும் உரிமம் (டெம்ப்ரவரி லைசென்ஸ்)க்கு விண்ணப்பித்துப் பெற வேண்டும். விண்ணப்பிக்கும்போதே உங்கள் ரத்தப் பிரிவு, பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இரண்டையும் இணைத்து அனுப்ப வேண்டும். அவர்களிடமிருந்து டெம்பரவரி லைசென்ஸ் பெற்ற பிறகு 'L' போர்டு போட்டுக் கொண்டு வாகனத்தை ஓட்டக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போது உங்கள் பக்கத்தில் அமர்ந்து உங்களுக்கு வாகனம் ஓட்டக் கற்றுக் கொடுப்பவர் நிரந்தர வாகனம் ஓட்டும் உரிமம் (பர்மனெண்ட் லைசென்ஸ்) பெற்றவராக இருத்தல் வேண்டும். வாகனங்கள் ஓட்டக் கற்றுக் கொடுக்கும் பள்ளிகளின் மூலமாகவோ, தெரிந்தவர்களின் மூலமாகவோ கற்றுக் கொள்ளலாம்.

பரமேஸ்வரி, கோயமுத்தூர்.

நாங்கள் சமீபத்தில் எங்களுடைய சேமிப்புப் பணம், நகைகள் அனைத்தையும் போட்டு ஃப்ளாட் ஒன்று வாங்கினோம். அதில் குடிபுகுந்து புழங்க ஆரம்பித்த பிறகுதான் தெரிந்தது, தரமான கதவுகளோ, தாழ்ப்பாள்களோ இல்லை என்று. ஃப்ளாட்டை விற்றவரை அணுகியும் பயனில்லை. வேறு வழியின்றி மீண்டும் ரூ. 25,000/- செலவு செய்து வீட்டைச் சரி செய்து கொண்டோம். எங்களை ஏமாற்றிய ஃப்ளாட் கட்டியவரை என்ன செய்வது?

பதில் : இப்போதெல்லாம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மிகவும் வலிமை வாய்ந்ததாக இருக்கிறது. உங்கள் ஊர் நீதிமன்றத்தை அணுகி அங்குள்ள நுகர்வோர் பாதுகாப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். ஃப்ளாட் வாங்கும்போது உங்களுக்குள் செய்து கொண்ட ஒப்பந்தம், நீங்கள் வீட்டுக்கு வந்த உடனேயே ரிப்பேர் செய்ததற்கான பில்கள், ஆட்கள் இவற்றை ஆதாரமாக வைத்து வழக்குத் தொடரலாம். உடனடியாக நிவாரணம் கிடைக்கும்.

கண்ணகி ராமதுரை, மதுரை.

எனக்குத் திருமணமாகி எட்டு ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் நல்ல குடும்ப வாழ்க்கை என்றால் என்ன என்று தெரியாமல் இருக்கிறேன். என் கணவர் தினமும் குடித்துவிட்டு வந்து உடல்நோக அடிப்பார். படித்துக் கொண்டிருக்கும்போதே எனக்குத் திருமணம் செய்து வைத்து விட்டார்கள். மிகவும் மென்மையான முறையில் வளர்க்கப்பட்டவள் நான். எனக்கு இந்த வாழ்க்கையே பிடிக்கவில்லை. என்னை இப்படி அடித்துத் துன்புறுத்தும் இவர் மேல் கிரிமினல் கேஸ் போட்டால் என்ன? ஒவ்வொரு சமயம் கொன்று விடுவேன் என்றுகூட பயமுறுத்துவார்.

பதில் : நீங்கள் வேலைக்குப் போகும் பெண்ணா, குழந்தைகள் உண்டா போன்ற விவரங்கள் தெரியவில்லை. ஆனால் நீங்கள் உங்களை மனத்தாலும் உடலாலும் கொடுமைப்படுத்தும் கணவரை அதிகபட்சமாக வெறுக்கிறீர்கள் என்பதை மட்டும் புரிந்து கொள்ள முடிகிறது. இதற்குக் கிரிமினல் வழக்குத் தொடருவதைவிட குடும்பநல நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்ந்தால் உடனடியான நிவாரணம் கிடைக்கும்.

இப்போது குடும்பநல நீதிமன்றங்களில் திருமணம் சம்பந்தப்பட்ட கிரிமினல், சிவில் வழக்குகளை எடுத்துக் கொள்கிறார்கள். நீங்கள் நீதிமன்றத்தினை காலையில் அணுகி நீதிபதி அமர்ந்தவுடன் உங்களுடைய மனுவினை அளிக்கலாம். அவர் உடனடியாக வழக்கினைப் பதிவு செய்து கொள்வார். மேற்கொண்டு விசாரணைக்கும் நாள் குறிப்பிட்டு விடுவார். இதற்கு ஸ்டாம்ப் பேப்பரும் தேவையில்லை. அதேபோல வழக்கறிஞரும் தேவையில்லை. நீங்களே நீதிமன்றத்தில் உங்கள் வழக்கினை எடுத்துரைக்கலாம்.

நீங்கள் ஜீவனாம்சம் பெற விரும்பினாலோ உங்கள் குழந்தைகளுக்குப் படிப்புச் செலவு, உங்கள் உணவுச் செலவு இவற்றிற்கு விண்ணப்பித்தாலோ உடனடியான நிவாரணம் கூட அளிக்கப்படுகிறது. அதற்காகவும் மனு செய்து கொள்ளலாம்.

வழக்கு மன்றம் போகிறோமே, நீண்டநாள் ஆகுமோ எனப் பயப்படத் தேவை

வில்லை. விரைவில் உங்களுக்கு நிதி கிடைக்கும்.

மைதிலி ஜெயராமன், சென்னை – 18.


நான் எங்கள் பகுதியில் உள்ள ஒரு மகளிர் மன்றத்தில் உறுப்பினராக இருக்கிறேன். சென்னையில் பல இடங்களில் பெரிய ரோடுகளின் நடுவே பூங்காக்களை அமைத்து வங்கி போன்ற நிறுவனங்களால் பராமரிக்கப்படுகின்றது. செடி வளர்ப்பது, தோட்டம் போடுவது பெண்களுக்குக் கை வந்த கலை. எங்களைப் போன்ற மகளிர் சங்கங்கள் இப்படித் தோட்டங்களை அமைக்கலாமா? அந்தப் பொறுப்பினை நாங்கள் ஏற்றுக் கொள்ளலாமா?

பதில் : தாராளமாக ஏற்றுக் கொள்ளலாம். இதற்கு நீங்கள் உங்கள் வட்டாரத்தைச் சேர்ந்த போக்குவரத்துக் காவல்துறை துணை ஆணையரை அணுக வேண்டும். அவர்கள் உங்கள் விண்ணப்பத்தினை மாநகராட்சியில் உள்ள 'டிராபிக் அண்டு இன்ஜினியரிங்' துறைக்குப் பரிந்துரை செய்வார்கள். அவர்களிடமிருந்து நீங்கள் அனுமதி பெற்று உங்கள் இந்தப் பணியினை நல்ல முறையில் செய்யலாம்.

தொகுப்பு : டி. ஆர். ரமேஷ்







மிஸ். ஜானகி

தேவன் அவர்களின் மெல்லிய நகைச்சுவையுடன் கூடிய அருமையான குடும்ப நாவல்.

விலை ரூ. 37.80

(யூனியன் பப்ளிஷிங் ஹவுஸ், 51, ஜோசியர் தெரு, நுங்கம் பாக்கம், சென்னை - 94)

1993 ராசிபலன்

ஏ. எம். பிள்ளை என்ற பூபதிராஜன் 12 ராசிகளுக்கும் பலன் எழுதியுள்ளார்.

விலை ரூ. 7.00

மலர் பழ மூலிகை வைத்தியம்

மா, புளி, பப்பாளி, என் போன்றவற்றினால் ஏற்படும் பலன்கள். ஆசிரியர் : மலேஷியா வைத்தியநாதன்.

விலை ரூ. 15.00

வானமென்னும் வீதியிலே

விமானம் கடத்தப்படுவதை மையமாக வைத்து எழுதப் பட்ட கதை. ஆசிரியர் : சுஜாதா. விமானம் போலவே வேகமாக ஓடும் நாவல்.

விலை ரூ. 14.00

வேர் பிடிக்கும் மண்

வாஸந்தியின் சமூக நாவல்.

விலை ரூ. 22.00

(நான்கும் - குமரிப் பதிப்பகம், 6, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001)

புரட்சித் தலைவி அம்மானை

தமிழக முதல்வரின் மீது எழுதப்பட்ட கவிதைகள். ஆசிரியர்: சமதர்மன்.

விலை ரூ. 10.50.

(ஸ்ரீ வித்யாலட்சுமி பதிப்பகம், 564, பெரியார் ஈ. வெ. ரா. நெடுஞ்சாலை, அரும்பாக்கம், சென்னை - 600 106.)

சிநேகம் சிறக்கச் சிந்தனைகள்

ஆசிரியர் : கே. என். சரஸ்வதி. நட்பை வளர்த்துக் கொள்வது எப்படி எனக் கூறுகிறார்.

விலை ரூ. 10.00

பாரதி கண்ட புதுமைப்பெண்

கே. என். சரஸ்வதியைப் பற்றிய நூல். அவருடைய பலமுகத் திறமைகளை எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர் நிலவு.

விலை ரூ. 7.50

(இரண்டும் - கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், 38, நடேச அய்யர் தெரு, சென்னை - 600 017.)

அகத்தியர் நாடி ஜோதிடப்படி மேஷராசிப் பலன்கள்

தொகுப்பு - மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு.

விலை ரூ. 23.00

(மணிமேகலைப் பிரசுரம், த. பெ. எண். 1447, 4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 600 017.)

உங்கள் கேள்விகளுக்கு டாக்டரின் பதில்கள்

பதில்கள் : டாக்டர் கு. ப. கணேசன்

விலை ரூ. 10.00

ஆஹா அரபுநாடுகள்!

சிவசங்கரியின் அரபு நாட்டுப் பயண அனுபவங்கள்.

விலை ரூ. 20.00

(இரண்டும் - வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017.)

சந்தனக் காவியம்

இன்றைய பிரச்னைகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட சுவையான சிறு கதைகள். ஆசிரியர் : சரயு.

விலை ரூ. 15.00

(சரயு பதிப்பகம், பி - 4, பிரபாத் அபார்ட்மெண்ட்ஸ், 1, கமலாபாய் தெரு, தி. நகர், சென்னை - 600 017.)

ஒரு ஈயின் ஆசை

சிறுவர்களுக்கான கதைகள். ஆசிரியர் நாரா. நாச்சியப்பன்.

விலை ரூ. 8.00

(அன்னை நாகம்மை பதிப்பகம், 2/41, கந்தசாமி நகர், பாலவாக்கம், சென்னை - 600 041.)

பக்தியும் சக்தியும்

பக்தியினால் நமக்கு ஏற்படுகின்ற உற்சாகத்தினையும் சக்தியினையும் கூறுகிறார் பி. சி. கணேசன்.

(பாமா பதிப்பகம், 5, சிவஞானம் சாலை, தி. நகர், சென்னை - 600 017.)

நெஞ்சில் நிலைத்த கவிதைகள்

குறுந்தொகை முதல் இன்றைய கவிதைகள் வரை ஆசிரியர் பெ. கி. பிரபாகரன் பல்வேறு கவிதைகளை எடுத்துக் கொண்டு சுவையானவற்றைத் தொகுத்து வழங்குகிறார்.

விலை ரூ. 10.00

(எழில் பதிப்பகம், ஏ. பி. 1449, முதல் பிரிவு, இரண்டாவது தெரு, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை - 600 078.)

நெருப்பில் வாழ்கின்ற மலர்கள்

இன்றைய வாழ்க்கை நிலைகளை எடுத்துக் கூறும் கவிதைத் தொகுப்பு. ஆசிரியர் : நெல்லை செல்வம்.

விலை ரூ. 12.00

(செல்ல பாப்பா பதிப்பகம், கஸ்தூரி பாய் நகர் 4வது தெரு, அவகாபுத்தூர், சென்னை - 600 070.)

'ங' - மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்

ஜார்ஜ் லூயி போர்ஹேஸின் சிறுகதைகளை மொழிபெயர்த்து வழங்கியுள்ளனர்.

விலை ரூ. 6.00

(இலக்கிய வட்டத்திற்காக வெளியிடுபவர் வெ. நாராயணன், 10, வைகுண்ட பெருமாள் கோயில் சந்நிதித் தெரு, காஞ்சிபுரம் - 2.)

அம்மன் அறுசுவை சமையல் - மூன்றாம் பாகம்

சாம்பார், ரசம், பொரியல் வகைகள். தொகுப்பு : ஸ்ரீமதி காமாக்ஷி.

விலை ரூ. 16.00

அம்மன் அறுசுவை சமையல் - நான்காம் பாகம்

சிரப், வடை, இட்லி, தோசை போன்றவை. தொகுப்பு : ஸ்ரீமதி காமாக்ஷி.

விலை ரூ. 16.00

(அருள்மிகு அம்மன் பதிப்பகம், 2/2, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014.)

கடவுளைக் காதலிக்க 24 சிறந்த வழிகள்

வருடம் முழுவதும் இருக்க வேண்டிய விரதங்கள், விசேஷங்கள் பற்றிய சிறு விவரங்கள். தொகுப்பு : எஸ். இரகுநாதன்.

விலை ரூ. 9.00

(எல். ஆர். சுவாமி அண்ட் கம்பெனி, 318, அண்ணா சாலை, சென்னை - 600 018.)

மந்திர கீதை

கீதைக்கான நவயுக விளக்கத்தை எக்கிராலா கிருட்டினமாச்சாரியா வழங்கியுள்ளார். அதனைத் தமிழில் தருபவர் : ரமணன்.

விலை ரூ. 35.00

(The World Teacher Trust, 14-38-2, Muppidi Colony, Visakapatnam - 530 002.)

நல்ல பிள்ளைகளை நாம் பெறும் வழிமுறைகள்

குழந்தையை நல்ல முறையில் வளர்ப்பது பற்றிக் கூறுகிறார் ஈ. சாந்திமங்கலம் முருகேசன்.

விலை ரூ. 16.00

நலமுடன் வாழ உதவிடும் அறிவியல்

ஆசிரியர் : ஈ. சாந்திமங்கலம் முருகேசன்.

விலை ரூ. 16.00

(இரண்டும் - ஆத்ரேயா பப்ளிகேஷன்ஸ், 33, தேவராஜ முதலி தெரு, சென்னை - 600 003.)



கடைசி ஃப்ராக்குக்குப் பொத்தான் தைத்தாகி விட்டது. மொத்தம் பத்து ஃப்ராக், ஆறு அரை நிஜார், இரண்டு முழு நிஜார், எட்டு ஷர்ட்... எல்லாவற்றையும் ஒரு தடவை பிரித்து, தையல் உறுதியாயிருக்கிறதா என்று சரிபார்த்து விட்டு, மடித்து வைத்தாள் காவேரி. கடைசியாகத் தைத்த ஃப்ராக்தான் கொஞ்சம் அழுது வடிந்ததாக நினைத்தாள். துணியின் நிறம் அப்படி - சாம்பல் நிறம். முன் பக்கம் ஏதாவது பூ வேலை செய்தால் பளிச்சென்றாகி விடும். நளினியோடு பேசிக் கொண்டே செய்து விடலாம்.

நாளைக் காலை ரயிலில் நளினி வருகிறாள், டெல்லியிலிருந்து. பதினைந்து நாட்கள் இருப்பாளாம். அவள் கிளம்பினவுடனேயே இந்தத் துணிகளைக் கொண்டு போய் அனாதை ஆச்ரமத்தில் கொடுத்து விட வேண்டும். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அங்குள்ள குழந்தைகளுக்கும் புதுத் துணி தைத்து எடுத்துச் செல்வதை காவேரி வழக்கமாகக் கொண்டிருந்தாள்.

தையல் வேலை காவேரிக்குக் கைவந்த கலை. மண மாவதற்கு முன்பிருந்தே தன் துணிகளைத் தானே தைத்துக் கொள்வாள். ப்ளெயினாக ஆறு கஜம் துணி வாங்கி விதம்விதமாக மெஷின் எம்ப்ராய்டரி செய்து


தொடரட்டும்



உடுத்திக் கொள்வாள். மணமாகி, குமாரும் நளினியும் பிறந்த பிறகு, அவர்களுடைய துணிகளையும் அவளே தைத்தாள். இப்போதோ குமாருக்கு இருபத்தெட்டு வயது, நளினிக்கு இருபத்தைந்து!

அனாதை ஆச்ரமத்துக் குழந்தைகளுக்குப் புதுத் துணி தைத்துத் தருவது அவள் கடந்த நாலு ஆண்டுகளாகச் செய்யும் பணிதான் - அதாவது, நளினி மணமாகிக் கணவன் வீட்டுக்குச் சென்ற பிறகுதான்... குமார் வேலை விஷயமாக வெளிநாடு சென்று ஆறாண்டுகள் கழிந்து விட்டன... மகள் கூட இருந்தவரை காவேரிக்குத் தனிமை தோன்றவில்லை. தாய்க்கும் மகளுக்குமிடையே அப்படியொரு பாசம்... இந்த உறவு மிகவும் அழகானது, அற்புதமானது... உணர்ச்சிகளை வாய் விட்டுச் சொல்லி விவரிக்காமலேயே புரிந்து கொள்ளலாம். இரு மனங்களுக்கிடையே துல்லியமான, உறுதியான, உணர்ச்சிகளின் அழகெல்லாம் முழுமை பெற்ற ஒரு பாலம்... பெண் குழந்தை இல்லாத ஒரு தாயின் தாய்மை முழுமை பெற்றதல்ல என்று கூட காவேரி ஒவ்வொரு சமயம் நினைத்துக் கொள்வாள். குமாருக்கோ தந்தையிடம்தான் அதிக நெருக்கம்.

ருக்மிணி பார்த்தசாரதி



காஸ் அடுப்பை அலம்புவதற்குமுன் பர்னரைச் சிறிது தேங்காய் எண்ணெயைக் கொண்டு துடைத்துவிட்டு அலம்பினால் பர்னர் துருப் பிடிக்காது. நீடித்து உழைக்கும்.

- வித்யா ராமானந்

நளினி மணமாகிச் சென்ற பிறகு தன்னுள் படர்ந்த வெறுமைக்கு மருந்தாகத் தான் காவேரி சேவைப் பணியில் ஈடுபடலானாள். வாடிக்கையாகத் தான் ஜவுளி வாங்கும் பெரிய கடையில் துண்டு விழும் கால் மீட்டர், அரை மீட்டர் துணிகளை மொத்தமாக விலை பேசி வாங்கி வருவாள். பின் துணிகளின் நீளத்துக்கேற்ப, தன் திறமையையும் கற்பனையையும் இணைத்து, ஆடைகள் தைத்து விடுவாள். அனாதை ஆச்ரமத்தில்தான் எல்லா வயதுக் குழந்தைகளும் இருக்கிறார்களே! ஆக, எந்த சைஸ் ட்ரெஸ்ஸானாலும சரியே! அவளுடைய பணியைப் பற்றி அறிந்த அக்கம் பக்கத்துப் பெண்கள் நாளடைவில் தங்களிடம் இருந்த "பிட்" துணிகளையும் கொண்டு வந்து கொடுக்க ஆரம்பித்தனர்.

இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை காவேரி அனாதை ஆச்ரமத்துக்குச் செல்லும் போது துணிகளோடு கொஞ்சம் தின்பண்டங்களும் வாங்கிச் செல்வாள். ஆசையோடு எடுத்துச் செல்லும் பொருட்களை ஆசையோடு கொடுத்து விட்டு, சற்று நேரம் குழந்தைகளோடு பொழுதைக் கழித்து விட்டு, மனமெல்லாம் சந்தோஷமாகத் திரும்பி வருவாள்... இந்தப் பணியை மேற்கொண்ட பிறகு தன் மக்கள் தன்னை விட்டுப் பிரிந்து போன நிலை அவளை முன்பத்தனை வெறுமையடையச் செய்யவில்லை என்பது அதிசயம், ஆனால் உண்மை!

இப்போதோ கொடுக்க வேண்டிய துணிகள் தயார், அந்த சாம்பல் நிற ஃப்ராக்கைத் தவிர.... அதைத் தனியாக வைத்து விட்டு, மற்றதையெல்லாம் அடுக்கி, கட்டி, அலமாரியில் வைத்துப் பூட்டினாள் காவேரி... இனி பதினைந்து நாட்களை நளினியோடு கழிக்கலாம்.

நளினியோடு மட்டுமா? அவளுடைய மகள் லவ்லியோடு கூடத்தான். தன் உணர்வுகளின் தொடர்ச்சியாகத் தனக்கொரு மகள் போல், நளினியின் உணர்வுகளுக்கு லவ்லி தொடர்ச்சிதானே! தனக்கோ, நளினி இன்பம் என்றால், லவ்லி போனஸ் இன்பம்! பேத்தியின் செல்லப் பெயரை நினைத்து காவேரி தனக்குள் சிரித்துக் கொண்டாள்... குழந்தையின் பெயர் லாவண்யா. அழைப்பதோ லவ்லி!

லவ்லிக்கு மூன்று வயது நிறைந்து விட்டது. குழந்தையை அவள் ஆண்டு நிறைவின் போது பார்த்ததுதான். அதன் பிறகு நளினியின் கணவனுக்கு டெல்லிக்கு மாற்றலாகி விட்டது. "இனிமேல் நான் இரண்டு வருஷத்துக்கு ஒரு தடவைதான் வருவேன், எல்.டி.ஸி. கிடைக்கும் போது!" என்றாள் நளினி.

"ஏன்? உன் அப்பாவையும் என்னையும் பார்க்க கைப் பணம் போட்டு டிக்கெட் வாங்கி வரக் கூடாதா?" என்றாள் காவேரி.

"அந்த வாதம் உங்களுக்கும் பொருந்தும் அம்மா. நீங்கள்தான் கைப்பணம் போட்டு டிக்கெட் வாங்கி என்னையும் என் பெண்ணையும் பார்க்க வாங்களேன்!" என்றாள் நளினி.

இப்போது லவ்லிக்கு மூன்று வயது... நளினியிடமிருந்து விதம்விதமாக வண்ணப் புகைப்படங்கள் வந்து கொண்டே இருந்தன. கூடவே, மகளைப் பற்றிய வர்ணனைகள். லவ்லிக்கு ஐஸ்க்ரீம் பிடிக்குமாம். சிப்ஸ் என்றால் உயிராம். பேனா பேப்பர் கொடுத்தால் மணிக் கணக்கில் "எழுதுவாளாம்..." ஒரு படுத்தல், அடம், அழுகை - ஊஹூம், கிடையவே கிடையாதாம். அத்தனை சமர்த்தாம்... சமர்த்துச் சர்க்கரை என்றால் நிஜமாகவே சமர்த்துச் சர்க்கரைதானாம். இப்போதெல்லாம் லவ்லி நர்ஸரி ரைம்ஸ் சொல்கிறாளாம்.. ஏ.பி.ஸி. தெரியுமாம்... டீ.வி. பாட்டுக்கேற்ப நடனமாடுகிறாளாம்...

சட்டென்று நினைவு வர, காவேரி அவசரமாக எழுந்தாள். இரும்பு பீரோவைத் திறந்து, பின் "லாக்கரை"த் திறந்தாள். உறுதியான உறையில் உறங்கிக் கொண்டிருந்த புத்தகத்தை வெளியில் எடுத்தாள். லாக்கரையும் பீரோவையும் பூட்டி விட்டு, உறையிலிருந்து புத்தகத்தை எடுத்துப் பிரித்தாள். பக்கம் பக்கமாகப் புரட்டினாள்.

ஒரு ஏ.பி.ஸி. புத்தகம். பழையதுதான். நளினி உபயோகித்தது. நளினிக்கென்று

அனுராக் அதி சுத்திகரிக்கப்பட்ட சூர்யகாந்தி எண்ணெய்

இது ஓர் சமையல் எண்ணெயின் விளம்பரம்



இந்தப் படத்தில் நீங்கள் பார்ப்பது ஓர் நேர்த்தியான தோற்றம் அல்லவா? ஆனால் இந்த வடிவம் பெறுவது அவ்வளவு சுலபமல்ல. நீங்கள் நினைத்தவுடன் இந்த 'சிக்'கென்ற உடலமைப்பு கிடைத்து விடாது.

இந்தப் பதுமை போன்ற வடிவம் பெற, சில தியாகங்கள் நீங்கள் செய்தாக வேண்டும். சாக்லெட்டுக்கள், ஐஸ்கிரீம், கொழுப்புச் சத்து மிக்க உணவு வகைகள்... இன்னும் உங்களுக்குப் பிடித்த ருசியான பலவற்றை நீங்கள் தவிர்த்தாக வேண்டும். இனி நாம் நேரடியாக இதைப் பார்ப்போமேயானால்...

உணவுக் கட்டுப்பாடு என்பது கடினமான விஷயம். சாப்பிடுவது அப்படியல்ல. நீங்கள் எது வேண்டுமானாலும் சாப்பிட்டு இந்தச் "சிக்"கென்ற உடலமைப்புடன் விளங்கலாம். (அத்துடன் நீங்கள் சிறு சிறு உடற்பயிற்சிகளான, அலுவலகத்திற்கு சைக்கிளில் செல்லுதல், அலுவலகத்திற்கு செல்லாதவராயிருப்பின் நடைபயிற்சி செய்தல்... போன்றவற்றை கடைபிடித்தாக வேண்டும்). நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என்பது சாதாரண விஷயம். மேலும் நீங்கள் சாப்பிடும் உணவில் உள்ளவை என்ன? உங்கள் உணவு எதனால் செய்யப்பட்டுள்ளது என்பன பார்க்கப்பட வேண்டும்.



உதாரணமாக சொல்லப் போனால் என்ன சமையல் எண்ணெய் நீங்கள் உபயோகிக்கிறீர்கள் என கேட்கலாம். எண்ணெய் என்று சொன்னோம் அல்லவா? நல்லது. அதற்கு ஒன்றும் பிரத்தியாக தேர்வு செய்ய அவசியமில்லை. கொழுப்புச்சத்து மிக்க எண்ணெய் உபயோகப்படுத்துவதைத் தவிர்த்தல் உசிதமானது. இப்படி எல்லாவற்றையும் பார்க்கையில் உடலுக்குப் பாதுகாப்பான ஓர் எண்ணெய் என நாம் நம்பக்கூடியது சூர்யகாந்தி எண்ணெய் ஒன்றுதான்.

'அனுராக்' ஓர் அன்பளிப்பு

'அனுராக்' எங்கள் புதிய படைப்பான சூர்யகாந்தி எண்ணெய். கொலஸ்ட்ரால் (CHOLESTROL)-ஐ எதிர்க்கும் தன்மை கொண்டது. எனவே உங்கள் இருதயத்திற்கு இது மிகவும் நல்லது. மேலும் இதில் கொழுப்பின் சேர்க்கை மிகவும் குறைவு. எனவே இது உடலுக்கு மிகவும் பாதுகாப்பானதாகும். அதி நவீன முறையில் சுத்திகரிக்கப்படுவதால், 'அனுராக்' மிகவும் தூய்மையாக விளங்குகிறது. மேலும் உங்கள் உடல்நலம் பேணுவதோடு உங்கள் உணவினையும் ருசிகரப்படுத்துகிறது. மேலும், 'அனுராக்' வைட்டமின் 'E' நிறைந்தது. உங்கள் வாங்கும் சக்திக்கு உட்பட்டு இருக்கும். இப்பொழுது உங்களுக்குத் தெரியும் இது ஓர் சமையல் எண்ணெயின் விளம்பரம் என்று. எனவே, என்ன செய்வதாக உத்தேசம்? உங்களுக்கு அருகாமையில் உள்ள மளிகைக் கடையிலேயே எங்கள் எண்ணெய் கிடைக்கும்.




அனுராக்

அதி சுத்திகரிக்கப்பட்ட சூர்யகாந்தி எண்ணெய்

(வைட்டமின் E அடங்கியது)

ஊட்டச்சத்து மிக்க உணவே நல்ல உடல்நலத்தின் ஆதாரம்

எஸ் & எஸ் இண்டஸ்ட்ரீஸ் & என்டர்பிரைஸஸ் லிட்.-ன் தரமான தயாரிப்பு. 189, அண்ணா சாலை, சென்னை-600 006



imageads/TAM



"இந்த ட்ரெஸ்ல நான்
எங்க அம்மா மாதிரி
எவ்வளவு அழகா
இருக்கேன்!
அம்மா மாதிரி நானும்
ஒரு பெரிய ஆபிஸரா
ஆகப்போறேன்!!"
இந்த பிஞ்சு உள்ளத்தில் தஞ்சம் கொண்ட கனவுகளை நனவாக்க சிட்டி யூனியன் வங்கி தரும் 'வாமன விஸ்வரூபா டெபாஸிட்' திட்டம்.
உங்கள் தேவைக்கேற்ற இதர சேமிப்புத் திட்டங்கள்:
■ சேமிப்புக் கணக்கு
■ மாதாந்திர சேமிப்புத் திட்ட
■ ரொக்கப் பத்திரங்கள் (கூட்டு வட்டி விகிதம்)
■ வாமன விஸ்வரூபா டெபாஸிட் (கூட்டு வட்டி விகிதம்)
■ பிக்ஸட் டெபாஸிட்
■ அயல்நாட்டில் வசிக்கும் இந்தியருக்கான சேமிப்புத் திட்டங்கள்
■ CUB ஸ்டாக்இன்வெஸ்ட்
CUB
சிட்டி யூனியன் பாங்க் லிட்.
(அன்னியச் செலாவணி அங்கீகாரம் பெற்ற வங்கி)
பதிவு அலுவலகம்: கும்பகோணம் 612 001.
சிட்டி யூனியன் பாங்க்:
வளர்ச்சிக்கு - உங்கள் வளர்ச்சிக்கு வழிகாட்டும் வங்கி!

வாங்கப்பட்டது. குமாருக்கும் இந்த மாதிரி ஒரு புத்தகத்தை அவன் பெற்றோர்கள் வாங்கித் தந்திருந்தனர். ஆனால் அவன் அதை உபயோகித்த விதத்தில் புத்தகம் தாறுமாறாகக் கிழிந்து விட்டது. ஆக, நளினி மூன்று வயதை அடைந்த போது, அவளுக்காக ஒரு புது புத்தகத்தை வாங்கி னார்கள். இதோ, இந்தப் புத்தகம்தான்.. இதேதான்.

களுக்காக... இதைப் பார்க்கும்போதெல் லாம் மூன்று வயது நளினி மனக்கண்முன் தோன்றுகிறாளே, அந்த இன்பத்துக்காக.

தந்த நிறம்... நீள முகம், சுருள் முடி. ஆரோக்கியமான, அழகான குழந்தை நளினி. அந்தப் புத்தகத்தை அவள் தொடும் போது அதில் ஒரு வருடல், ஒரு மென்மை... பக்கங்களை மிருதுவாகத் திருப்புவாள். ஏ ஃபார் ஆப்பிள் என்று

புதியவை அறிமுகம்

அமிதி பெர்ஃப்யூம்

உடலுக்கு
இனிய மணத்தைத்
தரும் பெர்ஃப்யூம்கள்
வரிசையில் அமிதி
பெர்ஃப்யூமும் இணை
கிறது. பெர்ஃப்யூம்களில்
'மெதனால்' எனும்
ஒருவித ரசாயனத் திரவம்
பயன்படுத்தினால் அது
உடலுக்கு அலர்ஜியை
விளைவிக்கலாமாம்.
எனவே மெதனால்
இல்லாத பெர்ஃப்யூம்களை
வாங்குங்கள் என்று
அறிவுறுத்துகிறார்கள்
'அமிதி பெர்ஃப்யூம்'
தயாரிப்பவர்கள்.

டெல்டா
பப்ளிஷர்ஸ்
'சுப்ரபாதம்'
என்ற
காலண்டரைப்
போட்டிருக்கிறார்கள்.
இது முழுக்க
பெண்களால்
தயாரிக்கப்பட்டிருக்கிறது.
ஒவ்வொரு மாத
ஷீட்டிற்கும் பின்னால்
சுவையான செய்திகள்.
சமையல் போட்டி கூட
வைத்திருக்கிறார்கள்.
விலை ரூ. 16/-
டெல்டா பப்ளிஷர்ஸ்,
ஈ - 61, அண்ணா நகர்,
சென்னை - 102
என்ற முகவரியில்
கிடைக்கும்.

எல்லா புத்தகக் கடைகளிலும் சுலப மாகக் கிடைக்கும் வண்ணப்படங்கள் கொண்ட ஏ.பி.ஸி. புத்தகம். ஏ ஃபார் ஆப்பிள், பி ஃபார் பால் இப்படியே கடைசி வரை... தத்ரூபமான சித்திரங்கள். பூனையைப் பார்த்தாலே அதன் குரல் கேட்பது போல் தோன்றும்.

ஆனால், இன்று வரை காவேரி இப் புத்தகத்தைப் பொக்கிஷமாகப் போற்றிக் காப்பது படங்களின் அழகுக்காக இல்லை... புத்தகம் எழுப்பும் நினைவு

அவள் வாய் விட்டு ராகத்தோடு பாடும் போது, குழல், யாழ், தம் மக்கள் மழலை எல்லாவற்றையும் விட இந்த ராகமே இனிது என்று பூரித்துப் போவாள் காவேரி. பிஞ்சு முகமெல்லாம் பரவசம்... பக்கம் பக்கமாகத் திருப்பி, கடைசி வரை ராகத் தோடு பாடி முடித்த பிறகு, புத்தகத்தை மூடி மார்போடு அணைத்துக் கொள்வாள்.

சிறுமி வளர்ந்தாள்... அந்த வளர்ச் சிக்கேற்ப, ஏ.பி.ஸி. புத்தகம் தன் கவர்ச் சியை இழந்தது. பள்ளிப் பாடங்கள், பின்

ஈனிட் ப்ளைடனின் கதைகள் - இப்படி அவள் ரசனை வளர்ந்தது. ஆனால் காவேரியோ அந்த ஏ.பி.ஸி. புத்தகத்தை இரும்பு பீரோவின் லாக்கரில் பத்திரப்படுத்தி வைத்தாள். எதற்கு, யாருக்காக, என்றெல்லாம் யோசிக்கவில்லை. பொக்கிஷத்தைப் பத்திரப்படுத்துவதுதான் நியதி, நியாயம்.

அந்தப் பொக்கிஷத்துக்கு இப்போது ஓர் உபயோகம் பிறந்து விட்டது. நளினியின் பெண் லவ்லி ஏ.பி.ஸி. படிக்கிறாள். இந்தப் புத்தகத்தை அவளுக்குக் கொடுக்க வேண்டும். சட்டென்று கொடுத்து விடக் கூடாது. குழந்தையைத் தூக்கி மடி மேல் வைத்துக் கொண்டு, புத்தகத்தைப் பிரித்து, பக்கம் பக்கமாகத் திருப்பி மூன்று வயது நளினி பாடின அதே ராகத்தில் ஏ ஃபார் ஆப்பிள் என்று சொல்ல வேண்டும்... இந்த மூன்று வயதுக் குழந்தையின் முகத்தில் அந்த மூன்று வயதுக் குழந்தையின் பரவசத்தைக் கண்டு, தன் உள்ளமெல்லாம் இன்பம் பொங்குவதை உணர வேண்டும்...

நளினி வந்து விட்டாள். போன தடவை பார்த்ததற்கு இப்போது சதைப் பூச்சு கூடியிருந்தது. லவ்லியைத் தூக்கிக் கொண்டு அவள் வந்த போது, தாயின் அழகுக்கு மகள் தருந்த வாரிசுதான் என்று நினைத்துத் திருப்திபட்டுக் கொண்டாள் காவேரி. பாட்டியின் நீட்டிய கைகளுக்குள் வேற்று முகமின்றி தாவினாள் லவ்லி.

டெல்லி மோடாக்கள்... பச்சரங்கி ஊறுகாய்... பால் கேக்கும் கடலை மாவு லட்டுமாக இனிப்பு வகைகள். கூடை நிறைய கறிகாய் - பட்டாணி, காரட், காலிஃப்ளவர், பெரிய தேங்காய் அளவில் கத்தரி.

''எதற்கு இத்தனை?'' என்றாள் காவேரி.

''என்னம்மா கேள்வி இது? ஒரு ஆசைக்குத்தான்!''.

''நம் ஊரில் ஊறுகாய் கிடைக்காதா?''

''பச்சரங்கி ஊறுகாயின் டேஸ்டே தனி!''

''சரி.. இந்தக் கறிகாய்கள்?''

''கறிகாய்க்கு இதுதான் ஸீஸன் டெல்லியில். இந்த ருசியே அலாதி, அம்மா. உன் கையால் கூட்டு, அவியல், கதம்பக் குழம்பு, ரஸவாங்கின்னு விதம் விதமாய்ப் பண்ணு... ஒரு கை பார்க்கிறேன்!''

''ஏன்? இன்னும் கொஞ்சம் வெயிட் போடவா? அப்புறம் மாப்பிள்ளைக்கு அக்கா மாதிரி இருப்பாய்.''

''பரவாயில்லை.. லவ்லிக்கு அம்மா மாதிரி இருந்தால் போதாதா?''

இரண்டே நாட்களில் லவ்லி தன் பாட்டியுடன் முழுவதுமாக ஒட்டிக் கொண்டு விட்டாள். கதை சொல்லச் சொல்லி, கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டு, ரசித்தாள். தன் பொம்மைகளைக் கொண்டு வந்து பாட்டரியைப் பொருத்தி, இயக்கிக் காட்டினாள்... டீ.வி.யில் தமிழ் நிகழ்ச்சிகளைக் கண்டு முதலில் தயங்கி அவள், மெள்ள மெள்ளத் தமிழ்ப் பாட்டுக்களுக்கும் நடனமாடினாள். நர்ஸரி ரைம்ஸ் சொல்லிக் காட்டினாள்.

''லவ்லி! உனக்கு ஏ.பி.ஸி. தெரியுமா?'' என்றாள் காவேரி.

''ஓ, தெரியுமே?'' ஏ.பி.ஸி. என்று ஆரம்பித்துக் கடைசிவரை சொல்லி முடித்தாள் குழந்தை.

''உனக்குப் புத்தகம் பிடிக்குமா?''

''ரொம்பப் பிடிக்கும்!''

''எந்த மாதிரி புத்தகம்?''

''கலர் படம் நிறைய இருந்தால் பிடிக்கும்!''

காவேரியின் மனம் துள்ளிற்று. கலர்ப் படங்கள் பக்கத்துக்குப் பக்கம் இருக்கும் புத்தகத்தைத்தான் அவள் வைத்திருக்கிறாளே! இந்தக் கட்டிக் கரும்புக்குத் தர வேண்டியதுதான்!

விளாம்பழம் உடைத்தவுடன் காய் என்று வேதனையா? கவலை வேண்டாம். ஓட்டுடன் இரு மூடிகளையும் குக்கரில் வேக விடுங்கள். எடுத்தவுடன் செம்பழமாக ஆகியிருக்கும். வெல்லத்தைச் சேர்த்துச் சுவையுங்கள். 'பலே ஜோர் விளாம்பழம்' என்று புகழ்வீர்கள்!

- டி. என். ஜெயஸ்ரீ



சட்டென்று லல்லி, ''இரு பாட்டி, நான் உனக்கு ஒரு புக் காட்டறேன்!'' என்று உள்ளே ஓடினாள்.

''ஓ!'' நளினி சிரித்தாள். ''என் நாத்தனார் சமீபத்தில் அமெரிக்கா போயிருந்தாள் அம்மா. லல்லிக்கு ஒரு புத்தகம் வாங்கி வந்தாள்!''

''ஏ.பி.ஸி. புத்தகமா?'' என்றாள் காவேரி. குரலில் சட்டென்று ஒரு தொய்வு.

''அட, ஆமாம், எப்படி அத்தனை கரெக்டாய் சொன்னாய்?''

''ஒரு யூகம்தான்!''

லல்லி ஒரு புத்தம் புதிய புத்தகத்தோடு ஓடி வந்தாள். ஸ்வாதீனமாகப் பாட்டியின் மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். ''நான் காட்டறேன், நீ பாரு பாட்டி!'' என்றவள் புத்தகத்தைப் பிரித்துப் பக்கம் பக்கமாகத் திருப்பினாள்.

இதிலும் ''ஏ ஃபார் ஆப்பிள், பி ஃபார் பால் போன்ற படங்கள்தான்... ஆனால் ஒவ்வொரு பக்கமாகத் திருப்பும் போது ஒவ்வொரு படமாக ''கட்-அவுட்'' வடிவத்தில், மூன்று பரிமாண அமைப்பில், உயிர் பெற்று எழுந்து நின்றது... அழகோ அழகு!

தன்னை மறந்த லயிப்பில் பக்கம் பக்கமாகத் திருப்பிப் படங்களைப் பாட்டிக்குக் காண்பித்தாள் லல்லி. ஆனால் காவேரியின் மனமெல்லாம் சோர்வு நிறைந்தது. இந்தப் புதுப் புத்தகத்தின் கவர்ச்சியோடு ஒப்பிட்டால், அவள் இத்தனை நாள் பாதுகாத்து வந்த புத்தகம் மிக மிகச் சாதாரணம்... லல்லி அதைக் கட்டாயம் விரும்ப மாட்டாள். அதை இத்தனை நாட்கள் தான் பூட்டி வைத்திருந்ததை அறிந்தால் நளினி கூட பரிகசிக்கலாம். அதுவும் நியாயம் தானே! மூன்று வயது நளினியும் அவள் உபயோகித்துப் பழசாகிப் போன ஏ.பி.ஸி. புத்தகமும் இறந்த காலத்தைச் சேர்ந்தவை. வழவழப்பான இந்தப் புது புத்தகமும் மூன்று வயது லல்லியும் நிகழ்காலத்தைச் சேர்ந்தவை! உண்மை இதுதான், இவ்வளவுதான். அந்தப் பழைய புத்தகத்தை மாபெரும் பரிசைப் போல் அவள் வழங்க நினைத்தது சுத்தப் பைத்தியக்காரத்தனம்!

நாள் மேல் நாளாகக் கழிந்தது. லல்லிக்கு நிறைய ஐஸ்க்ரீம் வாங்கித் தந்தாள் காவேரி. தன் கையால் வறுவல் செய்து கொடுத்தாள். பால் சாதம் பிசைந்து ஊட்டி விட்டாள். கடற்கரைக்கு அழைத்துச் சென்று, கடல் அலைகளைப் பார்த்துக் குழந்தை பரவசமடைந்த காட்சியில் சொக்கிப் போனாள். கோவிலுக்குக் கூட்டிச்

சென்று குழந்தை பெயரில் அர்ச்சனை செய்வித்தாள்... விதவிதமாகத் துணிமணிகள் வாங்கித் தந்தாள்.

லல்லி மத்தியானம் தூங்கும் போது மகளோடு ஆசை தீர அளவளாவினாள் காவேரி. இரண்டாண்டு பிரிவை இரண்டு வாரங்களில் ஈடுசெய்ய வேண்டுமே! தாயும் மகளும் அலுக்காமல் சலிக்காமல் பேச்சோ பேச்சு என்று பேசினார்கள். அந்தச் சாம்பல் நிற ஃப்ராக் இப்போது பூ வேலையோடு தயார். நளினியின் கைவண்ணம்!

இரண்டு வாரங்கள் எத்தனை அவசரமாகப் பறந்து விட்டன!

இன்று மாலை ரயிலில் நளினியும் லல்லியும் டெல்லி புறப்படுகிறார்கள்... நண்பகல் உணவு ஒரு குட்டி விருந்து... நளினி ருசித்துச் சாப்பிட்ட விதத்தைப் பார்த்த போது அதன் திருப்தி தந்த இன்பத்தில் லல்லியை அணைத்து முத்தமாரி பொழிந்தாள் காவேரி!

''நளினி உன் பாக்கிங்கை முடிச்சுடு... அப்புறம் அவசரமில்லாமல் பேசிக் கொண்டிருக்கலாம். மாகாளிக் கிழங்கு ஊறுகாய் பாட்டிலில் வச்சிருக்கேன். முறுக்கு, தட்டை ரெண்டு டின்களில்... உருளைக் கிழங்கு வாழைக்காய் வறுவல் லல்லிக்காக ஸ்டீல் டப்பாவில் இருக்கு. மாப்பிள்ளைக்கு மைசூர்பாகு, லட்டு... எதையும் மறக்காமல் ஜாக்கிரதையாக எடுத்து வை!'' என்றாள் காவேரி.

''சரி அம்மா!''

மனம் போன போக்கில் ஷாப்பிங் செய்ததன் பலன், எக்கச்சக்கமாகச் சாமான்கள் சேர்ந்து விட்டன... பாக்கிங் செய்து முடிக்க ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டாள் நளினி. அதுவரை பாட்டியின் மடியில் தந்தச் சிலை போல் அமர்ந்து கதை கேட்டுக் கொண்டிருந்தாள் லல்லி.

''அம்மா!''

''பாக்கிங் முடிஞ்சுதா, நளினி?''

''ஓ! இதோ, இந்த பொம்மைகள் உனக்கு!''

''எனக்கா? பொம்மைகளா?''

''உனக்குன்னா, நீ விளையாடவா! நீ கொடுத்து விடத்தான்... அடுத்த தடவை நீ அனாதை ஆச்ரமத்துக்குப் போகச்சே துணிகளோடு இதையும் கொடுத்துடு, அம்மா!''

காவேரி பொம்மைகளைப் பார்த்தாள். துணி பொம்மைகள் நாய், பூனை, கரடி, சிங்கம்... எல்லாமே பெரிய அழகான கண்களும் அச்சமூட்டாத சிரித்த வாயுமாக

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : வெயிலுக்கேற்ற உணவு   கடைசித் தேதி : 15.2.'93

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்



கசகசா பாயசம் :

ஒரு கப் கசகசாவுடன் ஒரு பிடி முந்திரிப் பருப்பையும் சேர்த்து நைசாக அரைக்கவும். பின் அதை வேகவிடவும். வெந்தபின் 2 கப் சர்க்கரையைப் போட்டு நன்கு கொதித்ததும் இரண்டு தம்ளர் பால் விட்டு இறக்கி வைத்து ஏலப்பொடி போட்டு, பாதாம் எசென்ஸ் விடவும். பாதாம்கீர் போல ரொம்பச் சுவையாக இருக்கும்.

- விமலா தியாகராஜன்

சின்னக் குழந்தைகள் அணைத்துக் கொண்டு விளையாட மெத்துமெத்தென்று இருந்தன. துணியைத் தவிர வேறெதுவும் இல்லாத பாதுகாப்பான பொம்மைகள்...

"லவ்லி ஆசை தீர விளையாடின பொம்மைகள் அம்மா. ரொம்ப ரொம்ப சந்தோஷமாய் விளையாடினாள்... கட்டிக் கொண்டு தூங்கிப் போவாள். கோபம் வந்தால் தூக்கி எறிவாள்... குத்துவாள், அடிப்பாள், உடனேயே அணைச்சுண்டு கொஞ்சுவாள்!"

"பின்னே ஏன் கொடுத்து விடச் சொல்றே நளினி? எப்படி உனக்கு மனசு வந்தது?"

"இதில் என்ன அதிசயம், அம்மா? லவ்லிக்கு இப்போது இதில் இன்ட்ரஸ்ட் இல்லை... வளர்ந்துண்டு வராளே! பாட்டரி பொம்மைகள், கலர்ப் படம் கொண்ட கதைப் புத்தகம், இதில்தான் அவளுக்கு ஆசை!"

"உனக்கே இன்னொரு குழந்தை பிறந்தால் அது லவ்லி மாதிரியே உபயோகிக்க விளையாடி சந்தோஷப்படுமே!"

"அப்போது வேறு பொம்மைகள் வாங்கிக்கலாம். இப்போது இந்தப் பொம்மைகளினால் வேறு குழந்தைகள் சந்தோஷப்படட்டும்... எத்தனை சந்தோஷம்! இந்தப் பொம்மைகளைப் பூட்டி வச்சால் அந்தச் சந்தோஷமெல்லாம் இல்லாமல் போகாதா?" நளினி முறுவலித்தாள். மூன்று வயது குழந்தை நளினியை விட இந்த இருபத்தைந்து வயது நளினி இன்னும் அழகாயிருந்ததாக அந்தக் கணம் காவேரி நினைத்தாள்....

தன் மகள் உபயோகித்து அகமகிழ்ந்த பொருளை அநாயாசமாக முழு மனத்தோடு கொடுத்து விட நளினியினால் முடிகிறது... அந்தக் கொடையின் மூலம் அவள் பெற விரும்புவது அந்த மகிழ்ச்சியின் தொடர்ச்சி... சிறுமி நளினி உபயோகித்த ஏ.பி.சி. புத்தகத்தைக் காவேரி பாதுகாத்து வைத்ததற்கும் தன் குழந்தை பெற்ற சந்தோஷம் அவளுடைய குழந்தையின் மூலம் தொடர வேண்டும் என்ற விருப்பமே காரணம். ஆனால் இரண்டுக்குமிடையே எத்தனைய வித்தியாசம்! நளினியின் கொடையில் சுயநலம் இல்லை. ஆனால் காவேரியோ, தன் மகளின் சந்தோஷத்தை அவள் மகள் அடைவதன் மூலம், தன்னுடைய சந்தோஷத்தின் தொடர்ச்சியையே விரும்பினாள். ஏ.பி.சி. புத்தகம் என்பது ஒரு புது மொழியின் அற்புத உலகிற்குள் பிரவேசிக்கும் வாசல்... மூன்று வயது நளினியும் அவள் உபயோகித்த ஏ.பி.சி. புத்தகமும் இறந்த காலத்தைச் சேர்ந்தவை என்று நினைத்தாளே! அது தவறு.. ஏ.பி.சி. புத்தகம் என்றுமே நிகழ் காலத்துக்குரியதுதான்... மொழியின் திறவுகோலுக்குக் காலம் கிடையாது.

நளினி கொடுத்த பொம்மைகளையும், அவள் பூ வேலை செய்து முடித்த சாம்பல் நிற ஃப்ராக்கையும் எடுத்து, தான் தைத்து வைத்திருந்த மற்ற துணிகளோடு வைத்தாள் காவேரி.. சிறுமி நளினி உபயோகித்த ஏ.பி.சி. புத்தகத்தையும் வைத்தாள். வழக்கம் போல் பிஸ்கெட்டுகளையும் வாங்கிக் கொண்டால் ஆச்ரமத்துக் குழந்தைகளைப் பார்க்கும் போது கை நிறைய பரிசுப் பொருள்களோடு போகலாம்... ஏ.பி.சி. புத்தகத்தைப் பிரித்துப் படித்துக் காட்டலாம்.. ஏன், நளினி பாடுவாளே, அந்த ராகத்தில் பாடிக் காட்டலாம். பின், புத்தகத்தைக் கொடுத்து விட்டு வரலாம். குழந்தைகள் எப்படிச் சந்தோஷப்படுவார்கள்! அலை அலையாக விரிந்து பரவும் சந்தோஷம்!

மனதில் பூரண திருப்தியோடு ஹாலுக்குத் திரும்பி வந்தாள் காவேரி... இப்போதே மணி மூன்று... இன்னும் சில மணி நேரம்தான் பேத்தியோடு கொஞ்ச முடியும்... பின் அடுத்த தடவை நளினி வரும் போதுதானே இந்த அனுபவம் கிடைக்கும்!



பறந்தது நோய்

ஒருமுறை நான் பண்டிகைக்காக கிராமத்தில் இருக்கும் எங்கள் மாமியார் வீட்டிற்குப் போயிருந்தேன். அப்போது பக்கத்து வீட்டிலிருக்கும் பாட்டி ஒருவர் என்னைப் பார்த்து, ''ஏன் இப்படி மெலிந்து போயிருக்கா'' என்று என் மாமியாரைக் கேட்டார்கள். எனக்கு வெள்ளை அதிகமாக படுவதாக என் மாமியார் கூறினார். மறுநாள் காலை பாட்டி என்னை அழைத்து ஒரு கண்டைக் காய் அளவு பச்சிலை ஏதோ அரைத்துக் கொடுத்து பாலில் கலக்கிச் சாப்பிடச் சொன்னார்கள். நானும் அப்படியே செய்தேன்.

பிறகு அந்தப் பாட்டி, ''அது கீழா நெல்லி இலைதான். அதை நீ தொடர்ந்து ஒரு பத்து நாளைக்குச் சாப்பிடு'' என்றார். அதற்காக அலைய வேண்டிய அவசியமில்லாமல் என் வீட்டைச் சுற்றி இருக்கும். நான் திரும்ப சென்னைக்கு வந்த பிறகு அதே போல் தினமும் கண்டைக் காய் அளவு அரைத்து வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தேன். என்ன ஆச்சர்யம் மூன்று வருடமாக அவதிப்பட்ட எனக்கு சட்டென நின்று விட்டது. எப்பொழுதாவது தலைகாட்டினால் என் மருந்தை உட்கொண்டு அதை விரட்டி விடுவேன்.

- சித்ரா சந்திரன்

என்ன ஆச்சு தெரியுமா?

* பிரேமா





அந்தக் காலத்து அத்தையின் துணிச்சல்

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம். என்னுடைய பள்ளித் தோழி சொல்லக் கேட்டு ஆச்சரியமடைந்தவள் நான்.

என் தோழியின் அத்தை நாகப்பட்டிவத்தில் அப்போது இருந்தாராம். அவருடைய கணவர் அரசாங்கத்தில் பெரிய உத்தியோகத்தில் இருந்தார். அடிக்கடி வெளியூர் போவார். கைக் குழந்தையுடன் ஒரு பெரிய வீட்டில் அத்தை மட்டுமே

இருப்பார். காவலுக்கு ஒரு வயதான மூதாட்டி இருப் பார்.


ஒருநாள் அத்தையின் கணவர் வெளியூருக்குச் சென்றிருந்தார். இரவு 9 மணி அளவில் யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டுத் திறந்த அத்தை வாசலில் ஒரு முட்டாக்கு அணிந்த பாட்டி குளிரில் நடுங்கியவாறு நின்றிருந்ததைக் கண்டு, ''யார் வேணும்?'' என்று கேட்டிருக்கிறார்.

அவள், ''அம்மா, நான் ஆசாரக் குடும்பத்தில் வந்தவள். இன்று அமாவாசை. வெளியில் எங்கும் சாப்பிட மாட்டேன். இது நம்ப வீடாகத் தோன் றவே இங்கு ஏதாவது பலகாரம் செய்யக் கிடைத் தால் தேவலையாயிருக்குமே என்றுதான் வந்தேன்'' என்றாளாம். அத்தையும் இரக்கப்பட்டு உள்ளே அழைத்து உட்கார வைத்திருக்கிறார். ''இங்கு உட் காருங்கள். உங்களுக்குத் தோசை செய்து கொண்டு வருகிறேன்'' என்றார்.



வந்தவள் அத்தையின் இடுப்பிலுள்ள குழந் தையை தான் பார்த்துக் கொள்வதாகச் சொல்லி கையை நீட்டி வாங்குகையில் அவளுடைய இடுப் பில் ஒரு பிச்சுவா மின்னுவதைக் கண்டுவிட்ட அத்தை ஒரு நிமிஷம் திகைத்து விட்டு, மறு வினாடி, 'நீங்கள் கை கால் கழுவிக் கொண்டு வாருங்கள். பிறகு குழந்தையைத் தருகிறேன். அதன் மேல் தோசை செய்யப் போகிறேன்'' என்று சொல்லி அவளை பாத்ரூமுக்குப் போகச் சொல்லி பாத்ரூம் கதவின் வெளித் தாழ்ப்பாளைப் போட்டு விட்டாள்.

தூங்கிக் கொண்டிருந்த துணைக் கிழவியை எழுப்பி அக்கம் பக்கத்தாரை அழைத்து வரச் செய் தாள். அநேகம் பேர் கூடியதும் பாத்ரூம் தாழ்ப் பாளைத் திறக்க வைத்து அந்தப் பாட்டியின் துகிலை உரித்துப் பார்த்து பழைய கேடி என்று கண்டுபிடிக்கப்பட்டு போலீஸாரால் புகழாரம் சூட்டப்பட்டான்!



- மரகதம்

அழும் ஆணை நம்பாதே!

சில வருடங்களுக்கு முன்பு என் குமாரன் கேர ளத்திலிருந்து பம்பாய்க்கு ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தான். ரயில் ஆந்திர எல்லையில் நுழைந்து ரேணிகுண்டாவில் நின்றது. என் பைய னுடன் சில இளைஞர்கள் சக பயணிகளாக இருந் தனர். அப்பொழுது பிளாட்பாரத்திலிருந்து அவ னுடைய பெட்டியை நோக்கி ஓர் இளைஞன் 'திருட்டு முழி' முழித்தவாறு நெருங்கினான். அவன் கையில் துண்டால் நன்கு கற்றப்பட்டு மூடப் பட்ட பாட்டில்கள் இரண்டு இருந்தன. கண்களில் நிறைய பயம் இருந்தது.

இளைஞர்களை நோக்கி அவன் ஏதோ கூற அவர்களும் புரிந்து கொண்ட மாதிரி பாட்டில்களை வாங்கிக் கொண்டார்கள். அவை சாராய பாட்டில் கள் போல் இருந்தன. அவற்றின் விலை ரூ 50



உங்கள் பண்ணை வீடு கட்ட எங்கள் தன்னிறைவு பெற்ற பண்ணை வளாகத்தில் தேர்ந்தெடுப்பீர் ஓர் இடம் மிக எளிய நீண்ட தவணையில்



ஒரு மனைக்கான தனி அம்சங்கள் :

1. 6,000 ச.அடி இடம்
2. அதில் வீடு கட்ட 1500 ச.அடி
3. ஒவ்வொரு மனைக்கும் முள்கம்பி வேலி மற்றும் இரட்டை இரும்புக் கதவு
4. 14 உயர் விளைச்சல் கொண்ட தென்னை மரங்கள், மற்றும் மா, பலா, கொய்யா, சீதா, சப்போட்டா, மாதுளை பழ மரங்கள்.
5. 6 வருட சிறந்த பராமரிப்பு.

பண்ணை வளாகத்தில் அமையப்பெற்ற சிறப்பு அம்சங்கள் :-

1. பண்ணை வளாகத்தை சுற்றி 6 1/2 அடி உயர கண்ணாடி துண்டுகள் பதிக்கப்பட்ட கருங்கல் காம்பௌண்ட்.
2. 24 மணி நேரமும் சிறந்த பாதுகாப்பு.
3. சென்னையிலிருந்து போய் வர வாகன வசதி.
4. ரோடு மற்றும் பொது இடங்கள் நிரந்தர பராமரிப்பு.
5. நீச்சல் குளம், தங்கும் குடில், படகு சவாரி, மீன் பிடி குளம், உள் - வெளி விளையாட்டு அரங்கம், கோவில், தியான மண்டபம், குழந்தைகள் பூங்கா, குதிரை ரத வண்டி, சிறு மிருக காட்சி சாலை, கேபிள் மற்றும் ஸ்டார் டிவி, தொலைபேசி தொடர்பு, மின்சாரம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குழாய் வசதி, உணவகம், மருத்துவ வசதி, பல் பொருள் சிறப்பங்காடி, பால் நிலையம், அழகு நிலையம், இவ்வளவும் கம்பெனி பொறுப்பில் செயல்படும்.

இடம் : சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில், காஞ்சிபுரம் அருகில்

இவ்வளவும் மிக எளிய நீண்ட தவணை முறையில் அடையலாம். ரூ. 1000/- வீதம் 72 மாதங்கள், உங்கள் பெயரில் பத்திரம் பதிவு செய்யும்போது தனியாக ரூ.20000,- ஆக ரூ.92000 மட்டுமே. பிரதி மாதமும் குலுக்கல் உண்டு. குலுக்கலில் தேர்ந்தெடுக்கும் அதிர்ஷ்டசாலி மீதமுள்ள தவணைகள் செலுத்த வேண்டாம். உடனே முந்துங்கள். குறைந்த இடங்களே உள்ளன.

VHR

வீனஸ்ஹாலிடேரிசார்ட்ஸ்(பி)லிமிடெட்

147, ரங்கராஜபுரம் மெயின் ரோடு, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024. தொலைபேசி - 424585.



அடை எளிதில் ஜீரணமாகும் டிபன் அல்ல. எண்ணெய் நிறைய ஊற்றிச் செய்வதால் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் சற்று யோசித்துச் சாப்பிட வேண்டும். புளித்த மாவில் அடை செய்தால் எல்லோருக்கும் பிடிக்காது. எனவே, புளித்த அடை மாவு மிஞ்சினால் அதை இட்லித் தட்டில் ஊற்றி இட்லியாகச் செய்து சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும். எண்ணெயே தேவையில்லை. ஆவியில் வெந்ததால் உடல் நலனுக்கும் கவலை இல்லை. மிளகாய்ப் பொடி சரியான காம்பினேஷன்.

- சரஸ்வதி

என்றும் பாட்டில்காரன் பயந்தவாறு அங்கும் இங்கும் நோக்கியபடியே கூறினான். விலையைக் கேட்ட இளைஞர்கள் முகம் சிவக்கக் கோபத்துடன் உறுமினார்கள். இரண்டு பாட்டில்களையும் 15 ரூபாய் தர வேண்டும் என்றும் மறுத்தால் போலீஸில் பிடித்துக் கொடுத்து விடுவதாகவும் அதட்டினார்கள். பாட்டில்காரன் பரிதாபமாக அவர்களில் ஒருவனின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான். 20 ரூ தருமாறு மன்றாடினான். வேறு எதுவும் ஏடாகூடமாகச் செய்து விட வேண்டாம் என்று பரிதாபமாக அழவும் செய்தான். இளைஞர்கள் போனால் போகிறது என்று 20 ரூபாய் கொடுத்து விட்டு பாட்டில்களை உள்ளே எடுத்து வைத்தனர். இப்பொழுது ரயில் நகர்ந்தது. பாட்டில்காரன் பயத்துடனே மீண்டும் அங்கும் இங்கும் பார்த்தவாறு ஓடி மறைந்தான்.

சிறிது நேரம் சென்றிருக்கும். ஒரு வாலிபன் பாட்டிலைத் திறந்து மூக்கின் அருகில் அதைக் கொண்டு போனான். அடுத்தகணம் அவன் முகத்தில் குழப்பமும் அதிர்ச்சியும் கூத்தாடின. இரண்டாவது பாட்டிலும் இதே போல் அவர்களை அதிர்ச்சி அடைய வைத்தது.

பின்னே வைக்காதா? வெறும் ஜீரகத் தண்ணீர் - சாராய பாட்டில்களில் அடைக்கப்பட்டு விட்டால் சாராயமாகி விடுமா? அந்த நிகழ்ச்சியை நினைவுகூறும் பொழுதெல்லாம் ''என்ன அருமையாக நடித்தான் அந்த பாட்டில்காரன்'' என்று இன்றும் வியந்து போகிறான் என் குமாரன்.

- உமாதேவி ராமஸ்வாமி

கலர் பிலிம் கொள்ளை!

சமீபத்தில் நாங்கள் எல்லோராவுக்கு அருகிலுள்ள கிருஷ்னேஸ்வரம் என்கிற ஜோதிர்லிங்க ஆலயத்துக்குச் சென்றிருந்தோம். அங்கு டூரிஸ்டுகளுக்குத் தேவையான கைடு புத்தகங்கள், மேப்கள் விற்பனை செய்பவர்கள், காமிராவுக்குத் தேவையான கலர் பிலிம்களையும் (ரோல் பிலிம்) விற்பனை செய்கிறார்கள்.

ஆரம்பத்தில் மார்க்கெட் ரேட்டை விட ஐந்து ரூபாய் கூடுதலாகச் சொல்கிறார்கள். பேரத்தில் படிப்படியாகக் குறைந்து இறுதியாக மார்க்கெட் விலைக்கு ஐந்து ரூபாய் குறைத்துக் கொடுக்கிறார்கள். ரோல் பிலிம் அடைத்திருக்கும் அட்டைப் பெட்டி, பிளாஸ்டிக் டப்பி ஆகியவற்றில் எந்தவித மாற்றமும் இல்லை. அந்த அளவு சுத்தமாகப் பாக்கிங் செய்யப்பட்டுள்ளது.


காமிராவில் பொருத்தி, படம் முழுவதும் எடுத்து முடித்த பிறகுதான் தெரிந்தது உண்மை. அவை உண்மையில் காமிரா பிலிம் அல்ல. சினிமா நெகடிவ் பிலிமிலிருந்து வெட்டியெடுத்து, காமிரா பிலிம் பாக்஼ில் சாமர்த்தியமாகப் பாக்கிங் செய்யப்பட்டவை. பிலிம் ஆரம்பத்தில் காமிரா பிலிம் போல் லோடு செய்வதற்கு ஏற்றவாறு வெட்டப்பட்டுள்ளன. பிலிம் முடிவில் பசை நாடாவினால் ஒட்டியிருக்கிறார்கள். படம் அனைத்தும் எடுத்து முடித்து, பிலிம் சுருளைக் கழற்றி வெளியே எடுக்க முற்பட்ட போதுதான் அந்த உண்மை தெரிந்தது.

அஜந்தா, எல்லோரா செல்பவர்களுக்கும், புகைப்படப் பிரியர்களுக்கும் அவசியம் பிலிம் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து, இத்தகைய ஏமாற்று வேலைகள் நடைபெறுகின்றன. வடநாட்டில் இதர இடங்களில் இத்தகைய மோசடி ஏற்படவில்லை.

அநேகமாக எங்களைப் போல் அவர்களிடம் பிலிம் வாங்கிய ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் ஏமாற்றமடைந்தவர்களாக இருப்பார்கள். இனியாவது அங்கு செல்பவர்கள் ஜாக்கிரதையாக இருக்கவே இதை எழுதுகிறேன்.

- வசந்தா விஸ்வநாதன்





CONTACT FOR TRADE ENQUIRIES :

அம்மா, பாலை மூடி வைத்தாயா?

ஆபீஸ் புறப்படும் அவசரத்திலும் என் கணவர், ''சாயங்காலம் ரெடியாக இரு. எதுவும் சமைக்காதே. இன்று வெளியில் சாப்பாடு'' என்றார். அன்று எங்களின் திருமண நாள். நானும் சரி என்று மாலை குழந்தைகள் மூவருக்கும் 'டிரெஸ்' செய்து தயாராகக் காத்திருந்தேன். அவசர அவசரமாக வேலை முடிந்து அவர் வர ஐந்தரை மணியாகி விட்டது. பிறகு எல்லோரும் புறப்பட்டு வாசலில் பூட்டும் பூட்டியாகி விட்டது.

பால்காரர் வந்தார், ''அட, மறந்தே போனேனே'' என்று கதவைத் திறந்து பால் வாங்கி, 'காஸில்' வைத்துக் காய்ச்சினேன். என் கணவரோ, ''இதெல்லாம் வந்து செய்யலாமே. புறப்படும் பொழுதுதான் உனக்கு எல்லா வேலையும் வரும்' என்றவுடன், ''தோ ரெடி'' என்று புறப்பட்டேன். ஓட்டலில் டிபன், கடையில் குழந்தைகளுக்குக் கொலுக, ஸ்வீட்ஸ், ஐஸ்கிரீம் என்று ஏகமாக செலவழித்து திருமண நாளைக் கொண்டாடினோம்.

இரவு வீடு வர பத்தரை மணியாகி விட்டது. குழந்தைகளுக்கோ தூக்கக் கலக்கம். கிச்சன் சென்று பாலைக் குழந்தைகளுக்கு ஒரு ஒரு டம்ளர் கொடுத்தேன். (சுட வைத்தோ, சர்க்கரை போட்டோ பழக்கவில்லை) மடமடவென்று பாலைக் குடித்த குழந்தைகள் படுக்கப் போய் விட்டார்கள். பாத்திரத்தில் மீந்த சிறிது பாலை நான் குடிக்கலாமென்று பாத்திரத்துடன் அப்படியே வாயில் விடப் போக அடியில் ஏதோ கருப்பாக தென்பட்டது. பார்த்ததும், ''வீல்'' என்று அலறி விட்டேன். ஒரு விரல் நீளத்தில் 'பல்லி' ஒன்று செத்துக் கிடந்தது!

படுக்கப் போன கணவரும், குழந்தைகளும் நான் கத்திய கத்தலில் அலறி அடித்துக் கொண்டு வந்தார்கள். எல்லோருக்கும் ஒரு பிடி உப்பைத் தண்ணீரில் கரைத்துக் குழந்தைகள் கத்தக் கத்தக் கொடுத்தேன். தொண்டை வரை விரல் விட்டதில் பாத்ரூம் முழுவதும், மாலையில் சாப்பிட்ட மசால் தோசை, ஸ்வீட்ஸ் என்று ஒரே வாந்திமயம். குழந்தைகளோ ஒரே அழுகை.

''ஏன் மம்மி, நாங்க செத்துடுவோமா, இப்பத்தானே மம்மி கொலுக வாங்கினது, அதைப் போடக் கூட இல்லையே, அதற்குள்ளவா செத்துடுவோம்,'' என்ற கேள்வி வேறு. பக்கத்து அக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லோரும் கூடி விட்டனர்.

டாக்டரைப் பார்க்க, ஆட்டோவில் பறந்தோம். டாக்டரோ 'பல்லி'யைப் பார்க்க வேண்டும் என்றதால் திரும்பவும் அதே ஆட்டோவில் வீடு வந்து பல்லி உள்ள பால் பாத்திரத்தை எடுத்துப் போய் காண்பித்தோம்.

அவர், ''பரவாயில்லை பல்லி விழுந்து இறந்து விட்டது. அதன் உடம்பு பிளந்து, விஷம் பாலில் கலந்திருந்தால் ஆபத்து. அப்படி ஒன்றும் இல்லை. நீங்களும் உப்பு நீர் கொடுத்து எல்லோரும் வாந்தி எடுத்துள்ளீர்கள். பயமில்லை'' என்று எல்லோருக்கும் ஓர் ஊசி போட்டார். பிறகுதான் நிம்மதி மூச்சு வந்தது.


மாலை பாலைக் காய்ச்சியவுடன், சுடச்சுட பாலை மூடி வைத்தால் ஆடை கட்டாது. நீர்த்து விடும் என்று மேல் மூடியை பாதி மூடி விட்டுப் போயிருந்தேன். அதுதான் தப்பாகி அதன் வழியாக பல்லி பாலில் விழுந்து இறந்து விட்டிருக்கிறது.

இப்பொழுதெல்லாம் மாலை ஸ்கூல் முடிந்து குழந்தைகள் மூவரும் சமையல் ரூமில் நுழைந்து, ''பால் மூடியிருக்கா மம்மி'' என்று கேட்டு விட்டுத்தான், விளையாட, படிக்கப் போகிறார்கள். என்றும் சமையல் ரூமில் நுழையாத என் கணவரும் அடிக்கடி விசிட். அப்பப்பா, எங்களின் மறக்க முடியாத திருமண நாளாக ஆகி விட்டது.

- பிரேமா ராஜசேகரன்

புதியவை அறிமுகம்

ஹிந்துஸ்தான் லேடக்ஸ் லிமிடெட் 'சாஹேலி' என்ற புதிய கருத்தடை மாத்திரை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்குப் பக்க விளைவுகள் இருக்காது என்கிறார்கள். இன்னொரு சௌகர்யம் வாரத்திற்கு இரண்டு மாத்திரைகள் போட்டுக் கொண்டால் போதுமாம்.



இந்த மாதம் எப்படி?

பெப்ரவரி'93

[illegible]

அசுவினி, பரணி, கிருத்திகை 1 - ஆம் பாதம்.

உங்களுக்குப் புராதனமான கிராமத்திற்கோ அல்லது நீண்ட காலம் வாழ்ந்து வந்த இடத்திற்கோ சென்று வரும் வாய்ப்பு வரும். 'சைனஸ்' எனும் தலைவலியால் அவதிப்பட்டவர்களுக்குத் தற்போது அதிலிருந்து நிவாரணம் கிடைக்கும். வயிற்று வலி வந்து குணமாகும். கணக்கியல் துறை, இலக்கியத் துறை ஆகியவைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கூடுதலான இலாபம் கிடைக்கும். மாதா வழிப்பாட்டனார் வகையில் சோகச் செய்தியைக் கேட்க வேண்டி வரும். முருகன் அருளால் வில்லங்க தாவாக்களில் வெற்றி ஏற்படும். கலைத் துறையினர்க்கு ஏற்றம் உண்டு. அரசியல் ஆலோசகர்களும், ஜோதிடர்களும் பலமுறை யோசித்தே ஆலோசனை வழங்க வேண்டும். இல்லையெனில் உங்கள் பாடு திண்டாட்டம்தான். ஆகாத நாட்கள் 13, 14, 15 தேதிகள். ஆயினும் 2, 3, 4 தேதியில் சுப நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடாகும்.

ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 - ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 - ஆம் பாதம்.

மாணவ மாணவிகளுக்குக் குருவின் அருள் பரிபூரணமாக உண்டு. ஆயினும் மாதத்தின் முற்பகுதியில் வலது கண் பாதிப்புக்கு ஆளாகலாம். திருமணம் கைகூடி வரும் நிலை தெரிவதால், எதிர்பார்க்கும் இடம் உங்கள் விருப்பம் போல் அமையலாம். இது திருமணத்திற்காகக் காத்திருக்கும் இருபாலருக்கும் பொருந்தும். தீ, மின்சாரம் இவைகளில் சிறு விபத்துக்கு இடம் உண்டு. அல்லது திருடர்களால் பாதிப்பு ஏற்படக்கூடும். மாதத்தின் பிற்பகுதியில் உங்கள் முயற்சி ஒன்றில் அமோக வெற்றி ஏற்படும். எனினும் மாதம் பூராவும் ஏதாவது ஒருவிதத்தில் குழப்பம், டென்ஷன், பொருளாதாரப் பற்றாக்குறையும் இருந்து வரும். மாதத்தின் முற்பகுதியில் நிலவுகின்ற மந்தத்தன்மை பிற்பகுதியில் மெல்ல விலகி ஒரு நல்ல நிலைமை உருவாகும். எனவே இந்த மாதத்தில் எதிரிகளால் கூட உங்களுக்குப் பணப் பிரச்னை ஏற்படும். அதனால் இந்த ராசியைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் குறிப்பாக பணப் பொறுப்பில் இருப்பவர்கள் தங்களது தொழிலில், பேச்சில், பிரயாணத்தில் சற்று எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நாட்கள் 16, 17, 18 தேதிகள். எதிர்பாராத நன்மையைத் தரும் நாட்கள் 23, 24, 25 ஆகிய தேதிகளாகும்.

மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4 - ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

நிலமோ, வீட்டு மனையோ எதுவானாலும் வாங்க அல்லது விற்க ஏற்ற மாதமில்லை. இட மாற்றத்திற்கோ அல்லது வெளிநாட்டிற்கோ செல்ல வாய்ப்பு ஏற்படலாம். சனீஸ்வரனுக்குரிய ப்ரீதியைச் செய்வது நல்லது. எந்தக் கிரகமும் உதவும் நிலையில் சஞ்சாரம் செய்யவில்லை. மாதம் பூராவும் நிதிப் பற்றாக்குறை, வீண் வம்பு, பொல்லாப்பு, உஷ்ண சம்பந்தமான நோய் இவைகளால் மன அமைதி கெடலாம். உங்கள் குலதெய்வம் ஆண் தெய்வமானால் அபிஷேக ஆராதனையும் பெண் தெய்வமானால் புடவை பாவாடை ஆகியவைகளை அணிவித்து பொங்கல் இடுவதும் நல்லது. அனுபவித்துக் கழிக்க வேண்டிய மாதம். எனினும் மாதத்தின் பிற்பகுதியில் எந்தத் துறையினரும் புது ஒப்பந்தமோ, முயற்சியோ மேற்கொள்ளலாம்.

கடக ராசி :

புனர்பூசம் 4 - ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

கன்னிப் பெண்களுக்குத் திருமணம் கைகூடி வரலாம். மாதத்தின் முதற்பகுதியில் இது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடத்தலாம். ராகு தந்தையின் உடல்நலத்திற்குச் சற்று சலனம் தர இருக்கிறார். ஆனால் கேது அதைத் தடுத்து விடலாம். மற்றபடி கடக ராசிக்காரர்களுக்கு அமோகமான மாதமாகத் தெரியவில்லை. சுக்கிரன் ஒருவனே குடும்பத்தில் அமைதியையும், தாம்பத்திய உறவில் மகிழ்ச்சியையும் நிலவ உதவுகிறார். மற்ற கிரகங்கள் அனைத்துமே சாதகமானச் சூழ்நிலையில் சஞ்சாரம் செய்யவில்லை. எனவே நிதிப் பற்றாக்குறை, பணியில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடி, அரசியல்வாதிகளுக்கும் அமைச்சர்களுக்கும் நிச்சயமற்ற நிலைமை, கலைஞர்களுக்கு இழுபறி நிலை என எத் துறையினர்க்கும் ஏற்ற சூழ்நிலையில்லை. 21, 22, 23 தேதிகளில் எச்சரிக்கை தேவை. மாதத்தில் ஏற்ற நாட்கள் 2, 3, 4 தேதிகள்.

சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1 - ஆம் பாதம்.

புது முயற்சிகளுக்கு வாய்ப்புக் குறைவு என்றாலும், சுக்கிரன் வீடு மற்றும், வாகன வசதிகளுக்கு உதவும் நிலையில் உலாவுகிறார். இதுவரை இருந்த சில சில்லரைத் தொந்தரவுகள் நீங்கப் பெறலாம். அது உடல்நல சம்பந்தமாகவும் இருக்கலாம் அல்லது நிதி சம்பந்தமாகவும் அமையலாம், வெளிநாட்டுப் பிரயாண சம்பந்தமான முயற்சியில் வெற்றி கிடைக்கும். மாதத்தின் முதல் பகுதியில் நிலசம்பந்தமான எந்த ஒரு விஷயத்திலும் உங்களுக்கு இலாபம் கிடைக்கும். நடிப்புத் துறையினர், அழகு நிலையத்தார், இசை மேதைகள், வாத்தியம் இசைப் போர் ஆகியவர்களுக்குச் சுக்கிரன் அருள் உண்டு. ராகுவும் கேதுவும் சேர்ந்தே சோதனை தர இருப்பதால், வீட்டில் உள்ள வயோதிகர்களின் உடல்நிலை பற்றிய கவனிப்பு மிகவும் அவசியம். சுதர்ஸன மகாமந்திரத்தை உங்கள் வீட்டிற்கு வரும் வேத அத்யயனம் செய்தவரிடம் கேட்டு மனனம் செய்தால் எல்லாம் நல்லவிதமாக முடியும். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய தேதிகள் 23, 24, 25 இலாபகரமான நாட்கள் 2, 3, 4, 5, 6, 7 தேதிகள் ஆகியவை.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்.

மாதத்தின் முற்பகுதி முன்னேற்றத்தைத் தரத்தக்க நிலையில் இராசிநாதன் இருக்கிறார். புதுமணத் தம்பதிகளுக்குள் சற்று பூசல் ஏற்படலாம். இந்த நிலை மாதத்தின் பிற்பகுதியில் நிலவலாம். மற்றபடி



அடைக்குப் பருப்புகள் ஊறப் போடும் போது தோலுடன் கூடிய உளுந்து, பச்சை பயறு, வெள்ளைக் கடலை ஆகியவற்றைப் போட்டு அரைக்க வேண்டும். நாலு பெரிய தக்காளிகளையும் பொடியாக நறுக்கிச் சேர்த்து அரைத்துக் கொள்ளுங்கள். பிறகு அடை தட்டிச் சாப்பிட்டுப் பாருங்கள். வித்தியாசமான ருசியோடு, சத்துள்ள உணவு கிடைக்கும்.

\- கௌரி

சல்லடையைப் பூச்சி அரித்து விட்டதா? 'நேச்சரல் கலர் நெய்ல் பாலிஷால்' ஓட்டைகளின் மேல் இரண்டு அல்லது மூன்று முறை பெயிண்ட் செய்து காய்ந்தபின் எத்தனை முறை வேண்டுமானால் கவலையில்லாமல் உபயோகிக்கலாம்.

- உஷா



தொழில்ரீதியாகப் பார்க்கும் போது முன்னேற்றம் கிடைக்கும் மாதமாக அமையலாம். நீண்ட நாள் திட்டம் ஒன்று அனுகூலமாக முடியும் நிலையில் உங்களைச் சார்ந்த ஒருவரால் அது முறியடிக்கப்படும். இது குறிப்பாக வாகனத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பொருந்தும். செவ்வாய் அனுகூலச் சத்ருஸ்தானத்தில் இருக்கிறார் என்பதைக் கவனிக்க வேண்டும். அதாவது உதவுவது போல நடித்துப் பின் கெடுத்து விடும் நிலையில் உறவாடுபவரை நீங்கள் இனம் காண்பது அவசியம். 1, 2 மற்றும் 26, 27, 28 தேதிகளில் வாக்கைக் கொடுக்க வேண்டாம். 2, 3, 6 மற்றும் 5, 7 தேதிகள் இலாபகரமானவை.

துலா ராசி :

சித்திரை 3, 4 - ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

இராசிநாதன் உச்சம் பெற்றதால் உங்கள் தாம்பத்ய உறவும் குடும்பத்தில் அமைதியும் நன்றாகவே இருக்கும். ஆகவே மாதத்தின் முற்பகுதியில் செலவினங்கள் கூடுதலாகும். நெருப்பு, திருடர், வியாதி ஆகிய இனங்களில் ஏதாவது ஒன்று உங்களைப் பாதிக்கும். வக்ர கதியில் உள்ள குருவால் ஓரளவுக்குப் பாதுகாப்பு உண்டு. மாதத்தின் பிற்பகுதியில் தாய்மாமன் வகையில் சில சோதனைகள் வரலாம். அரசுப் பணியில் உள்ளவர்களும் தனியார்த் துறையில் நிர்வாகிகளாக உள்ளவர்களும் டென்ஷன் அடையக்கூடிய நிலை தெரிகிறது. எனவே ராகுகாலத்தில் இராகு பகவானுக்கும், புதன் கிழமை புதனுக்கும், கணபதிக்கும் அர்ச்சனை செய்வது நல்லது. 2, 3, 4 தேதிகள் உங்களைப் பாதிக்காது. 5, 6, 7, 8, 9 தேதிகளில் சுபநிகழ்ச்சியும், மகிழ்ச்சியும் இடம்பெறும்.

விருச்சிக ராசி :

விசாகம் 4 - ஆம் பாதம், அனுஷம், கேட்டை.


மாதத்தின் முதல் 15 நாட்களுக்கு மன அமைதியும், குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையும் இருக்கும். ஆயினும் ஏற்கெனவே காசநோய், ஆஸ்துமா போன்ற நோய்களினால் அவதியுறும் விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் மருத்துவச் செலவு கூடுதலாக ஆகலாம். எனினும் சனீஸ்வரனால் ஆயுளுக்கு உத்திரவாதம் உண்டு. நீங்கள் எதிர்பார்க்கும் இனம் ஒன்றில் உங்களுக்கு வெற்றி உண்டு. அது நீங்கள் எதிர்கொண்ட தேர்வோ, வேலைக்கான நேர்முகப் பேட்டியோ கூட இருக்கலாம். நடிப்புத் துறை மற்றும் எந்தவிதக் கலைத் துறையினாலும் வெற்றியைத் தேடித் தரும் மாதம். உங்கள் ராசிக்கு 7-ஆம் வீட்டதிபதியும் களஸ்திரகாரனுமாகிய சுக்கிரன் உச்சம் பெற்றதால் கணவரால் மனைவிக்கும், மனைவியால் கணவருக்கும் இலாபமுண்டு. குறிப்பாக 2, 3, 6, 7 தேதிகளில் அத்தகைய நன்மை ஒன்று உங்களை நாடி வரும். 4, 5 தேதிகளில் எச்சரிக்கை தேவை.

தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 - ஆம் பாதம்.

ராகு ரோகத்தாலும், கொஞ்சம் நெருப்பாலும் கூட உங்களைச் சோதிக்கப் பார்க்கிறார். ஆனால் கேதுவோ நெருப்பையும் அணைத்து ரோகத்தையும் குணப்படுத்தித் தன் அருட்பார்வையால் உங்களையும் அணைத்துக் கொள்வார். மற்ற கிரகங்களில் மாதம் பூராவும், சுகத்தைத் தரும் நிலையில் சுக்கிரனும், முதற்பகுதியில் புதனும் பிற்பகுதியில் சூரியனும் தங்களது காரகத்துக்கு ஏற்ப உதவுகிறார்கள். அதாவது குடும்ப சுகம், தாய் மாமன் வகையில் ஆதரவு என ஏதோ ஒருவிதத்தில் உதவி கிடைக்கும். இதர கிரகங்களால் நன்மை குறைவே. ஏழரை சனியின் பிடியிலிருந்து உங்கள் ராசி நாதன் விடுபடும் சூழ்நிலையில் உள்ளதால் நீங்கள் நிம்மதிப் பெருமூச்சு விடலாம். மூல நட்சத்திரத்தில் பிறந்த கன்னிப் பெண்களுக்குத் தட்டிச் செல்லும் திருமணம், தற்போது கைகூடி வருகிறது என்பதால் இந்த விஷயத்தில் விரக்தி அடைந்தவர்கள் தற்சமயம் மீண்டும் முயல வேண்டும். 5, 6, 7 தேதிகளை ஒதுக்கவும். 12, 13 தேதிகள் நலம் தருபவை. 2, 3, 4 தேதிகளிலும் நன்மை உண்டு.

போதைக்கு அடிமையாகாதீர்கள்



உங்கள் தலையிலே வெள்ளி
நட்சத்திர மினுமினுப்பா?
நீலவானிலே நட்சத்திரங்கள் கண்ணுக்கு இனிமைதான். ஆனால் உங்கள் நீளக்கூந்தலிலே பொடுகுகள் மிகவும் தொல்லைதான்.
பொடுகுகளின் தொல்லையிலிருந்து பூரண நிவாரணம் அளிக்கிறது மெடிமிக்ஸ் ஆயுர்வேதிக் டாய்லெட் சோப்பு.
பயன்படுத்தும் முறை
மெடிமிக்ஸின் செறிவான நுரையை 5 நிமிடம் தலையிலேயே வைத்திருந்து பிறகு கழுவவும். பொடுகுகள் முற்றிலும் நீங்கிவிடும்.
மெடிமிக்ஸ்
ஆயுர்வேத டாய்லட் சோப்
• பொடுகு
• முகப்பரு
• வேர்க்குரு
• கரும்புள்ளி
• சொறி
• தேமல்
MEDIMIX
AYURVEDIC TOILET SOAP

ZEST/MS/105

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 - ஆம் பாதங்கள்.

செவ்வாய் தோஷத்தாலும், சர்ப்ப தோஷத்தாலும் நிராகரிக்கப்பட்ட மகர ராசி ஜாதகர்களுக்குத் திருமணப் பொருத்தம் அனுகூலமாகப் பொருந்தி, தட்டிச் சென்று கொண்டிருந்த திருமணம், இந்த மாதத்தில் கைகூடி வரும் வண்ணம் அமைவது நிச்சயம். அத்துடன் உங்கள் சகோதரர்கள் மூலமாகவே காரியானுகூலம் ஆகலாம். வக்கிர கதியில் குரு இருந்தாலும் இராசிநாதன் ஆட்சி பெற்றுள்ளதால் ஏழரைச் சனியின் பிடியில் உள்ளவர்களுக்குக் கெடுதல் ஏற்படாது. அத்துடன் சுக்கிரனால் புதியதொரு பதவி ஒன்று கிடைத்து அதனால் மகிழ்ச்சியும் மன அமைதியும் கிடைக்கும். மிதுனத்தில் உள்ள செவ்வாய், இந்த ராசியின் உச்ச நாதன் என்பதாலும், ஆடும் இடத்தில் அங்காரகன் அமர்ந்தால், யுத்தத்தில் ஜெயம், சத்ருநாசம், நிரபராதி விடுதலை பெறுதல் எனும் ஜோதிட சட்டத்திற்கேற்ப நிலை இந்த மாதத்தில் நன்கு அமைவதாலும் தைரியமாகவும் கவலைப்படாமலும் இருக்கலாம். 8, 9 தேதிகளில் எச்சரிக்கை தேவை. 2, 3, 4 தேதிகளிலும் 5, 6, 7 தேதிகளிலும் கணிசமான அளவிற்கு நன்மை ஏற்படும்.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 - ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

குடும்பத்தில் சுகமும், அமைதியும் நிலவும் என்றாலும் விரயத்திற்கும் வாய்ப்பு உண்டு. வக்ரகதியில் உள்ள குருவின் பார்வையும் இராசிக்கு இருப்பதால் இன்னல்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு அதிகமிருக்க நியாயமில்லை. உங்களைச் சார்ந்தவர்களே உங்களுக்கு எதிராக வேலை செய்கிறார்கள். முக்கியமாக காவல் துறை தகவல் துறை மற்றும் பொறியியல் துறையில் உள்ளவர்கள் அந்தகைய பாதிப்பிற்கு ஆளாகலாம். புதனும் உதவும் நிலையில் இல்லை. எனவே மைத்துனர்கள், மற்றும் தாய்மாமன் வகையினரால் சிறு குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். அரசியல்வாதிகளானாலும், அறங்காவலர்களானாலும் ஆர அமர யோசித்துச் செயல்படுவது நல்லது. இல்லையெனில் பொது மக்களின் பொல்லாப்புக்கு ஆளாக நேரிடும். எச்சரிக்கையுடன் கழிக்க வேண்டிய நாட்கள் 10, 11 தேதிகள். அதிருஷ்டம் தரும் நாட்கள் 2, 3, 4, 5, 6, 7, 16, 17, 18 தேதிகள்.

மீன ராசி :

பூரட்டாதி 4 - ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

ராசியில் உச்சம் பெற்றுள்ள சுக்கிரன் குடும்பத்திற்கும் வாழ்க்கைத் துணைவரின் உடல்நலத்திற்கும் தேவையானதைத் தர அருள்வார். லாப விரையாதிபதியான சனி ஆட்சியில் இருந்து அருள்புரிவதால் உங்கள் வாகனத்தை மாற்றி புதிதாக ஒன்றை வாங்கச் செய்வார். திருமண ஏற்பாடு ஒன்று நிகழும். யானை முகத்தோனும் இந்திரன் மருகனும் உங்களுக்குரிய எதிர்பாராத தனலாபத்தைப் பெற அருளுவார்கள். கோர்ட் வியாஜ்ஜியம் ஒன்று இம்மாதம் முடிந்தால் தோல்வி உங்களுக்கு ஏற்படும். எனவே வாய்தா வாங்கி எதிராளியைத் திணறடியுங்கள். உங்களுக்கு விருப்பமானவரையே திருமணம் செய்து கொள்ள ஆக்கப்பூர்வமான யோசனையைத் தர சுக்கிரன் இருக்கிறார். சனீஸ்வரருக்கு இரும்பு அகலில் விளக்கேற்றுங்கள். உங்கள் புத்திரர்களைப் பற்றி அனாவசியமான கவலை ஏற்படும். எனவே அதைக் கண்டுகொள்ளாதீர்கள். 12, 13 தேதிகளில் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள். 2, 3, 4, 5, 6, 7, 19, 20, 21 தேதிகளில் சுபநிகழ்ச்சிகள் நிகழும் வாய்ப்பு உண்டு.

- ஜெயலக்ஷ்மி கிருஷ்ணன்



லைம் ஜூஸ்

ரூபாய்க்கு எட்டு என்று வாங்கிய எலுமிச்சம்பழங்களை ஜூஸ் பிழிந்து ஒரு 'பெட்' ஜாரில் விட்டு அப்படியே ஃப்ரீசரில் வைத்து விட்டேன். தேவைப்படும்போது 15 நிமிடங்களுக்குமுன் அதை வெளியே எடுத்து வைத்துவிட்டு மேலாக இளகி நிற்கும் ஜூஸைச் சமையலுக்குப் பயன்படுத்துவேன். இந்த "உறைந்த லைம் ஜூஸை" வைத்துக் கொண்டு ஜூஸாகவும் ரசத்திற்கும் உப்புமா, தால், எலுமிச்சை சாதம் போன்ற பலவகை 'டிஷ்'களுக்கும் மூன்று மாதங்கள் பயன்படுத்தினேன்.

- உஷா


அம்மாவுக்குத் தெரியும் சிறந்தது எதுவென்று...
அதனால்தான்
அவள் தேர்ந்தெடுப்பது சபீனாவை!
வீடு சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக எல்லா வகையான முயற்சிகளையும் மேற்கொள்ள அம்மா தயங்குவதே இல்லை. அதுமட்டுமல்ல. சபீனா பாத்திரங்களை மிகத்துல்லியமாகத் துலக்கிப் பளபளக்கச் செய்கிறது என்பதும் அவளுக்குத் தெரியும்.
30 ஆண்டுகளாக ஒரே சீரான இணையற்ற தரம், நியாயமான விலை. சபீனா அனைவராலும் விரும்பி வரவேற்கப்பட்டு மிக அதிக அளவில் விற்பனையாவதற்கு இவைதான் காரணம்.
எந்தவொரு குடும்பத்தலைவியையும் கேட்டுப்பாருங்கள். வீட்டில் உபயோகிக்க ஏன் சபீனா மட்டுமே சிறந்தது என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.
QUALITY & ECONOMY 30 YEARS
Sabena
ஓர் பளபளக்கும் உதாரணம்
சபீனா -
விவேகமான தேர்வு
AAA/SCP/92158 Tml
விற்பனையாளர்கள்: சபீனா டிடர்ஜென்ட்ஸ் பி. லிமிடெட் 310 டிடிகே சாலை சென்னை 600 014.

பொருள் : குழந்தை களுக்குப் பிடித்த உணவு

முதல் பரிசு ரூ. 300/-

பால் பன்

தேவையான பொருட்கள் :
புழுங்கல் அரிசி - 200 கிராம்,
பச்சை அரிசி - 100 கிராம்,
தேங்காய் - 100 கிராம்,
டால்டா, கிராட்சை (உலர்ந்தது), முந்திரிப் பருப்பு, ஏலக்காய், உப்பு - தேவையான அளவு.

செய்முறை :
புழுங்கல் அரிசி, பச்சை அரிசி

* ஜெயந்தி



யை மூன்று மணி நேரம் ஊற வையுங்கள். அரிசியையும், தேங்காயையும் சேர்த்து, தோசைக்கு அரைப்பது போல அரைத்து உப்பு சேர்த்துக் கரைத்து இரவு வைத்து விடுங்கள். காலையில் வாணலியில் டால்டா விட்டு, முந்திரிப் பருப்பு, கிராட்சை போட்டு பொன் வறுவலாக வறுத்து, ஆற விட்டு ஏலப் பொடியுடன் மாவில் கலந்து, வாணலியில் சிறிது டால்டா ஊற்றி 2 கரண்டி மாவை ஊற்றி மூடி வைத்து விடுங்கள். தணல் சீராக இருக்கும்படி வேக வேண்டும். வெந்தவுடன் எடுத்துப் பயன் படுத்த வேண்டும். பன் போல இனிப்பாக இருக்கும்.

* கிரிஜா



குறிப்பு : தொட்டுக் கொள்ள தேங்காய் சட்டினி பயன்படுத்தலாம். இனிப்பு வேண்டாம் என்று நினைப்பவர்கள் கிராட்சை சேர்க்க வேண்டாம். நிறம் விரும்புபவர்கள், மாவில் கலந்து ஊற்றலாம்.

- ஆர். கருணாவதி,
கடலூர் - 1.

இரண்டாம் பரிசு ரூ. 200/-

நட்ஸ் சாக்லேட்

தேவையான பொருட்கள் :
மில்க் மெய்ட் - ½ டின், அல்லது பால் பவுடர் - 1 டம்ளர்,
சர்க்கரை - 1 டேபிள் ஸ்பூன்,

* பாக்யலக்ஷ்மி



வெண்ணெய்
- 1 டேபிள் ஸ்பூன்.
மால்டோவா அல்லது போர்ன்விடா
- 1 ஸ்பூன்.
பேக்கிங் பவுடர்
- 1 ஸ்பூன்.
முந்திரி பொடித்தது
- 100 கிராம்.

செய்முறை :
கனமான சட்டியில் எல்லா சாமான்களையும் ஒன்றாகப் போட்டு, மிதமான தீயில் வைத்துக் கிளறவும். சட்டியில் ஒட்டாமல் வரும் போது இறக்கி, கை விரல்களில் வெண்ணெய் தடவிக் கொண்டு, சிறு சிறு உருண்டைகளாக முட்டை வடிவத்தில் உருட்ட வேண்டும். சிறிது சூடு இருக்கும் போதுதான் உருட்ட வரும். உருட்ட வரவில்லையென்றால்,

விரல்களில் வைத்து பட்டனைப் போல் சிறிது அழுத்தி (ஜெம்ஸ் மாதிரி) போடவும். நேரமும் குறைவு. சுவையும் நிறைவு. குழந்தைகளுக்குப் பிடித்தமான டாபி ஆகும்.

- ஜெயந்தி முத்துகுமாரசுவாமி,
மயிலாடுதுறை.

மூன்றாம் பரிசு ரூ. 100/-

யோகர்ட் ஐஸ்க்ரீம்

தேவையான பொருட்கள் :
பால் - 1 லிட்டர்,
சர்க்கரை - 3 டேபிள் ஸ்பூன்,
தயிர் - 1 டீஸ்பூன்,
ஏலக்காய், கிராம்பு - 1,
ஜாதிக்காய் - 1 சிட்டிகை,
முந்திரி, திராட்சை - 1 ஸ்பூன் (நெய்யில் வறுக்கப்பட்டது),
காராபூந்தி - 1 டேபிள் ஸ்பூன்,
வறுத்த (அல்லது) பொரித்த பச்சை பட்டாணி - 1 டேபிள் ஸ்பூன், (கடைகளில் கிடைக்கும்)
தேங்காய் + காரட் துருவியது - 1 டேபிள் ஸ்பூன், (1 ஸ்பூன் சர்க்கரை கலந்து வைக்கவும்),
ப்ரட் ஸ்லைஸ் - 1.

செய்முறை :
பாலை நன்கு காய்ச்சவும். 1 லிட்டர் பால் ½ லிட்டர் அளவுடன் இறக்கி, சர்க்கரை, ஏலப் பொடி கலந்து மூடவும். சற்று ஆறியபின் தயிர் சேர்த்துக் கலக்கி மூடி வைக்கவும். சுமார் ஆறு மணி நேரம் கழித்து எடுத்து ஐஸ் பெட்டியில் வைத்து விடவும்.

ரொட்டித் துண்டை சிறு சிறு துண்டுகளாக்கி நெய்யிலே பொரித்து வைக்கவும்.

பரிமாறு முன்பு தயிரைச் சிறு சிறு கப்புகளில் நிரப்பி, மேற்கூறிய பண்டங்களை மேலே அழகுபட கற்பனை வளத்துடன் கலர் கலராகத் தூவி ஸ்பூன் போட்டுக் கொடுக்கவும்.

முக்கிய குறிப்பு : காராபூந்தி முதலியவற்றைப் பரிமாறும் பொழுதுதான் தூவ வேண்டும். இல்லாவிட்டால் நமுத்துப் போய் விடும்.

- அகிலா கிருஷ்ணன், சென்னை - 26.


ஆறுதல் பரிசு ரூ. 50/-

முத்து முறுக்கு :

தேவையான பொருட்கள் :
தயிர் (புளித்தது) - 1 லிட்டர்,
ஜவ்வரிசி - ¼ கிலோ,
உளுத்தம் பருப்பு (வறுத்து அரைத்த) மாவு (அ) பொட்டுக் கடலை மாவு - 100 கிராம்,
ப. மிளகாய், இஞ்சி விழுது - விருப்பப்படி,
கடுகு, பெருங்காயம் - தாளிக்க,
வாசனைக்கு வெள்ளை எள் - 2 ஸ்பூன்,
உப்பு - ருசிக்கேற்ப,
டால்டா - 50 கிராம்,
பொரிப்பதற்கு எண்ணெய் - ½ லிட்டர்.

செய்முறை :
முதலில் இஞ்சி, ப. மிளகாயை மை போல் அரைத்து உப்புடன் சேர்த்துத் தயிரில் இடவும். இந்தக் கலவையில் ஜவ்வரிசியை 4 மணி நேரம் நன்கு ஊறவிடவும். (ஊறியதும் ஜவ்வரிசியின் அளவு பெரிதாகி நடுவில் வெண்மையில்லாமல் இருக்கும்) நன்கு ஊறியதும், அந்தத் தயிரில் டால்டா மற்றும் மற்ற மாவுகளை கலந்து, தாளித்துக் கொட்டி, முறுக்கு மாவு பதத்திற்குப் பிசையவும். தேன் குழல் அச்சில் இந்த மாவை இடவும். அடுப்பில் பொரிப்பதற்கும் எண்ணெய் காய வைத்து, மாவைப் பிழியவும். பொரித்த பிறகு பார்த்தால் முறுக்கு மேலே வெண்மையான முத்துக்களை ஒட்டி வைத்தது போல ஜவ்வரிசி பொரிந்து ஒட்டிக் கொண்டிருக்கும். எப்போதும் ஒரே மாதிரி சுவையுடன் முறுக்கு சாப்பிடும் நமக்குப் புளிப்பு, காரம் போன்ற மாறுதலான சுவையுடன், மாறுதலான முத்துக்கள் போன்ற உருவில் அழகான, சுவையான முறுக்குகள் கிடைக்கும்.

- பாக்யலக்ஷ்மி கருணாகரன்,
சென்னை - 44.




துண்டு துண்டாக இருக்கும் ஐஸ் கட்டியை பிளாஸ்கினுள் பத்திரப்படுத்த விரும்பினால் பிளாஸ்க்கை செங்குத்தாக நிறுத்தி ஐஸ் கட்டிகளை அதனுள் போடக் கூடாது. பிளாஸ்க்கை லேசாகச் சரித்து அதனுள் வழுக்கிக் கொண்டு போகும் வகையில் ஐஸ் கட்டிகளை அதனுள் போட வேண்டும்.

- விஜயா

பச்சை கொத்துமல்லியைத் துவையலாகத் தண்ணீர் சேர்க்காமல் செய்யும் போது, மிளகாய் வற்றல், பருப்பு, வெங்காயம் ஆகியவற்றை அவ்வப்போது வறுத்துப் பொடித்துச் சேர்ப்பதற்குப் பதில், கொத்துமல்லியை மிக்ஸியில் அரைத்ததும் தோசைக்கு உபயோகிக்கும் மிளகாய்ப் பொடியை உப்புடன் சேர்த்து அரைத்தால் அதே சுவை கிடைக்கும்.

- சரஸ்வதி



ஆறுதல் பரிசு ரூ. 50/-

ஜீரா போட்

தேவையான பொருட்கள்
சிரோட்டி ரவை - 1 கப்,
பால் - $1\frac{1}{2}$ கப்,
சர்க்கரை - $1\frac{1}{2}$ கப்,
ரோஸ் எஸன்ஸ் - $\frac{1}{2}$ டீஸ்பூன்,
சமையல் சோடா - 1 சிட்டிகை,
நெய், டால்டா,
ரீபைண்ட் ஆயில் - $\frac{1}{4}$ கிலோ

செய்முறை :

அடுப்பில் பாத்திரத்தை வைத்துப் பாலை விட்டுப் பொங்க விடவும். பொங்கும் பாலில் ஒரு சிட்டிகை சோடா சேர்த்து வறுக்காத பச்சை ரவையைக் கொட்டிக் கிளறி கீழே இறக்கவும். சூடு ஆறியபின் கையில் நெய் தடவிக் கொண்டு ரவைக் கலவையை அழுத்தித் தேய்த்துப் பிசையவும். பின் நெல்லிக்காய் அளவு உருண்டைகளாகச் செய்யவும். ஒவ்வொரு உருண்டையையும் கையில் எடுத்து உருண்டை நடுவில் இரு கட்டை விரல்களாலும் அழுத்திக் குழி செய்து கொள்ளவும். இது போட் வடிவில் வரும்.

இப்போது அடுப்பில் வாணலியை வைத்து நெய், எண்ணெய் விட்டுக் காய விடவும். காய்ந்த நெய்யில் போட்களை போட்டுப் பொன்னிறமாக வறுக்கவும். வறுத்த போட்களை ஒரு தட்டில் பரப்பவும்.

காஸின் மற்றொரு பர்னரில் மற்றொரு பாத்திரத்தை வைத்து சர்க்கரையைப் போட்டு ஒரு கப் நீர் விட்டு ஜாமூன் பாகு போல் செய்து கொள்ளவும். இரு துளிகள் ரோஸ் எசன்ஸ் விட்டு ஜீராவை இறக்கவும்.

தட்டில் பரப்பி வைத்துள்ள போட் குழியில் ஜீராவை நிரப்பவும். 1 மணி நேரம் ஊறிய பிறகு குழந்தைகளுக்குச் சாப்பிடக் கொடுக்கவும். இது அவர்கள் குதூகலமாகச் சாப்பிடும் ''ஜீரா போட்''

- கிரிஜா, பெங்களூர் - 22.

குழந்தைகளுக்குப் பிடித்த மேலும் சில உணவுகள்

ஒயிட் பால் :

தேவையான பொருட்கள் :
பொரி - $\frac{1}{2}$ லிட்டர்,
நிலக்கடலை - 100 கிராம்,
பொட்டுக் கடலை - 50 கிராம்,
கொப்பரைத் துண்டு - 1,
அரிசி மிட்டாய் - 1 டேபிள் ஸ்பூன்,
முந்திரிப் பருப்பு - 15,
வெல்லம் - $\frac{1}{2}$ கிலோ.

செய்முறை :

நிலக்கடலையின் தோல் நீக்கி சுத்தமாக எடுத்து வைக்கவும். கொப்பரையைத் துருவலில் துருவி வைக்கவும். அரிசிப் பொரி, நிலக்கடலை, பொட்டுக் கடலை, அரிசி மிட்டாய், கொப்பரைத் துருவல் அனைத்தையும் ஒன்றாகக் கலந்து வைக்கவும்.

வெல்லத்தைக் கரைய விட்டு, வடிகட்டி, மண் நீக்கி பாகு காய்ச்சவும். கெட்டிப் பாகாக வந்ததும் கீழே இறக்கி கலந்து வைத்துள்ள பொரிக் கலவையைக் கொட்டிக் கிளறவும். பாகுடன் கலந்த பொரிக் கலவையை உருண்டைகளாக சிறிய பந்து அளவு உருட்டி வைத்து முந்திரியை ஒவ்வொரு உருண்டையிலும் சொருகவும் (சூடான பாகுக் கலவையை உருட்டுவதற்குக் கையில் அரிசி மாவைத் தொட்டுக் கொள்ளவும்.)

- தாரா.

சிறு கூடை முறுக்கு

தேவையான பொருட்கள் :

பச்சை அரிசி - ½ படி,
உளுத்தம் பருப்பு - 100 கிராம்,
புழுங்கலரிசி - 100 கிராம்,
சோயாபீன்ஸ் - 50 கிராம்,
சோளம் - 50 கிராம்,
கோதுமை - 50 கிராம்,
கடலை பருப்பு - 50 கிராம்.
வாசனைக்கு (ருசிக்கு)
கழுவி தோல் நீக்கி காய
வைத்த எள் - 1 பெரிய கரண்டி,
மிளகுத் தூள் - ½ பெரிய கரண்டி,
பெருங்காயத் தூள் - 1 ஸ்பூன்,
வெண்ணெய் - 100 கிராம்,
எண்ணெய் (பொரிக்க) - 500 கிராம்,
உப்பு - தேவையான அளவு.

செய்முறை :

பச்சை அரிசி தவிர மீதி உள்ளவற்றை லேசாக (எண்ணெய் விடாமல்) வறுத்துக் கொண்டு, பிறகு எல்லாவற்றையும் நைஸாக மாவு அரைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அதை சலித்துக் கொள்ள வேண்டும். பிறகு எள், மிளகுத் தூள், தேவையான உப்பு, பெருங்காயம், வெண்ணெய் இவற்றை மாவில் சேர்த்து நன்கு கலந்து, பிறகு தண்ணீர் விட்டுக் கெட்டியாகப் பிசைந்து 5 நிமிடம் கழித்து, பிறகு மறுபடி மாவை நன்கு அழுத்தமாகப் பிசைந்து, முறுக்கு சுற்ற வேண்டும்.

முறுக்கு என்றால் கை முறுக்கு சுற்றத் தெரிந்தவர்களுக்கு இது மிகவும் சுலபமாக இருக்கும். மிகச் சிறிய கிண்ணங்கள் (எண்ணெய் கிண்ணம் போன்றவை) இருந்தால் அதன் மேல் லேசாக எண்ணெய் தடவி, அதை ஒரு தட்டில் கவிழ்த்துப் போட்டு, அதன் மேல் கை முறுக்கு சுற்றிக் கொண்டு, கிண்ணம் முழுவதும் மூடிக் கொள்ளும்படி சுற்ற வேண்டும். பிறகு அதை, காய்ந்த எண்ணெயில் மெதுவாக, கரண்டியின் உதவியால் போட வேண்டும். பிறகு, கிண்ணத்துடன் முறுக்கு வேகும். முறுக்கு வெந்தவுடன் (சத்தம் அடங்கின பிறகு) முறுக்கைத் தனியாக எடுத்து (உடையாமல்) வைக்க வேண்டும். இதைப் போல எல்லா மாவையும் சுற்றிப் போட்டு எடுக்க சிறிய பிரம்புக் கூடைகள் போல மிக அழகான முறுக்குகள் கிடைக்கும்.


- யசோதா கிருஷ்ணமூர்த்தி, மருதாடு.

பொரி,
வெங்காயம், தக்காளி,
மசாலா எனப் போட்டுச்
சாப்பிட்டால்தான் நன்றாக
இருக்கும். அப்படி எதுவும்
கைவசம் இல்லாவிட்டால் ஒரு
பாத்திரத்தில் ஒரு ஸ்பூன் தோசை
மிளகாய்ப் பொடி போடுங்கள்.
எண்ணெய் விட்டுக் குழையுங்கள்.
இதில் சுத்தம் செய்த பொரியைப்
போட்டுக் கலக்குங்கள். தயாரிக்க
எளிது. சுவையோ அபாரம்.
- பூர்ணிமா




மாதாந்திரத்திற்கு
சாம்பார் பொடி, ரசப் பொடி
ஆகியவை அரைத்து வைப்பது
போல், மிளகாய் வற்றல், தனியா,
உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு,
பெருங்காயம் ஆகியவற்றை எண்ணெய்
விடாமல் வறுத்து மிக்ஸியில் பொடி
செய்து வைத்துக் கொண்டால், அரைத்து
விடும் போது உபயோகிக்கலாம்.
தேங்காய் மட்டும் அரைத்தால் போதும்.
அவ்வப்போது வறுக்கும் வேலையும்,
கேஸும், நேரமும் மிச்சமாகும்.
- சரஸ்வதி சீனிவாசன்






12 புள்ளி 2 வரிசை
2ல் முடிய நேர்புள்ளி

12 புள்ளி 4 வரிசை 4ல் முடிய
நேர்புள்ளி






17 புள்ளி 3 வரிசை 3ல் முடிய நேர்புள்ளி

- ஜானகி

எண்ணிப் பார்ப்போமே...

"என்"ணிப் பார்ப்போமே – 5




"ஜெயாவோட பெண் சரண்யா எவ்வளவு சமர்த்தாக வீட்டு வேலையையெல்லாம் செய்கிறா தெரியுமா? நம்ம வீட்டிலேயும் இருக்கிறதுகளே."

"என்னடி எப்போ பார்த்தாலும் பிரசாந்த்தோடு போட்டி. அவன்தான் சோம்பேறி. நீயாவது எனக்குக் கூடமாட ஒத்தாசை செய்யக் கூடாதா?"

"இதோ பாருங்க. நம்ம பசங்க நவக்கிரகம் மாதிரி. இவங்க கிட்டே ஒரு வேலையை சொல்றதுக்கு நானே அதைச் செய்துடலாம்."


குழந்தைகள் ஒத்துப் போவதில்லை; வீட்டு வேலையில் உதவுவதில்லை என்கிற முறையீடு பல வீடுகளில் கேட்கிறது.



குழந்தைகளைப் போய் வேலை வாங்குவானேன் என்று மாங்கு மாங்கென்று வேலைகளை நீங்களே செய்வது சரியான அணுகுமுறை அல்ல. வளர்ந்த குழந்தைகள் வீட்டுப் பொறுப்பில் பங்கேற்க வேண்டியது அவசியம்.

அதுவும் பெண் குழந்தைகளைப் போலவே ஆண் குழந்தைகளையும் வீட்டுப் பொறுப்பில் பங்கேற்க வைக்க வேண்டும். (இந்த இடத்தில் பல தாய்மார்கள் தவறுகிறார்கள். - பெண் குழந்தைகளை மட்டுமே வீட்டு வேலைகளில் ஈடுபடுத்துவது தான் - ஆண்களின் மனத்தில் காலம் காலமாக வந்த ஈகோவைத் தங்கவைத்து விடுகிறது).

ஐந்து விரல்களும் ஒன்று போல் இல்லை



தான். ஆனால் அவற்றை இணைத்துத் தனக்குத் தேவையான செயல்களைச் செய்து கொள்ள மூளையால் முடிகிறது. சொல்லப் போனால் ஐந்து விரல்களும் ஒன்று போல் இல்லாததே உடலுக்குச் சாதகம் என்று கருதுமளவிற்கு அது சாமர்த்தியமாகத் தன் கட்டளைகளை (அவை கட்டளை என்று தெரியாத வகையில்) நிறைவேற்ற வைக்கிறது.

இந்த விதி நாம் மேலே குறிப்பிட்ட விஷயத்துக்கும் பொருந்தும். சில வீடுகளில் இன்னமும் கூட்டுக் குடும்பம் நிலவுகிறது. மற்ற வீடுகளிலும் விடுமுறை நாட்களில் பல குழந்தைகள் தங்கும் நிலை வரும். ''இவங்களோட ரகளை இருக்கே அப்பப்பா'' என்று நீங்கள் அலறுவதோ, ''இத்தனை பேர் இருக்கிறது எனக்கு யானை பலமாக்கும்'' என்று பெருமைப்படுவதோ, நீங்கள் குழந்தைகளை எப்படி இணைத்துச் செயல்படுத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்தது. இதை மேனேஜ்மெண்ட்டில் 'கோ-ஆர்டினேஷன்' என்பார்கள்.

''எந்தக் குழந்தைதான் வேலை செய்கிறது? கரடியாகக் கத்தி ரெண்டு சாத்து சாத்தினால்தான அவ்வப்போதாவது சொன்னதைக் கேட்கும்'' என்கிறீர்களா? தவறு. ''அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவாது'' என்ற பழமொழி கதைக்குதவாதது. ''ஆடுகிற மாட்டை ஆடிக் கற, பாடுகிற மாட்டை பாடிக் கற'' என்பது குழந்தைகளைப் பொறுத்தவரை நடைமுறைக்கு அதிகம் ஒத்து வரும் பழமொழி.

கொஞ்சம் பாராட்டுதல்களோடு வேலையைக் கறந்து கொள்ளுங்கள். ''ராஜா உன் கையெழுத்து அழகாக இருக்கிறதே. இந்த மாத சாமான் லிஸ்டை நான் சமைக்கக் கிட்டே சொல்வேனாம். நீ எழுதுவியாம், என்ன?''

''ஹம்சா, நீதான் அட்டகாசமாக சைக்கிள் ஓட்டுவியே, சைக்கிளிலே போய் எட்டணாவுக்குக் கொத்தமல்லி வாங்கி வாயேன்.''

பாராட்டுதலில் மயங்காதவர் யார்? ஆனால் ஒன்று. வேலை ஏவப்படாத சமயத்திலும் இந்தப் பாராட்டை அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் 'காரியம் ஆவதற்காக தனக்கு ஐஸ் வைக்கப்படுகிறது' என்ற டெக்னிக்கைக் குழந்தைகள் நிச்சயம் உணர்ந்து கொண்டு விடுவார்கள். அப்புறம் என்ன, ஒத்துழையாமை இயக்கம்தான்.

''ஒரு நாளைக்கு கீதா தட்டு வச்சா அடுத்த நாள் ஸ்ரீராம் தட்டு வைக்கணும்'' என்று பழக்கப்படுத்துங்கள். தட்டு அலம்பும்போது ஸ்ரீராம் நிறைய தண்ணீரை வேஸ்ட் செய்வதாகத் தோன்றினால் ''தினமும் தட்டு வைப்பது கீதாவின் வேலை, டம்ளர்களில் தண்ணீர் வைப்பது ஸ்ரீராமின் வேலை'' என்று நடைமுறையில் கொண்டு வாருங்கள்.

அதிகம் வேலை செய்யாத குழந்தையைக் குறைவாக மதிப்பிட்டுத் திட்டாதீர்கள். ஐந்து விரல்களில் சுண்டு விரல் அதிகம் வேலை செய்வதில்லை என்றாலும் கூட, அதற்குக் காயம் பட்டால் மொத்தக் கைக்கும்தானே சிரமம்! அது மட்டுமல்ல சுண்டு விரலையும் ராஜதந்திரத்துடன் வேலை வாங்க முடியும். (கண்ணன் பெருமான் கோவர்த்தன மலையைத் தூக்கியது சுண்டு விரலால்தானாம்.)

''இரும்மா, டீ.வி.யிலே நல்ல நல்ல ப்ரொக்ராமெல்லாம் இருக்கு. நான் வீடு பெருக்க மாட்டேன்'' என்று டீ. வி. எதிரேயே அடமாக உட்கார்ந்து கொண்டிருக்கும் ராஜியின் எதிரே ஒரு கட்டுக் கீரையையோ பீன்ஸையோ கொடுத்து அவற்றை ஆய்ந்து வைக்கச் சொல்லலாம். டீ.வியும் பார்க்கலாம், அம்மாவின் திட்டிலிருந்தும் தப்பிக்கலாம் என்ற சந்தோஷத்தில் இந்த வேலையை அவள் உற்சாகமாகவே செய்ய வாய்ப்பு உண்டு.

பரிமாறுவதற்கு முன் எந்தவித உதவிக்கும் வராமல் ''இரும்மா நான் பாடம் படிக்கிறேன்'' என்று டபாய்க்கும் ராகவிடம் ''ஓ.கே. இப்போ பாடம் படி. ஆனால் சாப்பிட்டபிறகு உணவுப் பண்டங்களை சமையலறைக்கு எடுத்துட்டு வர நீதான் உதவணும்'' எனலாம்.

வீட்டு வேலையைப் பங்கு பிரித்துச் செய்வது என்பது அற்புதமான தத்துவம். ''டிவிஷன் ஆஃப் லேபர்'' என்பதன் பெருமையைப் பற்றிப் பொருளாதார

ஆவலைத் தூண்டும்
வற்றல் குழம்பா?
உடனே ரெடி!



ஆம்! கோத்ரெஜ் டாமரிண்ட் ப்யூரி இருக்கையில் என்ன கவலை? புளியை நனைத்துக் கரைத்து வடிகட்டி ஏன் அவஸ்தைப்பட வேண்டும்? நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், எப்போதும்போல் வாணலியில் எண்ணெய் விட்டு, வற்றல் குழம்பிற்கு வேண்டியவற்றை தாளித்துக் கொண்டு இரண்டு கோப்பை நீர் விட்டு சாம்பார் பொடி, உப்பு முதலியவற்றைப் போட்டு சிறிது கொதிக்கவிடவும். பின்பு தேவையான அளவு டாமரிண்ட் ப்யூரியையும் போட்டு ஒரு கொதி வந்ததும் இறக்கினால் கமகமவென்று மணக்கும் வற்றல் குழம்பு உடனே ரெடி!


புளியோதரை

கோத்ரெஜ் டாமரிண்ட் ப்யூரி என்பது புத்தம்புது புளியிலிருந்து எடுக்கப்பட்ட கெட்டியான சாறு. உபயோகிக்கத் தயார் நிலையிலே வருகிறது. தவிர இதிலே பாதுகாக்கும் பொருட்களோ, செயற்கை நிறங்களோ சேர்க்கப்படவில்லை. அதனால் இது அசல் புளியின் சுவையுடனும், மணத்துடனும் இருக்கும்.

வற்றல் குழம்பைப்போலவே புளிக்காய்ச்சல், மிளகு குழம்பு, புளிப்பச்சடி போன்றவற்றையும் இதைக் கொண்டு மிக விரைவாக சுவைபடத் தயாரிக்கலாம்.


புளிப் பச்சடி

டாமரிண்ட் ப்யூரி அதிநவீன அழகிய டெட்ரா பேக்கிலே வருகிறது. பேக்கைத் திறந்த பின் இதை ஃப்ரிட்ஜில் 6 நாட்களுக்கு வைத்திருக்கலாம்.

இன்னும் ஏன் தாமதம்? இன்றே சென்று சில பேக்குகளை வாங்குங்கள்.

பாதுகாக்கும் பொருட்களோ, செயற்கை நிறங்களோ சேர்க்கப்படவில்லை.
அதனால் பேக்கைத் திறந்தபின் இதை ஃப்ரிட்ஜில் வைத்து
6 நாட்களுக்குள் உபயோகிக்கவும்.



Godrej FOODS

டாமரிண்ட் ப்யூரி.

புளியின் அசலான சுவை, தொல்லையிலிருந்து விடுதலை.

தமிழ்நாட்டில் மட்டும் கிடைக்கிறது.

Enterprise/GFL/481 Tm.

வல்லுனர்கள் சிறப்பாகக் குறிப்பிடுகின் றனர்.

ஒரு சகோதரியின் வீட்டில் அற்புதமான ஒரு காட்சியைக் காண நேர்ந்தது. உடல் நல மின்மை காரணமாகத் தொடர்ந்து பத்து நாட்கள் அவர்கள் வீட்டு வேலைக்காரி வர வில்லை. பாத்திரங்களை சகோதரி தேய்க்க, அவரது மூத்த பெண் அவற்றை அலம்பித் தர, இளைய மகன் அவற்றைத் தண்ணீர் போகச் சாய்த்து விட்டு அவற்றைச் சமைய லறையில் கொண்டு போய்ச் சேர்க்க, சகோதரியின் கணவர் அவற்றை உரிய இடங் களில் அடுக்கினார். இதை வெறும் வேலை யாகக் கருதாமல் அதை உற்சாகமாகச் செய் தார்கள். அந்த உற்சாகத்துக்குக் காரணம் இருந்தது. தொலைக்காட்சி விளம்பரங்க ளென்றால் குழந்தைகளுக்குக் கொள்ளை விருப்பம் இல்லையா? அவை சம்பந்தமாக சில கேள்விகளை அம்மாவோ, அப்பாவோ கேட்க, வேலை செய்து கொண்டே குழந் தைகள் பதிலளிக்க வேண்டும். பெற்றோர் களின் ஸ்டாக் தீர்ந்தவுடன் குழந்தைகள் கேள்விகளைக் கேட்டுப் பெற்றோரைத் திருதிருவென முழிக்கச் செய்தனர். இந்த விளாடி வினா மும்முரத்தில் வேறு பல வீட்டு வேலைகள் கூட 'கூட்டுறவுடன்' நடந்தது.

இப்படிச் சரியான உத்தியைக் கையாண் டால் 'ஐந்து விரல்களையும்' ஆக்கபூர்வமாக ஆட்டி வைப்பது சிரமமேயில்லை.

'என்''ணிப் பார்ப்போமே - 6

ஆறு பெருகினால் அணை கட்ட வேண்டும்.

''எனக்கு உன்னைக் கொஞ்சம் கூடப் பிடிக்கல்லே'' என்று வாணி கூற, அம்மா வின் முகம் சிவக்கிறது.

'நன்றி கெட்ட பெண். பன்னிரண்டு வருடங்கள் பாசத்தைக் கொட்டி வளர்த்த தற்கு என்ன பேச்சு பேசுகிறது'. படாரென்று வெடிக்கிறாள்

''சனியனே, எனக்கும்தான் உன்னைப் பிடிக்கல்லே. உன்னை ஏன் பெத்தோ மோன்னு இருக்கு.''

''நானா பெறச் சொன்னேன்?'' வாணி யின் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் அம்மாவின் மேல் தணலாய் விழுகின்றன.

கோபம் மற்றும் வருத்தத்தில் குழந் தைகள் பேசும் வார்த்தைகளைப் பெற்றோர் அப்படியே அர்த்தம் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏன் அந்த இளம் தளிர்கள் அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன் படுத்துகின்றனர் என்று யோசிக்காமல் நெருப்பு ஆறாகப் பதில் வாக்கியங்களை ஓட விடுவது சரியல்ல.

''பின்னே என்ன, 'என்னம்மா வாணி, என்னைப் போய்ப் பிடிக்கல்லேன்றியே, இதைக் கேட்க எனக்கு எவ்வளவு வருத்தமா யிருக்குது தெரியுமா? ஏன் உனக்கு என்னைப் பிடிக்கல்லே?' என்று பெண் ணிடம் கெஞ்ச வேண்டுமோ?'' என்று கடு கடுப்போடு கேட்கிறீர்களா?

''ஆமாம்'' என்ற சரியான பதிலை நான் சொன்னால் உங்கள் கோபம் அதிகரிக்க லாம். ''மாடாய் உழைத்து ஓடாய்த் தேயும் எங்களால் இவ்வளவு பொறுமையாய் பதில் சொல்வது என்பது நடைமுறையில் சாத்தியமா? - அதுவும் அப்பா அம்மாவிடம் பயமேயில்லாத இந்தக் காலக் குழந் தைகளிடம்?'' என்று சீறும் ரகமா நீங்கள்?

சரி, இப்படி நீங்களே கொஞ்சம் குழந் தைத்தனத்துடன் பேசும்போது உங்களிட மும் சில விதிகளைத் தளர்த்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

குழந்தையிடம் குறைந்தபட்சம் பதில் சொல்லாமல் இருந்து விடுங்கள். பல சந்தர்ப்பங்களில் மௌனத்தை விட சிறந்த பதிலடி எதுவுமேயில்லை. தன் தவறைக் குழந்தை உணரும். தானாக வந்து விளக்கம் தரும்.



மிளகாய்ப் பொடிக்கு
வறுக்கும் பொழுது ஒரு பிடி
நிலக்கடலையைச் சேர்த்துக் கொள்
ளுங்கள். ரொம்ப ஜோராக இருக்கும்.
கறிவகைகள் செய்யும்போது வதக்கி
இறக்கிய பிறகு இந்தப் பொடியை
மேலாகத் தூவினால் ருசி கூடுத
லாக இருக்கும்.
- ராஜலட்சுமி

பால் காய்ச்சிய பின், பால் ஏடு நிறைய கிடைக்க, பாத்திரத்தைத் தட்டு போட்டு மூடுவதற்குப் பதில், சல்லடை போன்ற வலைகளை மூடினால் பாலில் ஏடு நன்றாகப் படிகிறது.

- கமலா மூர்த்தி



கோபத்தில் குழந்தை பேசும் வார்த்தைகளுக்கு அப்படியே அர்த்தம் எடுத்துக் கொள்ளக் கூடாது என்றோம் இல்லையா? அதற்கு வருவோம்.

''உன்னைக் கொஞ்சம் கூடப் பிடிக்கல்லே'' என்பதற்கு அர்த்தம் ''அலுவலகத்திலேயிருந்து நீ வீட்டுக்குள் வந்தவுடனேயே தினமும் ''ஹோம்-ஒர்க் செய்துட்டியா?'' என்று கேட்பது எனக்குப் பிடிக்கவில்லை'' என்பதாக இருக்கலாம்.

அப்படிக் கேட்டது ஏன் பிடிக்காமல் போக வேண்டும்? பள்ளியிலிருந்து வந்ததும் சிறிதும் விளையாடாமல் தான் ஹோம்-ஒர்க்கை முதலில் முடித்திருக்க வேண்டும் என்று அம்மா விரும்புவது பிடிக்காமல் போயிருக்கலாம். அல்லது தன்னைப் பற்றி அன்பாக நாலு வார்த்தை விசாரிக்காமல் வந்ததும் வராததுமாக ஹோம்-ஒர்க் பற்றி முதலில் விசாரித்தது வெறுப்பைத் தூண்டியிருக்கலாம்.

''நீ அப்பா, தாத்தா எல்லாருமே என்னைத் திட்டிக்கிட்டேயிருக்கீங்க'' என்று கூறும் ஸ்ரீகாந்திடம் ''நீ நடந்துக்கிறது அப்படி'' என்று பளிச்சென்று சொல்லாதீர்கள். வார்த்தை ஆறுகளுக்கு அணை போடுங்கள்.

''நாங்க திட்டுவதை நிறுத்திக்கறோம் - நீயும் சில விஷயங்களிலே மாத்திக்கிறியா?'' என்றோ ''நாங்க உன்னை எப்படி நடத்தணும்னு நினைக்கிறே?'' என்றோ கேளுங்கள். நீங்கள் எதிர்பார்க்காத கோணம் பிடிபடக்கூடும்.

''உனக்கு யாரை ரொம்பப் பிடிக்கும்?'' என்று ஆறு வயது வருணைக் கேட்க, அவன் ''முதல்லே அப்பாவைப் பிடிக்கும், அடுத்தது பாட்டியைப் பிடிக்கும், மூணாவது உன்னைப் பிடிக்கும்'' என்று கூறி விட்டால், உங்கள் மனம் சுருங்கலாம். ஆனால் முகம் சுருங்கக் கூடாது. அதை விட முக்கியமாக ''இனிமேல் உங்கப்பாவையும், பாட்டியையுமே உனக்கு எல்லாத்தையும் பண்ணிவிடச் சொல்லு'' என்று வார்த்தைஸ்ய ஓடவிடாதீர்கள். உங்கள் ஏக்கம் புரிகிறது. என்றாலும் நீங்கள் கூறும் வாக்கியத்தின் மூலம் ''பாசம் என்பது செய் நன்றிக்கு ஒப்பானது'' என்று ஆகிறது. அது அல்லவே உண்மை. அது உண்மையாயிருந்தால் உங்களுக்கு உதவி செய்த பல உறவுகளை விட, உங்கள் பிள்ளையின் மீது ஏன் உங்களுக்கு அதீத பாசம் வர வேண்டும்? எனவே ''யார் தனக்கு அதிக நன்மை செய்கிறார்களோ அவர்கள் மீது தான் அதிகப் பாசம் வைக்க வேண்டும்'' என்று அவன் மனத்தில் பதிய வைக்க வேண்டாம். குழந்தைகளின் சிந்தனைகள் அடிக்கடி மாறக் கூடியது. நாளைக்கே ''எனக்கு உலகத்திலேயே உன்னைத்தாம்மா அதிகம் பிடிக்கும்'' என்று சொல்லலாம்.

குழந்தையிடம் அலட்சியமாகப் பேசாதீர்கள், கொஞ்சம் அடக்கி வாசியுங்கள் என்பது கோபப்படும்போது மட்டுமல்ல. மற்ற சங்கதிகளுக்கும்தான். பட்டாசு சத்தம் கேட்டாலே உங்கள் மகனுக்கு பயமேற்படுகிறது என்றால் ''ஐய்யய்ய, ஷேம் ஷேம். உன் வயசுப் பையன்களெல்லாம் கையிலேயே பட்டாசுக்கு நெருப்பை வச்சித் தூக்கி எரியறாங்க. நீ என்னடான்னா இப்படி பயந்தாங்கொள்ளியாயிருக்கியே'' என்று கூறி அவனது ஈகோவை புண்படுத்த வேண்டாம். ''நானும் உன் வயசிலே இப்படித் தான் பயந்துக்கிட்டிருந்தேன். ஆனால் அப்புறம் அந்தப் பயம் விட்டுப் போச்சு. ஏன் தெரியுமா?'' என்று தொடங்கி விளக்குங்கள்.

''மனத்தில் பட்டதை மறைக்காமல் சொல்வது'' என்பது குழந்தைகள் விஷயத்தில் நேர்மையான பலனைக் கொடுக்கக் கூடும். எனவே குழந்தையின் மன உணர்வுகளை அறிந்து அதற்குத் தகுந்தபடி பேசினால் அது உங்களுக்கும் அவனு(ளு)க்குமிடையே உள்ள நெருக்கத்தை அதிகரிக்கும். நாளைக்கு எந்தப் பிரச்னை வந்தாலும் உங்களிடம் கலந்தாலோசிக்கத் தயங்காமல் இருக்கும் நிலை உருவாகும்.

- ஜி. எஸ். எஸ்.

சொல்ல விரும்புகிறோம்!

கண்ணாடி போடும் நிலை அப்போதில்லையே!

★ காதல் என்ற பெயரில், சிரித்துப் பழகும் இளை ஞர்களை நம்பி வீட்டை விட்டு ஓடும் பெண்களுக்கு "ஓடி வந்தேன்" கதை ஒரு சவுக்கடி.

விருகம்பாக்கம், பிரமீளா சிவானந்தம்.

★ பெற்றோர்கள் நல்லதைத்தான் செய்வார்கள் என்று புரியாமல், காதலில் கண் தெரியாமல், ஒரு பெண் வீட்டை விட்டு ஓடி வந்தால் என்ன கதி என் பதை ஓடி வந்தேன் கதை நன்கு எல்லா பெண்களுக் கும் பாடமாக உணர்த்தியிருக்கும்! கதை அருமையாக இருந்தது! மஞ்சுளா ரமேஷுக்கு எனது உளம் கனிந்த பாராட்டுக்கள்!

திருநெல்வேலி – 11, ஜி. சூர்யா.

★ "வாழ்க்கைக்குத்தான் பணம்; பணத்திற்காக வாழ்க்கை அல்ல" என்ற அரிய கருத்தை உணர்த்தியது 'எது வேண்டும்?' என்ற சிறுகதை. இந்தச் சிறுகதைக்கு ஓவியம் வரைந்திருக்கும் ஓவியர், கதை யில் வரும் பாத்திரங்களையும் ரயில் போன்ற ஜடப் பொருள்களையும் கூட புகை போன்ற கருள்களாலேயே வரைந்திருப்பது 'புகை போன்று மறையக் கூடியதுதான் செல்வமும் வசதி யும்; ஆனால் பாசம் மறையாதது' என்ற கதையின் மையக் கருத்தின் உயிரோட்டத்தை தத்ரூப மாகப் படம்பிடித்து விட்டதாகத் தோன்றுகிறது.

சென்னை – 15, பிரேமா சேதுநாராயணன்.

★ 'சும்மாயிருக்கும் போது' கட்டுரையின் கருத்துக்கள் படிப்பதற்கு வேடிக்கையாகவும், அதே சமயத்தில் பயனுள்ளவையாகவும் இருந்தன. ரொம்ப ரசித்தோம்.

பாபநாசம், கல்பகம் நம்பு.

★ ஓட்டையாகிப் போன சல்லடைத் தட்டுக்களைக் கூட வீணாக்காமல் அதில் எப்படி பூ வேலைப்பாடு செய்யலாம் என்பதைப் படத்துடன் தெளிவாக வெளியிட்ட கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

மேட்டூர் அணை, எல். இந்துமதி.

★ 'கர்ப்பிணிகளுக்கு' எனக் கேட்கப்பட்ட பத்து கேள்விகளுக்குண்டான மூவகை மருத்து வர்களின் பதில்களும் ஆலோசனைகளும் கர்ப்பிணிகளுக்கு அதிலும் முதன் முறையாக கர்ப் பம் தரித்துள்ள என் போன்ற பெண்களுக்கு நல்ல பல அறிவுரைகளாக அமைந்திருந்தன.

திருமழிசை, எல். லதா சுந்தரகோபால்.

★ ஆண்டாளை இதுவரை எல்லோரும் திருமாலின் பக்தையாகத்தான் பார்த்து வந்திருக் கிறார்கள். ஆனால் பெண் குலத்தின் மணிவிளக்கான அவளுடைய கருத்துக்களை புதிய கோணத்தில் கண்டு, பக்தையாக மட்டுமின்றி பெண்ணுரிமைக்கு அன்றே வித்திட்ட பெண் திலகமாக நமக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறீர்கள். புதுமையான முயற்சி.

புதுதில்லி, ஜானவீ ராம்துரை.

★ இம்மாத மங்கையர் மலரில் இடம்பெற்று இருந்த உங்கள் குழந்தையின் சூழ்நிலை சரியாக உள்ளதா? குடும்பச் சூழ்நிலையின் காரணமாக குழந்தைகளின் வளர்ச்சியில் அதிகம் கவனம் செலுத்த முடியாத பெற்றோர்களுக்கு, குழந்தை வளர்ப்பு குறித்து அரிய பல ஆலோசனைகளை வாரி வழங்கியிருந்த அற்புதமான கட்டுரை.

கோவை, வி. கலைச் செல்வி.

★ சுதும்ப மாலை கட்டுரை படித்தேன். "மனச்சான்றை மதித்து நடக்கும் மனிதர் எம் மதத்தில் பிறந்திருந்தாலும் அவர்களுக்கு நன்மை செய்தல், துணிந்து செயலாற்றல் என்பதே அவர்க ளுடைய மதம்" என்ற எமர்ஸனின் பொன் மொழி சிந்திக்கத்தக்கதே.

கோவை – 6, ஏ. ஜி. கே. சுந்தர்.

★ குழந்தைகளை விளையாட வைப்பதில் கூட இவ்வளவு வாத விவாதங்கள் என்றால் மற்ற துறைகளில் எல்லாம் கேட்க வேண்டாம். ஆனால் பாண்டி, ஏழாங்கல் முதலிய ஆட்டம் ஆடிய குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தையும், தற்கால குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தையும் ஒப்பிட முடியுமா? 90 வயதில் கூட கண்ணாடி போடாமல் நம் நாட்டு வயதானவர்கள் இருக்கும் அதே நேரத்தில் சிறு தூசிக்கே ஆஸ்துமா வருவதும் சிறு பிராயத்திலேயே கண்ணாடி போடுவது மான நிலைமைகள் அப்போதில்லையே.

காரைக்கால், ஹானஸ்ட் ரவிச்சந்தர்.

★ 'என் கணவர்' சிறுகதை மிகவும் அருமை. எங்கள் வீட்டில் நடப்பதைச் சித்தரிப்பதைப் போலவே இருந்தது. மிகவும் நகைச்சுவையாகவும், கனவாகவும் எழுதிய எழுத்தாளருக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

சந்திரபுர், எல். உஷா.

திருமண மலர்

மணமகள் தேவை

★ வடமாள், சகோதரர்கள், பாரத்வாஜம். மூத்தவர் விசாகம், எம்.எஸ்.ஸி., 38/1000, இளையவர், (பி.ஏ.) விசாகம், 31/1500, இருவரும் தனியார் நிறுவனத்தில் வேலை. தகுந்த மணமகள்கள் தேவை. பெட்டி எண் : 10103

★ மத்திய பிரதேசத்தில் தனியார் கம்பெனியில் டெக்னீஷியனாக ரூ. 3000/- வரை சம்பாதிக்கும் 27 வயது வெள்ளாளர் குல பையனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த 20 லிருந்து 23 வரை வயதுள்ள பெண் தேவை. ஜாதகத்துடன் மத்திய பிரதேசம், தமிழ் நாட்டில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10104

★ வடமாள் பாரத்வாஜம் பி.ஏ./28/170/2000 புனர்பூசம் ரயில்வேயில் வேலை பார்க்கும் வரனுக்கு. அரசு வேலையில் இருக்கும் பட்டதாரி மணமகள் தேவை. பெட்டி எண் : 10105

★ கவரை நாயுடு 45 வயது மத்திய அரசு அலுவலகத்தில் மாதம் 2500 சம்பளம் வாங்கும் நற்பண்புள்ள விவாகரத்தான வசதியான மணமகனுக்கு நாயுடு இனத்தில் நற்குடும்பத்திலிருந்து படிப்பு அழகு நற்பண்புள்ள 25-35 வயதுக்குள் மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். (தகுதிக்கு முதலிடம்) பெட்டி எண் : 10106

* Alliance invited for Iyer/Ashtasahasram/Athreya/Pooram, 28 (17.11.1965)/(B.Com.,)/employed in Govt. Aided College Rs. 2200/-. Wanted employed girl. Subsect no bar. Box No.10107

* Wanted educated employed girl for Thengalai Iyengar boy PUC, Kausika, Magam, Technical Assistant B.P.L., Company, Madras. 31/1500/-. Subsect no bar. Reply with horoscope. Box No.10108

* Alliance invited from graduate employed girl for Vadamal Iyer boy Vathoola Gothram, Uthirum 33 years D.M.E., A.M.I.S.E., salary Rs. 4500/- p.m. employed as Senior Executive in Reputed Firm at Madras. Phone No. 4835405. Box No.10109

* Alliance invited for smart Tamil Iyer Vadamal Bharadwaja, 25/B.Tech./5'.11" very fair complexion, highly placed soft-ware Engineer in U.S.A., from very fair, graduate, smart homely Tamil Iyer Vadamal girl below 22 years. Apply with full details and horoscope. Box No.10110

★ மத்திய அரசு வேலை, ரூ. 4000/- சம்பளம், ஐயர், வடமாள், 5'.7'' பாரத்வாஜ கோத்திரம், முதுநிலை பட்டதாரி சென்னையில் சொந்த வீடும், சொத்தும் உள்ள போலியோவால் சற்று சாய்ந்து நடக்கும் 33 வயது சிவந்த நிற பையனுக்கு படித்த, பண்புள்ள வைதீகமான குடும்பப்பாங்கான பெண் தேவை. வில்லங்கம் இல்லாமல் சட்டப்படி விவாகரத்தானவர். 3 வயது ஆண் குழந்தை தாயிடம் உள்ளது. பிராமண உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகம் முழு விவரங்கள் எழுதவும். பெட்டி எண் : 10111

★ ஐயர், வடமாள் ஹரித கோத்திரம் 28 வயதான அரசுப் பணியிலுள்ள ரூ. 2500/- சம்பளம் பெறும் வரனிற்கு மத்திய/மாநில/தனியார் கம்பெனிகளில் நிரந்தர பணியிலுள்ள அழகிய மணமகள் தேவை. பெட்டி எண் : 10112

* Mudaliar Government servant Rs. 4100/- 5' 4", unencumbered issueless divorcee requires unencumbered issueless Government employed virtuous Hindu Bride (viz, spinster, widow, divorcee) between 41 - 47, BC + FC. Caste no bar. Apply to Box No 10113

★ ஐயர் வடமாள், ஸ்ரீவத்ஸ கோத்திரம், அவிட்டம் 2 ஆம் பாதம், பி. காம்., 27/5' 4''/ 2500/-, கல்கத்தாவில் வேலை பார்க்கும் மணமகனுக்குக் குடும்பப்பாங்கான, வேலைக்குப் போகும் மணமகள் தேவை. பொதுவாக இந்திய வடகிழக்குப் பகுதி ஜாதகங்கள் வரவேற்கப்படுகின்றன. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10114.

* Bombay based Tamil Iyer boy, Bharadwajam, Vadamal - Avittam, affluent family 6 feet, Rs. 14000 per month. Gulf employed divorcee, seeks alliance from educated, fair good looking South Indian Brahmin family. No dowry. Please reply to Box No.10115

* Iyer/Iyengar girl for Iyer divorcee graduate Madras 3300/-172/38 Central. Divorcee widow language no bar. Horoscope, height, colour, full details in first letter. Simple marriage. Box No.10116

★ வடமாள், பாலக்காடு ஐயர், ஸ்ரீவத்ஸ கோத்திரம், மிருகசீரிஷம், பி.காம்., 28 வயது திரம்பிய தனியார் துறையில் மாத வருமானம் ரூ. 2500 க்கு மேல் உள்ள அழகான பையனுக்கு. படித்து வேலைக்குச் செல்லும் பெண் தேவை. பெட்டி எண் : 10117

* Alliance for Brahacharanam Iyer B.E. (Civil) Engineer Uttradam, 28/5'.4"/3800 from non-Koundinya fair good looking graduate girls fully domesticated. Please send horoscope with details to Box No.10118

★ பார்வையற்ற (பார்த்தால் தெரியாது) முதலியார் வகுப்பு, வயது 27, பட்டதாரி, பி.ஏ., தென்னக ரெயில்வேயில் பணிபுரிகிறார், உயரம் 5'.5'' வாழ்க்கை துணைக்கு பரந்த மனப்பான்மையுடைய மணமகள் தேவை. சைவம் விரும்பத்தக்கது. கட்டாயமில்லை. பெட்டி எண் : 10119

★ அய்யர், அஷ்டசகஸ்ரம், காசியப கோத்திரம், உத்திரட்டாதி, பி.எஸ்ஸி., 37/165/2500 அரசு

திருவனந்தபுரத்தில், நிரந்தர பணியிலுள்ள வரனுக்கு, படித்த நிரந்தர பணியிலுள்ள மாற்றும் பெறக்கூடிய பெண் தேவை. உட்பிரிவு அவசியம். பெட்டி எண் : 10120

★ இந்து நாடார் கண்ணியமான குடும்பத்து இளைஞர் 28/5'.11'' எம்.எஸ்.ஸி உயர் கல்வி படிப்பவருக்கு அதே இனத்தில் அந்தஸ்துள்ள குடும்பத்து டாக்டர், என்ஜினியர், கம்ப்யூட்டர் பட்டப் படிப்பு படித்த நிறமான, உயரமான, வசீகரமான நோயுமில்லாத ஜாதகமுள்ள பெண்ணின் பெற்றோர் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 10121

• Alliance invited from decently employed girls for Iyer, Vadamal, Athreya Gothram, Anusham, 162 cms., 31 years, Rs. 2600/- (parents not alive), employed in Madras. Not transferable. Subsect no bar. Box No.10122

• Wanted graduate Iyer girl below 32 for Keralite Tamil Iyer boy Bank employed 37, Brahacharanam. Write to Box No.10123

★ எம்.ஏ. பல்கலையில் ஆங்கில பத்திரிகை ஊழியர், மாதம் 4500/-, பாசம், இரக்கமிருந்த. 38 வயது அனாதை ஆடவருக்கு அன்பும், கனிவும், கொண்ட துணைவி தேவை. குறைந்த வருமானமுடைய விதவைகள், விவாகரத்தானவர்கள் நலம் காண விண்ணப்பிக்கலாம். எல்லாருக்கும் சம்மதம். ஆடவன் கிறிஸ்துவ மதம். பெட்டி எண் : 10124

• Bride wanted for Telugu Brahmin, Veginada, 30 yrs., Medical Representative, established company, 4000/- p.m. from preferably employed, transferable, girl around 26 years. No dowry, early and simple marriage. Subsects no bar. Box No.10125

★ ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கை உயர் வெள்ளாள குடும்பத்தைச் சேர்ந்த இன்ஜினியரிங் படித்த 33 வயதுடைய மணமகனுக்கு. அதே இனத்தைச் சேர்ந்த நன்கு படித்த, உயரமான, அழகான மணமகள் தேவை. பெட்டி எண் : 10126

★ சைவ வேளாளர்/பி.ஏ/அரசுப் பணி, 2500/34/162 செ.மீ. மணமகனுக்கு அரசுப் பணியிலுள்ள எங்கும் மாற்றிக் கொள்ளும் பெண் தேவை. ஆதிசைவ விரும்பத்தக்கது. பிராமின்/ திருநெல்வேலி சைவம்/சைவ முதலியார். பெட்டியாளர் ஆதிசைவர்களும் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண் : 10127

★ சென்னையில் பிரபல வங்கி இருப்பில் உதவி கணக்கு அதிகாரியாக (ரூ. 2300/-) பணிபுரியும் 32 வயது சோழிய வெள்ளாள மணமகனுக்கு (சைவம்) நல்ல குணமுள்ள அழகான மணமகள் தேவை. சென்னையில் பணிபுரிபவராகவோ, சென்னைக்கு மாற்றலில் வரும் வசதி உள்ளவராகவோ இருந்தால் நலம். முழு விவரங்களுடன் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10128

• Iyer Poutagutsa Singapore citizen divorcee without encumbrance Govt. employed good salary. 30/150 seeks bride with good education prepared to settle in Singapore. Simple early marriage. Apply with horoscope. Box No.10130

★ ஐயர், வடமாள், ஆத்ரேய கோத்திரம், பூராட நட்சத்திரம், பி. காம்., 27/5' 5'', மாநிறம், கல்கத்தாவில் தனியார் கம்பெனியில் மாத வருமானம் ரூ. 2500/- உள்ள மணமகனுக்கு



அழகுள்ள, குடும்பப்பாங்கான நல்ல குணம் உள்ள, படித்த, வேலைக்குப் போகும்/போகாத மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10131

• Wanted a good-looking Madhwa girl around 26 from a decent family for a graduate, self employed,Sowmika Gothram, Madhwa Brahmin, Kannada speaking, Revathi 32/170/2000 with movabled immovable property. Correspond with horoscope to Box No.10132

• Alliance for B.Com. 28/5'.6"/2000 State Govt. fair good look Saliyar. Seeks fair graduate employed, if not employed wealthy family preferred. Caste no bar. Sub-caste, Telugu speaking preferred. Apply with horoscope to Box No.10133

• Iyer, Vadamal, Koundinyam, M.Sc., 29 yrs., 5'.3", 4000/- Private Secretary (Officer), Tatas, Delhi, good looking alliance from respected family, graduate, good looking girls. Send horoscope and details. Box No.10134


★ வடமாள், பாரத்வாஜ கோத்திரம், மூலம், சிவப்பு நிறம் 5'.6'' உயரம், பி.ஏ. மற்றும் பிரின்டிங் டெக்னாலஜி பாஸ் செய்து சொந்தமாக பிரின்டிங்பிரஸ், மாதம் ரூ. 10,000 வருமானம். சொந்த வீடும் உள்ள வரனுக்கு அதே இனத்தில் அழகான பட்டதாரி பெண் தேவை. பெட்டி எண் : 10135


★ புது டில்லி மத்திய அரசுப் பணி (சொந்த ஃபிளாட் உண்டு) சம்பளம் ரூ. 2500 + எம்.ஏ. 27/170 செ.மீ., பூராடம் -3 காசியப கோத்திரம் அந்தஸ்தான நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அழகிய உயரமான பட்டதாரிப் பெண் (எல்லா ஜாதி உட்பிரிவுகளும் சம்மதம்) தேவை. ஜாதகம் மற்றும் முழு விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண் : 10136

• Wanted employed girl in Bombay for Iyer boy. Visakam, 32/170 cms employed as Accountant in a private firm earning Rs. 3500 gross p.m. Qualification: B.Sc., (one paper incomplete). Typing: English (lower, higher). Apply with horoscope to Box No.10137

★ பிராமணர் பிரஹசரணம் அகமர்ஷண கோத்திரம் ரேவதி நட்சத்திரம் உயரம் 6'.2'' வயது 29. கோவையில் சொந்தத் தொழில் புரியும் வரனுக்கு வேலை பார்க்கும்/பார்க்காத நல்ல குடும்பத்து ஜாதி மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10138

★ பிரஹசரணம், பாரத்வாஜ கோத்திரம், மகம், வயது 35, உயரம் 170 செ.மீ. பி.எஸ்.ஸி. பிரபல தனியார் கம்பெனியில் சீனியர் ஸ்டெனோவாக வேலை பார்க்கும் ரூ. 1800/- வருமானமுள்ள வரனுக்கு படித்த, அழகான, குடும்பப்பாங்கான மணமகள்





Ramu Kariat Associates

தேவை. உட்பிரிவுகள் அவசியம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10139

★ ஆபீஸில் கேட்டரை வேலை பார்க்கும் நல்ல தோற்றமுள்ள வசதியான ஐயர் பிள்ளைகள் வரும்பைச் சேர்ந்த 26/171/3000/- மணமகனுக்கு அழகான படித்த வேலை பார்க்காத ஐயர் பிள்ளைகள் வரும்பைச் சேர்ந்த மணமகள் தேவை. உட்பிரிவுகள் அவசியம். பெட்டி எண் : 10140

• Alliance invited from decent, Iyer, non-Kousika, fair bride below 24 years employed Bank/Insurance Co., for handsome boy, Ashtasahasram, Mirugaseerusham, Post-graduate, 27 yrs, 5'.9" employed Nationalised Bank. Subect no bar. Apply with details to Box No.10141

★ நாயர் ஜாதி பிறந்தவரம், நாயம் 36/5'.7"/ 750+300 பி.எ. இறுதி வரை படிப்பு. வசதியடைந்த குடும்பத்துப் பெண் தேவை. உட்பிரிவுகள் அவசியம். சிறிது ஊனமுள்ளவர்களும் விண்ணப் பிக்கலாம். பெட்டி எண் : 10142

• Alliance invited from parents of good looking employed girls for Vadamal Iyer, Tiruvonam, Athreya, Bank employed in Bombay, 36 years/5ft. 6 inches. Send horoscope with full family details to Box No.10143

• Wanted fair good-looking employed graduate bride for Telugu Mulakanadu Brahmin boy 30/167/3500 Bharadwaja Moolam (IV padam) B.Com., Diploma in Computer Science employed in Air-India Bombay. Subsects acceptable. Reply with horoscope to Box No.10144

★ வடமாள், வாதுலம், பரணி 33, 3500, தஞ்சாவூர், பொதுகல் பெற்றெல்லேடின், படித்த அழகுள்ள பணியிலிருக்கும் பெண் தேவை. உட்பிரிவு அவசியம், விண்ணப்பிக்க பெட்டி எண் : 10145

• Broadminded, religious, soft-natured home loving non-Garga Iyer girl for NLC Executive Tamil Iyer Bachelor BE/40/158/4200. Girls merit only consideration. Respond with full particulars and horoscope. Box No.10146

★ தமிழ் வாவசியர் செட்டியார் எலக்ட்ரானிக்ஸ் என்ஜினியர், 28/170/6000/-, பி.எஸ்ஸி., பி. டெக்., மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த B.E.Electronics/Computer Science,M.B.B.S.,M.Sc.,பட் டம் பெற்ற மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10147

• Coimbatore based Pillai, DCE/26/160/4000 (employed) seeks alliance from same community. Good looking, educated girls desired. Reply with details and horoscope. Box No.10148



• Alliance invited from good looking graduate unemployed (Teaching Profession acceptable) Iyengar girl below 30 years for Srivatsa Thengalai groom M.Sc.,/35/167 flat promotors and well settled. Subsect no bar. Box No.10149

★ முதலியார் பிரிவு, வயது 26, உயரம் 172 செ.மீ. படிப்பு பி.காம்., வேலை இல்லாதவர்கள் கம் பெனி (மத்திய அரசுப் பணி) சம்பளம் 2500/-. நல்ல தோற்றமும் ஒழுக்கமும் உடைய மணமக னுக்கு அழகும் சிறந்த குணமும் உடைய அரசுத் துறையில் பணியாற்றும் மணமகள் தேவை. சாதி முக்கியமல்ல. பெட்டி எண் : 10150

★ கௌசிகம், வடகலை, புனர்வசு, 30 வயது, பி.ஏ.பி தனியார் கம்பெனியில் நிரந்தர வேலை. சம்பளம் ரூ. 1500/- எளிய திருமணம். வரதட் சணை தேவை இல்லை. நட்சத்திர பொருத்தம் பார்த்து விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10151

• Wanted Madras based decently employed Iyer girl for Kausika, Vadama, Tiruvonam, graduate employed in Southern Railway, Madras 33/165/3250. Reply with horoscope, family details etc., to Box No.10152

★ இந்து நாயுடு வயது 32 உள்ள படித்த அழகான மணமகனுக்கு, அல்லபாயும், ஆதரவாயும் மட் டுமே எதிர்பார்ப்போருக்கு ஏற்ற பெண் தேவை. வயது கூடுதல் பரவாயில்லை. விதவை மற்றும் விவாகரத்தானவர்களும் விண்ணப்பிக்கலாம். வீட்டோடு மாப்பிள்ளையாகவும் சம்மதம். எம் மதமும் சம்மதம். பெட்டி எண் : 10153

★ கார்காத்தார் வகை பிள்ளை. DCE தமிழக அரசுப் பணி பெரியார் மாவட்டத்தில் வேலை. 28/162/2500/- வயதுக்கு அதே இனத்தில் வேலை யிலுள்ள பெண் தேவை. ஜாதக குடும்ப விவரங் களுடன் எழுதவும். பெட்டி எண் : 10154

★ வடகலை, கௌசிகம், ரேவதி, எம்.ஏ. 37/5'.8"/ரூ. 3000/- அரசு வேலை. வீடு உள்ள - பெற்றோர் இல்லாத வயதுக்கு பட்டப்படிப்பு படித்த வேலையில் இல்லாத/இருப்பவர் Bank/LIC/Govt. மாற்றக் கூடிய அழகான நல்ல குடும்பத்து அய்யங்கார் பெண் தேவை. விவரங் களுக்கு எஸ். ஜெயலட்சுமி, "குக்மணி சேவாந்தி", நெ. 7/415, திருஷ்ணன் கோவில், வடக்குவீதி, கோவில்வெண்ணெய், மேலவேளி பேரையூர், கும்பகோணம் - 612 002.

• Vadamal/Srivastava/BA/32/2500/Thiruvonam.Working in IAF, Iyer 181 cms, expecting alliance from good looking graduate preferably employed girl. Contact with horoscope to P.N. Narayanan, 18, 14th Cross, Agrahara Dasarahally, Bangalore - 560 079.

★ 24 மனை தெலுங்கு செட்டியார், 6 வீடு, 29/171/6000/M.A.B.Lib.Sc அரசாங்க வேலையி லுள்ள மணமகனுக்கு இதே இனத்தைச் சேர்ந்த 16 வீடு பிரிவில் படித்த பெண் தேவை. ஜாதகத் துடன் விண்ணப்பிக்கவும். முகவரி : P. Thiruvengadam, C.Rly. Colony, RBI. 112/17, Kurla(E), Bombay - 400 024

★ வடமாள், கௌண்டின்ய கோத்திரம், உத்திரட் டாதி நட்சத்திரம், மகரம், 29/5.5"/1500/- எம்.எஸ்.ஸி. சென்னையில் தனியார் நிறு வனத்தில் டைப்பிஸ்டு வாவீற்கு பணி யுள்ள/இல்லாத, படித்த பெண் தேவை. ஜாதகம் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்க. எம். நடராஜன், 29/1, போர்க்கில் ரோடு, அயனாவரம், சென்னை - 23.

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்யக் கட்டணம் ரூ. 75/- தொகையை, 'மங்கையர் மலர்' பெயருக்குச் சென்னையில் மாற்றலாகக்கூடிய MICR டிமாண்ட் டிராப்டாக அனுப்ப வேண்டும். அல்லது மணியார்டர் மூலமாக அனுப்பலாம். போஸ்டல் ஆர்டர் ஒத்துக் கொள்வதில்லை. ஒரு விளம்பரத்தில் ஒரு வரனுக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்பவர்களின் விலாசங்களைக் கொடுப்பதற்கில்லை. விளம்பரங்களுக்குப் பதில் அனுப்புபவர்கள், "விளம்பரதாரர், பெட்டி எண் : C/o. மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097 என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். தனிப்பட்ட எந்தக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

★ வடகலை, ஸ்ரீவத்ஸம், விசாகம் 31/175/6600 ஜூனியர் டெலிகாம் ஆபீஸர், சென்னை அதே பிரிவில் வங்கி, மாநில, மத்திய, இன்சூரன்ஸ், தனியார் கம்பெனி மாற்றத்தக்க மணமகள் தொடர்பு கொள்ள சுப்பிரமணியன், 31, வாலஜி தெரு, திருஞானபுரம், அம்பத்தூர், சென்னை - 600 053.

★ அய்யங்கார், தென்கலை, காஸ்யப கோத்திரம், திருவாதிரை, கோவையில் தனியார் கம்பெனியில் டைப்பிஸ்டாக வேலை பார்க்கும் பி.காம். 28/170/3000 மணமகனுக்கு கோவையில் வேலை பார்க்கும் குடும்பப்பாங்கான தென்கலை பெண் தேவை. ஜாதகத்துடன் குடும்ப விவரம் விண்ணப்பிக்கவும். முகவரி : விஜயராகவன் சன் ஆப், 70, தெற்குச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006.

★ நாயுடு வெள்ளாளர், 27/177/1750 பத்தாவது படித்த, ஒசூரில் பணிபுரியும் மணமகனுக்கு, அதே இனத்தில் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த லட்சணமான, குடும்பப்பாங்கான பணியில் உள்ள/அல்லாத மணமகள் தேவை. ஜாதகம், விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். எஸ். பக்கிரி சாமி, தெ.5, வெங்கடேஸ்வரா நிலையம், ரூக்கன்பட்டி, ஒசூர் - 635 109.

• Wanted Non-Srivatsa home-loving, domestically trained Iyengar bride for fair, Pooram, Vadakalai groom 30/165/2500 Madras/Transferable job essential. Write with horoscope to R. Raghunathan, Plot. 3/8 Santhi Nagar 11th St, Adambakkam, Madras - 600 088.

• Alliance for Iyer, Mirgasirsham/Athreya Gothram/ Brahacharanam 30/175/3500, Govt.Service/owning flat in Delhi, needs good looking girl, preferably Delhi employed, Sub-sect no bar, Contact : S. Rama Krishnan, 327, Sector-V, Pushpa Vihar, New Delhi - 110 017.

• Alliance for Saiva Pillai Boy 25, B.Com., own business well settled an employed girl from Pillai or any vegetarian Caste. Write to P. Sankaralingam, 96, Kalinga Colony, P.T. Rajan Road, K.K.Nagar, Madras - 600 078.

• Alliance invited for Iyer, Vadamal, Haritha, Avittam, graduate boy 32/167/4000 Junior Telecom Officer, Mahanagar Telephone Nigam Ltd, New Delhi from girls employed in Banks/Insurance/Central Govt/ undertakings Reply to S. Srinivasan, India House, 24, Pulavar Nagar, Rangapuram, Sathuvachari, Vellore - 632 009.

மணமகன் தேவை

• Wanted groom for good natured home loving respectable family Koundinya, Brahacharnam, Chitrai Thulam 41/152 graduate employed innocent divorcee without encumbrance divorcee/widower preferred. Subsect no bar. Box No. 20090

★ ஐயர் வடகலை, காசியப கோத்திரம், மகம், 23 வயது, 5.1'' உயரம், மாநிறம், M.Sc., Maths (I.I.T.) சென்னையில் Systems Engineer ஆக கம்ப்யூட்டர் கம்பெனியில் வேலை பார்க்கும் பெண்ணிற்கு நல்ல படித்த பண்புள்ள உயர் தர பட்டதாரி மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகம், குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 20091

• Alliance invited from qualified Bank Officers/CA/ Executives/Business/States employd for 32 years Vathiama, Bharadwaja, good complexion girl, B.Com., employed in reputed firm. Sub-sect no bar. Early marriage. Apply with horescope and family details. Box No. 20092

★ ஐயர், வடகலை, ஹரித கோத்திரம், 38, விவாகரத்து செய்த, அரசுப் பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரியும் ரூ 2500/- சம்பளம் பெறும் பெண்ணுக்கு அரசாங்கம்/கம்பெனிகளில் நல்ல





வேலையிலுள்ள பரந்த மனம் கொண்ட மனைவி காலமானவர்/மனைவியை இழந்தவர்/விவாகரத்தான வரன் தேவை. சாதியில் தடையில்லை. பெட்டி எண் : 20093

★ ஐயர், வடமாள், ஹரித கோத்திரம், வங்கியில் பணிபுரியும் 33 வயதான பெண்ணிற்கு வங்கியில்/மத்திய அரசில் பணிபுரியும் மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 20094

★ தஞ்சை மாவட்டம், கள்ளர், சென்னையில் அரசுப் பணியில் உள்ள பெண்ணுக்கு 27/150/ ரூ.3000 அதே இனத்தை சேர்ந்த சென்னையில் உள்ள அரசுப் பணியில் உள்ள மணமகன் தேவை. பெட்டி எண் : 20095

• Alliance invited for a fair, attractive, post-graduate girl employed as Bank Officer (Rs.5000/-) aged 28 years, (Father : Naidu, Mother : Iyer) from vegetarian grooms preferably Brahmin community. Box No. 20096

• Smart well educated well placed Tamil Iyer Boy wanted for Vathima, Koundinya, Moolam, very fair, Brilliant home loving girl 25/162 M.Com., M.Phil. Sub-sects acceptable. Decent immediate Marriage. Box No. 20097

★ செட்டியார், வயது 28, உயரம் 5', படிப்பு எம்.எஸ்.ஸி., சிவப்பு நிறமுடைய, குடும்பப் பாங்கான பெண்ணுக்கு தனியார்/அரசுத் துறை அல்லது கல்லூரியில் உள்ள நல்ல வரன் தேவை. ஜாதி பேதமில்லை. பெண்ணுக்கு தையல், சமையல், வீட்டு வேலைகள் தெரியும். பெட்டி எண் : 20098

★ மணமகள் வயது 30, டிப்ளோமா படித்துள்ள கன்னடிய நாயக்கர் (தொட்டியர்) இனத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு நல்ல குடும்பத்தைச் சார்ந்த மணமகன் தேவை. பெட்டி எண் : 20099

• Alliance invited for Tamil, Iyer, Brahacharanam, Kousika, Pooradam girl 36/5'5"/B.Com/State Govt. employed from grooms employed in Central Govt/LIC/Bank Excuse Widowers and Divorcees(.) Reply Box No. 20100

★ அந்தணர் சைவம், கௌண்டின்ய கோத்திரம், ரோகிணி நட்சத்திரம், 24/156/M.A. (Public Admn), சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் நல்ல குணம், அழகு, நிறம் உள்ள பெண்ணிற்கு Graduate/Professionals வரன் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 20101

★ வடகலை, ஸ்ரீவத்ஸ கோத்திரம், ஆயில்யம் நட்சத்திரம், 24/160/B.Sc.(Chem) பெண்ணுக்கு மணமகன் தேவை. பெட்டி எண் : 20102

• Wanted employed P.G./Graduate Iyengar bride groom for Vadakalai Naithrupa Gasyapa, aged 31 years, M.A., D.B.A., girl Ht. 5 feet self employed Rs. 1500/- p.m. Star Hastham, kalai no bar. Reply with horoscope. Box No. 20103

★ வடகலை ஐயங்கார், பாரத்வாஜம், தனியார் பள்ளி ஆசிரியை, திருவோணம், எம்.ஏ./33/160 கடைசி மகளுக்கு காரணமில்லாமல் தாமதமாகிறது. வசதியான குடும்பம். அனுஷ விருப்பம். பெற்றோர் வரன் ஜாதகம் மற்ற விவரங்களை முதலில் அனுப்பிவைக்கவும். பெட்டி எண் : 20104

★ வடமாள், கௌண்டின்யம், ஆயில்யம், பட்டதாரி 35/5'1"/பிரபல தனியார் கம்பெனியில் பணியாற்றும் பெண்ணுக்கு ஏற்ற வரன் தேவை. உட்பிரிவு சம்மதம். பெண் சிவப்பு நிறமும் அழகும் உடையவள். பெட்டி எண் : 20105

• Wanted Brahmin groom for well accomplished, good natured, home loving and young looking girl 30 unencumbered innocent divorcee Iyer Vadama graduate employed daughter of class I Officer. Box No. 20106

★ வடகலை சடமர்ஷண கோத்திரம், 5'.3", 38 வயது, எம்.எஸ்.ஸி., வீட்டு வேலைகளை நன்றாக செய்யக்கூடியவருக்கு ஏற்ற நல்ல உத்தியோகத்தில் இருக்கின்ற மணமகன் தேவை. பெட்டி எண் : 20107

• Allianced from non haritha Iyer, well qualified and settled Boys for handsome sisters Vadama, Poosam MA/34/164 Central Government and Poosam MA/B.Ed./31/152 Teacher. Subsect acceptable. Horoscope details to Box No. 20108

• Wanted alliance for Brahacharanam Sankriti Iyer, Slim girl 35 Magham complexion medium HSC lightly left leg defect interested and light defect persons contact for early decent marriage to Box No. 20109

★ இந்து பார்கவ குலம் நத்தர், பிறந்த தேதி 1.12.63, உயரம் 5'2", நல்ல நிறம், எம்.ஏ., பி.எட்., ஆங்கிலம் அரசுப் பணியில் பட்டதாரியாகப் பணிபுரியும் ரூ 2200/- பெறும் பெண்ணிற்கு அதே இனத்தைச் சேர்ந்த Professional qualifications உள்ள அரசு அல்லது பொது நிறுவனங்களில் பணிபுரியும் மணமகன் தேவை. பெட்டி எண் : 20110

★ தெலுங்கு பிராமணாள், உட்பிரிவு வேலநாடு, கௌண்டின்ய கோத்திரம், ரேவதி நட்சத்திரம், 24 வயது, சிவப்பு நிறம், உயரம் 5'.2", M.Sc., (AGRI), L.I.C.யில் வேலை பார்க்கும் பெண்ணிற்கு, அரசு அல்லது Bank/LIC/GIC/Public Sector -ல் நல்ல பணியில் இருக்கும் தகுந்த வரன் தேவை. சுத்த ஜாதகம். சொந்த ஊர் மதுரை. தெலுங்கு பிராமணாளில் உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 20112

• Suitable proposal invited from Delhi based boys for Vadagalai, Srivatsa, Mrigaseersham, Central Secretariat Steno-grapher 35/5'2"/3000. Early decent marriage. Reply to Box No. 20113

★ பலிஜா நாயுடு, 27, எம்.எஸ்.ஸி., தேர்வு கல வேலைவாய்ப்பின் மூலம் நன்கு பயின்று கல வேலை வாய்ப்பின் மூலம் அடையாளத்திலேயே உள்ள குடும்பப்பாங்கான பெண்ணுக்கு, அரசுப் பணி, தொழில் கல்வி பயின்று, பணியில் உள்ள 28-33 வயதுக்குள் வரன் ஜாதகத்துடன் தொடர்பு கொள்வது நன்று. பெட்டி எண் : 20114

• Wanted well settled Iyer groom for Swathi, Brahacharanam, Koundinya, B.A., 36 employed. Reply with horoscope to Box No. 20115

• Alliance invited from professionally well settled graduate Tamil Iyer boys 30 to 33 years for graduate tamil Iyer girl computer trained 25/152/Haritha Gothram, Brahacharanam, Uthirattadhi. Write with horoscope, family details to Box No. 20116

★ சௌராஷ்டிரா, MBBS.,DGO., TN SERVICE, Madras, 27 வயது, சிவப்பு நிறமுடைய மணமகளுக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர்/இன்ஜினியர்/எம்.பி.ஏ./எம்.டெக்./பி.ஜி. மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 20117

• Alliance for Brahmin Girl, 23/5', Uthiram, Physiotherapist from decently employed graduate Non-Kousika Boys below 30 years. Reply with horoscope and bio-data and family details to Box No. 20118

★ வடகலை அய்யங்கார், பாரத்வாஜம், அனுஷம், சென்னை தனியார் கம்பெனி அதிகாரி, அழகிய பெண், வடகலை மணமகனும் சிறந்த தாராளமான குடும்பம். 36/6000/151 கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த வரன், சென்னையில் வேலை பார்ப்பவர்/மாற்றிக் கொள்ளக்கூடியவர் ஜாதகம், மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 20119

★ பூரம் நட்சத்திரம், சிவப்பு நிறம், 24/+2, தட்டச்சு ஆங்கிலம் தமிழ் ஹையர் பாஸ், கம்மவார் நாயுடு, பிராமின் கவுண்ட் பெண்ணுக்கு மத்திய மாநில தனியார்த் துறையில் பணிபுரியும் கம்மவார் நாயுடு (அ) பிராமின் கவுண்ட் மணமகன் தேவை. பெட்டி எண் : 20120

• Wanted very well employed Hindu, Brahmin, Widower, divorcee, bachelor mild defective persons below 55 years as a good life partner for younger looking tamil Brahmin bride in forties (40s) fair/slim 158 cms, unemployed. Box No. 20121

• Thuluva Vellala, Star Moolam IV, Post graduate 32 very fair, city employed, well settled seeks groom. Box No. 20122

• Kousika Thengalai, Sathayam 23 years girl, B.Com., type-writing lower passed, Computer course undergoing knows Veena, fair complexion 5'6", Requires decent boys employed Bank/Rly/Central Govt. etc. Please send horoscope to Box No. 20123

★ வன்னியர், படையாட்சி வகுப்பைச் சேர்ந்த எம்.எஸ்.ஸி./ஏ.ஏ.டி. படித்துள்ள தனியார் பள்ளியில் தொழில் ஆசிரியையாக வேலை செய்யும் 31 வயதுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. பெட்டி எண் : 20124

★ வசிஷ்டம், தென்கலை ஐயங்கார், விசாகம் (2-ம் பாதம்) 30/5'3"/பி.எஸ்.ஸி.,எம்.ஏ., டைப்பிங் ஹையர் ஆங்கிலம் மற்றும் தமிழ். ஹிந்தி விசாரத் படித்த, அழகான, குடும்பப்பாங்கான பெண்ணிற்கு அரசு/தனியார் நிறுவனத்தில் நிரந்தர பணிபுரியும் பட்டதாரி மணமகன் தேவை. வடகலையும் சம்மதம். ஜாதகம் மற்றும் குடும்ப விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 20125

★ வடமாள், ஸ்ரீவத்ஸ கோத்திரம், ரேவதி நட்சத்திரம், வயது 27, உயரம் 5'.1", பி.ஏ., தட்டச்சு, சுருக்கெழுத்து பயின்று தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் பெண்ணுக்கு அரசு அல்லது தனியார் நிறுவனத்தில் நிரந்தர வேலையிலுள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் அணுகவும். பெட்டி எண் : 20126

• Invited suitable alliance from preferably employed in South Arcot district for Vadama Iyer/ Srivatsa/Hastham girl 30/156/3000/AICWA/Govt. of India undertaking. Subsect no bar. Reply with horoscope, family details to Box No. 20127

★ தனியார் கம்பெனியில் பணிபுரியும் 27 வயதுள்ள, பி.ஏ., டைப்ரைட்டிங் (தமிழ், ஆங்கிலம் ஹையர்) தமிழ் [illegible] கோத்திரம், திருவோணம் நட்சத்திரம் பெண்ணிற்கு படித்த மற்றும் நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. பெட்டி எண் : 20128

★ மதுரை, செங்குந்தர் முதலியார் 25/162/+2 படித்துள்ள மணமகளுக்கு மத்திய/மாநில அரசு அலுவலகம்/சிறந்த தனியார் நிறுவனங்களில் நிரந்தர வேலையில் உள்ள அதே இன மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 20129

• Alliance invited from professionally qualified Iyer Boys for Vadamal, Vadulam, Thiruvonam 28/160 c.m., 5000 Scientist Grade I (Central Government) Respond with horoscope and family details to Box No. 20130

★ வடமாள், கௌசிக கோத்திரம், மகம், 32 வயது, B.Com., PGDPA., மத்திய அரசாங்கத் தில் பணிபுரியும் பெண்ணிற்கு தகுதியான மணமகன் தேவை. பெட்டி எண் : 20131

★ சைவப்பிள்ளை இனம், 22 வயது, சிவப்பு நிறம், 163 செ.மீ., உயரம், உத்திரம் நட்சத்திரம், எம்.பி.பி.எஸ்., பெண்ணுக்கு அதே இன டாக்டர்/ இன்ஜினியர் வரன் தேவை. பெட்டி எண் : 20132

★ திருச்சியில் (BHEL) உயர்நிலைப் பணியிலுள்ள (23-158-ஜாதகம்) அழகிய பெண்ணுக்கு திருச்சியில் பணியாற்றும் அல்லது அங்கு மாற்றம் பெறக் கூடிய உயர் பணியிலுள்ள சைவ வேளாளர் பிள்ளை/சைவச் செட்டியார்/ கார்காத்தார் இன வரன் தேவை. ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண்: 20133

• Suitable alliance invited for Uthiratathi Garga Gothra, Kerala Brahmin Girl 1967/163 cms with two Dosham, Bombay employed preferred. Horoscope required. Box No. 29973

• Alliance invited from well exployed BE/CA/ MBA/MCA, Officers Public Sector/Govt. services Non-Srivatsa Tamil Iyengar Boy upto 30 years for good looking, medium complexion, Thenkalai Girl, Uthiradam, 24/158/Rs. 3850/- M. A., M. Phil., Journalist, Madras employed. Vadakalai no bar. Horoscope with details to Box No. 29974.



• Wanted professionally qualified Groom with good placement between 25 - 28 years. Iyengar Thenkalai for M. Com. studying Girl 20/153 cms, Ayilyam/Nathrupa Kasyapa/Sevvai Dosham. Apply to Box No. 29975

★ திருநெல்வேலி மருத்துவர் சார்ந்த இரண்டு கண் பார்வையற்ற வயது 38, ஆசிரியராக உத்தியோகம், மாத வருமானம் ரூ. 3000/- அப்பா உண்டு. அம்மா இல்லை. இந்தப் பெண்ணுக்கு நல்ல குணமுள்ள வரன் தேவை. எல்லாரும் சம்மதம். பெட்டி எண் : 29976.

★ பவித்ர நாடார் வயது 31, (பி.ஏ.) டைப்ரைட்டிங், ஷார்ட்ஹேண்ட், தமிழ் பால் சேர்ந்த குடும்பப்பாங்கான, வசதியான பெண்ணுக்கு பட்டதாரி/வங்கி/மத்திய/ மாநில அரசு/பொதுத் துறை நிறுவனங்களில் நிரந்தர பணியிலிருக்கும் கவரை பவித்ர நாடார் இன மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 29977

• Iyer Brahacharanam Girl, Srivatsa/5'.4"/28/1000, SSLC Passed, Moolam, employed at Indore (MP) in a PVT Co., Boys employed in MP/North preferred. Subsect no bar. Horoscope to Box No. 29978

• Alliance for courage, creative thinking, good looking, Bharadwaja, Brahacharnam, Iyer girl, 24-03-65 B.Sc., Kettai III, Rs. 3500/160 working in TISCO, Jamshedpur as staff nurse. Contact : Naganathan, 136, North Chitra Street, Srirangam - 620 006.

★ பம்பாயில் வங்கியில் வேலை பார்க்கும் பி.காம்., படித்த 5'3" உள்ள 29 வயதான, ஐயங்கார் பெண்ணுக்கு நல்ல வேலையில் உள்ள ஐயங்கார் வரன் தேவை. நட்சத்திரம் உத்திரட்டாதி. ஸ்ரீவத்ஸ கோத்திரம். பெண்ணுக்குப் பின் கழுத்து சிறிதளவு விதிவிலக்காக இருக்கும். சிறிய அளவில் ஏதேனும் குறை உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். முகவரி : P.B. Ananthachari, B/3. Adarshlok, Siddarth Nagar, Road No. 17, Goregaon (West), Bombay - 62.

★ அகமுடைய முதலியார் வகுப்பைச் சேர்ந்த (வயது 26 மாநிறம், 5'.5") +2 தேறிய, குடும்பப்பாங்கான படித்த, நல்ல வேலையில் உள்ள சகோதரர்கள் கூடிய குடும்பப் பின்னணி கொண்ட பெண்ணுக்கு அதே இன, படித்த வேலையிலுள்ள மணமகன் தேவை. அனுப்ப வேண்டிய முகவரி : கே. ஏ. பச்சையப்பன், 4/78 மாதுமதி, காட்டுமன்னார் அஞ்சல், கடலூர் மா. - 632 312

• Wanted Noble Brahmin Groom for National Bank employee very fair, 165 c.m., 27 years, Kausika, Vadama, Tanjore district, sevval dosham, hard of hearing. Contact : T. V. Narayanan, No. 2, Rangarajapuram Main Road, Kodambakkam, Madras - 600 024.

மணமகள் மணமகன் தேவை

• Alliance invited from well employed grooms (30-35) years for a fair complexioned Vellala Mudaliar girl, 27/5'6" 10th Std. with sevval dosham. Contact : T. L. Padmanabhan, 599, Housing Board Colony, Lawspet, Pondicherry - 8.

• Alliance invited from decent middle class Shenai Thalaivar community employed groom for girl aged 25/5.1ft/+2 fair, domestically trained unemployed brides for her brother aged 35/6ft/+2 Bussiness in Kerala correspond with complete details of horoscope and family to Box No. 30006


★ தனியார்/வெளியில் பணிபுரியும், அய்யர், கௌண்டின்யர், பிரஹசரணம், பரணி, 28/5'.5"/ 3000/மொட்டி, சொந்த வீடு. சொத்துள்ள ஒரே மகனுக்கு வேலை பார்க்காத பெண்ணும், கம்பெனியில் பணிபுரியும் கௌண்டின்யர், பரணி, பிரஹசரணம், 5'.1"/23/1300/DCA அய்யர் பெண்ணுக்கு, அரசாங்க பணிபுரியும் வரனும் தேவை. உட்பிரிவு சம்மதம். முகவரி : சிவராமன், டைமண்ட் அபார்ட்மெண்ட், முதல் மாடி, 3, அப்பு செட்டி தெரு, நங்கநல்லூர், சென்னை - 600 061.

• Alliance invited for Hindu, Tamil vegetarian Boy, B.Sc.,LLB. 36/165/3500 and for sister BA 31/165 fair, homely type. Velalar/Brahmin parents. Contact : V. Varadhan, No. 33, Third Cross, L.I.C. Colony, IDL. Jayanagar, Third block, Bangalore - 560 011.

★ இந்து, ஆதி திராவிடர் வயது 27/165/எம்.ஏ., 25/160/+2 படித்த அழகும் உயரமும் உள்ள வசதியான பெண்களுக்கு அதே இனத்தில், அரசு, தனியார் நிறுவனத்தில், நிரந்தர வேலையில் பணிபுரியும் மணமகன்கள் தேவை. அனுப்பும் முகவரி : ஆர். இருதயராஜ், 47, வரதப்பிள்ளை தெரு, பெரம்பூர் பாரக்ஸ், சென்னை - 600 033.

• Alliance invited for a Pharmacy Graduate tall, fair, well built, smart looks, 45 Vadagalai Iyengar, Vadula Bridegroom, only son, running his manufacturing family business with decent income. Interested in music, yoga, cosmopolitan views, strict vegetarian, no club life. Marriage delayed because of his sisters not being married. From affluent families Vadagalai, Mandyam, Hebbar, Thengalai girls, around 5'4", fair, 36/38 years, well accomplished interested in family domestic life assured of a good home. Send details with bio-data and horoscope. No dowry. Mutual alliance from any member of girl's family for his elder sister Pharmacy Graduate and younger sister 39 years Chartered Accountant, both tall, unmarried and having assessed independent income will be gratefully considered. Reply to : The Advertiser, C/o Post Box No 6915, Alwarpet, Madras - 600 018.

Printed and Published by V. MURALI on behalf of MESSRS BHARATHAN PUBLICATIONS PRIVATE LIMITED. at the BHARATHAN PRESS, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.
Editor : MANJULA RAMESH. Managing Editor : V. MURALI
Telephones – Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Director : 2345621.
Annual Subscription : India Rs. 72/-; Overseas : Rs. 500/- (Air Mail); Rs. 200/- (Sea Mail).
Half Yearly Subscription : India Rs. 36/-; Overseas : Rs. 250/- (Air mail); Rs. 100/- (Sea Mail).



பெண்களுக்குப் பொதுவாக இரண்டு ஆசைகள் நிறைய உண்டு. ஒன்று புடைவைகள், மற்றது நகைகள். இப்படிப்பட்ட ஆசைகளை கேலிப் பொருளாகச் சித்திரிக்கிறவர்களும் பேசுகிறவர்களும் உண்டு. ஆனால் மனோதத்துவ வல்லுநர்கள் 'இவை இரண்டும் நியாயமான ஆசைகள்தான்' என்று அதற்கான காரணங்களையும் கூறுகிறார்கள்.

''புடைவைகள் வாங்கி 'பளிச்' சென்று உடுத்தும் போது மனோ தைர்யம் ஏற்படுகிறது. நகைகள் அழகினைக் காட்டுகிறது. அதே சமயம் நம்மிடம் இவ்வளவு பெறுமானமுள்ள தங்கம் இருக்கிறது என்னும் போது ஒரு பாதுகாப்பு உணர்வினைப் பெறுகிறார்கள். இதனால் அவர்களால் தன்னம்பிக்கையோடும், தைர்யத்தோடும் வாழ்வின் பிரச்னைகளைப் பார்க்க முடிகிறது'' என்கிறார்கள் இவர்கள்.

நல்லதுதான். அருமையான புடைவைகளும், அழகிய நகைகளும் பெண்ணின் கலையுணர்வையும், அழகுணர்ச்சியையும் காட்டுகிறதும் கூட. ஆனாலும் எல்லாமே நம்முடைய வரைமுறைக்குள் இருப்பதுதான் நல்லது அல்லவா? சாதாரண வருமானம் உள்ள கணவன் மனைவி குடும்பத்தில் எண்பத்தியெட்டு புடைவைக்கு ஆசைப்படுவதும், தனக்கு வைரத்தோடு வாங்கித்

பொன்நகையே புன்னகையே...



தரவில்லை என கணவனைக் குறைகூறுவதும் தவறுதானே? அழகும், அன்பும் கொண்ட இல்லத்தரசிகளுக்கு மேலும் அழகு சேர்க்கவே இவை பயன்படுகின்றன. எளிய கைத்தறி சேலையும், கழுத்தில் மஞ்சள் கயிறும் கொண்ட தாய்மார்கள் தெய்வீகமாகக் காட்சி தருவதில்லையா? நம் அக அழகே முக அழகை அதிகரிக்கிறது.

புடைவைகளை எப்படியும் வாங்கி விடுகிறோம். ஆனால் நகைகளைப் பாடுபட்டுத்தான் வாங்குகிறோம் இல்லையா? அப்படிக் கஷ்டப்பட்டு வாங்கும் நகைகளைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வது நல்லது இல்லையா?

தங்க நகைகள் என்று வரும் போது அதைப் பற்றி ஜி. ஆர். தங்க மாளிகையின் உரிமையாளர் திரு. இராஜேந்திரன் கூறுகிறார் :-

''நம்முடைய கலாசாரமே நகைகளோடு பிணைந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். திருமணத்தில் ஆரம்பித்து, வருடாந்திரசீர்கள், வளைகாப்பு, மெத்தும், குழந்தைக்கு நகைகள் என ஒவ்வொரு விசேஷத்திற்கும் நகை என்கிற அம்சம் இன்றியமையாததாக மாறி விடுகிறது.

◆ இராஜேந்திரன்



அவரவர் தங்களுடைய வசதிக்கேற்ப நகைகளை வாங்குகிறார்கள். எளிய மக்கள் கூட ஒரு தாலிப் பொட்டாவது வாங்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். எனவே ஃபேஷனுக்காக வாங்குகிறவர்களில் இருந்து இந்த எளிய மக்கள் வரை எல்லோருக்குமே நகை என்பது இன்றியமையாத அம்சமாகி விடுகிறது.

அதே போல எளியவர்களின் முதல் சேமிப்பு நகைதான். ஒருவருக்கு உணவு, உடை என்பது ஆன பிறகு மேலே கொஞ்சம் பணம் கிடைக்கும் என்றால் நகை வாங்க விருப்பப்படுகிறார்கள். தோடிலிருந்து ஆரம்பித்து ஒவ்வொன்றாக வாங்குகிறார்கள். அதற்குப் பிறகுதான் வீடு வாங்கும் யோசனை தோன்றும். அதற்கும் அப்புறம்தான் ஷேர்ஸ், பத்திரங்கள் எனப் போகும்.

அதே போல ஒரு கஷ்டம் என்றால் உடனடியாக நமக்குக் கைகொடுப்பது நகைகள்தான். எத்தனை வீடு, ஷேர்ஸ் இருந்தாலும் கூட அவையெல்லாம் உடனடியாகப் பணத்தைக் கொடுப்பதில்லை. 'சட்'டென்று பணம் வாங்க நகைகள் கைகொடுக்கும். வீடு வாங்க விரும்புபவர்கள் கூட பட்ஜெட் கையைக் கடிக்கும் போது நகைகளை விற்றுத்தான் மேற்கொண்டு ஆகும் செலவுகளைச் சரிகட்டுகிறார்கள்.

எனவே சிறந்த சேமிப்பான நகைகளில் பணத்தைப் போடுவதில் தவறில்லை. ஆனால் நகைகள் வாங்கும் போது கவனமாக வாங்க வேண்டும்'' என்கிறார் இவர்.

தூய தங்கம் அபரஞ்சி எனப்படுகிறது. அதிலே நகைகளைச் செய்ய முடியாது. 11:1 என்ற விகிதத்தில் செம்பினைக் கலந்து 22 கேரட்டில் நகைகளைச் செய்கிறார்கள்.



"18 காரட், 16 காரட் என்பதெல்லாம் தமிழ் நாட்டில் இல்லவே இல்லை" என்கிறார் இவர்.

இப்போது கோயமுத்தூரில்தான் நகைகள் செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். நகை செய்பவர்களுக்கு இவர்கள் தங்கமாகக் கொடுத்து, டிசைனும் கொடுத்துச் செய்யச் சொல்கிறார்கள்.

இவற்றில் கையால் செய்யப்படுவது, மிஷின் கட்டிங் என இரண்டு வகை இருக்கிறது. இப்போதும் பழைய ஆட்கள் ஹேண்ட் கட்டிங் நகைகளைத் தான் விரும்புகிறார்கள். ஆனால் மிஷின் கட்டிங் நகைகளில் நன்கு பட்டை தீட்ட முடிகிறது. மிகவும் நுணுக்கமான வேலை செய்ய முடிகிறது. இதனால் நகைகளுக்குப் 'பளபளப்பு' கூடுகிறது" என்கிறார் இராஜேந்திரன்.

"ஆனால் மிஷின் கட்டிங் நகைகளில் சேதாரம் அதிகமாகலாம் இல்லையா? இதனால் தங்கம் வேஸ்ட்டாகலாம். தவிரவும் தங்கம் அத்தனை பலமாக இருக்காது என்கிறார்களே?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. இதிலே தங்கம் சேதமடைவதோ பலவீனப்படுவதோ கிடையாது. மிக நுணுக்கமான வேலைப்பாடுகள் செய்ய முடியும். இப்போது பாஷனாகக் கருதப்படும் 'அஞ்சலி செயின்' மிஷின் கட்டிங் தான். நிறைய விரும்பி வாங்கிச் செல்கிறார்கள்."

"சேதாரம் என்ற ஒன்று எங்களின் வெறுப்பையெல்லாம் சம்பாதிக்கிறதே."

"நீங்க சொல்றது எனக்குப் புரியுது. வாங்கறப்போ சேதாரம்னு போட்டு வாங்கறோம். அதே மாதிரி விற்கும் போதும் சேதாரம்னு தள்ளுபடி செய்து விடுகிறோம் என்கிறீர்கள்.



ஆனால் பெண்கள் பொதுவாக ஒரு கொள்கையை வைத்துக் கொள்ளலாம். நாம் எங்கு நகைகளை வாங்குகிறோமோ அங்கேயே விற்பது என்பதுதான் அது. எங்களுடைய தங்கம் என்பதால் மிகவும் குறைந்த தள்ளுபடியே நாங்கள் செய்கிறோம்.

"அதே போல பொடி நகைகளுக்கும் இந்தக் கஷ்டங்கள் இருக்கிறதல்லவா?"

"இந்தப் பொடி நகை என்பதில் மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுகள் செய்யும் போது இணைப்பதற்காக வேறு உலோகத்தைப் பயன்படுத்துவோம் இதனால் நிறைய பேர் பொடி வேலைப்பாடு உள்ள நகைகளை வாங்கவே மாட்டார்கள். ஆனால் நிலைமை இப்போது மாறி விட்டது. 'காட்மியம் சால்டரிங்' என்ற ஒன்று வந்திருக்கிறது. காட்மியம் என்ற இந்தப் பொருளை வைத்து ஒட்டும் போது இது இரண்டு பொன்னையும் ஒட்டி விட்டு, வெப்பத்தில் தான் ஆவியாகி விடுகிறது. எனவே இதில் பொடி வேலையே இருக்காது. முழுமையான தங்கம்தான் இருக்கும். இது கொஞ்சம் விலை கூடத்தான். ஆனால் இதில் தங்கத்திற்குக் குறையில்லை என்பதால் நிறைய பேர் கேட்டு வாங்குகிறார்கள். விற்கும் போதும் தள்ளுபடி இதில் குறைந்து விடுகிறது."

"அதே மாதிரி இப்போதெல்லாம் லைட் வெயிட் நகைகளை நிறைய செய்கிறார்கள் இல்லையா?"

"இதெல்லாம் காலத்தின் போக்கில் வர்றதுதானம்மா. முதலில் எல்லாம் கேரளா ஜ்வல்லர்ஸ் மட்டும் தான் மிகவும் குறைந்த எடையில் கூட நகைகளைச் செய்து கொடுத்துக் கொண்டு இருந்



தார்கள். ஆனால் இப்போது எல்லோருமே இ தை த க் கற்றுக் கொண்டு விட்டார்கள்.

காரணம், நிறைய இளம் பெண்கள், ஏன் இல்லத்தரசிகள் கூட கனமான நகைகளை அணிய விரும்புவதில்லை. அதே போல ஒரு கனமான நகையிலேயே பணத்தைப் போட்டு விட்டு அதையே எல்லா இடங்களுக்கும் போட்டுக் கொண்டு போக முடியுமா? நிறைய இப்போது வேலைப்பாடுகள் நிறைந்த எடை குறைவான நகைகள் விற்கின்றன.

அதே போல வட நாட்டுப் பாணி நகைகளையும் விரும்புகிறார்கள். அதாவது அவை பெரியவையாகவும் பார்ப்பதற்கு மிக 'ரிச்'சாகவும் இருக்கும். அவற்றிலே 'எனாமல்' வேலைப்பாடுகளைக் கூட விரும்புகிறார்கள். இவை எல்லாம்தான் இன்றைய ஃபாஷன்.''

''கனமான, முழுமையாகத் தங்கமாக உள்ள, பொடி வேலைப்பாடு இல்லாத நகைகள் வாங்குவது இப்போது அதிகம் இல்லை இல்லையா? கல் வைத்த நகைகளை நிறைய வாங்குகிறார்களா?''

''இதையும் கூட இன்றைய நவீனயுகத்தின் ஒரு அம்சம் என்றுதான் சொல்ல வேண்டும். முன்பெல்லாம் கல் வைத்த நகைகளை வாங்க மாட்டார்கள், ஏனெனில் எடை போடும் போது கல்லோடு சேர்த்துதான் எடை போடுவார்கள் என்று. ஆனால் இப்போதெல்லாம் நிறைய இவற்றை வாங்குகிறார்கள். ஆனால் கல் நகைகள் வாங்கும் சகோதரிகளுக்கு ஒரு விஷயம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படி வாங்கும் நகைகளை குறைந்தபட்சம் ஏழு வருஷமாவது வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அடிக்கடி மாற்றுவதானால் உங்களுக்குப் பணம் நஷ்டமாகிறது. அதற்காக வெறும் தங்கமே உள்ள நகைகளை வாங்கினால் போரடிக்கும்தான். குறைந்த அளவில் கல் வைத்த நகைகளை வாங்குங்கள். அடிக்கடி அவற்றை மாற்றிக் கொண்டு இருக்க வேண் டாம்.





"இப்போதெல்லாம் நகைக் கடைகளில் ஜேஜே எனக் கூட்டம் இருக்கிறதே..."

"பர்சேஸில் பவர் அதிகமாகி இருப்பதைத்தான் இது காட்டுகிறது. பல வேலைகளிலும் போனஸ் கொடுக்கிறார்கள். மொத்தமாகப் பணம் வரும்போது துணிகளில் பணம் போடாமல் நகைகளாக வாங்க நினைக்கிறார்கள். இப்போது பணம் சம்பாதிக்கும் ஆர்வமும் அதிகமாக உள்ளது. எனவே நகைக் கடைகளில் எப்போதும் கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. மார்கழி, ஆடி இரண்டு மாதங்களில் கொஞ்சம் குறைச்சலாக இருக்கும். அவ்வளவுதான்."

நகைகளைப் பாதுகாக்கும் முறைகளைப் பற்றிப் பேசும் போது –


1. எந்த நகையானாலும் அவற்றை வெந்நீரில் போடக் கூடாது. அதிகமான சூடுள்ள எதுவும் தங்கத்தைக் கரைக்கும் தன்மை உடையது.

2. தங்க நகைகளைச் சுத்தம் செய்யும் போது ப்ரெஷ் போட்டுத் தேய்ப்பது தவறு. பூந்திக் கொட்டையைக் கொண்டு நுரை வரச் செய்து அதைக் கொண்டு மென்மையாகக் கழுவுவதுதான் நல்லது.


3. வீதிகளில் வருபவர்களில் சிலர் நகைகளைப் பாலீஷ் செய்து தருகிறேன் என்கிறார்கள். அவர்களில் சிலரிடம் இருக்கின்ற சில அமிலங்கள் தங்கத்தைக் கரைத்து விடும். எனவே இப்படிப்பட்டவர்களைத் தவிர்த்து, தரமான கடைகளில் கொடுத்து பாலீஷ் போடுவது நல்லது.

4. நகைகளைக் கழற்றி அப்படியே மொத்தமாக டப்பாவில் போடுவது தவறு. நெக்லஸைக் கழட்டி நெக்லஸ் பெட்டியில் அதே பிரகாரம் வைக்க வேண்டும். தோடுகளை அதற்கான பெட்டியில் வைக்க வேண்டும். இவற்றிற்கு ஒரு பத்து நிமிடம்தான் ஆகும். ஆனால் திருமணம், விழாக்களிலிருந்து சோர்ந்து வருகின்ற பெண்கள் அப்படியே கழற்றிப் போட்டு விடுகிறார்கள். சிரமம் பார்க்காது சிறிது சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் பாடுபட்டு நாம் சேர்த்த நகைகள் நீண்ட நாள் பளபளப்பு, எடை குறையாமல் அதே தரத்துடன் விளங்கும்.

5. நகைகளை வாங்குவதிலும், விற்பதிலும் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும். ஏதோ குறைந்த விலையில் கிடைக்கிறது என வாங்குவது தவறு. ஏனென்றால் இவையெல்லாம் எத்தனையோ காலம் நம்முடன் இருப்பவை.




முதல் முறையாக அறிமுகப்படுத்துகிறோம்.
பிரின்ஸ்
தங்கம்
வாங்கும்
திட்டம்
சலுகைகள்
செய்கூலி இல்லை.
சேதாரம் இல்லை.
பணவீக்கம் இல்லை
விற்பனை வரிக்கை இல்லை.
ஒரு தவணை இலவசம்.
முதிர்வு காலத்திற்கு முன்பே தங்கம் பெறலாம்.
சுலபமான மாதத் தவணைகள்.
இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.
பிரின்ஸ் ஜுவல்லரி
13, நாகேஸ்வர ராவ் ரோடு,
பனகல் பார்க், தி.நகர்,
சென்னை - 600 017
போன்: 446783, 447493.



இதை அவர் சொல்லும் போது புது வருடப் பிறப்பைப் பற்றிக் கேட்டோம். அன்றைய தினம் செய்கூலி இல்லாமல், சேதாரம் இல்லாமல் நகைகள் விற்கிறோம் என்கிறார்கள். மக்களும் வரிசையில் நின்று வாங்கிப் போகிறார்களே. அந்தத் தங்கத்தில் தரம் குறைந்து இருக்குமோ?''

''நிச்சயமாக இல்லை. ஜனவரி 1-ந் தேதி விற்கப்படுவதற்காக என்று தனியாக யாரும் நகைகள் செய்வதில்லை. நல்ல வியாபாரம் ஆக வேண்டும், இதை ஒரு காரணமாகக் கொண்டு கடைக்கு விளம்பரம் செய்ய வேண்டும் என்ற ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட பழக்கம். இப்போது இது விட முடியாத பழக்கமாகி விட்டது. ஆனால் வருடம் முழுக்க நடக்கின்ற விற்பனையை ஒப்பிடும் போது இது குறைச்சல்தான். இந்தச் சமயம் எங்களுக்கு லாபமே கிடைப்பதில்லை என்றாலும் அதை விற்பனை, விளம்பரம் கருதி ஏற்றுக் கொள்ள வேண்டியது தான்'' என்கிறார் இராஜேந்திரன்.

முத்து நகையே...

'முத்து, பவளம், முக்கனிச் சர்க்கரை...' என்பார்கள். முத்து நகைகள் ஒருவருக்குக் கம்பீரத்தைக் கொடுக்கிறது. நவரத்தினங்கள் நவக்கிரகங்கள் ஒவ்வொருவருக்கும் உரியது என்பார்கள். அதில் முத்து சந்திரனுக்குரியது. முத்தினை அணிந்தால் குளுமை, மன அமைதி கிடைக்கும் என்பார்கள்.

''பொதுவாக இப்போதெல்லாம் முத்து நகைகளை வாங்குவது அதிகரித்திருக்கிறது'' என்கிறார் ஜகதாம்பாள் முத்துக் கடையின் உரிமையாளர் வீணாமல்ஹோத்ரா. ஹைதராபாத் முத்துக்களை விற்பனை செய்வதற்கென்றே இங்கு ஆரம்பிக்கப்பட்டது இவர்களுடைய ஷோ ரூம். முத்துக்களைப் பற்றி நிறைய பேசுகிறார் இவர்.

முத்துக்களில் இயற்கை முத்துக்கள், செயற்கை முத்துக்கள் என இரண்டு ரகம் உண்டு. கடலில் இருக்கின்ற சிப்பியின் வாயில் ஏதேனும் மணல் போன்ற உறுத்தல் பொருள் போய் விட்டால் அதைச் சுற்றி ஒருவிதத் திரவத்தைச் சுரக்கிறது. இதுவே உருண்டு முத்தாகிறது. ஆனால் சிப்பிகளை நூற்றுக்கணக்கில் சேகரித்து எடுத்தால் ஒன்றிரண்டு முத்துக்கள்தான் கிடைக்கும்.

இதற்காகத்தான் செயற்கை முத்துக்கள் தயாரிக்கப்படுகின்றன. சிப்பிகளை எடுத்து அவற்றின் வாயிலே நாமே உருண்டையான பொருளைப் போட்டு விடுவது. அப்போது திரவம் சுரந்து முத்தாகிறது. இந்தச் செயற்கை முத்துக்களில் என்ன வசதியென்றால் நமக்கு என்ன வடிவத்தில் தேவையோ அந்த வடிவத்தில் பொருளைப் போடலாம். அதே போல ஒரே அளவாகவும் முத்துக்களை உருவாக்க முடியும்.




● திருமதி மல்ஹோத்ரா

இயற்கை முத்துக்களில் வடிவம் அந்தளவு துல்லியமாக இருக்காது. ஆனால் அதில் ஏழு லேயர் இருக்கும். செயற்கை முத்தில் ஒரு லேயர் தான் இருக்கும்'' என்கிறார் திருமதி மல்ஹோத்ரா.

''முத்துக்களில் நிறைய வடிவங்கள் இருக்கிறது போல இருக்கிறதே?''

''ஆமாம்... உருண்டை, தட்டை, அரிசி போல, உருண்டை வடிவங்



களிலேயே மிகப் பெரியதிலிருந்து மிகச் சிறியது வரை எனப் பல வடிவங்கள். நிறம் என்று எடுத்துக் கொண்டால் கறுப்பு முத்தும் உண்டு.''

''முத்துக்களை வாங்கும் போது நாம் என்னென்ன கவனிக்க வேண்டும்?''

''முத்துக் கடைகளுக்குப் போய் அவர்களை முத்துக்களைத் தரம் சொல்லி அதில் பொறுக்கியெடுத்து மாலை கோர்க்கச் சொல்ல வேண்டும். அல்லது நகை செய்பவர் சொல்ல வேண்டும். இது தான் நல்ல முறை. ரெடிமேடாக வாங்குவது என்றால் நல்ல தரமான முத்துக்களா எனப் பார்க்க வேண்டும்...''

''இது தரமான முத்துதான் என எப்படிக் கண்டுபிடிப்பது?''

''நல்முத்தை வாயில் வைத்துச் சுவைத்தால் மண்ணை வாயில் வைப்பது போல சரசரவென்று இருக்கும். ஆனால் போலி முத்துக்கள், ஏதோ பிளாஸ்டிக் பொருளைக் கடிப்பது போன்ற உணர்வைத் தரும்.''

''முத்துக்களைத் தங்கத்தில் பதிக்கக் கூடாது என்கிறார்களே...''

''ஆமாம். முத்துக்களை பட்டுக் கயிற்றில் கோர்த்து அணிந்து கொள்வது தான் நல்லது. ஆனால் முத்து மாலை ஒன்றை மட்டுமே போட்டுக் கொண்டிருக்க முடியாது. அதற்காகத்தான் முத்து வளையல்களிலே இப்போது ஒரு புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். முத்து வைக்கும் இடத்தில் பள்ளமாக அமைத்துத் துளைகள் இட்டு தங்க வளையல்களைத் தகடு போலச் செய்கிறோம். இந்தத் துளைகளின் வழியாகப் பட்டுக் கயிற்றினைக் கொடுத்து முத்தினைக் கோர்க்கிறோம். இதிலே இன்னொரு வசதி என்னவென்றால் ஓரிரண்டு ஆண்டுகளுக்குப் போட்டுக் கொண்டு விட்டு அந்த டிசைனை எடுத்து விட்டு வேறு முறையில் கூட கோர்த்துக் கொள்ளலாம்.''

''முத்தினை ஏன் தங்கத்தில் பதிக்கக் கூடாது?''

''சீக்கிரம் கரைந்து விடும். நீங்களே பார்த்திருக்கலாம். வாங்கும் போது முத்து மோதிரத்தில் பதிந்திருக்கும். நான்கைந்து ஆண்டுகளில் அளவில் கரைந்து வெளியே வர ஆரம்பித்து விடும். இப்போது வந்துள்ள நவீன முறையில் இதற்குச் சாத்தியமில்லை'' என்கிறார் இவர்.

''முத்து சுவாசிக்கும் என்கிறார்களே. உண்மையா?''

''உண்மைதான். முத்து சுவாசிக்கும் தன்மையுடையது. எனவேதான் ஏதேனும் டப்பாக்களில் முத்துக்களைப் போட்டு பீரோவில் வைத்து விடுவது சரியில்லை. காற்றோட்டமுள்ள வகையில் வைத்துப் பாதுகாக்க வேண்டும். அதே போல வெந்நீரில் கழுவுவதோ, அழுத்தித் துடைப்பதோ சரியில்லை. மிகவும் மென்மையாகக் கையாள வேண்டிய பொருள் முத்து.''

''தங்கம் வாங்குபவர்கள் அடுத்ததாக வைரத்தோடு வாங்கத்தானே ஆசைப்படுவார்கள். இதில் உங்கள் வியாபாரம் எப்படி இருக்கும்?''

''இல்லை.... நெக்லஸ் வாங்குபவர்கள் தங்கள் பெண்ணுக்கு 'முத்து செட்'டையும் வாங்கிக் கொடுக்கவே



இது நீடித்து. நீடித்து. நிலைக்கிறது.

[கொசுக்களோ ? ஊஹூம்!]



6-டு-6. கொசுக்களிடமிருந்து முழு இரவுப் பாதுகாப்புக்கு

ஜப்பானின் சுமிடோமோ கம்பெனியின் மூலப்பொருளுடன் வரும் 6-டு-6 மட்டுமே நீண்ட நேரம் நிலைத்து நிற்கிறது. எனவே கொசுக்கடியில்லாத நிம்மதியான நித்திரைக்கு 6-டு-6 பாதுகாப்பை நாடுங்கள். இதைவிடச் சிறந்த பாதுகாப்பு வேறு எதுவும் இனி உங்களுக்குத் தேவை இல்லை.

மிகச்சிறந்த பலன்களுக்கு ஜப்பானில் தயாரிக்கப்பட்ட தெர்மிஸ்டர் கொண்ட 6-டு-6 எலக்ட்ரானிக் வேப்பரைசரையே பயன்படுத்தவும்.

இரவிலே இல்லை கொசுக்களின் தொல்லை.

50 வருடங்களுக்கும் மேலாக உங்களைப் பாதுகாத்து வரும் கிரேஸம் பிரெண்ட் பூச்சி மருந்து தயாரிப்பாளர் வழங்குவது.

Enterprise/Blr/SFL/48 TM

நான் ரிடையர் ஆனேன். ஆனால் நல்லவேளை என் வருமானம் ரிடையர் ஆகவில்லை.

இன்றும் என் பேரக் குழந்தைகளுக்கு ஐஸ்கிரீமும் வாங்கித் தந்து, என் செலவுகளையும் திட்டமிட முடியும். நிதி நிலைமையைச் சீராக வைத்திருப்பதில் மிக்க மகிழ்ச்சி. என் குடும்பத்திற்கும் ஒரு சிறிது உதவி செய்ய முடிகிறது. இஷர் ஸ்பானின் வசதியான டெபாசிட் திட்டங்கள் பேருதவியாக இருக்கின்றன.



குடும்பத்தில் ஏதேனும் விசேஷம் என்றால் அதற்கும் நான் தயார். எதிர்பாராத அவசர மருத்துவச் செலவு களையும் சமாளிக்க முடியும். மேலும் லலிதா வெகுநாளாக ஆசைப்படும் கோயில் யாத்திரையையும் இப்போது நான் திட்டமிடலாம். அவர்களுடைய **"கேஷ் செர்ட்"** குழுவேட்டுதல் டெபாசிட் திட்டம் இதற்கு உதவும்.

அவர்களுடைய **"கேஷ் ப்ளோ"** மிகவு டெபாசிட் திட்டம் ஒரு வரப் பிரசாத மாகும். என் சொந்தச் செலவுகளுக்கு அது போதும். பேரக் குழந்தையின் பிறந்த நாளன்று ஒரு விருந்து வைத்து அவனை வியப்பில் ஆழ்த்த முடியும். அல்லது நாம் வாங்கியுள்ள மோட்டார் சைக்கிள் தவணைப்பணம் கட்டவும் உதவும்.

KAMERAO - NEWS / ES/119-92-Tam R

EICHER

இரண்டு அருமையான வாய்ப்புகள்




“கேஷ் சேஸ்ட்” - குமுலேட்டிவ் டெபாசிட் திட்டம்	
காலம்	குறைந்த பட்சத் தொகை
25 முதல் 60 மாதங்கள் வரை எத்தனை மாதங்களாயினும்	ரூ. 3000/-

முதிர்வடையும்போது மதிப்பு ரூ. 3000/க்கு 15% ஆண்டு தனிமுறை என்ற விகிதத்தில் மாதந்தோறும் கூட்டப்படும்.

காலம் (மாதங்கள்)	முதிர்வடையும் போது மதிப்பு (ரூ.)	வருடாந்திர விளைவு (%)
25	1364	17.47
36	1564	18.60
48	1815	20.37
60	2107	22.14

15%

“கேஷ் ஃப்ளோ” - ஃபிக்ஸட் டெபாசிட் திட்டம்		
காலம்	குறைந்த பட்சத் தொகை (ரூ)	வட்டி வழங்கப்படும் கால அளவு
25 முதல் 60 மாதங்கள் வரை எத்தனை மாதங்களாயினும்	3000/-	காலாண்டிற்கு ஒருமுறை
	6000/-	மாதந்தோறும் அல்லது காலாண்டிற்கு ஒரு முறை



ஐஷர் ஸ்பான் நாட்டிலேயே நற்பெயர் பெற்ற ஒரு நல்ல நிறுவனம். ஆகஸ்ட் 1993ல் செயல்படத் தொடங்கிய முதல் டிசம்பர் 1993 வரை சுமார் 20 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடத்தி இருக்கிறது.

நிச்சயமும் உங்கள் சேமிப்புத் திட்டங்களில் ஐஷர் ஸ்பானுக்கு ஓர் இடம் தரவேண்டும். இல்லையா!

நீண்டகாலம் உங்கள் பணத்திற்குத் தாராள வருமானமாக உழைத்திடும். அதுபோல இனிமேல் அந்தப்பணம் உங்களுக்கு உழைக்க வேண்டாமா?


எம். கே. பால்
தலைமை நிர்வாகி

ரூ. 500 கோடி ஐஷர் குரூப்பை அடித்தளமாகக் கொண்டது

ஐஷர் ஸ்பான் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட்

பதிவுபெற்ற அலுவலகம் : 135 அண்ணா சாலை, சென்னை 600 035.
தொலைபேசி : 8550013/ 8550634/ 8553921
டெலக்ஸ் : 041-83099 ஃபேக்ஸ் : 044-8553533

17.8.93 தேதியிட்ட தி ஹிந்து மற்றும் 17.8.93 தேதியிட்ட தினமணி பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்ட சட்டபூர்வமான விளம்பரத்தில் உள்ள எல்லா இதர விவரங்களிலும் எந்த வித மாற்றமும் இல்லை.



ஆசைப்படுகிறார்கள். எனவே வியாபாரத்தைப் பொறுத்தவரை ஒன்றும் பிரச்னையே இல்லை..."

"இப்போதைய ஃபேஷன் என்ன...?"

"இப்போதெல்லாம் கொஞ்சம் நவீன முறை நகைகளையே விரும்புகிறார்கள். உள்ளே வெற்றிடம் உள்ள தங்கத்தை இணைத்து மாலைகளாக, அணிகலன்களாகச் செய்து கொடுக்கிறோம். பார்ப்பதற்கும் மிகவும் கிராண்டாக இருக்கும். விலை அவ்வளவு இருக்காது. வெள்ளியிலே தங்க முலாம் பூசி அதிலும் முத்துப் பதித்துத் தருகிறோம். விதவிதமாக அமைந்துள்ள இந்த நகைகளை கல்லூரி மாணவிகள் மிகவும் விரும்பி வாங்குகிறார்கள். 'ருத்தன் வொர்க்' என்று சொல்லப்படும் ஒரு வித டிசைனுக்கு நல்ல டிமாண்ட் இருக்கிறது. 'டார்காய் ஸ்டோன்' எனப்படும் ஒருவித 'செமி பிரஷியஸ் ஸ்டோன்களை'ப் பதித்துச் செய்யப்படும் நகைகளையும் விரும்பி வாங்குகிறார்கள். மொத்தத்தில் நகைகள் டிசைன், தரம் இரண்டையும் பார்த்து வாங்க வேண்டும்.

இந்த இடத்தில் சகோதரிகளுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். ஒரு நெக்லஸ் அல்லது முத்து மாலை உங்களுக்கு நன்றாக இருக்கும். அதே நகை மற்றவருக்கு எடுப்பாக இருக்காது. ஏனெனில் கழுத்தின் உயரம் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு மாதிரி இருக்கும். நீளமான கழுத்து உள்ளவர்கள் கழுத்தின் அருகே வரும்படியான டிசைன் நகைகளையும், குட்டையான கழுத்து உடையவர்கள் நீளமான மாலைகளையும் அணிவது நன்றாக இருக்கும். புடவையைப் போலத்தான் இவையும்."



முத்துக்களில் தரங்களைச் சொல்லும் போது பால் போன்ற வெண்மையான முத்துக்கள் விலை குறைந்தவை, மஞ்சள் நிறம் கலந்த வெள்ளை முத்துக்கள் நல்லவை என்கிறார். அதனுடைய வெளிப்புறம் சுத்தமாக இருக்க வேண்டுமாம். 'பாஸ்ரா முத்துக்கள்' விலையுயர்ந்தவை. ஆனால் இவை பார்க்க பளபளவென்று இருக்-



காது. நிறைய பேர் தங்கள் வீட்டிலுள்ள இந்நகைய முத்துக்களின் மதிப்பு தெரியாது கொண்டு வந்து குறைந்த விலைக்கு விற்று விடுகிறார்கள் என்கிறார். எடை, நரம் இதைக் கொண்டுதான் முத்தின் விலை நிர்ணயமாகிறதாம்.

முத்துக்களை எப்படிப் பாதுகாக்க வேண்டும்?

1. காற்றோட்டமான பாதுகாப்பான இடத்தில் முத்து நகைகளை வைக்க வேண்டும்.

2. சூரிய ஒளி, வெப்பம் இவற்றிற்கு அருகே முத்துக்களை அணிந்து இருக்கக் கூடாது.

3. ஸ்ப்ரே, பெர்ஃப்யூம் இவை முத்துக்களை ஒளியிழக்கச் செய்யும். எனவே முத்து நகை அணியும் போது இவற்றைத் தவிர்ப்பது சிறந்தது.

4. ஒவ்வொரு முறை அணிந்து விட்டு எடுத்து வைக்கும் போதும் மென்மையாக பட்டுத் துணியால் துடைத்து விட்டு வைக்க வேண்டும்.

5. பட்டு நூலில் கோர்த்த முத்து மாலைகளில் ஓரிரண்டாண்டுகளுக்கு ஒருமுறை பட்டு நூலை மாற்றுவது நல்லது. ஏனெனில் உள்ளே உள்ள பட்டு நூல் நைந்து போனது நமக்குத் தெரியாமல் போகலாம். திடீரென்று அறுந்து விழுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.



6. முத்துக்களை அதன் அளவு, வடிவம், வண்ணம், நரம் கொண்டு நிர்ணயிக்க வேண்டும். பெரியதாகவும், உருண்டையாகவும், ஆழமான வண்ணமும், சுத்தமான வடிவமும் இருக்கிறதா எனப் பார்க்க வேண்டும்.

7. பிங்க் கலந்த வெண்மை முத்துக்கள் சிறந்தவை. நீலம் அல்லது கிரீம் வண்ணம் கலந்தவை அடுத்தபடியானது தான்.

8. முத்துக்களை வாங்குவதற்கு முன் இயற்கை வெளிச்சத்தில் வைத்துப் பாருங்கள்.

9. முத்துக்களை மற்ற அணிகலன்களுடன் சேர்த்து வைக்காதீர்கள்.

10. துடைக்கும் போதும் முத்துக்கள் ஒன்றுடன் ஒன்று உராயாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

'மே' ஐ ஹெல்ப் யூ?'



என் தந்தையின் நண்பரது அலுவலகத்தில் ரிஸப்ஷனிஸ்ட் வேலை காலியாக இருப்பதை அறிந்து, அவ்வேலைக்கு விண்ணப்பித்தேன். நேர்முகத் தேர்வுக்கான அழைப்பும் வந்தது.

"இது மிகவும் பொறுப்பான வேலை. மேலும் உனக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டுமே... வேறு ஏதாவது வேலை இருந்தால் சொல்லியனுப்புகிறேன்" என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஓர் அரிய வாய்ப்பு கை நழுவிப் போகிறதே என்று எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

ஒருநாள் வாரப் பத்திரிகை ஒன்றைப் புரட்டும் போது அதில் "மெஸ் ரூபா ஜெகன் ஸ்பீக்கிங்" என்ற தலைப்பில் திருமதி. ரூபா ஜெகன் அவர்கள் விவேகானந்தா கல்வி நிலையத்தில் தபால் மூலம் ஆங்கிலம் சரளமாகப் பேசப் பயிற்சி பெற்ற செய்தி வெளியாகியிருந்தது.

இப்பயிற்சியில் சேர்ந்தால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியும் என்ற நம்பிக்கை எனக்குள் துளிர் விட்டது.

என் தந்தையின் அனுமதி பெற்று நானும் இப்பயிற்சியில் சேர்ந்தேன்.

ஓர் ஆசிரியர் எதிரில் இருந்து பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதைப் போல, பயிற்சி மிகவும் எளிய முறையில் அமைந்திருந்ததால் மிகுந்த ஆர்வத்துடன் இப்பயிற்சியினை மேற்கொண்டேன்.

இப்பயிற்சியை முடித்த என்னால் இப்பொழுது ஆங்கிலத்தில் பயமின்றி சரளமாகப் பேச முடிகிறது.

ஆங்கிலத்தில் பேசத் தெரியாத காரணத்தினால் எந்த வேலை எனக்குத் தர மறுக்கப்பட்டதோ, அதே ரிஸப்ஷனிஸ்ட் வேலை எனக்கு வேறு ஒரு பிரபல நிறுவனத்தில் கிடைத்துள்ளது.


"THE INSTITUTE'S COACHING IS SIMPLY SUPERB."

நீங்களும் தபால் மூலம் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு. நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்
9, நடேசன் தெரு, தி. நகர்,
சென்னை-600 017.

NAGA

வெளிநாட்டு மாணவர்களுக்கென விசேஷ வெளிநாட்டு சேவைப் பிரிவும் இயங்கி வருகிறது.



11. முத்துக்கள் இயற்கையில் உருவாகுபவை என்பதால் அதைப் பாதுகாப்பதும் ஒரு மென்மையான முறையில்தான் இருக்க வேண்டும். தனியான கவனத்துடன் அவற்றைச் சீராட்டினால் நீண்ட காலம் பளபளப்போடும், அளவு குறையாமலும், குளுமையையும் அமைதியையும் கொடுத்து நம்முடன் வாழும் தன்மையுடையவை நல்முத்துக்கள்.

உறுதி கொண்ட

வைரம்

வைரத்தை நவமணிகளின் அரசன் என்று சொல்வார்கள். வைரத் தோடு போட்டிருப்பதே ஒருவரின் செல்வச் செழிப்பினைக் காட்டும். இன்னும் வைர மோதிரம், வைர நெக்லஸ் என்றால் கேட்கவே வேண்டாம். ஆனால் நிறைய பேர் வைரத்திலேதான் ஏமாந்து விடுகிறார்கள். பதினெட்டாயிரம் ரூபாய்க்கும் வைரத் தோடு இருக்கிறது. நாற்பதாயிரத்திற்கும் இருக்கிறது. இன்னும் இலட்சக்கணக்கிலும் போகலாம். ஒரு சாதாரண வைரத்தைப் பல மடங்கு விலை கொடுத்து வாங்கி ஏமாந்து போகிறோம். தரமான வைரம்தானா என எப்படிக் கண்டுபிடிப்பது?




இதைப் பற்றி வைரத்தைத் தரம் சோதித்துச் சொல்வதை ஒரு சேவையாகவே பரம்பரையாகச் செய்து வரும் சதாசிவ திரிவேதிடம் கேட்டோம் :-

"நீங்க சொல்றது அத்தனையும் உண்மைதான். வைர மார்க்கெட்தான் உலகிலேயே மிகப் பெரிய சூதாட்ட மார்க்கெட் என்று சொல்ல வேண்டும். தரமில்லாத வைரங்களை ஏமாற்றிக் கொடுத்துவிட்டு இலட்சக்கணக்கில் லாபம் சம்பாதிக்க முடியும். அதேபோல கோடிக்கணக்கான ரூபாயை மூட்டையாக எடுத்துப் போனாலோ, தங்கமாக மாற்றி எடுத்துப் போனாலோ காட்டிக் கொடுத்துவிடும். அதையே வைரக்கற்களாக சிறிய டப்பாவில் போட்டுவிட முடியும். எனவே விலையுயர்ந்த வைரம் சம்பந்தமாகத்தான் நிறைய தவறான விஷயங்கள் நடக்கின்றன.

ஆனால் சந்தேகமில்லாமல் வைரத்தை ஒப்புயர்வற்ற பொருள் என்றுதான் சொல்ல வேண்டும். இது நவமணிகளில் தலையாய இடத்தைப் பெறுகிறது. பஞ்சரத்னமாக வைரம், கெம்பு, மரகதம், நீலம், வைடூரியம் இவற்றைச் சொல்வார்கள். இதோடு கோமேதகம், முத்து, பவளம், புஷ்பராகம் எனும் நான்கைச் சேர்த்து நவமணிகளாக்கி நவக்கிரகங்களுக்கு உரியவைகளாக்கி விட்டனர்.

சுக்கிரன் - வைரம்
புதன் - மரகதம்
சூரியன் - கெம்பு
குரு - புஷ்பராகம்
கேது - வைடூரியம்
சனி - நீலம்
ராகு - கோமேதகம்
அங்காரகன் - பவளம்
சந்திரன் - முத்து

நவக்கிரகங்களில் அந்தந்த ப்ரீதிக்காக அந்தந்த மணியை அணிவது நல்லது என்று மரபாகச் சொல்வார்கள். இவற்றிலே தலையாய இடத்தை வைரம் பிடித்திருப்பதை நீங்கள் பார்க்கலாம்.



ஆப்பிரிக்காவில் கிம்பர்லி என்ற இடத்தில் கிடைக்கும் வைரமே சிறந்தது என்பார்கள். இந்தியாவிலும் பன்னாவில் எடுக்கிறார்கள். தவிரவும் பல நாடுகளிலும் வைரம் கிடைக்கிறது. ஐந்நூறு ஆண்டுகளுக்கும் மேலாக மண்ணுக்கடியில் புதைந்து பின்னர் எடுக்கப்படும் வைரமே சிறந்த வைரம். அவற்றைத் தளங்களாக நமக்கு அனுப்புகிறார்கள். குஜராத்தில் இந்தத் தளங்களை அறுத்துப் பட்டை தீட்டுகிறார்கள்...''

''வைரத்தை வைரத்தால்தான் அறுக்க முடியும் என்கிறார்களே...?''

''உண்மைதான். வைரங்களை வைரம் கொண்டு அறுத்துத்தான் பட்டை தீட்டுவார்கள். மற்றபடி வைரத்தை எந்த வகையிலும் உடைக்க முடியாது. வைரத்தைத் தரையில் போட்டுத் தேய்த்தால் கூட தேயாது. உடையாது. இன்னொரு வைரம்தான் அதை அறுக்கும்.''

'வைரம் பாய்ந்த நெஞ்சு' என்பது இதுதானோ! சரி, அப்புறம் என்ன செய்வார்களாம்?

''வைரத்தைச் சிறிய சிறிய வைரக் கற்களாக்கிப் பட்டை தீட்டுகிறார்கள். ஐம்பத்தெட்டு பட்டை தீட்டப்பட்ட வைரம்தான் முழுமையாக ஜொலிக்கும். பதினாறு பட்டைகளாகத் தீட்டிக் கூட கொடுத்து விடுகிறார்கள். வைரக் கல்லை எடுத்துப் பார்க்கும் போது கீழே கூம்பு இருக்க வேண்டும். ஐம்பத்தெட்டு பட்டைகள் இருக்க வேண்டும். அதேபோல வைரக் கல்லைத் துணியில் வைத்துப் பார்த்தால் துணி இழை தெரியாது. போலி வைரமாக இருந்தால் கீழேயுள்ள துணியில் இழை தெரியும்!''



''சரி, வைரம் இத்தனை காரட்டா எனக் கேட்கிறார்களே?''

''100 செண்ட் - 1 காரட்.
5 காரட் - 1 கிராம்.

ஒரு காரட் எடை கொண்ட முழுமையான வைரக்கல் மிகவும் விலை உயர்ந்ததாக இருக்கும்.''

தரம் :

''ரோஸ் ஜாகர், ப்ளூ ஜாகர், விலை உயர்ந்தவை. ரோஸ் ஜாகர் வைரங்களை இதுவரை ஒருமுறைதான் பார்த்திருக்கிறேன். ப்ளூ ஜாகரில் ஆலிவ் வண்ணத்திலும், பெட்ரோமாக்ஸ் வண்ணத்திலும் கற்கள் வரும். இதுதவிர ப்ளூ வொயிட், கேல்ஷியம் வொயிட் (இவற்றில் புள்ளிகள் இருக்கும். ஆனால் நல்ல ஒளி வீசும்) கற்களும் சிறந்தவை. இவையும் கிடைப்பது அபூர்வம். வெண்மை, செமி வொயிட், மஞ்சள் நிறம் கலந்தவை, ப்ரௌன் இவை நிறைய வருகின்றன. இவையும் தரமானவைதான்.


சுத்தம் :

சிவப்பு வண்ணம் கொண்டவை நல்லதில்லை. கறுப்பு கலந்தவை பாதி விலைக்குத்தான் போகும். வெள்ளைப் புள்ளிகள் கொண்டவை, பாலேடு போன்றவை எல்லாம் நல்ல கற்களே. ஆனால் இவற்றை இத்துறையில் உள்ள நிபுணர்கள்தான் சோதிக்க முடியும். பதினெட்டு முறை விரிவு செய்யக் கூடிய லென்ஸ் கண்ணாடி கொண்டு இதைச் சோதித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் இவை தெரியும்.

ஒளி :

ஐம்பத்தெட்டு பட்டை தீட்டப்பட்ட வைரம்தான் முழுமையாக ஜொலிக்





கும். ஆனால் தரமான வைரங்களில்தான் ஜொலிப்பு கிடைக்கும். தரமில்லாத கற்களில் இதனை பட்டைகளைத் தீட்டினால் கூட ஒளி கிடைக்காது.

கட்டிங் :

பெல்ஜியம் கட்டிங், லோகல் கட்டிங் என இரண்டு வகை உண்டு. வைரத்தைப் பொறுத்தவரை கற்களைப் பார்த்து நாமே தேர்ந்தெடுத்துப் பிறகு கட்டச் சொல்வதுதான் சிறந்தது. ஏனென்றால் அவை முனை உடைந்திருக்கிறதா, மாசுமறு இருக்கிறதா என்பதெல்லாம் தனிக் கற்களாகப் பார்த்தால்தான் தெரியும். அதேபோல கற்களை நெருக்கமாக வைத்துக் கட்டுவதுதான் நல்லது. அப்போதுதான் ஒளி அதிகமாக இருக்கும். இப்போது பல்வேறு டிசைன்களில் அமைக்கப்படுகின்றன. இவற்றில் கற்கள் விலகி இருக்கின்றன. பழைய முறையிலான வட்டத்தோடு பளபளப்பைக் கூட்டும்.''

''இந்த இடத்தில் ஒரு சந்தேகம். வைரத்தில் தோஷம் இருந்தால் வீட்டையே கெடுத்துவிடும் என்கிறார்களே...''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. வைரத்தில் ஏதும் தோஷம் இல்லை. வைரத்திற்காக மிகப் பெரிய தொகையை நாம் கொடுக்க வேண்டியதாகிறது. இதனால் குடும்ப பட்ஜெட் கஷ்டப்படும். இதனால்தான் நமக்கு மனம் சஞ்சலப்படுகிறது என்று அது அப்படியே ஒன்றிவிருந்து ஒன்று தொடருகிறதே தவிர வைரத்திற்கும், கஷ்டத்திற்கும் சம்பந்தமில்லை.''

''வைரத் தோட்டில் எண்ணெய் இறங்குகிறது என்கிறார்களே?''

''வைரத் தோட்டில் எண்ணெய் இறங்குகிறது என்பது வைரத்திற்கும் தங்கத்திற்கும் இடையிலுள்ள பகுதியில் இறங்குவது தான். இது அருகில்தான் தெரியும். இதனால் வைரஒளி குறையவே குறையாது. தூரத்தில் இருந்து பார்க்கும் போது அதே பளபளப்பு இருக்கத்தான் செய்யும்.''


''வைரத்தை நாம் எப்படிப் பாதுகாக்க வேண்டும்?''

''நல்ல வைரக்கற்களைத் தேர்ந்தெடுத்துத் தரமான முறையில் கட்டப்படும் நகைகள் நூற்றாண்டு கணக்கில் அப்படியே இருக்கும். இதற்குத் தனிப்பட்ட எந்தக் கவனமும் தேவையில்லை. அதைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான். நகைகளைக் கழற்றும் போதும், போட்டுக் கொள்ளும் போதும் உட்கார்ந்து கொண்டு அதனைச் செய்ய வேண்டும். தவறி விழும் வாய்ப்பு அதனால் குறைவு. மற்றபடி அப்படியே இருக்கும்.''

''இதற்கு ரீசேல் வேல்யூ உண்டு இல்லையா?''



''ஐயோ, கண்டிப்பாக. அயல்நாடுகளில் கோடீஸ்வரர்கள் தங்கள் பணத்தை வைரமாக மாற்றிச் சிறிய அலமாரிகளில் வைத்து விடுகிறார்கள். அதன் மதிப்பும் ஏறிக்கொண்டேதான் போகுமே தவிர குறையாது. ஆனால் நாம் வாங்குவது தரமான வைரம்தானா எனச் சோதித்து வாங்க வேண்டும். ஏனெனில் மிக எளிதில் ஏமாந்துவிடும் வாய்ப்புக்கள் அதிகம்.''



"அமெரிக்கன் டயமண்ட், ரங்கூன் டயமண்ட் என்கிறார்களே?"

"இவையெல்லாம் செயற்கையாகத் தயாரிக்கப் படுபவை. விலை மிகக் குறைவு. இவற்றுள் ஒளி ஊடுருவிப் பிரதிபலிக்காது. வெண்மை ஒளிதான் வீசும். நுனியின் மீது வைத்துப் பார்த்து எளிதாகக் கண்டு பிடித்து விடலாம்."

தொகுப்பு : மஞ்சுளா ரமேஷ்

காட்மியம்

பழைய நகை ஒன்றை அழித்து வேறொன்று செய்வதற்கோ அல்லது அவசரப் பணத் தேவைக்கு விற்பதற்கென்றோ சென்றால் "ஐயோ, இது ஒரே 'பொடி' வேலையாயிற்றே. உருக்கும் போது வேஸ்டேஜ் அதிகமாகுமே' என்ற ஒரு பதிலைச் சாதாரணமாகக் காண்கிறோம். அப்படி, இப்படி இன்று விற்கவோ, அழிக்கவோ செய்தாலும் கூட கையில் கிடைக்கும் மதிப்பு பாதிதான். இந்த நிலைமை எதனால் என்ற கேள்வியை உம்மிடி பங்காரு ஜுவல்லர்ஸின் அதிபர் திரு. ரகுநாத்திடம் கேட்டபோது விளக்கமாகக் கூறினார்.

"இப்போதெல்லாம் இந்த நிலைமை மாறிவிட்டது. தங்க நகைகள் செய்யும் இணைப்புகள் தேவைப்படும் இடத்தில் தங்கத்தையே உபயோகிக்க முடியாது. வெள்ளி - செம்பு கலந்த ஒரு கலவையைத்தான் பயன்படுத்தி வந்தார்கள். இதை வைத்துத்தான் தங்கத்தின் தரத்தை 22/20 அல்லது 22/18 என்று கணக்கிட்டு வந்தோம். ஆனால் இப்போதோ அந்தச் செம்பு வெள்ளி கலவைக்குப் பதிலாக "கேட்மியம்" என்று ஓர் உலோகத்தைப் பயன்படுத்துகிறோம். இணைப்புகளின் போது உபயோகிக்கப்பட்ட இந்த உலோகம் ஆவியாகிவிடுவதால் தங்கத்தின் தரம் குறையாமல் 22 காரட்டாகவே நிலைக்கிறது. இதுபோன்ற நகைகளை மாற்றிச் செய்யும்போதோ விற்கும்போதோ உருக்கும் போது மாற்று குறையாது. இந்த கேட்மியம் உபயோகித்துச் செய்யும் நகைகளுக்குக் கூலி சற்று அதிகமாகத்தான் செய்கிறது. இது உபயோகித்துச் செய்த நகைகளின் 'சீலி'ல் KDM என்ற முத்திரை காணப்படுவதால் பார்த்தும் வாங்கிக் கொள்ளலாம்.

இருபத்தைந்து வருடங்களாகப் பொற்கொல்லர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தேச்ரானந்தம் கூறுகிறார் : "கேட்மியம் உபயோகித்துப் பற்ற வைக்கும்போது முதலிலேயே தோராயமாக 3 பவுன் சங்கிலியில் 1 கிராம் என்று வேஸ்டேஜ் ஆகிவிடுகிறது. செய்கூலியும் அதிகமாக இருப்பதால் சில வாடிக்கையாளர்கள் பழைய முறையையே பின்பற்றலாமே என்று எண்ணுகிறார்கள். பழைய முறையிலும் பொடி வைத்துச் செய்யாத பல நகை நிறுவகங்கள்





உண்டு. மெஷின் கட்டிங் வளையல்கள், செயின்கள், மெஷின் கட்டிங் அல்லாத வகையிலேயே கெட்டிக் கம்பி வ ளை ய ல் க ள் போன்ற சில வகைகளில் 'பொடி'யே கிடையாது. ஆனால் 'பேட்டர்ன்' வைத்துப் பார்க்கும் போது எது பொடி வேலை இல்லாதது என்று கண்டுபிடிக்க முடிவதில்லை. எடை மிகக் குறைவான நெக்லஸ்களிலும், நகாசு வேலைகள் அதிகமாக உள்ள நகைகளிலும் 'பொடி' இருக்கலாம் என்று பொதுவாகக் கூற லாமே தவிர இந்தப் பொடி விஷயம் உண்மையில் பெரிய ரகசியமாகத்தான் இருக்கிறது. நம்பகமான கடைகளிலும், பொற் கொல்லர்களிடமும் ஒருவருக்கு இரண்டாக விசாரித்துப் பார்த்து வாங்கு வதைத் தவிர வேறு வழியில்லை.''

– நிர்மலா

கைவேலைப்பாடும், மிஷின் கட்டிங் நகைகளும்

திருவல்லிகேணியில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நகைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர் ஆச் சாரி நேத்திரானந்தம். தற்போது மிஷின் கட்டிங் நகைகள் பிரபல மாக இருக்கும்போது இவர்கள் தொழிலில் பாதிப்பு உள்ளதா? வேலை வாய்ப்புகள் குறைந்துள் ளதா போன்ற நம் சந்தேகங்களைத் தெளிவாக்குகிறார் இவர்.

''எங்களுக்கு என்று பரம்பரை யாகக் கஸ்டமர்கள் இருக்கிறார் கள். மிஷின்கள் வந்த பிறகு ஆச் சாரிகளுக்கு வேலை கம்மிதான் என்று சொல்லலாம். ஆனால் அது மிகக் குறைந்த சதவிகிதம்தான். ஆச்சாரிகளும் அவர்களது உதவி யாளர்களும் மிகமிக நேர் மையாக இருக்க வேண்டி யது இத்தொழிலில் அவ சியமாகிறது. பெ ரி ய கடைக்காரர்கள் ஆச்சாரி களை நம்பி வேலை கொடுத்து வந்தனர். அவர்களில் சிலர் தங்கம் தொலைந்துவிட்டதாக அழுது சாதிக் கும்போது நஷ்டம் கடைக்காரர்களுக் குத்தான். ராத்தூக்கம் என்பதும் போய் நிம்மதி இல்லாமல் ஒரு அவஸ்தை.

இப்போது மிஷின் கட்டிங் செய்வ தோடு கோயமுத்தூரில் ஒரு புதிய நடை முறையைக் கொண்டுவந்துள்ளனர் சில வியாபாரிகள். பத்து பேர் சேர்ந்து ஆளுக்கு ஒரு லட்சம் ரூபாய் மூலதனம் போட்டு நூறு திறமையான ஆசாரிகளை வேலைக்கு எடுத்துக் கொண்டு ஒரு நாளைக்கு எழுபது, எண்பது ரூபாய் கூலி என்று பேசி நுணுக்க நுணுக்கமாகப் பல டிசைன்களில் குறைந்த எடையில் நேர்த் தியான, அழகான காதணிகள், வளை யல்கள், சங்கிலிகளை செய்யச் சொல் கின்றனர். இரவு ஏழுமணிவரை வெளி யில் கதவைப் பூட்டி வைத்து அவர்களுக் குத் தேவையான காலை டிபன், மதிய உணவு, இரவு உணவு காப்பி எனக்







கொடுத்து விடுகின்றனர். அன்றைய வேலையை முடித்த பின் கதவைத் திறந்து வெளியே அனுப்பி விடுகின்றனர். இதனால் தங்கம், நேரம், திறமை அனைத்தும் காக்கப்படுகின்றது. இந்த நகைகளை எடுத்துக் கொண்டு சென்னைக்கு வந்து பெரிய கடைக்காரர்களிடம் காண்பித்து எடைக்கு எடை திரும்ப தங்கத்தை வாங்கிக் கொண்டு, ஆர்டரும் எடுத்துக் கொண்டு செல்கின்றனர். இந்தப் புதிய முறையால் கடைக்காரர்களுக்கென்னவோ நிம்மதி. ஆனால் ஆசாரிகளின் வேலை குறைந்து விட்டதே'' என்கிறார் நேத்திரானந்தம்.

''பெரிய கடைகளுக்கு ஆர்டர் எடுத்து, செய்யாமல் உங்களைப் போலத் தனிப்பட்ட முறையில் நகை வேலை செய்பவர்கள் பற்றிச் சொல்லுங்களேன். கடைக்காரர்களை ஆசாரிகள் ஏமாற்றுவது போல ஆசாரிகளான உங்களுக்கு நஷ்டம் ஏற்படுமா?''

''இந்த முப்பது வருடங்களில் அதிகம் நஷ்டம் என்று சொல்ல முடியாது. காரணம் மிகவும் தெரிந்த நாணயமான ஆட்களை உதவிக்கு வைத்திருப்பதுதான். பதினைந்து வருடங்களுக்கு முன் இருபது பவுன் கங்கணம் கொடுத்து நகாசு வேலைக்கு அனுப்பினோம். அந்த நகாசு வேலை செய்யும் ஆள் குடி, ரேஸ் பைத்தியம். அந்த நகையை அடகு வைத்துப் பணம் வாங்கி, குதிரைப் பந்தயம் ஆடிவிட்டு வந்து கையைப் பிசைந்து நின்றான். அவன் மீது எப்படி நாங்கள் நடவடிக்கை எடுப்பது? யார் போலீஸ், கோர்ட் என அலைவது? பணத்தைக் கட்டி நகையை மீட்டு வாடிக்கையாளரிடம் மேலும் டயம் கேட்டுத் திரும்பச் செய்து கொடுத்தோம். பிறகு அந்த ஆள் விரைவில் இறந்தும் விட்டான். இப்படி ஓரிரு அனுபவங்கள் உண்டு.

கைராசி காரணமாகவும், பல ஆண்டுகளாக ஆர்டர் கொடுக்கும்






குடும்ப ஆசாரி என்ற காரணத்துக்காகவும் தாலி செய்யவும், மூக்கு, காது குத்திக் கொள்ள வரும் வாடிக்கையாளர்கள் பலர் உள்ளனர். வெள்ளித் தட்டு செய்யும் போது இரண்டு கிராம் தங்கம் தகடு போல அடித்துத் தட்டின் நடுவில் அடித்துச் செய்து கொடுப்போம். அது எங்கள் ஸ்பெஷாலிட்டி.''

''மிஷின் கட்டிங், கைவேலைப்பாடு இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?''

''பெரும்பாலான வேலைகளைக் கையால்தான் செய்ய வேண்டும்; செய்ய முடியும். கையால் கம்பி இழுத்து அடிக்க நேரமாகும். அந்த அரைமணி நேர வேலையை மிஷினில் ஒரு நிமிடம் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடலாம். நேரம் விரயமாவது தடுக்கப்படுகின்றதை ஒப்புக் கொள்ளவே வேண்டும். மிஷின் கட்டிங் செய்யும் போது நகைகளுக்குப் பளபளப்பும் மெருகும் கூடுதலாகிறது. ஆனால் கையால் செய்யும் நகைகள் நீண்ட காலம் உழைக்கும். தேய்வது குறைந்த சதவீதம்தான். மேலும் டாலர் அல்லது மோதிரங்களில் பெயர் போட வேண்டுமானால் கையால்தான் முடியும். மெஷின் கட்டிங் செய்கையில் வேஸ்டேஜ் அதிகம். மிக நுண்ணிய துகள்கள் அந்த அறையை விட்டுக் காற்றில் பறந்து அள்ளக் கூட முடியாது. ஆனால் கைவேலை செய்கையில் மாட்டுத் தோலை நகைகளுக்கு அடியில் வைத்துக் கொண்டு ராவுகிறோம். கடைசியாக பாதரசம் மூலம் துகள்களை உருட்டிச் சேர்த்து வேறு நகை செய்யும் போது உபயோகிப்போம். மெஷின் கட்டிங் செய்யுமிடத்தில் வாசல்களைப் பெருக்கி வாரி எடுத்துப் போய் கஷ்டப்பட்டு நீரில் போட்டு அலசி மிகச் சிரமப்பட்டால் அரை கிராம் தங்கம் அவர்





களுக்குக் கிடைக்கும். அதற்கென ஆட்கள் சிலர் உள்ளார்கள்.


கவரிங் நகைகளில் பெரும்பாலான டிசைன்கள் கை வேலைதான். காப்பருடன் தங்கம் இரண்டு கிராம் சேர்த்து உருட்டி பின் ஊதிவிடுவோம். இரண்டும் சேர்ந்து தங்கம் மேலே மூடினாற் போல் வந்ததும் கம்பி இழுத்து, செயின், வளையல் செய்தால் ஐந்து வருடங்களுக்கு உத்திரவாதம். மூன்றில் ஒரு பாகம் தங்கமும் பிறகு கிடைக்கும். தற்கால அவசர யுகத்துக்கும், திருட்டுப் பயத்துக்கும் இந்தக் கவரிங் நகைகளே உகந்தது'' என்கிறார் இவர்.

- பானுமதி

மின்னுவதெல்லாம்...

நகைகள் என்று சொல்லும் போது நம் நினைவுக்கு வருவது தங்கம், வெள்ளி, பித்தளை, தாமிரம், எஃகு போன்ற உலோகங்கள்தான். ஆதி நாட்களில் இந்த உலோகங்களுக்கு இப்படி ஓர் உபயோகம் உண்டு என்பது கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னால் கிளிஞ்சல்கள், சோழிகள், எலும்புகள், மெழுகு, தந்தம், மரம், இறகுகள் இவற்றில் நகைகள் செய்யப்பட்டன. பிளாஸ்டிக் அறிமுகமான பிறகு மணிமாலைகள் பிரபலமாயின. மேலை நாடுகளில் பிராணிகளின் நகங்கள், பலவிதமான கொட்டைகள் இத்யாதிகளும் ஆபரணம் செய்யப் பயன்படுத்தப்பட்டன.

அந்தக் காலத்தில் செய்யப்பட்ட நகைகள் அசல் வெள்ளியில் மகா கனம் பொருந்தியவையாக இருந்தன. காதணிகளின் எடை ஒவ்வொன்றும் கால் கிலோவாவது இருக்கும். கால் கொலுசுகளும், காப்புகளும், சங்கிலிகளும் நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் இருந்தன. இவற்றின் எடையும் கிலோக்





கள் கணக்கில்தான்! ஒடிச லாக உள்ள இந்தக் காலத்து இளம் பெண்கள் இவற்றை அணிந்து கொண்டு இரண்டு எட்டு கூட நடக்க முடியாது!

இவைகள் பெரும்பாலும் ஆஜானு பாகுவான கிராமப் பெண்கள் அணியும் நகைகளாகும். மேலும் அந்தக் காலத்தில் வங்கி விவகாரங்கள் அதிகம் தெரியாது. பெண்ணுக்கு நகை போடுவதே ஒரு ஆபத்து என்றால் விற்றுப் பணம் ஆக்கிக் கொள்ள உபயோகப்படட்டும் என்றுதான் பெற்றோர்கள் நினைத்தார்கள். அதனால்தான் நகைகள் அந்தக் காலத்தில் வெறும் அழகான அணிகலன்களாக மட்டும் இல்லாமல், சமயத்தில் பயன்படக்கூடிய அளவுக்கு கனமுள்ளதாகவும் இருந்தன.

வெளிநாடுகளில் தயாராகும் நகைகள் பளபளப்புடன் வண்ணமயமாய் உள்ளன. இவற்றில் வெள்ளி, Shells, அலுமினியம், கம்பிகள், பித்தளை, மரப்பட்டை, ரப்பர், Steel Procleain, Titanium, கோலிகள், இறகுகள், பட்டு நூல்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

பிரபல பிரிட்டிஷ் நகை டிசைனர்களான Jane Adam, Anne Marie Shillike, Karina Thompson, Carol Mather போன்ற பலரின் தயாரிப்புகளின் சாம்பிள்கள் இங்கே படங்களாக உள்ளன. இவற்றில் மீன், நாய், பல்லி, நத்தை, டிராகன்களின் உருவங்களும் பென்டென்ட், ப்ரூச், காதணிகள் வடிவத்தில் இடம் பெற்றுள்ளன. பிராணி நலன்களை விரும்புவோர் இவற்றை விரும்பி அணிகிறார்களாம். இந்த நகைகள் அதிக விலையில்லாமல் எல்லோரும் வாங்கி அணியக் கூடிய விலையில் உள்ளன. இவை திருட்டுப் போய் விடுமே என்றும் பயப்பட வேண்டாம். ஆனால் இவற்றின் நேர்த்தியான வண்ணங்களும், வேலைப்பாடும் கண்ணைப் பறிக்கிறது. மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்று ஒப்புக் கொள்கிறோம்!

– லட்சுமி ரமணன்

மங்கையர்களின் பிணி தடுக்கும் அணிகலன்கள்!


பெண்மையின் தாய்மைத் தவமே உலக உற்பத்திக்கு ஆதாரம். உயிருக்கு உருவம் கொடுப்பதும் அவ்வுருவத்தைப் பேணிக் காப்பதும் பெண்மையே. எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும்

கோதுமை மாவு தோசை வார்க்கும் போது கல்லில் ஒட்டிக் கொண்டு வராமல் சதி செய்யும். மாலை டிபனுக்குக் காலையிலேயே மாவைக் கரைத்து வைத்து விட்டால் தோசை நன்றாக வருவதோடு சுவையாகவும் இருக்கும்.

உளுத்தம் பருப்பு ஊறப் போட்டு அரைத்து, கோதுமை மாவுடன் சேர்த்து முதல் நாளே கரைத்து மறுநாள் காலை தோசை வார்க்க, தோசை நன்றாக இருக்கும்.

– ரமா சந்திரசேகர்





ஆற்றல் கொண்ட பெண்களின் உடல் நலம் பேணிக் காக்கப் பெற்றால்தான் அவள் ஈன்றெடுக்கும் குழந்தைகளின் நலமும் மேன்மை பெறும். நமது கலாசார பழக்கவழக்கங்களில் ஒன்றான நகையணிதல் (அணிகலன்கள்) பெண்களின் உடல்நலத்தைப் பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.


அணிகலன்கள் அணிவது குறித்து விரிவாகவே அகத்தியர் பாடியுள்ளார் :

''கேளப்பா தங்கத்தின்
பொட்டுகட்டு
கெட்டியான நவரத்ன
மாலைபூட்டு
நீளப்பா பதக்கமொரு
சரங்கள் போட்டு
நிதியான அட்டிமேற்
சவடி போட்டு''

என்று மிக நீளமாகப் பாடிக் கொண்டே போகிறார், ''மனோன்மணி பூஜா விதி'' என்னும் நூலில்.

பெண்கள் காது, மூக்கு, கழுத்து, கைமணிக்கட்டு, கைவிரல்கள் போன்ற இடங்களில் தங்கத்தால் செய்த நகைகளையும் கணுக்கால் மற்றும் கால் விரல்களில் வெள்ளியிலான நகைகளையும் அணிவதை நாம் காண்கின்றோம். ஆண்களும் கழுத்து, கைவிரல்களில் தங்க நகைகளையும், இடுப்பில் வெள்ளியிலான அரைஞாணும் அணிந்து கொள்கின்றனர்.

கண், காது, மூக்கு, வாய் முதலிய உறுப்புகள் மூளை நரம்புகளுடன் நேரடித் தொடர்புடைய மிகவும் நுண் உணர்வுகளைக் கொண்டதும் நுண் உணர்வு செயல்பாடுகளை உடையதுமான நரம்புக் கோர்வையைக் கொண்டவைகள் என்பதை நாமறிவோம். இந் நுண்ணிய நரம்புக் கோர்வை உறுப்புகள் அதிகச் செயல்பாட்டினாலோ அல்லது



பட்டாணியில் எது செய்வதாக இருந்தாலும் முதல்நாள் இரவே பட்டாணிகளை ஊற வைக்க வேண்டும். பலர் ஊற வைக்க மறந்து விடுவார்கள். அவசரத்திற்குப் பட்டாணி போட்டு செய்ய வேண்டிய பண்டத்தில் பட்டாணி போடாமலேயே செய்ய வேண்டிய நிலை. இப்படி ஒரு சந்தர்ப்பம் உங்களுக்கு இனி ஏற்பட்டால் கவலையே இல்லை. கொதிக்க நீர் காய்ச்சுங்கள். இதில் ஒரு சிட்டிகை உப்பு, ஒரு சிட்டிகை சமையல் சோடா போடுங்கள். பிளாஸ்கில் இந்த நீரை ஊற்றிவிட்டுப் பட்டாணியை அதில் போட்டு விடுங்கள். பிளாஸ்கை மூடி இரண்டு மணி கழித்து எடுத்தால் முதல் நாள் இரவு ஊற வைத்த பட்டாணி போல நன்றாக வெந்துவிடும். பட்டாணியின் அளவுக்கு ஏற்றபடி நீரின் கொதி நிலையையும், சோடாவின் அளவையும் மாற்றிக் கொள்ளவும். இனி பட்டாணியை ஊற வைக்க மறந்ததற்காகத் தலையில் குட்டிக் கொள்ள வேண்டாமே!

– பூர்ணிமா



இரத்த ஓட்டத் தடையினாலோ அல்லது நோய்க் கிருமிகளால் பாதிக்கப்பட்டோ விரைவில் செயல் திறனை இழக்கக் கூடிய உறுப்புகள் என்பதை நாம் நினைவில் கொண்டு, அவ்விடங்களில் அணியும் அணிகலன்களின் உலோகத் தன்மையையும் செயல்பாட்டையும் சற்று விரிவாகப் பார்ப்போம்.

தங்கம் :


இது ஒரு இயற்கை உலோக தாதுப் பொருள். வெப்பத்தை வெளிப்படுத்தக் கூடியது. நரம்புக்கு உரம் உண்டாக்கியாகச் செயல்படும். மற்றும் உடல் தேற்றி, ஞாபக சக்தி ஊக்கி, ருதுப் பெருக்கி, ருது உண்டாக்கி முதலிய செயல்களையும் செயல்திறன்களையும் கொண்டதாகும் என்று சித்த மருத்துவ குண பாடம் கூறுகின்றது.

தங்கத்தை நகையாகச் செய்யும் பொழுது அதன் எடைக்குப் பத்தில் ஒரு பங்கு எடை தாமிரம் (செம்பு) சேர்த்து தான் நகை செய்கிறார்கள். அவ்வாறு தாமிரம் சேர்ந்த கலப்பு உலோகமாக மாறும்பொழுது அது உராய்வில் கரையும் தன்மை பெற்றதாகவும் சூரியனில் படும்பொழுது சூரியக் கதிர்களை ஈர்த்துப் பிரதிபலிக்கச் செய்யும் தன்மை பெற்றதாகவும் செயல்படும். சூரியக் கதிர் நேரடியாக உடல் உறுப்புகளில் ஊடுருவுவதைவிட தங்கத்தாலான நகைகளில் பட்டு எதிரொலிக்கும் பொழுது அதிக அளவு ஊடுருவு திறன் பெற்று நுண்மின்காந்தமாக மாறுகின்றது. இதன் மூலம் நுண்ணுணர்வு நரம்புக் கோர்வைகள் தூண்டப் பெற்று, இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து உறுப்புகளின் செயல்திறனை ஊக்குவிப்பதோடு நோய் எதுவும் அணுகாமலும் பாதுகாக்கின்றது.

சூரியக் கதிர் ஊடே ஊடுருவப் பட்டுள்ள ஆகாயத்தின் மின்காந்த ஆற்றலை அதிக அளவில் ஈர்த்துப் பிரதிபலிக்கச் செய்ய ஏதுவாகக் கோயில்களிலுள்ள கோபுர உச்சியில் தங்கக் கூரை வேயப்படுகின்றது.

உடல் ஊக்கம் : மேலும் கைவிரல்களில் உள்ள மோதிரம் நாம் சாப்பிடும் உண்கலத்தில் பட்டு உராய்வதால் நுண் அணுக்களாகப் பிரிந்து உணவுடன் உட்சென்று நமது செரிவுநீர், செரிவு அமிலங்களால் இரசாயன மாற்றமடைந்து மருந்தாகச் செயல்பட்டு உடலுக்கு வேண்டிய ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது. குறிப்பாக தங்கச் சத்து இரைப்பையை ஊக்குவிக்கும் தன்மையைக் கொண்டதாகும்.

சூதகக் கோளாறு மற்றும் தைராய்டு வீக்கம் நோய் பாதுகாப்பு : கிராமப்புறப் பெண்கள் தங்கத்தால் செய்த உட்கழுத்துப் பதக்கம் (டாலர்) அணிந்திருப்பதைக் காணலாம். நகர்ப்புறப் பெண்களிலும் சிலர் பதக்கம்



உருளைக் கிழங்கு பச்சடி

பெரிய உருளைக் கிழங்கு இரண்டைக் குக்கரில் வேக வைத்து மேல் தோலை நீக்கிவிட்டு, கிழங்கை ஒரு பாத்திரத்தில் போட்டு மசித்துக் கொள்ள வேண்டும். பின்பு பச்சை மிளகாய், தேங்காய், இஞ்சி இவற்றை நன்றாக அரைத்துக் கிழங்கில் போட்டு நல்ல கெட்டித் தயிர் $1\frac{1}{2}$ கப் ஊற்றி உப்பு சேர்த்துக் கலந்தபின் கடுகு, பெருங்காயம் தாளித்துக் கறிவேப்பிலை, கொத்துமல்லி போட்டால் சாம்பாருக்குச் சரியான சவால் இந்தப் பச்சடி.

– எஸ். ஜெயஸ்ரீ



இல்லாத பட்டையான செயினை அணிகின்றனர். இவ்வணிகலன்கள் பெண்களுக்குக் கெட்ட நிணநீர்களால் உண்டாகும் சதைத் திரட்டு என்ற கண்டமாலை மற்றும் தைராய்டு வீக்கம் போன்ற நோய்கள் வராமல் தடுக்கப் பயன்படுகின்றது.

நாளமில்லா சுரப்பிகளில் ஒன்றான தைராய்டு கிளாண்ட் மற்ற பாலின சுரப்பிகளான சூலகங்கள் மற்றும் கருச் செல்கள் உருவாகும் உறுப்புகளுடனும் இணைந்துள்ள அட்ரினல் சுரப்பியுடன் தொடர்புடையது. தைராய்டு சுரப்பியுள்ள கழுத்துப் பகுதியில் தங்கப் பதக்கம் அணிந்து கொள்வதன் மூலம் அன்றாடம் ஏற்படும் அழுத்தத்தின் மூலமும் (Accupressure) தங்கத்தின் மேற்குறிப்பிட்டுள்ள செயல்திறன் மூலமும் தைராய்டு சுரப்பித் தூண்டப் பெற்று தைராய்டு சுரப்பியின் பாதிப்பால் உண்டாகும் அனைத்து நோய்களிலிருந்தும் பாதுகாக்கின்றது.

வெள்ளி :

சில்வர் ஆர்ஜினியம் எனப்படும் வெள்ளிக்கு வெண்தாது, வெண்பொன் என்ற வேறு பெயர்களும் உண்டு. வெப்பமுண்டாக்கி, இசிவகற்றி, காமம் பெருக்கி, மலமிளக்கி, தாது வெப்பகற்றி, உள் அழல் ஆற்றி, மூளைக்கு வலுவூக்கி போன்ற செயல் திறனுடையது வெள்ளி.

பெண்கள் பெரும்பாலும் கணுக்காலில் உள்ள மூட்டுப் பகுதியிலும், கால் விரல்களிலும் வெள்ளி நகைகளை அணிவதைப் பார்க்கலாம். கெண்டைக் கைகளில் தண்டை எனும் நகையையும் கணுக்கால்களில் சிலம்பும் அணியும் பழக்கங்கள் நாளடைவில் மறைந்து விட்டன.

கணுச் சூலை : பெண்களுக்குப் பெரும்பாலும் கணுக்கால்களில் உள்ள மூட்டுப் பகுதிகளிலும், முழங்கை போன்ற மூட்டுப் பகுதிகளிலும் மூட்டு வலி ஏற்படுவதுண்டு. குறிப்பாகப் பிரசவம் ஆன இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகே இந்த நோய் அதிகமாக வருகின்றது. மூட்டுகளில் அதிக நிணநீர் சுரப்பு குறைந்து போனாலும் அல்லது சுரப்பு அதிகமாகி மூட்டுகளில் தேங்கி விடுவதாலும் மூட்டுகளில் வலி ஏற்படும். ஆங்கிலத்தில் இதை ருமாட்டிக் ஆர்த்தரைட்டிஸ் என்பர். சித்த மருத்துவத்தில் இதைக் கணுச் சூலை என்றும் கூறுவர்.

கணுச் சூலை பாதுகாப்பு : வெள்ளிக்கு இரத்த ஓட்டத்தைத் துரிதப் படுத்தும் தன்மை உண்டு. வெப்பமுள்ள இடங்களில் வெப்பமகற்றியாகவும்,

மரவள்ளிக் கிழங்கை வறுத்தேன் நான். என் வீட்டுக்குக் கீழ் வீட்டுப் பெண்ணும் வறுத்தாள். நான் வறுத்த வறுவலில் பயங்கர எண்ணெய். அவள் வறுத்ததில் ருசியும் அருமை. எண்ணெயில் வறுத்தாளா? அல்லது வெறும் சட்டியில் வறுத்தாளா என்னும் அளவுக்கு எண்ணெயே ஒட்டாமல் ஜோராக இருந்தது. அவளிடம் கேட்ட போது ரகசியம் வெளிப்பட்டது. நானோ கிழங்கைத் தோல் சீவி அப்படியே வறுத்தேன். அவளோ நன்றாகச் சீவி, வெந்நீரில் போட்டு உப்பிட்டு பத்து நிமிடம் மூடி வைத்து பின் வடிகட்டி, சிறிது வெயிலில் ஈரம் போக உலர்த்தி வறுத்திருக்கிறாள். எண்ணெய்க்கு எண்ணெயும் மிச்சம். ருசியும் அதிகம். உடலுக்கும் கெடுதி இல்லை.

– கமலா





வெப்பம் குறைந்துள்ள பகுதிகளில் வெப்பம் உண்டாக்கியாகவும் செயல்படும். மேலும் இசிவகற்றி (வலியடக்கி) குணமும் வெள்ளிக்கு உண்டு. இந்தத் தன்மைகளை உடைய வெள்ளியிலான அணிகலன்களை அணிந்து கொள்வதன் மூலம் அவ்விடத்தில் ஏற்படும் அழுத்தத்தாலும் உராய்வாலும் கால் பாதங்களில் உள்ள இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து கெட்ட நிணநீர் சம்பந்தப்பட்ட நோய்கள் அணுகாமல் பாதுகாக்கிறது.

அணிகலன்கள் அணிவதில் கவனிக்க வேண்டியவைகள் :

"தங்கம் உயர்ந்தது, தாழ்ந்தது வெள்ளி" என்பர். இது இதன் மதிப்பை மட்டும் அளவுகோலாக வைத்துக் கூறியது அல்ல. காது, மூக்கு, கழுத்து, கை போன்ற உடலின் உயர்ந்த இடங்களில் தங்கம் அணியப்பட வேண்டும்; இடுப்பு, கணுக்கால், பாத விரல் போன்ற உடலின் தாழ்ந்த இடங்களில் வெள்ளி அணியப்பட வேண்டும் என்பதையே அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள் பெரியோர்கள்.

நுரையீரல், இதயம் மற்றும் நுண் உணர்வு நரம்புக் கோர்வையுள்ள உடலின் மேற்பகுதிகளில் அதிக இரத்த ஓட்டமும் மிக அதிக இரத்த அழுத்தமும் ஏற்படுவது உடலுக்குத் தீங்கு விளைவிக்கும். இதயம் போன்ற உறுப்புகளில் இரத்த சுழற்சி சீராக இருக்க வேண்டும். அவ்வாறான உறுப்புகள் உள்ள இடங்களில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்யும் இயல்புடைய வெள்ளி நகைகளை அணிவது கூடாது.


உடலின் தாழ்ந்த பகுதிகளான இடுப்பு மற்றும் கணுக்கால், பாதம் போன்ற இடங்களில் இரத்த ஓட்டம் குறைவு ஏற்படுவது இயல்பு. இக்குறைகளைச் சீராக்கவே இடுப்பு, கால் பாதம் கால் விரல்கள் போன்ற இடங்களில் இரத்த ஓட்டத்தை ஈர்த்துச் சுழலச் செய்யும் தன்மையுடைய வெள்ளியிலான அணிகலன்களை அணியச் செய்தனர் நமது முன்னோர்கள்.

அணிகலன்கள் அணிவது அழகுக்காகவும் வெறும் ஆடம்பரத்துக்காகவும் மட்டும் அல்ல. உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானது அணிகலன்கள் என்பது இதன் மூலம் விளங்குகின்றது.

இதைப் போலவே நமது வாழ்க்கையின் அன்றாடக் கலாசாரப் பழக்கவழக்கங்களில் மன ஆரோக்கியமும் உடல் ஆரோக்கியமும் நிறைந்துள்ளன. அவைகளில் உள்ள அறிவியலை அறிந்துணர்ந்து கடைப்பிடித்து அமைதியான ஆரோக்கிய வாழ்வினை அனைவரும் பெறுவோமாக.

– அருள்ஞானஜோதி

பல சகோதரிகள் இட்லிக்குக் 'கொர கொர'வென அரைக்க வேண்டும் என்று நினைத்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் கிரைண்டர் இல்லை. கையால் கஷ்டப்பட்டு அரைக்கும் போது, இட்லிக்குத்தானே கொர, கொர வென அரைத்தால் போதும் என்றார்கள். ஆனால் கிரைண்டர் வந்தபின், 'கொர, கொர' ஐடியாவைக் கைவிடுங்கள். வெண்ணை போல் மாவை அரையுங்கள். அரிசி : உளுந்து 4 : 1 என்ற அளவில் ஊறப் போட்டு நன்றாக அரிசியை அரைத்துக் கலக்கி இட்லி செய்யுங்கள். 1 கிலோ அரிசிக்கு 20 இட்லியாவது அதிகமாகக் கிடைக்கும். இட்லியும் மல்லிகைப்பூ போல மிருதுவாக இருக்கும்.




– கமலா

மங்கையர் மலர்

பிப்ரவரி '93
இதழுடன் இணைப்பு

பொன்நகையே,
புன்னகையோ!



''சொட்டு நீலத்துடன்''
வழங்கப்படும் இலவசப் பரிசுகள்
என்றுமே என்னைக் கவர்ந்தது இல்லை.



பொதுவாக ஒரு பொருளை நுகர்வோர் நிராகரிக்கும்போது. அதன்
தயாரிப்பாளர் தனது விற்பனைக்கு கைகொடுக்க, பயன்படுபவையே
இந்த இலவசப் பரிசுகள் :

ஆனால் 'உஜாலா'வின் சிறப்பே தனி

நமக்கு தேக்கரண்டி அளவுகள் தேவை யில்லை ?

உஜாலாவின் நான்கு ''துளிகளே'' போதும் ஒரு லிட்டர் நீருக்கு.

உபயோகிப்பவர்களுக்கு.

உஜாலாவின் ஒவ்வொரு துளியும் துணிகளில் நிரந்தரமான வெண்மையை உண்டாக்கி மனதில் நிறைந்த திருப்தியை தருகிறது. நீரில் எளிதாக கரைந்து துணிகளின் இழைகளில் உடனடியாக உறிஞ்சப்பட்டு இன்ஸ்டண்ட் ஆக்ஷன் மூலம் ஒரே சீராக பரவும் தன்மையை உடையது. உடைகளின் அழுக்கை நீக்கி துணிகளுக்கு பளபளப்பான வெண்மையை தருகின்றது. ORAL TOXICITY TEST சோதனை மற்றும் SKIN IRITATION TEST சோதனையில் சருமத்திற்கு எந்த கெடுதலையும் உண்டாக்காது என்ற சான்றிதழ் பெற்றது உஜாலா. இது ஜோதி லேபரட்டரியின் ஒரு சிறந்த தயாரிப்பு ஆகும்.




JYOTHY LABORATORIES

Marketing Office:
44, Shivshakthi Ind. Estate, Marol,
Bombay-400 059.
Regd. Office: Sreekrishna Nagar
Bombay-400 066.

உஜாலா

REGISTERED NO. TN MS
Registered as Newspaper in



நானே ரைஸ் சேவை செய்து கொண்டிருந்தேன் - டிடிகே-யின் சேவை வரும்வரை



டிடிகே ரைஸ் சேவை. வீட்டில் செய்வது போலவே நல்ல சுவையும் குணமும் நிறைந்து வருகிறது. உங்கள் குடும்பத்துக்கு காலை டிபன், மதிய உணவு, இரவு உணவுக்கு என்ன பிடிக்கும் என்பது டிடிகே ஃபுட்ஸ் பல வருடங்களாக அறிந்த ஒன்றல்லவா? எனவேதான் உங்களுக்காக குறைந்த விலையில் [500 கிராம் பாக்கெட் ரு. 14] ரைஸ் சேவையை அளிக்கிறது. இந்த அளவில் 6 பேர் தாராளமாக சுவைத்து உண்ணலாம்.



டிடிகே ரைஸ் சேவையின் சுவை கண்டபின் என்றென்றும் இது உங்கள் சேவை.

இலவச சமையல் குறிப்புப் புத்தகம் கிடைக்க எழுத வேண்டிய முகவரி ப்ராடக்ட் மானேஜர், டிடிகே ஃபார்மா பிரைவேட் லிமிடெட், 11வது மாடி, ப்ரிகேட் டவர்ஸ், 135, ப்ரிகேட் ரோடு, பெங்களூர் - 560 025.

TTK தயாரிப்பு

MAA COMMUNICATIONS 2185-92 TAM

Mangayar Malar February - '93
REGISTERED NO. TN MS (S) 231
Registered as Newspaper in Srilanka

இதயத்திற்கு இதமானது

திருமதி ஷீலா பால், BSc., D.N.D.,
உணவியல் வல்லுநர் கூறுகிறார்.

"நல்லெண்ணெய் இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கின்றது. ஆகவே தான் நமது முன்னோர்கள் அதை "நல்ல எண்ணெய்" (தமிழ்) "மஞ்ச்சி நூனு" (தெலுங்கு) என்று அழைத்தனர். இது உடல் ஆரோக்கியத்திற்கு பாதுகாப்பானது என்பதால் தான் தென்னிந்தியர்கள் சமையல் எண்ணெய்யாகப் பயன்படுத்துகின்றனர்."

Sheila Paul



Mrs. Sheila Paul B.Sc.,
Diploma in Nutrition & Dietetics
Senior Dietition
Madras



இதயம் நல்லெண்ணெய் தயாரிப்பில் தரத்தில் சிறந்த எள் மட்டுமே உபயோகிக்கப்படுகின்றது. பிஞ்சு எள் மற்றும் பொக்கு முழுவதுமாக நீக்கப்படுகின்றது. ஆகவே இதயம் நல்லெண்ணெய் பொங்குவதில்லை. பூரி, வடை, பஜ்ஜி எது வேண்டுமானாலும் தயார் செய்யலாம்.



இதயம் சுகமாக்கும் எதையும் சுவையாக்கும்

Bombay Distributor

M/s. P.R. OIL DEPOT (P. Ramalingam)
MATUNGA (C.R) Bombay - 400 019.
Phone : 4372077 & 4376874

இதயம்
நல்லெண்ணெய்

SILVER SPOON